வரு.72 இல. 39 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

32 பக்கங்கள் 40/-

2020 செப்டெம்பர் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
September 27 Sunday, 2020






இடிந்து விழுந்தது கட்டம் 03



அதிகாரத்திற்காக ஓடுபவனல்ல நான் 07



சுற்றுலாத்துறை மேம்பாடே அவசியம் 13



கிரிக்கெட் வரலாற்றில் பதிவாகிய அரிய சாதனைகள் 24

### மக்களை வாழவைப்பதற்கான அரசின் அதிரடி ஆரம்பம்;

# வாய்மொழி மூல உத்தரவுகளை சுற்றுநிருபமாக கருத்திற் கொள்ளவும்

## பணிப்புரைகளை மீறும் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

**பொறுப்பை தான் ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி உறுதிமொழி**

மக்களின் பொது நலனுக்காக வழங்கப்படும் அனைத்து வாய்மொழி ரீதியிலான உத்தரவுகளையும் சுற்றறிக்கையாக கருதி செயற்படுத்த வேண்டுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இவ் உத்தரவுகளை மீறுகின்ற அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பதுளை, ஹல்துமுல்லை, வெலங்விட்ட கிராமத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட "ஜனாதிபதி கிராமத்துடன் கலந்துரையாடல்" நிகழ்வின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

அரச அதிகாரிகளிடமிருந்து நான் எதிர்பார்ப்பது மக்கள் பிரச்சினைகளை தெளிவாக புரிந்துகொண்டு தீர்வுகளை வழங்குவதே ஆகும். மக்களின் பக்கம் நின்று சரியான மற்றும் தைரியமாக முடிவெடுக்கக்கூடிய அதிகாரிகளை நான் பாதுகாப்பேன். மக்களின் 04



கொரோனா அவசரகால நிலைமை;

## சபரிமலை அனுஷ்டானங்கள்; ஐயப்பதாச குருக்கள் விளக்கம்

*கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்*

கொரோனா தொற்று ஆட்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் சபரிமலை அனுஷ்டானங்களை எவ்வாறு மேற்கொள்ள வேண்டுமென்பது 04



## மாலைதீவு–இலங்கை இருதரப்பு ஒப்பந்தம்

### அமைச்சர் டக்ளஸ் தீர்மானம்

கடற்றொழில் சார் மற்றும் நீர் வேளாண்மை தொடர்பான விடயங்களில் மாலைதீவுடன் தொழில் நுட்ப, அறிவுசார் அனுபங்களை இலங்கை பகிர்ந்து கொள்ள 04



20 ஆவது திருத்தம்;

## எம்மை ஒரு சொல் கூட கேட்கவில்லை

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் போது முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சியான மு.காவின் கருத்துக்களை நாடவில்லையென ஸ்ரீலங்கா முஸ்லிம் 04

## இந்தியா எப்போதும் அயல் நாடான இலங்கைக்கே முன்னுரிமை வழங்கும்

### பிரதமர் மஹிந்தவிடம் இந்தியப் பிரதமர் மோடி தெரிவிப்பு

இந்தியா எப்போதும் தனது அயல் நாடுகளுடனான கொள்கையில் முதலில் இலங்கைக்கே முன்னுரிமை வழங்கியுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கிடையில் காணொளி மூலமான கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றது.

இதன்போது பொதுத்தேர்தலில் பெற்ற வெற்றிக்கு இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு தனது வாழ்த்துக்களை நரேந்திர மோடி தெரிவித்தார். 04



## வடக்கு கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு

### அமைச்சர் டக்ளஸின் முயற்சியில் நடைபெற்ற சந்திப்பில் பிரதமர் மஹிந்த திட்டவட்டம்



இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பாக இந்தியப் பிரதமருடனான காணொளி சந்திப்பில் கலந்துரையாடிய பின்னரும் இச் செயற்பாடுகள் தொடருமாயின் 04

## வெளிநாடுகளிலிருந்து மேலும் 187 பேர் நேற்று நாடு திரும்பினர்



கொரோனா தொற்று காரணமாக வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளான மேலும் 187 இலங்கையர்கள் நேற்றுக் காலை வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியுள்ளனர். 04

## யாழில் இளைஞன் மீது வாள்வெட்டு

*சுண்டுக்குழி நிருபர்*

யாழ்ப்பாணத்தில் 'தனுரொக்' வாள்வெட்டுக் குழுவின் தலைவர் தனுவின் மீது பட்டப் பகலில் நேற்று வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. படுகாயமடைந்த தனு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியரின் வாகனம் என அடையாளமிடப்பட்ட காரில் வந்த இனந்தெரியாத நபர்கள் மோட்டார் 04



கொழும்பு மருதானையில்


## சுற்றி வளைக்கப்பட்ட போலிக் கச்சேரி

கொழும்பு மருதானை பகுதியில் இயங்கிவந்த போலிக்கச்சேரி சுற்றிவளைக்கப்பட்டு சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாளிகாவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 04

## 20ஆவது திருத்தம் எமது நாட்டுக்கு பொருந்த மாட்டாது

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் நாட்டுக்குப் பொருத்தமற்றது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 04





ஜனாதிபதியின்ர அதிரடி நடவடிக்கைகளை பார்த்தா பயமா இருக்கு.....

ஏன் அப்படிச் சொல்லுற.. நாட்டுக்கு நல்லது தானே செய்கிறார்...

உண்மைதான், ஆனா நாங்க காலங்காலமா இப்படியே சும்மா இருந்து ஐஸ் அடிச்சு பழகிப்போச்சு.... அதுதான் யோசிக்கிறேன்....!!

## பல்லாயிரக்கணக்கானோரின் கண்ணீருக்கு மத்தியில் எஸ்.பி.பியின் உடல் நல்லடக்கம்



'பாடும் நிலா'எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின்உடல் பொலிஸாரின் மரியாதையுடன் 21 குண்டுகள் முழங்க அவரது பண்ணை வீட்டில் நேற்றுநல்லடக்கம் செய்யப்பட்டது.

சென்னை தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த பிரபல பின்னணி பாடகர் 04

## யாழில் நீதிமன்ற தடையையும் மீறி தமிழ் கட்சிகள் உண்ணாவிரத போராட்டம்



*சாவகச்சேரி விசேட நிருபர்*

தியாக தீபம் திலீபனின் நினைவு நாளில் அவரை நினைவு கூர விதிக்கப்பட்ட தடை உத்தரவைக் கண்டித்து சாவகச்சேரி சிவன் கோவிலுக்கு முன்பாக நேற்று காலை 09 மணி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டம் 04


## நிலாமுக்கு கௌரவம்



செய்தி 04




விரைவில் வெளிவருகிறது!
மாணவச் செல்வங்களுக்காக
வார நாட்களில்...
உங்கள் தினகரனுடன்
தரம்-5 மாணவருக்கான புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி மாதிரி வினாத்தாள்கள்
மற்றும்
கொழும்பு உட்பட நாடெங்குமுள்ள பிரபல ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டல் பயிற்சிகள்...
மாணவர் அறிவுத் தேடலுக்காக தினகரன் வழங்கும் வாய்ப்பு

மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

# பொருளாதார பின்னடைவுடன் வாழும் சமூகம்

பொருளாதாரம் ஒரே சீராகக் காணப்படுவதில்லை. அதில் பலவித மாற்றங்கள் ஏற்படுகின்றன. வளர்ச்சி வேகம் கூடிக் குறையும் சந்தர்ப்பங்களில் மாற்றம் தெரிய ஆரம்பிக்கின்றது. இலங்கை சர்வதேசத்துடன் இணைந்த நாடாகும். ஏற்றுமதி இறக்குமதி மாத்திரமல்ல குடிவரவு மற்றும் குடிவரவு என்பனவும் சிக்கலானவையே. பொருளாதார மாற்றங்களுக்கு நாட்டு நிலைமை மாத்திரமல்ல சர்வதேச அழுத்தமும் காரணமாகிறது. ஒன்று நடைமுறையிலுள்ள பொருளாதார அமைப்பின் இரையாவது மற்றையது கட்டமைப்பை மாற்றி புதிய வழிக்கு மாறிக்கொள்வதாகும்.

பொருளாதார சவால்கள் குறித்து விடுக்கப்படும் எச்சரிக்கை வாழ்க்கைப் போராட்டத்தின் முன்னால், கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. சரியான கொள்கைகள் மூலம் பொருளாதார முறையில் நன்மைகளைப் பெறமுடியும்.

விரைவில் முடிவுகளை எடுத்து செயல்திறனுடன் செயல்படுவது மிக முக்கியமாகும். ஆனால் சம்பிரதாய சமூக முறைகளை மாற்றுவது இலகுவான விடயமல்ல.இன்று கைக்கு கிடைப்பது பற்றி நம்பிக்கை வைப்பதோடு புதிய முடிவுகளால் ஏற்படக்கூடிய நன்மை பற்றிய சந்தேகம் உள்ளது. அச் சந்தேகம் நியாயமற்றதல்ல. புதிய கொள்கைகள் மூலம் நாட்டை மேம்படுத்துவதாகக் கூறிய அரசியல்வாதிகள் பின்னர் அதனை கைவிட்டுவிட்டார்கள். மக்கள் நனமைக்காக எனக் கூறினாலும் மாற்று வழிகளில் பயணிக்க தைரியமில்லை.இந்நாட்டை ஆண்ட அரசாங்கங்களிடம் பல நல்ல கருத்துக்கள் இருந்தன. ஆனால் அரசாங்கத்தின் செல்வாக்கு குறைந்துவிடும் என்று அவ்வாறான சந்தர்ப்பங்களை பயன் படுத்தவில்லை. இலங்கை இவ்வாறான சந்தர்ப்பங்ளை நழுவ விட்ட நாடாகும். பழமைவாதம் மற்றும் அடிமையாதல் அதற்கு பொறுப்புக் கூறவேண்டும். கொவிட் 19 தொற்று முழு உலகுக்கும் பிரச்சினையாகவுள்ளது.

மனித சமுதாயத்தை பீதிக்குள்ளாக்கி பொருளாதார அபிவிருத்தியையும் வீழ்ச்சிடையச் செய்துள்ளது. இவ்வாறான பின்னணியில் சிரமங்கள் ஏற்படும். வாழ்க்கைச்செலவு அதிகரிப்பதோடு கைத்தொழில் மற்றும் வர்த்தகங்களுக்கு சிக்கல் தோன்றியுள்ளது. பல துறைகளும் சரிவை சந்தித்துள்ளதை காணக் கூடியதாகவுள்ளது. வர்த்தக மற்றும் குடியிருப்பு, சொத்துக்கள் கூலிக்கோ அல்லது விற்பனைக்கோ உள்ளதென விளம்பரங்ளை நகரங்களிலும் கிராமங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. அந்த இடங்களில் இருந்த வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுவிட்டன. காரணம் விற்பனை குறைந்துள்ளதுடன் வாடகையைக் கூட செலுத்த முடியாத நிலை தொழில்முனைவோருக்கு ஏற்பட்டுள்ளது.

அவர்கள் வியாபார நிலையங்ளை மூடி விட்டு பாதையோரங்களில் வியாபாரம் செய்கின்றார்கள்.

ஒவ்வொரு நகரங்களிலும், சந்திகளிலும் வீதிகளிலும் விற்பனை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பிரதான கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரிவு கூட வங்கிக் கடன் மற்றும் சொத்து விற்பனை தொடர்பாக கவனம்செலுத்தி வருகின்றது. அநேகமானோரின் தொழில்கள் அவதானத்திலுள்ளன. தங்க நகைளை அடகு வைப்பதும் அதிகரித்தள்ளது. தங்க நகைளை மீட்பதற்கு இடைத்தரகர்கள் உருவாகும் அளவுக்கு பிரச்சினை சிக்கலானதென்று பத்திரிகைகளில் வரும் விளம்பரங்கள் மூலம் அறியலாம். எம்மை சுற்றியுள்ள அடையாளங்கள் இன்றைய பொருளாதார நிலைமையை கண்கூடாகக் காட்டுகின்றன. சரியான முடிவுடன் கூடிய புனர்நிர்மாணத்தைத் தவிர தற்காலிக தீர்வு கிடைக்காது. தைரியமான முடிவுகளால் புதிய பாதையை திறப்பது இயலாத விடயமல்ல.

அரச மற்றும் தனியார் பிரிவுகளில் வர்த்தக மற்றும் கைத்தொழில்கள் புனர் நிர்மாணம் செய்யப்படவேண்டும். அதில் புதிய வலுசக்தியை அதாவது சூரிய மின்சாரம் மற்றும் தகவல்தொழில்நுட்பம் என்பன முக்கியமாகும்.

புதிய முதலீடும் அவசியமான காரணியாகும். அறிக்கைகளின்படி வைரஸ் தொற்று நிலைமையில் அரசு மக்களுக்கு நிவாரணமாக ஒதுக்கியுள்ள நிதி மொத்ததேசிய உற்பத்தி விகிதம்0.5 எனத் தெரிய வருகின்றது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அவ் விகிதம் 10 முதல் 15 வரையாகும். நிவாரணம் தொடர்பாக கவனம் செலுத்தவேண்டியதும் அவசியமாகும். மக்களை வாழவைப்பதோடு புனர்வாழ்வுக்கான நடவடிக்கைளை எடுக்க வேண்டியதும் பொறுப்புக்குரியவர்களின் கடமை யாகும்.

அவ்வாறான நடவடிக்கைளை எடுக்காவிட்டால் நாட்டில் வறியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து சமூக ஏற்றத்தாழ்வுகள் நிகழ இடமுண்டு. நிலைமையை அறிந்து நேரகாலத்துடன் முடிவை எடுத்தால் எதிர்காலம் இனிமையானதாகும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட்


அரசுடமையான பாரிய விற்பனை நிலைய வலையமைப்புடன் இணையுங்கள்

**முகாமையாளர் - பொறியியல் (எம்எம்-1-1)**

**வெளியக விண்ணப்பதாரிகள் (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில், பொறிமுறை அல்லது மின்னியல் ஆகியவற்றில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று அல்லது IESL இன் I/II/III பாகம் அத்துடன் IESL உடன் இணைந்த அங்கத்துவம்.

**அத்துடன்**

பதவிக்கு உரித்தான பாடப்பரப்பில் 1 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப / தொழில்சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

பதவிக்கு உரித்தான பாடப்பரப்பில் 1 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. வெளியக விண்ணப்பதாரிகளினால் மேலே தேவைப்படுத்தப்பட்டுள்ள தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்குரித்தான பாடப்பரப்பில் உதவி நிருவாக மட்டத்தில் (ஜேஎம்) ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
(மேல் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப்படுத்தப்பட மாட்டாது)

**சம்பள அளவுத்திட்டம்:** எம்எம் 1-1 - 2016 ரூபா [53,175-10x1375-15x1910-95,575]

**அடிப்படைச் சம்பளம்** - 53,175. (மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும்)

**ஏனைய நன்மைகள்** - (போக்குவரத்து கொடுப்பனவு ரூபா 12,500 + கையடக்கத் தொலைபேசி மீள்நிரப்பல் - ரூபா 3000)

**உதவி முகாமையாளர் - பொறியியல் (ஜேஎம்-1-1)**

**வெளியக விண்ணப்பதாரிகள்:- (கீழேயுள்ள 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4 இற்கானது)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில், பொறிமுறை அல்லது மின்னியல் ஆகியவற்றில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று அல்லது IESL இன் I/II/III பாகம் அத்துடன் IESL உடன் இணைந்த அங்கத்துவம்.
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப / தொழில்சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.
3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப / தொழில்சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 6 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கூட்டுத்தாபனம், நியதிச்சட்டசபை / நிறுவனமொன்றில் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் உரித்தான துறையில் 5 வருடம் பணியாற்றிய அனுபவம்.

4. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப / தொழில்சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 5 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வண்டும்.

**அத்துடன்**

கூட்டுத்தாபனம், நியதிச்சட்டசபை / நிறுவனமொன்றில் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் உரித்தான துறையில் 10 வருடம் பணியாற்றிய அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**

மேலேயுள்ள வெளியக விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள தகைமைகளை பெற்றிருத்தல்.

**வயது:** 22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
(மேல் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப்படுத்தப்பட மாட்டாது)

**சம்பள அளவுத்திட்டம்:** ஜேஎம் 1-1 - 2016 ரூபா [42,600-10x755-18x1135-70,580]

**அடிப்படைச் சம்பளம்** - 42,600. (மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும்)

**ஏனைய நன்மைகள்** - (கையடக்கத் தொலைபேசி மீள்நிரப்பல் - ரூபா 2000)

**பொருத்தமான விண்ணப்பதாரியானவர் பின்வருவனவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.**

- சிறந்த பகுப்பாய்வு, சிக்கல்களை தீர்த்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், மீள்நோக்கல், தரவை உரைபெயர்த்தல் ஆகியவற்றிற்கான இயலுமை அத்துடன் திறன்களை உருவாக்கல் மற்றும் சுயமாக சிந்தித்து செயலாற்றும் தனிநபர்.
- வலுவுடைய தலைமைத்துவ குணங்கள், ஒருவருக்கொருவர் தொடர்பாடல் திறன்களை கொண்டிருத்தல்.
- சிறந்த தகவல் தொழில்நுட்பவியல் திறன்களை காட்சிப்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருத்தல்.
- பலதுறைநெறிகளைக் கொண்டுள்ள அணிகளை தலைமைதாங்கல் மற்றும் வழிகாட்டலுக்கான உறுதிப்படுத்தப்பட்ட இயலுமை. மனித மற்றும் ஏனைய வளங்களின் முறைமையான நிலைப்படுத்தல் மற்றும் வினைத்திறனுடனான முகாமைத்துவம்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் -**

i. இலங்கை பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை திறம்படச் செய்வதற்கும் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கான உடல் மற்றும் உளரீதியிலான ஆரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

உங்களிடம் பொருத்தமான தகைமைகள் மற்றும் அனுபவம் ஆகியன இருப்பின், உங்கள் சுயதரவை சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்களுள் கீழுள்ள முகவரிக்கு தயவு செய்து அனுப்பவும். (தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயர் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்)

**(தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களுடன் மாத்திரமே இந்த நிறுவனமானது தொடர்பு கொள்ளும்)**

**தலைவர்,**
**லங்கா சதொச லிமிட்டெட்**
**இல.: 27, கூமொறி செயலக கட்டிடம்**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு-02.**

வர்த்தக அமைச்சு
குறைந்த விலையில் உங்களிடத்தில்
லங்கா சதொச
LANKA SATHOSA


# இரா உதயணன் இலக்கிய விருது 2019

**01. தேகவயோக நிலையில் சாகித்திய சமத் ஹார உயர் விருது**
அமரர் திருமதி பத்மா சோமகாந்தன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

**02. உயர் இலக்கிய விருது**
திருமதி அன்னலட்சுமி இராசதுரை (யாழ் நங்கை)

**03. இனநல்லுரவு இலக்கிய விருது**
ஜி.ஜி. சரத் ஆனந்த

**04. சிறந்த ஊடகவியலாளர் விருது**
சின்னத்துரை சண்முகராஜா

**05. வாழ்நாள் சாதனையாளர் விருது**
கே.ஆர். டேவிட்

இரத்தினசபாபதி மகேந்திரன்
(முல்லை அமுதன்)
நாவல்
**'மூங்கிலாகும் முட்புதர்'**
ஆசிரியர் – மைதிலி தயாபரன்
சிறுகதை
'தஞ்சம்'
ஆசிரியர் – க. சட்டநாதன்
கவிதை
'கவிதை சிறகு'ஆசிரியர் – தாஸிம் அகமது
தமிழ் வளர்ச்சி இலக்கியம்
'சங்கமும் தமிழரும்'
ஆசிரியர் – அகளங்கன்
அயலகப் படைப்பு இலக்கியம்
'அகலாத்தின் நித்தியக்கடல்'
ஆசிரியர் – தமிழ்உதயா

விருதுகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


வாழ்வை மீண்டும் வளமாக்குங்கள்
www.neptunehealth.lk
உள்நோயாளர் மருத்துவ சேவைகள்

மனநல ஆரோக்கிய சிகிச்சைகள் உட்பட மன அழுத்தம், போதைபொருள் பாவனைக்கு அடிமையாதல், Bipolar Disorder, உக்கிரமான நடத்தையுடைய நோயாளிகள்
30ற்கும் மேற்பட்ட **முன்னணி மருத்துவர்களால**மும்மொழியிலும் சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.
NO. 186, PARK ROAD, Narahenpita.
Tel: 0720 239 747 / 0720 222 555 / 0112 590200
NEPTUNE HEALTH
BE KIND TO YOURSELF






தினகரன் BUDGET aDz
It suits your budget

தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு 2020
N. சுந்தா - யாழ் மத்திய கல்லூரி
காலம்: 03.10.2020 சனிக்கிழமை
VALAKAM INSTITUTE
No.7, Rudra Mawatha, Wellawatte, Colombo- 06.
Contact : 011 2 363 903 0777 382 108

போட்டோ குறும் விளம்பரம்

TATA 10 Wheel 2516, Double Cabin, New Tyre, Low Running, Flat body Lorry, Quick sale.
058199
077 64 96 680



# இடிந்து விழுந்தது கட்டடம் பக்கத்து வீட்டுக்காரர்கள் மரணம்!

## அசமந்தத்தால் ஏற்பட்ட மரணங்களுக்கு நீதி கிட்டுமா?

**‘கண்டியில் இருநூறுக்கும் மேற்பட்ட கட்டடங்கள் முறையற்ற வகையில் அமைக்கப்பட்டிருப்பதால் அவற்றை இடித்து அகற்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அரசியல் தலையீடுகள் காரணமாக அவை இன்றைக்கும் இடிக்கப்படாமல் உள்ளன’**

கடந்த ஞாயிற்றுக்கிழமை இருபதாம் திகதி அதிகாலை ஐந்து மணியளவில் கண்டியில் வீசிய பலத்த காற்றுடன் ஒரு ஐந்து மாடி கட்டடம் சரிந்து விழுந்தது. கண்டி குண்டசாலை திகன வீதியில் தர்மராஜ சந்திக்கு அருகில், பூவெலிகட சங்கராஜ மாவத்தை சண்ரே ஹோட்டலுக்கு அடுத்ததாக அமைந்திருந்த ஐந்து மாடிக் கட்டடமே இவ்வாறு இடிந்து வீழ்ந்தது. இதற்கு அருகிலுள்ள ஹோட்டல் டிரவலஸ் நெஸ்ட் உரிமையாளரது வீட்டின் மேல் விழுந்ததில் இவ் வீட்டிலிருந்த ஐந்து பேர் இதில் புதையுண்டனர். அருகிலிருந்தோரும் பொலிசாரும் உடனடியாகச் செயற்பட்டதால் மூவரை மீட்டனர். சிலமணி நேரத்தின் பின் இருவர் இறந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். மீட்கப்பட்ட மூவரில் இரண்டு மாதக் குழந்தை சிகிச்சை பலனின்றி கண்டி வைத்தியசாலையில் இறந்தது.

இறந்த மூவரும் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த கணவன் மனைவி மற்றும் அவர்களின் குழந்தையாகும். சமில வயது 34, அச்சலா வயது 32 மற்றும் அவர்களது இரண்டு மாத குழந்தை ஆகியோரே இச்சம்பவத்தில் இறந்தவர்களாவர். இவர்களுக்கு கடந்த வருடமே திருமணம் நடந்து. ஓகஸ்ட் முதலாம் திகதியே இவர்களது குழந்தை பிறந்தது. இவர்களது சிறிய தாயின் குடும்பத்தைச் சேர்ந்த இருவரே மீட்கப்பட்டவர்களாவர்

சம்பவம் நடைபெற்றவுடன் பொலிசார், தீயணைப்பப்படையினர், இராணுவத்தினர், விமானப்படையினர், அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் விரைந்து செயற்பட்டதிலேயே கட்டட இடிபாடுகளில் புதையுண்டோர் மீட்கப்பட்டனர். இந்த கட்டட சரிவுக்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. கண்டி பொலிஸ் விசேட குழுவினர் பலகோணங்களில் விசாரணைகளை மேற்கொள்கின்றனர். சரிந்து விழுந்த ஐந்து மாடிக் கட்டடம் கண்டி மாநகரசபையின் உரிய அனுமதியில்லாது கட்டப்பட்டதாக ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கண்டி மாநகர சபை இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. இக்கட்டடத்துக்கு போதியளவு பருமனான கம்பிகள் பாவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இக்கட்டடத்தின் அடிப்பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவினாலேயே கட்டிடம் சரிந்து விழுந்துள்ளதாகத் தெரிகிறது. போதியளவு ஆழத்துக்கு அத்திவாரமும் போடப்படவில்லை என்பதுவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. ஆழமான அத்திவாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட ஒரு மாடிக்கும் மேலாக தொடர்ந்தும் மாடிகள் மேலே மேலே கட்டப்பட்டுள்ளன. இதனால் மண்ணிறக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் இதன் காரணமாக கட்டிடம் சரிந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. இதேவேளை சில தினங்களாக கண்டியில் வீசும் பலத்த காற்று மற்றும் மழையின் தாக்கம் காரணமாகவும் வீழ்ச்சி விரைவு படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

பலத்த காற்றின் சத்தத்துடன் கட்டடம் இடிந்த விழும் சத்தமும் கேட்டதாக எதிரிலுள்ள பெற்றோல் நிலைய ஊழியர் குறிப்பிடுகிறார். இராணுவத்தினரும் ஏனைய மீட்புப்படையினரும் இடிபாடுகளை அகற்றுவதில் பெரும் சிரமப்பட்டனர். ஊயிர்களை மீட்க வேண்டுமே என்ற வேகத்தில் விரைவாக செயற்பட்டனர்.

இதே சமயம் கட்டடத்தின் கட்டுமான அனுமதி தொடர்பான ஆவணங்கள் பொலிஸாரால் ஆராயப்பட்டு வருவதாகவும். இதற்காக விசேட பொலீஸ் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும். பொலிஸ் இன்ஸ்பெக்டர் துசித கலகொட தெரிவித்துள்ளார்.



கண்டி மாநகர சபையில் பெறப்பட்ட வீட்டு வரைப்படம் மற்றும் வீட்டு கட்டுமானம் தொடர்பான ஆவணங்கள் வீட்டுடன் புதையுண்டு விட்டதாக வீட்டு உரிமையாளர் அனுர லெவுகே பொலிஸாரிடம் கூறியிருக்கிறார். இது தொடர்பாக கண்டி மாநகர சபை ஆணையாளர் சந்தன தென்னகோன்` மற்றும் கண்டி மாநகர சபை மேயர் கேசர சேனாநாயக்க ஆகியோரின் பணிப்புரையின் படி மாநகர சபை உத்தியோகத்தர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு வீடு சரிந்ததற்கான காரணங்களை ஆராய்வதற்காகவே இக்குழு நியக்கப்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு வீட்டு வரைப்படத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருப்பின் அது உள்ளூராட்சி நிறுவனத்தின் தவறாகவே கருத வேண்டும் என மத்தியமாகாண ஆளுனர் சட்டத்ரணி சரத் யூ கமகே சுட்டிக் காட்டியுள்ளார். “சில சமயங்களில் இலஞ்சம் கட்டட நிர்மாணத்துக்குத் தகுதியில்லாத பகுதிகளில் சில லாபங்களுக்காக சட்டவிரோதமாக அனுமதி வழங்கப்படுவதும் உண்டு. இவ்வாறான நிலைமை தவிர்க்கப் பட வேண்டும். சில சமயங்களில் பெறப்பட்டு மோசடியாக பலர் இணைந்து அனுமதி வழங்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. இவ்வாறு நடந்ததாக தெரியவரின் அதற்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு கண்டியில் உள்ள சகல மாடி வீடுகளும் பொறியியளார்களால் பரீட்சிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு சட்டவிரோதமாக, முறையான அனுமதியின்றிக் கட்டப்பட்ட பல கட்டடங்கள் தொடர்பாக எனக்கு முறைப்பாடு கிடைத்துள்ளன. இவ்வாறான ஒரு சமபவம் நடைபெற்றமைக்கு கட்டட பொறியியலாளரும், கட்டுமானத்துக்கு பொறுப்பானவர்களுமே பொறுப்புச் சொல்ல வேண்டும்” என மத்தியமாகாண ஆளுனர் சட்டத்தரணி சரத் யூ கமகே கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை பத்து பொறியியலார்களைக் கொண்ட விசேட குழு ஒன்றினை நியமித்து அக்குழவின் முதலாவது கூட்டம் ஆளுனர் இல்லத்தில் நடத்தப்பட்டுள்ளது. கண்டி மாநகரில் 256 கட்டடங்கள் இவ்வாறு முறையற்ற விதத்தில் கட்டப்பட்டுள்ளதாக முறைபாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவை தொடர்பில் வழக்குகள் உள்ளதாகவும் இம்முறைப்பாட்டில் சம்பந்தப்பட்ட வீட்டு வரைப்படங்களுக்கு அனுமதி வழங்கிய உத்தியோகஸ்தர்களுக்கு எதிராகவும் வழக்குகள் தாக்கல் செய்யப்படும். இரண்டு அல்லது மூன்று மாடி கட்டிடத்திற்கு அனுமதி பெற்று அதன் பின் நான்கு அல்லது ஐந்து மாடி கட்டிடம் கட்டப்படுவது பற்றி அயலில் உள்ளவர்கள் அறிவித்தால் மட்டுமே உள்ளூராட்சி சபைகள் அது பற்றி விசாரணை செய்கின்றன. தாம் வழங்கிய அனுமதிக்கு ஏற்ப வீடு கட்டப்பட்டுள்ளதா என உள்ளூராட்சி சபைகள் ஆராய்வதில்லை. இவ்வாறு ஒரு சம்பவம் நடைபெற்ற பிறகு தற்போது இது பற்றி ஆலோசிக்கப்பட வேண்டும். கண்டியில் 200க்கும் மேற்பட்ட கட்டடங்களை இடிப்பதற்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனினும் அரசியல்வாதிகளின் தலையீடு காரணமாக இவை இன்னும் இடிக்கப்படாமல் உள்ளன.” என்கிறார் ஆளுனர்.

பேராதனைப் பல்கலைக்கழக புவிச்சரிதவியல் பேராசிரியரும் முன்னாள் உபவேந்தருமான பேராசிரியர் அத்துல சோனாரத்ன சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டார். அண்மைகாலமாக மூன்றுத் தடவைகள் திகன, பள்ளேகல, குருதெனிய பகுதிகளில் ஏற்பட்டதாக கூறப்படும் நில நடுக்கத்திற்கும் இந்த கட்டட சரிவிற்கும் இடையே எவ்வித தொடர்பும் இல்லையெனவும், திகனைக்கும் பூவெலிகடைக்கும் இடையில் ஏழு தொடக்கம் பத்து கிலோமீட்டர் இடைவெளி உள்ளதாகவும் அதன் தாக்கம் பூவெலிகட பகுதியில் உணரப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளதோடு நிலச் சரிவும், வீடு கட்டப்பட்ட நிலையும் அத்திவாரத்தில் ஏற்பட்டுள்ள சரிவும் அத்திவார ஆழம் போதாமையுமே மாடி கட்டிடத்தின் சரிவுக்கு காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

**(22ஆம் பக்கம் பார்க்க)**

ஆர்.மகேஸ்வரன்...







அமில அச்சலா தம்பதி

# காத்திருக்கும் நன்றியுள்ள நாய்!




புதிதாக திருமணம் செய்து கொண்ட தம்பதியின் ஒரு செல்ல நாயை வளர்த்தனர். அது லெப்ரடோ இனத்தைச் சேர்ந்த நாய். பிரித்தானியாவை பூர்வீகமாகக் கொண்டது. இவ்வகை நாய் மிகுந்த எஜமான் விசுவாசம் கொண்டது. தனது இரண்டு எஜமான்களையும் காணாததால் நாய் குழம்பிப் போயுள்ளது. வீட்டில் அமர்ந்து கொண்டு ஆடாமல் அசையாமல் எஜமானுக்காகக் காத்திருக்கிறது. அதற்கு பிரியமான உணவுகளை வைத்தாலும் சாப்பிடாமல் ஏக்கத்துடன் அமர்ந்திருக்கும் இந்த நாய்தான் இங்கே வருவோர் போவோரின் இதயங்களை உருக்கும் காட்சியாக உள்ளது. இதன் கவலை எப்போது தீர்ந்து சாதாரண நிலைக்கு வரும் என்று தெரியவில்லை.



இந்த நாய்க்கு இருக்கும் நன்றியுணர்வு, மனிதர்களுக்கு இல்லை அல்லவா? எங்கள் வீடு இடியப்போகிறது கவனமாக இருங்கள் என்று தகவல் சொல்லி இருக்கலாம் அல்லவா?

கிராமபோன் கம்பனிகள் புகழ் பெற்றிருந்த காலத்தில் HMV கிராமபோன் இசைத்தட்டுகள் ரொம்ப பிரசித்தம். இந்த இசைத்தட்டுகளில் HMV என எழுதப்பட்டு அந்தக் காலத்து கிராமபோன் ஒலி பெருக்கி முன்பாக அமர்ந்திருக்கும் ஒரு நாயின் படம் நிறுவனத்தின் சின்னமாக பொறிக்கப்பட்டிருக்கும். இதன் பின்னால் ஒரு நன்றியுள்ள நாயின் கதை உண்டு. அந் நிறுவனத்தின் உரிமையாளர் காலமாகிவிட்டார். அவரது உரையாடல்களை பதிவு செய்திருந்த தட்டுகளை அவர் மனைவி அவ்வப்போது கிராமபோனில் கேட்டு அமைதி அடைவார். ஒவ்வொருமுறை கணவரின் பேச்சைக் கேட்கும் போதெல்லாம் அந்த நாய் ஒலி பெருக்கியருகே அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்குமாம். அக் காட்சியே பின்னர் நிறுவனத்தின் வர்த்தக அடையாளமானது. HMV என்றால் *His Masters Voice* என்று அர்த்தம்! நாயொன்றுக்கு வழங்கப் பட்ட மிகப்பெரிய மரியாதை இது!

# உட ரதல்ல தோட்ட தொழிலாளர்கள் 17ஆவது நாளாகவும் போராட்டம்

ஹற்றன் விசேட நிருபர்

நானுஓயா உட ரதல்ல தோட்ட தொழிலாளர்கள் தோட்ட முகாமையாளரின் அடாவடித்தனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து 17வது நாளாகவும் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தோட்ட தொழிலாளர்கள் தோட்ட முகாமையாளருக்கு எதிராக 17 கோரிக்கைகளை முன்வைத்தே ஆர்ப்பாட்டத்திலும் சத்தியாகிரக போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.



இத் தோட்டத்தில் ஆரம்ப பிள்ளைகளை கூட்டிச்செல்வதற்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாவலர் இடைநிறுத்தம், தேயிலை மலைகளுக்கு வேறு தோட்டங்களில் உள்ளவர்களை கொண்டு தேயிலை கொழுந்து பறிக்க ஈடுபடுத்தல், அதிகமானவர்களுக்கு வழமையாகவே அரைநாள் பேர் வழங்குதல்,குழந்தை பால் மா இடைநிறுத்தல், தோட்டத்திலுள்ள தொழிலாளர்களை தேயிலை தளிர் இல்லாத மலைகளில் வேலைக்கு அமர்த்தி 18 கிலோ தேயிலை பறிக்க வலுக்கட்டாயமாக வலியுறுத்தல், தொழிலாளர்களை அவமரியாதையாக பேசுதல், ஓய்வு பெற்றவர்களை மீண்டும் சேவையில் குறைந்த சம்பளத்திற்கு ஈடுபடுத்தல், தோட்ட முகாமையாளரை மாற்ற வேண்டும். உள்ளிட்ட 17 கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## நிலாமுக்கு கௌரவம்

எம்.ஏ. அமீனுல்லா

மடவளை பஸார் வை.எம்.எம்.ஏ ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் லேக்ஹவுஸ் 'தினகரன்' ஆசிரியர் பீடத்தில் சுமார் 25 வருடத்துக்கும் மேல் பணிபுரிந்து இளைப்பாரிய எஸ்.எம். நிலாமின் சேவையை பாராட்டி முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவித்தபோது பிடிக்கப்பட்ட படம். மடவளை பஸார் தேசிய கல்லூரி அஷ்ரப் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.




பின்னணி பாடகர் எஸ்.பி பாலசுப்பிரமணியத்தின் மறைவையிட்டு (26) மலையகமெங்கும் பல்வேறு பகுதிகளில் தமது கண்ணீர் அஞ்சலியை செலுத்திவருகின்றனர். மஸ்கெலியா பிரவுன்லோ தோட்டத்தின் இளைஞர்கள், முதியவர்கள் சிறுவர்கள் என அவரது ரசிகர்கள் ஒழுங்கு செய்திருந்த கண்ணீர் அஞ்சலி நிகழ்வில் வெள்ளை கறுப்பு கொடிகள் கட்டி அவரது உருவப் படத்திற்கு மாலையிட்டு விளக்கேற்றி, உருக்கமான இரங்கல் உரைகளும் நடைபெற்றன. (ஹட்டன் விசேட நிருபர்)

# கெகுண கொல்ல ஏ.எல்.ஏ.சலாம் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு

குருநாகல் மாவட்ட, கெகுண கொல்லயைச் சேர்ந்த ஏ.எல்.ஏ.சலாம் தனது 36 வருட கால ஆசிரியர் சேவையிலிருந்து கடந்த மாதம் (ஆகஸ்ட்) ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் கெகுண கொல்ல தேசிய பாடசாலையில் தொடர்ந்து 34 வருடங்கள் கடமையாற்றியதுடன் க.பொ.த. உயர்தர பிரிவில் பொருளியல் பாடத்தில் தொடர்ந்தும் கற்பித்து பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு காரணமாக இருந்த ஒரு சிறந்த பொருளியல் ஆசிரியர் ஆவார். ஆசிரிய சேவையில் இரு வருடங்கள் சியம்பளாகஸ் கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையிலும் கடமையாற்றியுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழக பட்டதாரியான இவர் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் டிப்ளோமா பட்டத்தை பெற்றுள்ளதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையில் டிப்ளோமா பட்டத்தையும் தேசிய கல்வி நிறுவகத்தில் மக்கள் சேவை, தொடர்பு சாதனத்துறை டிப்ளோமா பட்டத்தையும் பெற்றிருந்த ஒரு சிறந்த ஊடகவியலாளரும் ஆவார்.

## சுற்றி வளைக்கப்பட்ட...

40 வயது சந்தேக நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். இதன் போதுஇப்போலிக்கச்சேரியிலிருந்து 227 போலி இறப்பர் முத்திரிகைகள் , 300 போலி வெளிநாட்டு கடவுச் சீட்டுகள் , 42 போலி ஆவணங்கள் , 09 போலி தேசிய அடையாள அட்டைகள் , மடிக்கணனி, அச்சு இயந்திரம், தொலைபேசி உள்ளிட்ட பல பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட இறப்பர் முத்திரைகளில் அரச உயர் அதிகாரிகள், நீதிபதிகள் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் ஆகியோரின் பெயர்கள் பதிக்கப்பட்ட முத்திரைகளும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கொரோனா வைரஸ் பரவல் காணமாக தனிமைப்படுத்தி வைக்கும் நபர்களை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்படும் சான்றிதழ் ஒன்றும் இங்கு போலியாக தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இந்நிலையில் சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊழல் விசாரணைப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

## 20ஆவது திருத்தம்...

தெரிவித்தார். 20 ஆவது திருத்த சட்டம் நாட்டில் ஜனநாயகத்திற்குப் பேரழிவாக அமையும் என சுட்டிக் காட்டினார். ஹோரகொல்லவிலுள்ள பண்டாரநாயக்க சமாதி அருகே நேற்று இடம்பெற்ற பண்டாரநாயக்கவின் நினைவு தினத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தற்போதைய தலைமைத்துவத்தால் முற்றாக அழிந்துவிட்டதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

## யாழில் நீதிமன்ற தடையையும்...

முன்னெடுக்கப்பட்டது. உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மாலை 05 மணி வரை தொடர்ந்தது.

அத்துடன் காலை 10.48 மணிக்கு திலீபன் மௌனித்த நேரத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர். உண்ணாவிரதப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன் ஆகியோருடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சரவணபவன், சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறிகாந்தா ஆகியோரும் பங்கேற்றனர்.

மேலும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள்,2020 பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளர்கள்,உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சிகளின் பிரமுகர்கள் என கட்சி பேதமின்றி நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றிருந்தனர். திடீரென சாவகச்சேரி பகுதியில் இவ்வாறான உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமையால் வீதிகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டன.இதனால் சாவகச்சேரி பகுதியில் சிறிது பரபரப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## எம்மை ஒரு சொல் கூட...

காங்கிரஸ் தெரிவித்துள்ளது. தற்போது 20 ஆவது திருத்தச் சட்டத்தில் அதிகமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் தனது கட்சி அதற்கு உடன்பாடில்லையென அக் கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

உத்தேச மசோதாவுக்கு எதிராக நீதிமன்றம் செல்ல தமது கட்சி எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாடுகளிலிருந்து...

அதன்படி, 122 இலங்கையர்கள் இந்தியாவில் இருந்தும் 58 பேர் கட்டாரிலிருந்தும் மேலும் ஏழு பேர் அபுதாபியிலிருந்தும் வந்துள்ளனர்.

இவர்களுக்கு கொரோனா கொவிட் 19 க்கான பி.சி.ஆர். சோதனைகள் செய்யப்பட்டதுடன் தனிமைப் படுத்தலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## யாழில் இளைஞன்...

சைக்கிளில் வந்த தனுவை யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் பகுதியில் இடைமறித்து நேற்று நண்பகல் துரத்தித் துரத்தி அருகிலிருந்த தனியார் கல்வி நிலையத்தில் வைத்து சரமாரியாக வெட்டியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், சம்பவ இடத்தில் கார், வாள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

காரில் வைத்தியர் என்ற ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளது. ஆனால் அந்த கார் வைத்தியருடையது அல்ல என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பல்லாயிரக்கணக்கானோரின்...

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் நேற்று முன்தினம் பகல் சுமார் 1.00 மணியளவில் மரணமடைந்தார். அவரது மறைவுக்கு திரையுலகினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில், அவரது உடல் போலிசார் மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதற்கா ஏற்பாடுகளை தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி செய்திருந்தார். எஸ்.பி.பாலசுப்பிரமணியம் உடல் காம்தார் நகர் இல்லத்தில் இருந்து தாமரைப்பாக்கத்திலுள்ள பண்ணை இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது.

பண்ணை வீட்டில் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் உடலுக்கு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மகேஸ்வரி மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் உடலுக்கு ஆந்திர அரசு சார்பில் அமைச்சர் அனில்குமார் யாதவ் மரியாதை செலுத்தினார். உடல் அடக்கம் சென்னை செங்குன்றத்தை அடுத்த தாமரைப் பாக்கத்தில் உள்ள அவருடைய பண்ணை இல்ல வளாகத்தில் நடைபெற்றது. பொலிஸாரின் மரியாதையுடன் 21 குண்டுகள் முழங்க அவரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## மாலைதீவுஇலங்கை...

தயாராக இருக்கின்றதென்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எல்லை தாண்டுகின்ற சந்தர்ப்பங்களில் மாலைதீவில் கைது செய்யப்படுகின்ற இலங்கை கடற்றொழிலாளர் விவகாரத்தை இருதரப்பு ஒப்பந்தம் ஊடாகக் கையாள வேண்டுமென வும் தெரிவித்தார்.

மாலைதீவின் இலங்கைக்கான தூதுவர் ஒமர் அப்துல் ரசாக், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று மாளிகாவத்தையிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடும் போதே அமைச்சரினால் இவ் விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

இச்சந்திப்பின்போது மாலைதீவின் கடலுணவு மற்றும் கடலுணவு சார் உற்பத்திகளுக்கு இலங்கையில் சிறந்த வரவேற்பு காணப்படுகின்ற நிலையில், கொவிட் 19 காரணமாக அண்மைக் காலமாக இந்த இறக்குமதிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக கவலை வெளியிட்ட மாலைதீவு தூதுவர், இத் தடையை நீக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

அண்மைக்காலமாக இலங்கையில் கடற்றொழில் செயற்பாடுகள், மீன்பிடி இறங்குதுறைகள் விபரங்கள் மற்றும் நீர்வேளாண்மை முன்னேற்றங்கள் தொடர்பாக கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி. இந்து ரத்னாயக்காவிடம் மாலைதீவுத் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், கடற்றொழில்சார் விடயங்களில் மாலைதீவின் தொழில்நுட்ப மற்றும் அறிவுசார் அனுபங்களை பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும், அதேபோன்று நீர்வேளாண்மையில் இலங்கையின் அறிவுசார் அனுபங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தொழில்நுட்ப மற்றும் அறிவுசார் பரிமாற்றங்கள் இரு நாடுகளுக்குமிடையிலான நீண்ட கால உறவை மேலும் வலுப்படுத்தும் என்ற வகையில் இக் கருத்தை வரவேற்றார்.

கொவிட் 19 காரணமாக தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ள மாலைதீவு கடற்றொழில்சார் உற்பத்திகளின் இறக்குமதிகளை மீண்டும் அனுமதிப்பது தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி விரைவில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

## இந்தியா எப்போதும்...

மேலும் தேர்தலில் பெற்றுக் கொண்ட வெற்றி உங்கள் தலைமை மீதான நம்பிக்கையை காட்டுகிறது. இந்த வெற்றி இந்திய இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்க வாய்ப்பளிக்கும் என்றும் குறிப்பிட்டார். அத்தோடு எப்போதும் அயல் நாடுகளுக்கு முதலிடம் என்ற எனது அரசாங்கத்தின் கொள்கை மற்றும் சாகர் கோட்பாட்டின் படி, இலங்கைக்கு முன்னுரிமை அளிக்கிறோம் என பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார். இந்நிலையில் கொரோனா தொற்று காலத்தில் இலங்கைக்கு இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதியுதவிக்கு மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்தார். இந்த ஆண்டின் தொடக்கத்தில், இலங்கை மத்திய வங்கிக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர் பரஸ்பர நாணய பரிமாற்றலை வழங்குவதற்கு தேவையான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. மேலும் இந்த உரையாடலின்போது, கடந்த மாதம் 3ஆம் திகதி எம்.டி. நியூ டயமன்ட் கப்பலில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தை கட்டுப்படுத்த விரைவான உதவியை வழங்கியமைக்காக இந்தியாவிற்கு மஹிந்த ராஜபக்ஷ பாராட்டும் தெரிவித்தார்.

## வடக்கு கடற்றொழிலாளர்களின்...

அவர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாக தெரிவித்ததுடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடற்படை தளபதிக்கும் பிரதமர் அறிவுறுத்தியுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பில் வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இச்சந்திப்பு தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளுக்கு எதிராக காத்திரமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவித்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இலங்கை கடற்றொழிலாளர்களினால்மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கும் முடிவுகட்டப்படும் என்று தெரிவித்தார்.

இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டும் செயற்பாடு தொடர்பாக இலங்கை, இந்திய பிரதமர்களுக்கிடையிலான காணொளி மூலமான கலந்துரையாடலில் பேசப்படவுள்ள நிலையில் இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இதன்போது கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை செவிமடுத்த பிரதமர், அண்மைக்காலமாக கடற்படையினரின் கொறோனா அச்சத்தை சாதகமாக பயன்படுத்தி இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது என்ற அதிகாரிகளின் கருத்தை சுட்டிக் காட்டினார். மேலும், இந்தியப் பிரதமருடனான காணொளி சந்திப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளதுடன், இச் செயற்பாடுகள் தொடருமாயின் அவர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் திட்டவட்டமாக தெரிவித்ததுடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடற்படை தளபதிக்கும் அறிவுறுத்தினார். அதேபோன்று இலங்கை கடற்றொழிலாளர்களின் சட்ட விரோத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பதற்கான நடவடிக்கைகள் கடற்றொழில் அமைச்சினால் மேற்கொள்ளபடும் எனவும் தெரிவித்ததுடன், வடக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அனைத்திற்கும் விரைவில் நிரந்தர தீர்வு கிடைக்குமெனவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## வாய்மொழி மூல...

பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க அரச நிறுவனங்கள் நீண்ட காலத்தை எடுக்கின்றன. ஒரு நிறுவனத்திலிருந்து எழுத்துமூல விசாரணைக்கு இன்னுமொரு நிறுவனம் 14 நாட்களுக்குள் பதில் அளிக்காத விடத்து அவ் எழுத்து மூல வேண்டுகோளை ஏற்றுக்கொண்டதாக கருதி மக்களுக்கு பதில் கூறவும் என ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

ஹல்துமுல்லை, பதுளை மாவட்டத்தின் கஷ்டப் பிரதேசங்களில் ஒன்றாகவும் வெலங்விட்ட, ஹல்துமுல்லை பிரதேச செயலகப் பிரிவின் பின்தங்கிய கிராமமாகும். "ஜனாதிபதி கிராமத்துடன் கலந்துரையாடல்" நிகழ்வின் முதலாவது சந்திப்பு ஹப்புத்தளை, வெலங்விட்ட 100 ஏக்கர் கிராமத்தின் குமாரதென்ன வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி, பிரதேச மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டார்.

பாதைகள், மின்சாரம் மற்றும் குடிநீர் பிரச்சினை உள்ளிட்ட அடிப்படை தேவைகளைக்கூட நிறைவு செய்ய முடியாமல் மக்கள் தமது பாரம்பரிய கிராமங்களை விட்டுச் சென்றுள்ளதாக கிராமவாசிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

முன்னர் குறிப்பிடத்தக்களவு மாணவர்கள் கல்விகற்ற குமாரதென்ன வித்தியாலயம் 16 மாணவர்களுடன் இன்று இருப்பது அதற்கு சிறந்த உதாரணமாகும் என்றும் குறிப்பிட்டனர்.

100 ஏக்கர் கிராமத்திலிருந்து வெலங்விட்ட வரையான பாதையை காப்பட் இட்டு அபிவிருத்தி செய்தல், நீரூற்றுக்களை இனங்கண்டு குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கும் இரண்டு மாதங்களுக்குள் மின்சாரத்தை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

குமாரதென்ன வித்தியாலயத்திற்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்துக் கொடுக்குமாறு கூறிய ஜனாதிபதி, அப்பிரதேசத்தை சூழ உள்ள பிள்ளைகளுக்கு மீண்டும் பாடசாலைக்கு வருகை தந்து கல்வியை தொடர்வதற்கான வாய்ப்பை வழங்குமாறு அதகாரிகளுக்கு தெரிவித்தார்.

கலந்துரையாடலுக்கு வருகை தந்திருந்த பிரதேச மக்களின் இன்னும் பல பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி தீர்வுகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தார்.

அது தவிர வெள்ளவாய கம்பஹ மகா வித்தியாலயத்திற்கு அதிபர் ஒருவரை நியமிப்பதற்கும் சொரகுனே மற்றும் ஜனானந்த வித்தியாலயங்களின் குறைபாடுகளை தீர்ப்பதற்கும் ஹப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயத்தை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

கொழும்பு – மட்டக்களப்பு வீதியில் 35 கிலோமீற்றர்களை கொண்ட பெரகல – வெள்ளவாய பகுதி, கெலிபனாவெல, ஹால்கன்ன வீதியின் வெள'ளவாய வரையான பகுதி, 100 ஏக்கர் கக்குட்டு அராவ மத்திய வீதி, தெஹிலந்த – அளுத்வெலயை இணைக்கும் வீதி மற்றும் கிளை வீதிகளை துரிதமாக நிர்மாணித்து நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

பதுளை மாவட்டத்தின் பல பிரதேச விவசாயிகள் நாட்டின் அதிக மிளகு விளைச்சலுக்கு மற்றும் வளமான விவசாயத்திற்கு உரிமை கோருகின்றனர். அதில் பலர் சேதனப் பசளை பயன்படுத்தி மிளகு பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர். அவர்கள் முகங்கொடுத்து வருகின்ற அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நெல், கறுவா, கோப்பி உட்பட அனைத்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிலும் விவசாயிகள் முகங்கொடுக்கின்றபிரச்சினைகள்விரிவாக கலந்துரையாடப்பட்டதோடு வனப் பாதுகாப்பு அளவைகளின் போது இடம்பெற்று இருக்கின்ற தவறுகளை தீர்க்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். கூடியிருந்த சிறு பிள்ளைகள் இருக்கக்கூடிய அனைவரினதும் பிரச்சினைகளுக்கு இயலுமான வகையில் தீர்வுகளை பெற்றுக்கொடுத்த ஜனாதிபதி , கலந்துரையாடலின் பின்னர் பிரதேசத்தின் பயிர் நிலங்கள் மற்றும் பல வீடுகளுக்கும் சென்று தகவல்களை கேட்டறிந்தார்.

## சபரிமலை அனுஷ்டானங்கள்;...

குறித்து விளக்கமளிக்கும் ஊடக வியலாளர் மாநாடு (24) மட்டக்குளி சபரிமலை சாஸ்தாபீடத்தில் நடைபெற்றது.

சபரிமலை குருமுதல்வரும் சர்வதேச இந்துமத குருபீடாதிபதியுமான கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

மகரஜோதிப் பெருவிழா அகில இலங்கை சபரிமலை சாஸ்தாபீடத்தினால் 38ஆவது ஆண்டு நிறைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது உலகம் முழுவதும் ஏற்பட்டிருக்கின்ற கொவிட்19 வைரஸ் காரணமாக சபரிமலை செல்ல முடியுமா? முடியாதா? என்ற ஐயப்பாடு எல்லோரிடமும் இருந்து வருகின்றது. இந்நிலையில் வழமையாக முத்திரமாலை அணிந்து, கடும் விரதமிருந்து மலையாத்திரை செல்லுகின்ற அனைத்து ஐயப்ப பக்தர்களும் அறிந்துகொள்ள வேண்டியது. சர்வதேச இந்துமத குருபிடம் அகில இலங்கை சபரிமலை சாஸ்தாபீடத்தின் மூலமாக இங்கு மகரஜோதி பெருவிழா வழமைபோன்று மாலை அணிந்து விரத பூஜைகள், வழிபாடுகள் அனைத்தும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன. மாலை அணிந்தால் கட்டாயம் மலைக்குப்போகத்தான் வேண்டும் என்பது ஒரு ஐதீகமாக இருந்தாலும் நடைமுறையிலே இலங்கையில் மட்டுமல்ல இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளிலே இந்த ஐயப்ப காலத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மாலை அணிந்து கொள்கின்றனர். அவ்வாறான எல்லோருக்கும்மலைக்குப்போகும்பாக்கியம் கிடைப்பதில்லை. எனவே அவர்கள் அந்தந்த இடங்களில் விரத பூர்த்தியை செய்துகொள்வர்.

பொதுவாக ஐரோப்பாவை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு வரக்கூடிய சூழல் இல்லாத காரணத்தினால் மாலை அணிந்து விரதம் இருப்பார்கள். விரதமிருப்பவர்கள் விரத முத்திர மாலை அணிந்து கொள்ளலாம். அதில் எந்தவித தவறோ, தோஷங்களோ இல்லை.

மாலை அணிந்து பூஜைகளை செய்யலாம். சபரிமலைக்கு செல்கின்றவர்கள் கன்னிமூல கணபதியை வழிபாடு செய்வது வழமை. அங்கிருந்த காட்டுப்பாதையினூடாக நடந்து செல்வது அப்போது இருமுடி கட்டிச் செல்வதெல்லாம் நடைபெறும். இங்கே சாஸ்தாபீடத்தில் இருமுடி கட்டவேண்டிய அவசியம் ஒன்றும் கிடையாது. பூஜைகள், வழிபாடுகள், பிரார்த்தனைகள், பஜனைகளை மேற்கொண்டு உலகெல்லாம் பரவியிருக்கின்ற கொரோனா என்கின்ற வைரஸ் நோய் வெகுவிரைவில் அகன்று எல்லா மக்களும் சுகமாக வாழவேண்டும் என்கின்ற வகையில் கூட்டு பஜனைகளை செய்யலாம்.

வழமையான சங்காபிசேகங்கள், சிறப்பான உற்சவங்கள், மலையாள பூஜைகளை அகில இலங்கை சபரிமலை சாஸ்தாபீடத்தில் 38 ஆண்டுகள் நிறைவுபெற்றது போல இந்த ஆண்டும் அந்த பூஜைகள் எல்லாம் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நவம்பர் மாதம் 16ஆம் திகதி முத்திர மாலை அணிந்து கொள்ளும் நிகழ்வு ஆரம்பிக்கின்றது. மலைக்குப் போக இன்னும் மூன்று நான்கு மாதங்கள் இருக்கின்றது. குறிப்பாக ஜனவரி மாதத்தில்தான் மலைக்குச் செல்வது வழக்கம். அப்படி மலைக்குச் செல்லும் பாக்கியம் கிடைதால் நாம் மலைக்கு செல்லலாம். இல்லையென்றால் இங்கேயே விரத பூர்த்தியை செய்து ஐயப்பனுக்கு நெய் அபிஷேகம் செய்து பூர்த்தி செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# மாற்றமுறும் உலகுக்கு ஏற்ப மாசற்ற ஊடக கலாசாரத்துடன்

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam

ஒக்டோபர் ௨ முதல்



நாட்டில் ஓர் அனர்த்தம் ஏற்படுகின்றபோது ஜனாதிபதியோ பிரதமரோ, அரச அதிகாரிகளுக்கு ஓர் உத்தரவைப் பிறப்பிப்பார்கள். அஃது என்னவென்றால், சுற்றுநிருபத்திற்காகக் காத்திருக்காமல், மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொடுங்கள் என்பதே!

சுற்றுநிருபம் இன்னும் கிடைக்கவில்லை என்று சொல்லிச்சொல்லியே பல முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதில் நீண்டநாள் ஆகுவதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிந்திருக்கின்றோம். இதற்குக் காரணம் அதிகாரிகளுக்கு மக்கள் மீது கரிசனையும் தொழில் மீதான அர்ப்பணிப்பும் இல்லை என்றே சொல்ல வேண்டும். அவ்வாறு சுற்றுநிருபம் கிடைக்காவிட்டால், அதனைத் துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிப்பதும் இல்லை. சுற்றுநிருபத்திற்கும் அதிகாரப் படிநிலைக்கும் (Protocol) உள்ள வேறுபாட்டினைக் கண்டறிந்துகொள்ள முடியாத அதிகாரிகளே அரச நிறுவனங்களில் உயர் பதவிகளில் பணிபுரிகிறார்கள் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேரடியாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்.

ஒரு சந்தர்ப்பத்தில், சில காலத்திற்கு முன்பு குறித்த ஒரு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சிபாரிசு செய்து அனுப்பிய கடிதத்தைப் பார்த்துவிட்டுக் கிராம சேவை அலுவலரிடமிருந்து கடிதம் கொண்டு வருமாறு கூறிய பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறது. கிராம சேவை அலுவலரை விடப் பாராளுமன்ற உறுப்பினர் அதிகார படிநிலையில் உயர்ந்தவர் என்பதுகூட அந்த அதிகாரிக்குத் தெரிந்திருக்கவில்லை.

அதனைவிடவும் கொடுமையான ஒரு சம்வம் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் நடந்திருக்கிறது! பதுளை மாவட்டத்தின் ஹல்தும்முல்லை பகுதியில் நடந்த மக்கள் குறை தீர்க்கும் நேரடி கள விஜயத்தின்போது, பிரச்சினையொன்றைத் தீர்ப்பது பற்றி அரச அதிகாரி ஒருவருக்கு ஜனாதிபதி கட்டளையிடுகிறார். ஆனால், அந்த அதிகாரியோ "சுற்று நிருபம் வரவில்லை சேர்!" என்று ஜனாதிபதிக்கே சொல்கிறார். அப்போது அவருக்கு உறைக்கும்படி எடுத்துரைக்கிறார் ஜனாதிபதி. "நான் சொல்வதுதான் சுற்றுநிருபம். எழுதி வைத்துக்கொள்ளுங்கள். ஒரு நிறைவேற்று அதிகாரமுள்ள; மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி சொல்வதைவிடவும் வேறு என்ன சுற்றுநிருபம் வேண்டும்?" என்று கேட்கிறார் ஜனாதிபதி.

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 11ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 09

# சுற்றறிக்கையில் சுழலும் அரச உயர் அதிகாரிகள்!

அதிகாரிகள் எந்தளவிற்குச் சுற்றுநிருபத்தில் கட்டுண்டு கிடக்கிறார்கள் என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு சான்று.

"நாட்டுத் தலைவர் குறித்த இடத்தில் நடந்த குறித்த கூட்டத்தின் போது இவ்வாறு உத்தரவிட்டார், அதற்கிணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தயவுசெய்து இதனை முன்னெடுக்கவும்" என்று ஒரு கடிதத்தை எழுதி; அதனை வேண்டுமானால், ஜனாதிபதியின் செயலருக்கும் ஒரு நகலிட்டு அனுப்பி, சம்பந்தப்பட்ட பிரச்சினையைத் தீர்க்க முடியாத; தெரியாத அதிகாரிகள் இன்னும் எத்தனைபேர் அரச நிர்வாகக் கட்டமைப்பிற்குள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்களோ தெரியாது.

அது மாத்திரமா? ஜனாதிபதி பதவியேற்றதிலிருந்து பல அரச நிறுவனங்களின் குறைபாடுகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. அவற்றுள் மிக முக்கியமானவை மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் பணிகள். சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு இரத்த மாதிரி பரிசோதனை செய்வதால், பொது மக்கள் பெரிதும் துன்பப்பட்டார்கள். இப்போது அது தேவையற்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, நாரான்பிட்டியில் உள்ள வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்திற்குச் சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அங்கு நடக்கும் அநீதிகளையும் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

ஜனாதிபதி கண்டறிந்த இந்தச் சம்பவங்கள் போன்று நாட்டில் பரவலாக உள்ள அரச நிறுவனங்கள் பலவற்றின் நிலை இவ்வாறுதான் காணப்படுகிறது. இவற்றுள் மாவட்டச் செயலகங்கள், பிரதேசச் செயலகங்களும் அடங்கும். அங்கு அலுவல் நிமித்தம் செல்லும் பொதுமக்களை வரவேற்கவோ, அவர் என்ன தேவைக்காக வந்திருக்கிறார் என்று வினவுவதற்கோ எந்த அதிகாரியும் முனைவதில்லை. சில செயலகங்களில், சிற்றூழியர்களும் கீழ்மட்ட உத்தியோகத்தர்களும் என்னவோ தாங்கள்தான் அரச அதிபர் அல்லது உதவி அரசாங்க அதிபர் போன்று நடந்துகொள்கிறார்கள். அதிகாரிகளின் துரைத்தனப்போக்கின் காரணமாக, கீழ்மட்ட பதவிகளில் உள்ளவர்கள் பொதுமக்களைக் கண்டுகொள்ளாதவர்களாக உள்ளனர். இங்கு ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது; சுற்று நிருபங்களும் சட்ட ங்களும் வேண்டுமானால், பலமுள்ளவர்களுக்குச் சரியாகப் பயன்படுத்தப்படட்டும். ஆனால், அப்பாவி பொதுமக்களுக்குச் சற்று நெகிழ்வுப் போக்கில் பணியாற்றலாமே என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஹல்தும்முல்லையில் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்த காலத்தில் எல்லாவற்றுக்கும் சுற்று நிருபத்தைப் பார்த்துக்கொண்டிருந்திருந்தால், இன்னும் யுத்தம் நடந்துகொண்டிருக்கும். எனவே, பொது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயமும் ஒரு யுத்தம் போன்றதுதான். எனவே, சுற்று நிருபத்தில் கட்டுண்டு கிடக்காமல், மக்களுக்குச் சேவையாற்றுங்கள். சுற்று நிருபத்தை உரிய வேளைக்கு அனுப்பாமல் தாமதப்படுத்தும் அதிகாரிகள் குறித்துக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும்! என்ற ஜனாதிபதியின் அறிவிப்பை ஆமோதிக்கும் விதமாக அங்குக் கூடியிருந்த மக்கள் பலத்த கரகோஷம் செய்து ஜனாதிபதியுன் கூற்றினை அங்கீகரித்துள்ளனர். எனவே, பொதுமக்கள் எந்தளவிற்கு மனத்தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதை அரச அதிகாரிகள் இனியாவது புரிந்து கொள்ளட்டும்; புரிந்துகொள்வார்களா?

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# அரைத்த மாவையே அரைக்கிறதா தமிழ்த் தரப்பு?

– கருணாகரன்

“புதிய அரசியல் அமைப்பில் அரசியல் தீர்வு அவசியம். சர்வதேசத்தின் மேற்பார்வை அவசியம்” என்று பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் சுமந்திரன் வலியுறுத்தியிருக்கிறார். இது ஒன்றும் புதிய சங்கதியல்ல. ஏனென்றால் இதற்கு முன்பு நடந்த வெளிநாடுகளின் பிரதிநிதிகள், தூதுவர்களுடனான சந்திப்புகளின் போதும் இதையே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் கூறி வந்திருக்கிறது. இனியும் இதையே கூறப்போகிறது. எவ்வளவு காலத்துக்கு இதை, இப்படியே கூட்டமைப்புக் கூறிக்கொண்டிருக்கப்போகிறது என்று நீங்கள் சலிப்போடு கேட்கக் கூடும். கூட்டமைப்பு மட்டுமல்ல, ஏனைய தமிழ்த்தேசியவாதக் கட்சிகளும் இதையே – இந்த வழிமுறையையே பின்பற்றப்போகின்றன. இதற்கு மாறான சிந்தனையும் மாற்றுப் பொறிமுறையும் இவற்றிடம் உருவாகும் வரையில் இதுதான் நடக்கும்.

“இனப்பிரச்சினைக்கான தீர்வைக்குறித்துச் சரியான – நியாயமான சிந்தனை அரசாங்கத்திடம் (தற்போதுள்ள அரசாங்கத்திடம் மட்டுமல்ல, முன்பு இருந்த அரசாங்கங்களிடமும் இனி அமையப்போகும் அரசாங்கத்திடமும்) உருவாகாத வரையில் வெளியுலகத்திடம் நியாயம் கோருவதைத் தவிர வேறு வழியென்ன? உள்வீட்டில் நியாயம் கிடைக்கவில்லை என்றால், வெளித்தரப்பிடம்தானே நியாயத்தைக் கேட்க வேண்டும்?” என்று பதிலுக்கு நீங்கள் கூறக்கூடும்.

மேலோட்டமாகப் பார்த்தால் இதைத் தவிர்க்க முடியாது. இது சரியான நியாயம் என்றே தோன்றும். ஆனால், அரசியல் நடைமுறையில், யதார்த்தச் சூழலில் இது தவறானது. ஏனென்றால் இதன் விளைபயன்கள் நமக்குச் சாதகமாக அமைந்ததும் இல்லை. இனி அமையப்போவதுமில்லை. மாறாக எதிர்விளைவுகளை – பாதிப்புகளையே உண்டாக்கும். அதுதான் நடந்து கொண்டுமிருக்கிறது. நம்முடைய வரலாற்றுப் படிப்பினைகளும் இதையே சொல்கின்றன.

இதுவரையிலான காலப்பகுதியில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உச்சமான பங்களிப்பை வழங்கியது அல்லது ஆதரவை வழங்கியது இந்தியாவே. அதிலும் தமிழ்த்தரப்பின் சார்பாக நின்று இந்தியா இந்த முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது. ஆனால், இறுதி விளைவாக இந்தியா தமிழ்த்தரப்பிடமிருந்து கசப்பான அனுபவத்தையே பெற்றது. இப்பொழுது தமிழ்த்தரப்பையும் விட அரசாங்கத்துடனேயே இந்தியாவின் உறவு வலுவடைந்திருக்கிறது. இது தமிழ்த்தரப்பின் தவறன்றி வேறென்ன. இதற்குத் தனியே புலிகளை மட்டும் குற்றம் சாட்டி விட்டு ஏனையோர் தப்பி விட முடியாது. புலிகள் இல்லாதிருக்கும் 2009 க்குப் பிந்திய சூழலிலும் இந்தியாவை வென்றெடுக்கக் கூடிய அரசியல் வேலைத்திட்டம் எதையும் தமிழ்த்தரப்புக் காத்திரமாக முன்னெடுக்கவில்லை.

இன்னொரு கட்டத்தில் நோர்வே ஊடாக மேற்குலகம் இனப்பிரச்சினையைத்தீர்ப்பதற்காக பங்களிப்புகளில் ஈடுபட்டதுண்டு. அதுவும் தமிழ்த்தரப்புக்கே பாதிப்பை உண்டாக்கியதாக முடிவடைந்தது. பதிலாகக் கொழும்பே இன்று அதன் பயன்களைப் பெற்றிருக்கிறது. இப்பொழுது சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த எரிக் சூல்கெய்ம் தமிழர்களால் சந்தேகிக்கப்படும் அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. இதுவும் இன்னொரு கசப்பான வளையத்தையே தமிழ்த்தரப்புக்கு உருவாக்கப்போகிறது. அதாவது இந்தப் போக்கு நல்ல சமிக்ஞையல்ல.



வெளியுலகத்தின் மூன்றாவது கட்ட அனுசரணை என்பது கடந்த நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் இருந்தது. அது வெளிப்படையும் மறைமுகத்தன்மையும் இணைந்த ஆதரவு. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது பொறுப்புக் கூறுதல், பகை மறப்பு, நல்லிணக்கம் என்பவற்றின் வழியாகவே சாத்தியமாகும் என்பதை வலியுறுத்தியது வெளியுலகம். மட்டுமல்ல, அதற்கென நிதி மற்றும் உலகளாவிய கற்கை என அனைத்து வகைப் பங்களிப்புகளையும் செய்திருந்தது. இதிலும் தமிழ்த்தரப்புக்கே கூடுதலான நன்மைகளிருந்தன.

ஆனாலும் இதை தமிழ்த்தரப்பு எந்தளவுக்குச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. பதிலாக அரசாங்கமே இந்த வேலைகளைச் செய்ய வேண்டும் என்று கூறிக் கொண்டு, குற்றம் சாட்டிக் கொண்டு இதையும் பொறுப்பற்றுக் கடந்து செல்ல முற்பட்டது தமிழ்த்தரப்பு. இனப்பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்காதிருக்கும் அரசாங்கத்திடமிருந்து இந்த வேலைகள் எல்லாம் நடக்கும், அப்படி நடக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? ஆகவே அரசாங்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் இவற்றை தமிழ்த்தரப்புக் கையில் எடுத்திருக்க வேண்டும். ஆனால், அப்படி நடக்கவில்லை.



விளைவு இதுவும் துயரத்தோடு கடந்து போனது.

இப்படி இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வெளித்தரப்பின் ஆதரவும் பங்களிப்பும் தொடர்ச்சியாகவே இருந்திருக்கிறது. அதை இலங்கைச் சமூகங்கள் தொடர்ச்சியாகவே தவறாகக் கையாண்டே வந்திருக்கின்றன. அரசுக்கும் இதில் பங்குண்டு. தமிழ்த்தரப்புக்கும் பங்குண்டு. தமிழ்த்தரப்பின் தவறுகளே இதில் கூடுதலானது என்று கூறவேண்டும். ஏனெனில் இனப்பிரச்சினையினால் கூடுதலான பாதிப்பைச் சந்தித்துக் கொண்டிருப்பது, தமிழ்த்தரப்பே. அதோடு இன்னொரு சாரார் சொல்வதைப்போல, அரசற்ற தரப்பினராகவும் தமிழர்கள் உள்ளனர். ஆகவே இந்தப் பாதிப்பிலிருந்து மீள வேண்டும். அதற்குக் கிடைக்கின்ற வாய்ப்புகளை உச்சமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற சிரத்தை தமிழ்த்தரப்புக்கு இருக்க வேண்டும்.

ஆனால், இந்தச் சிரத்தை இல்லாமல் போனது மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கு ஆதரவளிக்க முன்வந்த தரப்புகளை எதிர்நிலைக்குத் தள்ளியதே நடந்தது. இப்படிச் செய்து விட்டு வெளியுலகின் (சர்வதேச சமூகத்தின்) ஆதரவை எப்படி எதிர்பார்க்க முடியும்?

இதில் தமிழ்த்தரப்பு இன்னும் சற்று அழுத்தமாகக் கவனிக்க வேண்டியது, முதலில் இருந்த அளவுக்கு வெளியுலகத்தின் கவனம் இந்தப் பிரச்சினையில் இல்லை என்பதை. அத்துடன் 1980 களில் இந்தியா கொண்டிருந்த கரிசனையின் அளவுக்கு அதற்குப் பிறகு நிகழ்ந்த பங்களிப்புகளில் நேரடித்தன்மையோ அழுத்த நிலையோ இல்லை.

இனி இது வரவரக் குறைவடைந்தே செல்லும். அகச்சூழலும் புறநிலைகளும் இதை நன்றாகத் தெளிவுறுத்துகின்றன.


ஆனால் இதை மதிப்பிடாமல் அல்லது விளங்கியும் விளங்காததைப் போலதமிழ்த்தரப்புநடந்துகொண்டிருக்கிறது. எளிய உதாரணம், 2009 க்குப் பிறகு வெளிநாடுகளின் தலைவர்கள், தூதுவர்கள், பிரதானிகள் எனப் பல தரப்புகளோடு பல சந்திப்புகளை கூட்டமைப்பும் பிற தமிழ்த்தரப்புப் பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசியுள்ளனர். அரசாங்கத்தின் போக்கைப் பற்றி முறையிட்டிருக்கின்றனர். புலம்பெயர் தேசங்களிலும் பல்வேறு தரப்பினர்களின் முயற்சிகள் இந்த வகையில் நடந்திருக்கின்றன. இதெல்லாம் எந்தளவுக்கு தமிழ் இராஜதந்திரமாக மாற்றமடைந்துள்ளது? எந்தளவுக்குத் தமிழ்ச்சமூகத்துக்கு நற்பயன்களை விளைத்திருக்கின்றன? ஒரு சிறிய அளவுக்கேனும் நம்பிக்கையின் ஒளிக்கீற்றுகளை உண்டாக்கியிருக்கிறதா? அப்படியென்றால் அது எது? அல்லது எந்த வகையில் அது அமைந்திருக்கிறது?

இவ்வளவுக்கும் இந்தச் சக்திகளின் ஒரே அரசியல் வேலைத்திட்டம் இது மட்டும்தான். ஆனால், இதைக்கூட இவை ஒழுங்காக, வெற்றிகரமாகச் செய்யவில்லை. இது குற்றச்சாட்டல்ல. உண்மை.

ஆகவே எதைப்பற்றிய சுயமதிப்பீடும் இல்லாமல், அரசியல் சிரத்தையில்லாமல் தமிழ் அரசியல் மேற்கொள்ளப்படுகிறது என்றேநாம்சொல்ல வேண்டும். பழகியதொரு ஆரம்ப வாய்ப்பாட்டைப்போல திரும்பத்திரும்பத்திரும்பத்திரும்பத்திரும்பத்திரும்பத்திரும்ப ஒரே சரக்கை திரும்பத் திரும்ப அரைத்துக் கொண்டிருக்கிறோமா? என்றே கேட்கத் தோன்றுகிறது.

வெளித்தரப்பின் அனுசரணையையோ அல்லது பங்களிப்பையோ நாம் பெற வேண்டும் என்றால், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையும் நாம் கேட்க வேண்டும். அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றில்லை. அதில் அவர்களுடைய நலன் எவ்வளவிருக்கிறது? நமக்கான நலன் எவ்வளவுண்டு? பொது நலன் எத்தகையது? என்பதைப் பரிசீலிக்க வேண்டும். ஆகவே, முதலில் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக்கேட்பது அவசியம். அது அவர்களை நம்பக்கமாகத் திருப்புவதற்கு உதவும்.

அவர்கள் சொல்வதில் நம்மால் ஏற்றுக் கொள்ளக் கூடியவற்றை உடனடியாகவே வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அது அவர்களுக்கு நம் மீதான கவனத்தை ஏற்படுத்துவதாக இருக்கும். நம்மை நோக்கி அவர்களை வரவைக்கும். நாம் மற்றவர்களை ஈர்த்துக் கொள்ள வேண்டும் என்றால் அதற்கான வேலைகளைச் செய்ய வேண்டும்.



ஆனால், நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? நமக்குச் சொல்லப்படுவதையெல்லாம் கவனத்திற்கொள்வதே இல்லை.

அல்லது அவற்றுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கிறோம். அல்லது ஏதாவது சாட்டுப்போக்குகளைச் சொல்லி அரசின் மீது எல்லாவற்றுக்கும் பழிசுமத்துகிறோம். நமது பொறுப்புப் பற்றியும் பங்களிப்புப் பற்றியும் நாம் சிந்திப்பதே இல்லை.

இது நம்மீதான வெளியாரின் நம்பிக்கையைச் சிதைக்கும். நம்மைப் பற்றி தவறான அபிப்பிராயத்தையே உருவாக்கும். இதனால்தான் சந்திக்கின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடமெல்லாம் தமிழ்த்தலைவர்கள் எவ்வளவோ முறைப்பாடுகளைச் செய்தாலும், பார்க்கலாம் என்ற தலையை ஆட்டிப் புன்னகைக்கிறார்களே தவிர, ஒரு சிறிய அளவிலான நடவடிக்கையைக் கூட எடுக்கவில்லை. ஒரு சிறிய அழுத்தத்தைக் கூட அரசுக்கோ சிங்களத் தரப்புக்கோ உண்டாக்கவில்லை.

இருந்தும் நமது தலைவர்கள் தங்களுடைய முறைப்பாட்டை முடிக்கவில்லை. தொடர்ந்து கொண்டேயிருக்கிறார்கள். எப்படித்தான் அழுதுபுரண்டாலும் அரசியலில் செயற்பாடே விளைவுகளை உண்டாக்கும். செயற்படாத அரசியல் உருப்படாது.

இதேவேளை தொடர்ந்தும் வெளிச்சக்திகளிடமே இனப்பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால், அது சிங்கள மக்களிடமிருந்து தமிழ்த்தரப்பை மேலும் மேலும் தூரத்துக்கே தள்ளும். இந்தியா தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கிறது என்ற உணர்வே இந்தியாவைக் குறித்து சிங்கள மக்கள் அச்சமடையக் காரணம். அப்படித்தான் அவர்கள் நோர்வேயையும் பார்த்தனர். எனவே வெளிச்சக்திகளை நெருங்க நெருங்க சிங்கள மக்கள் விலகிவிலகித் தூரமாகிக் கொண்டிருக்கின்றனர். சிங்கள மக்களைத் தூரத்தில் வைத்துக் கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணவே முடியாது. ஏனென்றால், யாரோடு பேசினாலும் இறுதியில் அரசாங்கத்தோடும் சிங்கள மக்களோடும்தான் தீர்வைக் காண முடியும்.

எனவே முதலில் பேச வேண்டியது சிங்கள மக்களோடே. அந்தத் தரப்புகளோடு. அதைச் செய்யாமல் உலகமெல்லாம் ஓடியோடிப் பேசினாலும் ஆகப் போவதொன்றுமில்லை. யாரையும் தேடித்தேடிப் போய் கெஞ்சிக் கூத்தாடினாலும் நடப்பது எதுவுமில்லை. வேண்டுமால் ஊடகங்களுக்குச் செய்திகளை மட்டும் வழங்கலாம். நமது திருப்திக்காக ஏதோ மற்றவர்களுக்குச் சொல்லக் கூடியதைச் சொல்லிவிட்டோம் என்று திருப்திப்பட்டுக் கொள்ளலாம்.

இதெல்லாம் எரியும் பிரச்சினைக்கு தீர்வாகாது. நெருப்பைத் தணிக்காது.

# வெறும் அதிகாரத்திற்காக ஓடும் நபர் அல்ல நான்



மட்டக்களப்பு மாவட்ட பாராளமன்ற உறுப்பினரும், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான ஹாபிஸ் நஸீர் அஹமட்

**முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியை அழித்து விட்டு வெறும் அதிகாரத்திற்காக ஓடும் நபர் அல்ல நான். வாக்களித்த மக்களின் நம்பிக்கையை பாதுகாக்க வேண்டும். தலைமையின் தீர்மானத்திற்கு கட்டுப் பட வேண்டும்.கட்சியின் பிரதித் தலைவர் என்ற வகையில் தனக்கும் பாரிய பொறுப்பக்கள் உண்டு என்கிறார் மட்டக்களப்பு மாவட்ட பாராளமன்ற உறுப் பினரும், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்ச ருமான ஹாபிஸ் நஸீர் அஹமட். தினகரன் வாரமஞ் சரிக்கான நேர்காணலில் தற்போதைய நிலையில் அரசைப் பகைத்துக்கொண்டு முஸ்லிம்கள் வாழமுடி யாத நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவித்தார். நேர் காணல் விரிவாக...**

**கேள்வி : உங்களது அரசியல் பிர வேசம் பற்றி குறிப்பிடுங்கள்?**

**பதில் :** 1994ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிடு வதற்காக வெளிநாட்டிலிருந்து அவசரமாக வருகைதந்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப்பையும் அவரது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியையும் பலப்படுத்துவதற்காக அந்த தேர்த லில் போட்டியிட்டேன். எனது அரசி யல் பயணம் அந்த தேர்தலோடுதான் ஆரம்பமானது. 2012ல் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்று அதே வருடம் கிழக்கு மாகாண விவசாய அமைச்சை பொறுப்பேற்றுக் கொண்டேன். பின்னர் 2015ல் கிழக்கு மாகாண முத லமைச்சராக அனைத்து கட்சி உறுப் பினர்களின் ஒத்துழைப்பின் பேரில் நியமிக்கப்பட்டு பின்னர் 2020ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பா கவே போட்டியிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றி பெற்றேன்.

**கேள்வி : நீங்கள் கிழக்கு மாகாண முதலமைச்சராக பதவி வகித்த காலமே கிழக்கு அபிவிருத்தியின் பொற்காலமாக கருதப்படுகின்றது. இது பற்றி நீங்கள் கூறுவதென்ன?**

**பதில் :** நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக பதவி வகிப்பதற்கு முன்னரும் ஒரு முஸ்லிம் அரசியல் வாதி ஒருவர் கிழக்கு மாகாண முத லமைச்சராக பதவி வகித்திருந்தார். அவரால் கிழக்கு மாகாணம் எதிர் பார்த்த வகையில் கட்டியெழுப் பப்படவில்லை என்ற பரவலான குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் இருந்த நிலையிலேயே நான் நிய மிக்கப்பட்டேன். நான் பதவிக்கு வந்த பின்னர் தேசிய தரப்படுத்த லில் கீழ் நிலையில் இருந்த மாகாண கல்வியை ஓரளவு உயர்வடையச் செய்தேன். இதற்காக கிழக்கு கல் வியமைச்சின் செயலாளர் மற்றும் பணிப்பாளர்களிடம் கிழக்கு கல்விக் கான தோல்விகளை கேட்டறிந்து பௌதிக வளங்களை பெற்றுக்கொ டுப்பதிலிருந்து ஆளணி உருவாக்கம் வரை அனைத்தையும் சீர்செய்தேன். போதைப்பொருள் பாவனையில் மட்டக்களப்பு மாவட்டம் கிழக்கில் முதலிடத்தில் இருந்தது எமது மாகா ணத்தின் கௌரவத்தை பாதித்தது. அதனை சீர்செய்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் ஆதரவுடன் போதை ஒழிப்புக் கான உத்தரவாதங்களை பெற்றுக் கொடுத்துள்ளேன். மட்டுமல்லாது கிழக்கிற்கு சுமார் 120 நாடுகளிலி ருந்து 350 ராஜதந்திரிகளை வரவ ழைத்து கிழக்கை கட்டியெழுப்பி பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு ரிய சகல விடயங்களையும் முன்னெ டுத்தேன். இதற்காக மக்கள் எனது காலத்தை பொற்காலமாக கருதுகி றார்கள் என்று நினைக்கின்றேன்.

**கேள்வி : மாவட்டத்தின் வீழ்ச்சி நிலையில் இருந்த முஸ்லிம் காங் கிரஸ் கட்சி உங்களின் வருகையா லேயே புத்துயிர் பெற்றதாக கருதுகி றார்கள்.இது பற்றி குறிப்பிடுங்கள்?**

**பதில் :** 1994ல் மரச்சின்னத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளமன்ற தேர்தல் ஊடாக அர சியல் பிரவேசத்தை ஆரம்பித்த நான் பின்னர் 2001 காலப்பகுதியில் வீடமைப்பு அதிகார சபை தலை வராக நியமனத்தை பெற்றுக் கொண்டேன். இக்காலப்பகுதியில் முஸ்லிம் ஆய்வு நிலையம் என்ற நிறுவகத்தை உருவாக்கி இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான வரலாற்று தகவல்கள் மற்றும் பெருமைகள் முஸ்லிம்களின் இழப்புக்கள் குறித்த செய்திகளை பதிவு செய்யும் ஆவ ணக்காப்பகமாக அந்த நிலையம் மாறிட உதவி செய்தேன். 2012 காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு சரியத்தொ டங்குவதை அவதானித்து அந்த தேர்தலில் மாகாணசபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்து 2015ல் மாகாண முதலமைச்சராக பதவியும் வகித்தேன்.இந்தக் காலத் தில் நான் மட்டக்களப்பு மாவட்டத் தில் முஸ்லிம் காங்கிரஸ் அழிந்து போகக்கூடாது என்பதற்காக பெருந் தலைவர் அஸ்ரப்பின் வழியிலேயே மாவட்ட இளைஞர்களையே ஒன்று சேர்க்கும் பணிகளில் ஈடுபட்டேன். அவர்களுக்கான விரைவான வேலை வாய்ப்புகளை வழங்க நடவடிக்கை எடுத்தேன். கட்சித்தொண்டர் களை அரவணைத்து அவர்களுக்கு பாராட்டு வைபவங்களை ஒழுங்கு செய்தேன். பாதிக்கப்பட்ட மக்கள் குறைகளை தீர்ப்பதற்காக ஓட்ட மாவடி, ஏறாவூர், காத்தான்குடி,வா ழைச்சேனை ஆகிய பிரதேசங்களில் பணிமனைகளை அமைத்து உடன டித் தீர்வுகளை பெற்றுக்கொடுத் தேன். இந்த அபிவிருத்தி பணிகள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட கட் சியும் தானாகவே வளர்ந்து வந்தது.

**கேள்வி : நீங்கள் தேசிய கைத் தொழில் அதிகாரசபை தலைவரா க(நைற்றா)பதவி வகித்த குறுகிய காலத்தில் உங்களால் ஆற்றப்பட்ட சேவைகள் குறித்து சொல்லுங்கள்?**

**பதில் :** மட்டக்களப்பு மாவட்டத் தின் ஏறாவூர் பிரதேசத்தில் தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிராந்திய கற்கை நிலையமொன்றை ஆரம்பித்தேன். அக்காலப்பகுதியில் கிழக்கு மாகாண முன்பள்ளி ஆசிரி யர்கள் தமது தொழிற்பயிற்சிகளை பெற்றுக்கொள்ள பொருத்தமான கற்கை நிலையமொன்று இல்லாமல் அலைக்கழிந்த சந்தர்ப்பத்தில் அவர் களது வாண்மை விருத்தி மற்றும் தொழில் தகைமைகளை அதிகரிப் பதற்காக தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையில் முன்பள்ளி ஆசி ரியைகளுக்கான தொழிற்தகைமை சான்றிதழ் கற்கை நெறியினை அறி முகம் செய்து வைத்தேன்.இன்றள வும் முன்பள்ளி ஆசிரியைகள் கிழக்கில் அதிகமாக நாடும் கற்கை நிலையம் நைற்றாதான்.

**கேள்வி : தற்போது மட்டக் களப்பு மாவட் டத்தில் உள்ள ஒரேயொரு முஸ்லிம் பாராளமன்ற உறுப்பினராக நீங்கள் இருக் கிறீர்கள்.இது பற்றி சிறித ளவு பேசுங் கள்?**

**பதில் :** இது ஒரு துரதிர்ஷ்டமான சம்பவம்.கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் சிறுபான்மை சமூகத்தின் பிரதிநிதிகள் பாராளமன்றத்தில் அதிகம் இருப்பது வரவேற்கத்தக் கது. கடந்த காலங்களில் மட்டக்க ளப்பு மாவட்டத்தில் கட்சிகளின் வெற்றிகளின் அடிப்படையிலும், சாணக்கிய காய்நகர்த்தல்களின் அடிப்படையிலும் முஸ்லிம் பாரா ளமன்ற உறுப்பினர்கள் அதிகம் இருந்து வந்தார்கள். இறைவன் என்னை வெற்றி பெற வைத்திருப் பது அவனது நாட்டத்தில் உள்ளது என்றாலும் சிறுபான்மை சமூகங்க ளுக்காக குரல் கொடுப்பதற்கு தகு தியான நபர்கள் மாவட்டத்தில் வர வேண்டும்.

யு,எல்.எம்.ஹரீஸ்
(வாழைச்சேனை விசேட நிருபர்)

**கேள்வி : மட்டக்களப்பு மாவட் டத்தில் இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் நீங்கள் வெற்றி யடைவீர்கள் என்ற நம்பிக்கை உங்க ளுக்கு இருந்ததா?**

**பதில் :** கட்சியின் பிரதித் தலைவரை எப்படியாயினும் பாது காக்க வேண்டும் என்ற உணர்வி னாலும் பிரதேச வாதங்களுக்கு அப்பால் முஸ்லிம் காங்கிரஸ் வாழ வேண்டும் என்று நினைத்தவர்களும் என்னை வெற்றிபெற வைத்தார்கள். எனக்கு அதிகமான கற்றவர்களும், உலமாக்களும் வாக்களித்திருந்தார் கள்.கல்விக்கு நான் செய்த உதவி யும்,மார்க்கத்திற்கு நான் வழங்கிய கண்ணியமும் ஒன்று சேர்ந்தே என்னை பாராளுமன்றத்திற்கு அனுப்பின.

**கேள்வி : நீங்கள் முஸ்லிம் காங் கிரஸ் கட்சியை விட்டு வெளியேறி ஜனாதிபதி கோட்டாபய தலைமை யிலான அரசில் அமைச்சுப்பதவி எடுக்கப்போவதாக தகவல்கள் கசி கின்றன.இது உண்மையா?**

**பதில் :** நிச்சயமாக அவ்வா றில்லை.இணைந்தால் கட்சியோடு தான் இணைய வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியை அழித்து விட்டு வெறும் அதிகாரத்திற்காக ஓடும் நபர் அல்ல நான். வாக்களித்த மக்களின் நம்பிக்கையை பாதுகாக்க வேண்டும். தலைமையின் தீர்மா னத்திற்கு கட்டுப்பட வேண்டும். கட்சியின் பிரதித் தலைவர் என்ற வகையில் எனக்கும் பாரிய பொறுப் புக்கள் உண்டு. சிறுபான்மை சமூ கங்களின் பாரிய ஒத்துழைப்பு இல்லாமல் அமைக்கப்பட்ட அரசு தற்போதைய அரசு. தற்போதைய நிலையில் அரசைப் பகைத்துக் கொண்டு முஸ்லிம்கள் இந்தநாட்டில் வாழமுடியாத நிலை தோற்றுவிக் கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் அரசோடு இணைந்து பணியாற்றுவதையே முஸ்லிம் புத்தி ஜீவிகள் பலரும் நியாயமானது எனக் கருதுகின்றனர்.

**கேள்வி : 20 வது திருத்தம் தொடர் பில் அமைச்சர் அலிசப்ரி தெரிவித்த கருத்தில் உங்களுக்கு உடன்பாடுகள் ஏதும் உண்டா?**

**பதில் :** தற்போதைய அரசு அமைச்சர் அலிசப்ரிக்கு பெரியளவு கௌரவத்தை வழங்கியுள்ளது. அதனை நாங்கள் முழுமனதுடன் வரவேற்கின்றோம். ஆனால் 20வது திருத்தம் தொடர்பாக அண்மையில் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துத்தான் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. 20வது திருத்தம் தொடர்பில் யாருக்கும் அஞ்சாமல் அதனை நீக்குவதற்கு நான் நடவடிக்கைகளை எடுப்பேன் என்று கூறியுள்ளார். அர சியலமைப்பு திருத் தங்கள் வரும்போது நிதானமாக செயற்படும் அனுபவ முதிர்ச்சியால் தான் சிறுபான்மை சமூகங்களை பாதுகாக்க முடியும். உயர்ந்த இடத் தில் இருப்பதற்காக சிறுபான்மை சமூகத்தை மறந்துவிட முடியுமா?அ வரும் ஒரு சிறுபான்மை சமூகத்தை சேர்ந்தவர் என்பதை அமைச்சர் அலி சப்ரி நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அவர் மூலமாகத்தான் தற்போது முஸ்லிம்களின் உரிமை களை பாதுகாக்க முடியும் என்று மக்கள் நினைத்துக்கொண்டிருக் கும் போது இவ்வாறான கருத்துக் களை வெளியிடுவது அவரது நீடித்த முஸ்லிம் அரசியலுக்கு உகந்ததல்ல. ஷரீஆ சட்டம், தனியார் சட்டம், விவாகரத்து சட்டம்,அரபு மத்ரசாக்கள் தொடர்பாக அரசுக்கு விளக்கி முஸ் லிம்களின் கலாசாரத்தையும், சுதேச மரபையும் பாதுகாத்திட அலிசப்ரி நிதானமாக செயற்பட வேண்டும்.

**கேள்வி : கடந்த காலங்களில் இன நல்லுறவுக்கான வேலைத்திட்டங் களை முன்னெடுத்ததாக அறிகின் றோம். இது பற்றி குறிப்பிடுங்கள்?**

**பதில் :** மட்டக்களப்பு மாவட்டத் தில் மக்கள் பன்மைத்துவ கலாசா ரத்தினூடாகவே வாழ்ந்து வருகின்ற னர்.எனது சொந்த ஊரான ஏறாவூரில் முஸ்லிம், தமிழ் மக்கள் ஒற்றுமை யாக வாழ்ந்து வருவதை நீண்டகா லமாகவே அவதானிக்க கூடியதாக உள்ளது. நான் முதலமைச்சராக பதவி வகித்த காலங்களில் இவ்வா றான சௌஜன்ய நிலமைகளை உறு திப்படுத்தும் வேலைகளை நான் செய்துள்ளேன். கிழக்கு வேலை வாய்ப்பு விடயங்களில் சமதர்மம் பாதகாக்கப்பட்டுள்ளது. அபிவிருத் திகளில் கிராமப்புற பகுதிகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளேன்.

(தொடர் 15ஆம் பக்கம்)




## கசப்பு

'பொங்கலோ பொங்கல்' என்று உரத்துக்குரல் எழுப்புவோமே அதுபோல 'மஞ்சளோ மஞ்சள்' என்று சத்தம் எழுப்பத் தோன்றுகிறது. ஆனால் கூக்குரல்தான் இடவேண்டும் போலிருக்கிறது.

நிலைமை இடியாப்பச் சிக்கல். இன மத பேதமின்றி மஞ்சள் என்ற பொருள் அனைவர் இல்லத்துச் சமையலறைக்குள் மணம் பரப்பி, மறைமுக மருத்துவத்தூளாக இருந்த காலம் மலையேறிவிட்ட நிலைமை!

ஏன், நீட்டி முடிக்க வேண்டும். 'குடு' என்றும் 'தூள்' என்றும் 'ஐஸ்' என்றும் போதைப் பொருட்களைக் கைப்பற்றும் கடமையைச் செய்து கொண்டிருந்த நம்ம அரச காவலர் கள் இலங்கைக் கடற்கரைகளில் கிலோ கிலோவாகக் கைப்பற்றிக் கொண் டிருப்பது மகிமை மிகு மஞ்சளைத் தான்! மாதிரிக்கு இரு செய்திகளை படித்துப்பார்ப்போம்.

**520 கிலோ கிராம்**
**மஞ்சளுடன் மூவர் கைது**

*மன்னார் முந்தலம்பிட்டி பிரதேசத் தில் சட்டவிரோதமாக கடல் வழியாக கொண்டுவரப்பட்ட சுமார் 520 கிலோ கிராமுக்கு மேற்பட்ட உலர்ந்த மஞ்ச ளுடன் மூன்று சந்தேகநபர்கள் கடற் படையினரால் கைதுசெய்யப்பட்டுள் ளனர்.*



*வடமத்திய கடற்படை கட்டளையின் கடற்படையினர் மன்னார் முந்தலம் பிட்டி கடற்பகுதியில் முன்னெடுக்கப் பட்ட சிறப்பு நடவடிக்கையின்போதே, இந்த 520 கிலோகிராம் நிறையுடைய 12 உலர்ந்த மஞ்சள் பொதிகளோடு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ள தோடு ஒரு படகும் கைப்பற்றப்பட் டுள்ளது.*

*பல்லெமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 22 முதல் 55 வயதுக்கிடைப் பட்டவர்களே இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளனர். பின்னர் அவர்கள் அடம்பன் சுகாதார மருத்துவ அதிகார டம் ஒப்படைக்கப்பட்டனர்.*

இலங்கைச் செய்தி இப்படி என்றால், தமிழக நாளேடுகளில் வந்துள்ள செய்தியைப் பாருங்கள்.

★ 'தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து பாம்பன் கடல் வழியாக இலங்கைக்கு 22 மூட்டைகளில் சுமார் 800 கிலோ கடல் அட்டைகளையும் 400 கிலோ மஞ்சளையும் கடத்த மீனவர் படகு களில் மறைத்து வைத்திருந்ததைக் கரையோரப் பாதுகாப்புப் பொலிஸ் கண்டு பிடித்தது.

இந்த இரண்டு செய்திகளும் மிகமிக சமீபத்தியவை.. கடந்த மாதத்திலும் இம்மாத ஆரம்பத்திலும் இன்னும் நிறைய நிறைய.

இப்படி மஞ்சள் மகிமை தூள் பறக்கி றது. எனக்கு நாகேஸ்வர ராவ் சாவித் திரி நடித்த 'மஞ்சள் மகிமை' மனத்தி ரையில் ஓடுகிறது!

படம் இருக்கட்டும் இப்போதைக்கு!

இவ்வாறு கைப்பற்றப்பட்டவை போக. கடல் அம்மா துணையில் கரையைத் தொட்டுத் துறைமுகத் திற்கு வந்து சேர்ந்த கப்பல்களின் கொள்கலன்களை சுங்க அதிகாரிகள் சோதித்து வெளியே அனுப்பியதிலும், 33,000 கிலோ மஞ்சளும் 3000 கிலோ உளுந்தும் வாகனத் தரிப்பிட மொன்றில் வந்து நின்ற பாரவூர்திக ளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உடந் தையாக இரு சுங்க அதிகாரிகளே இருந்துள்ளது தெரிந்து கைதாகியுள் ளனர். என்ன, ஆண்டவனே, மஞ்ச ளுக்குப் போன காலம்!

சுங்கத் திணைக்களத்தின்படி, போதை கடத்தலுக்கு ஏட்டிக்குப் போட் டியாக கடந்த சில மாதங்களில் கைப் பற்றப்பட்ட மஞ்சளின் தொகை 1, 015 தொன்கள். அதாகப்பட்டது 1, 015 547 கிலோக்கள்.

கடவுளே, கடவுளே! போதைவஸ் துக்களைத் தான் உபயோகத்திற்கு விடாமல் வைக்கலாம். அல்லது அழிக்கலாம்.

இவ்வளவு தொகை மஞ்சளுக்கும் என்னதான் நடக்கப்போகிறது?

கசப்பு வில்லைகளை விழுங்க
ஓர் அளவு வேண்டாமா?

என் பத்தி எழுத்தின் அவல வரிக ளுக்கு ஓர் ஆறுதல் செய்தியும் கடைசி நிமிசத்தில் கிடைத்தது.

சிறுபயிர் அபிவிருத்தி மற்றும் ஏற் றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச் சர் ஜானக வக்கும்புர வயிற்றில் பால் வார்ப்பது போல் ஒரு வார்த்தையை விட்டிருக்கிறார்.

கைப்பற்றப்பட்ட மஞ்சளை அரசுட மையாக்கி, சதோச, கூட்டுறவு மொத்த விற்பனை' நிலையங்களுக்கு விநி யோகிக்கும் ஒரு யோசனையை ஜனா திபதியிடம் முன்வைக்கவுள்ளார்.

உடனே முன்வைக்கட்டும். உடலுக் குள் போதிய மஞ்சள்' தூள் செல்லா மல் கிருமிகள் கூட்டம் கூட்டமாக குடும் பம் நடத்திக் கொண்டிருக்கின்றன!

## இனிப்பு 1

இந்தவாரம் இரண்டு இனிப்புக ளைத் தந்துவிட தவியாய்த் தவிக்கி றது மனம்! பார்ப்போம்!

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, அறபு மொழியில் வான்புகழ் வள்ளுவரின் 'குறள்' குரலாக ஒலிக்கத் தொடங் கிய சங்கதி எத்தனை பேருக்குத் தெரியும்?

அதுவும், தமிழக அரச அனுசர ணையில், சென்னைப் பல்கலைக் கழகம் புரிந்திருக்கும் கைங்கரியம் அத்தனை தூரம் காதுகளில் விழ வில்லை என்றே படுகிறது.

மேற்படி பல்கலைக்கழக அறபுத் துறைப் பேராசிரியர் கலாநிதி ஜாகீர் உசேன் இதைச் செய்திருக்கிறார். இரண்டாண்டு முயற்சியில் முடித்திருக் கிறார்.



இப்போது இந்த ஆண்டில் முதல் பதிப்பில் சிலவற்றில் மாற்றம் ஏற்ப டுத்தி மீண்டும் மறுபிரசுரம்!

முக்கியமான மாற்றம்! அறபுலக வழக்கப்படி, எந்த நூலும் வலது புறத்தில் இருந்து தான் வாசிப்பு அமையும். வலது – இடது முதல் பதிப்பில், இடமிருந்து வலமாக வழக்க மான முறையில் அச்சிடப்பட்டிருந்தது. இரண்டாம் பதிப்பில் மாற்றம்!

அத்தோடு, ஒரு புறத்தில் திருக்கு றளை அறபியில் அச்சிட்டு, மறுபுறத் தில் தமிழ் மொழியிலும் வெளியிட்டி ருக்கிறார்கள். ஆஹா! அருமை!

மேலும், சிற்சில இடங்களில் வார்த் தைப் பிரயோகங்களிலும் மாற்றம் செய்து எளிமையான புதிய வார்த்தை களை வழங்கி கவர முயற்சி எடுத்தி ருக்கிறார் பேராசிரியர் ஜாகீர் உசேன்.

அவர் சொல்லும் அபிப்பிராயம்! 'தமிழில் உள்ள சில வழக்குச் சொற் களுக்கு அறபு மொழியில் பொருத்த மான சொற்களைத் தேடிப்பிடிப்பதில் கஷ்டப்பட்டேன். எவ்வாறாயினும், திருக் குறள் உலக மக்களை ஒன்றிணைக்கும் மையப்புள்ளியாக உள்ளது. அதுதான் இன்றைய உலகின் தேவை. நான் உளமார உவந்து செய்திருக்கிறேன்."

பேராசிரியர் ஜாகீர் உசேன், தமிழக அரசின் சிறந்த மொழிபெயர்ப்பா ளர்' விருது பெற்றுள்ளார். சென்னை கம்பன் கழகம் விருது வழங்கிக் கௌர வித்துள்ளது. ஓமன் – மஸ்கட் தமிழ்ச் சங்கம், குவைத் பெரியார் நூலகம், குவைத் கொங்கு தமிழ் மன்றம் என' அறபுப் பிரதேசங்களில் இயங்கும் எம் மவர் அமைப்புகள் அவரை அடையா ளங்கண்டு நல்லமுறையில் சிறப்பித் திருக்கின்றன.

நாமும் பாராட்டுவோம்!

## இனிப்பு 2

முன்னொரு சமயம், கண்டிப் பகு தியில் 'தினகரன்' நட்சத்திர நிருபர் களுள் ஒருவராக ஜொலித்தவர். **'ஸ்டார் ராஸிக்'**. இவர் இன்று ஆழ்ந்த ஓய்வுறக்கம். ஊடகத்துறைக்கு அவர் விட்டுச் சென்ற ஒரு சொத்து மகனார் **றம்ஸி!**

'சமூகச் செயற்பாட்டாளர்' என்ற றியப்பட்டார். முகநூல் பக்கங்களில் கெட்ட நல்ல சைத்தான்களின் ஊச லாட்டத்திற்கு உள்ளாகியவர். பல வலைத்தளங்கள் வழி பெரும் மிரட் டல்களுக்கு ஆளானார். தன் குடும்பத் திற்கு ஏதாவது ஆகுமோ என்ற அச் சத்தில் காவல் நிலையத்தில் காவல் தேடிப்போக, அவரே சிறைக்கம்பி களை எண்ண ஆரம்பித்தார்.

சிறுநீரகப்பாதிப்பு, மூட்டு அழற்சி, ஈரல் பிரச்சினை, கால்காயங்கள் என அவதிப்பட்டவருக்கு இந்தச் சிறை அவ தியும் சேர்ந்து கொண்டது.



ஏப்ரல் 29ல் கூண்டுக்குள் நுழைக்கப்பட்டவர்,. ஐந்து மாதங்க ளின் பின்னர் இம்மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டு பிள்ளைச் செல் வங்கள் முகங்கள் கண்டு அமைதி யும் ஆறுதலும் அடைந்திருக்கிறார்.

அன்றைய அறேபியப் பாலைவ னத்தில் அருமைத் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஒரு மானுக் குப் பிணையாகவும், துணையாக வும் நின்றது வரலாறு.

அந்தத் தூதரின் வழியைத் தெரிந்தோ தெரியாமலோ அவர்கள்



பாதையிலேயே போய் 'ஒரு மனி தனுக்குத் துணை நின்று, பிணை பெற உதவி செய்திருப்பது ஒரு வடபுல **எம்.ஏ.சுமந்திரன்!** அதுவும்! ஒரு செப்புக் காசும் பெறாமல்.

நாளும் பொழுதும் பிரச்சினை களில் மூழ்கி, தன் வாக்காள மக்க ளுக்கும் நாட்டுக்கும் நல்லதே நடக் கப் பாடுபடும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி யான அவர், கண்டிச் சீமையாளருக் கும் காவல்காரனாக ஆனது வரலா றாகி விட்டது.

இவருக்கு முன்னும் ஒரு வடபுலத் தவர் வரலாறு படைத்திருக்கிறார். அவர் **சேர் பொன்னம்பலம் இராம நாதன்.**

அதே கண்டிப்பகுதியில் 1915ல் நடந்த கலவரத்தில் ஆங்கிலேய ஆட் சியாளர்களால் கைதானவர்களை விடுவிப்பதில் முன்னின்றார்.

உடல் நலம் குன்றிய நிலையில் துணைவியார் தடுத்தும் பொருட் படுத்தாமல், ஓர் அபாயகரமான கப்பல் பயணம் மேற்கொண்டு இங் கிலாந்து (லண்டன்) சென்று வழக் குறைத்து வெற்றி வீரனாக மீண்ட மனிதர் அவர். அந்தப் பின்னணிச் சரித்திரம் பல நூல்களாகப் பரிண மித்துள்ளன.

ஆக அன்று ஒரு பொன்னம்பலம் இராமநாதனும் இன்று சுமந்திரனும் தங்களைச் சரியானபடி சமூகத்திற்கு அடையாளம் காட்டியிருக்கிறார்கள்.

என் பத்தி எழுத்துப் பேனா முனை இந்தளவுக்குத் தான் உழுது நிறுத்த வேண்டியுள்ளது.

# ஜீவன் தொண்டமான் கவனத்திற்கு...!

### கிடப்பில் போடப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் – 4




# ஹந்தானை ஐந்தாம் கட்டை தோட்டத்தில் ஒரு அரைகுறை வீடமைப்புத் திட்டம்

கண்டி ஹந்தானை குறுப் ஐந்தாம் கட்டை தோட்டத்தில் நான்கு வருடங்களுக்கு முன்னர் வீடமைப்புத் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. குறைந்த வருமான, குறைந்த வசதிகள் கொண்ட குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து கொடுப்பதே இதன் நோக்கம். 24 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான வீடுகளும் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகின.

இந்த வீடமைப்புத் திட்டம் ஏனைய வீட்டுத் வீடு ஒன்றை கட்டுவதற்கான நிதியின் தொகை ஐந்து இலட்சம் ரூபாவாகும். வீடுகள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட வரைபடத்திற்கேற்ப அவர்களின் ஆலோசனைப் படி கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கட்டம் கட்டமாக கட்டுமான பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் குறித்த அந்த கட்டுமான பணிகள் முடிவடைந்ததும் அடுத்த கட்டத்திற்கான நிதி வழங்கப்படும்.


ஏன் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தமக்கு தெரியாது என தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

தமது வீடுகள் விரைவாக கட்டி முடிக்க வேண்டும் என ஆடு மாடுகளை விற்று நகைகளை அடகு வைத்தும் விற்றும் ஏன் வட்டிக்கு பணம் வாங்கியும் இந்த கட்டுமான பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

இநத வீடுகட்டும் முறை ஏனைய வீட்டுத்திட்டங்களைவிட சிறப்பு கொண்டது. தொழிலாளர்கள் தாமாக தரமாக வீடுகளை அமைத்து கொள்ளக்கூ


(படங்கள் : தெல்தோட்டை தினகரன் நிருபர்)




திட்டங்களை விட சிறப்பு வாய்ந்தது. தொழிலாளர்கள் தரமான வீடுகளைத் தாமாகவே அமைத்துக் கொள்ளும் திட்டம் இது. இத்திட்டத்தின் பயனாளிகளாக தமிழ்க் குடும்பங்கள் மட்டுமன்றி சிங்களக் குடும்பங்களும் உள்வாங்கப்பட்டிருந்தனர். வீடுகளை அமைக்கத் தெரிவு செய்யப்பட்ட இடமும் சிறப்பானதாகவும் பாதையோரமாகவும் அமைந்திருந்தது.

இப்படியான சட்டதிட்டங்களுடன் முன்னெடுக்கப்பட்ட இந்த வீடமைப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்களுக்கு மேலாகின்றன.

கடந்த இரண்டு வருடகாலமாக அடுத்த கட்ட கட்டுமான பணிக்கான பணம் கிடைக்கவில்லை. இதனால் கட்டுமான பணிகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. வீடுகளற்ற வசதிகள் இல்லாதவர்களுக்கு என கட்டப்பட்டுவரும் வீடுகள். இவை டியதாக உள்ளது. இந்த வீட்டுத்திட்டத்தில் உள்ள இருபத்தி நான்கு குடியிருப்புகளில் தமிழ் சிங்கள தொழிலாளர்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்த இடம் பாதையோரமாகவும் சிறப்பானதாகவும் உள்ளது.

ஆர். நவராஜா ...

# மலையகத்தில் மது மட்டுமல்ல, போதைப் பாவனையும் எகிறி வருகிறது!

## மலையகத்துக்கு இது சோதனை மேல் சோதனைதான்!

**‘பாதிக்கப்படும் ஒரு தலைமுறை பற்றி யாருக்கும் அக்கறையில்லை வெட்கமும் இல்லை. மலையகத்தை போல வேறு எங்கும் இப்படி அடுக்கடுக்காக மதுபான சாலைகளைப் பார்க்கவே முடியாது. இதுவும் கூட ஒரு வகையில் சுரண்டல்தான்’**

சர்வதேச ரீதியில் போதைவஸ்து வர்த்தகம் கொடிகட்டி பறக்கின்றது. இலங்கையைச் சூழவுள்ள கடல் பிராந்தியம் போதைவஸ்து கடத்தலின் கேந்திர நிலையமாக மாறியுள்ளது. ஒரு குட்டித்தீவு என்ற வகையில் கடத்தலுக்கு ஏற்ற ஒரு கேந்திர நிலையமாகவே இலங்கையை கடத்தல்காரர்கள் கருதி வந்துள்ளனர்.

இன்று இப் போதைவஸ்து கடத்தல், விற்றல், பாவனை பற்றி அரசாங்கம் துரிதமாக செயல்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. தினந்தோறும் கடத்தல் முறியடிப்பு, கைதுகள் என்று பரபரப்பாக செய்திகள் வெளிவந்தவண்ணமிருக்கின்றன. போதைவஸ்து காரர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று பலரும் பேசத் தலைப்பட்டுள்ளனர். இதே சமயம் உண்மையில் போதைவஸ்து கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிரான சட்டங்கள் போதுமானதாக இருக்கின்றதா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

போதிய ஆதாரங்களின்மை, அரசியல் தலையீடு போன்றவற்றால் குற்றவாளிகள் தண்டனை பெறுவதிலிருந்து தப்பி விடுவதும் நடக்காமல் இல்லை. அண்மைக் காலங்களில் போதைப்பொருள் வர்த்தகத்தை தடுக்க வேண்டிய கடப்பாடு கொண்ட அரசுதுறைசார் (பொலிஸ், கலால் பிரிவு, சிறைச்சாலை) அதிகாரிகள் சிலரே குற்றவாளிகளாக கைது செய்யப்பட்டதைக் கண்டோம். எனினும் பெரும்பான்மை இன சமூகம் இது குறித்து விழிப்புணர்வு பெற்றுள்ளது. இது அரசாங்கத்துக்கு சாதகமான சங்கதி. இவ்விடயத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டியது நாட்டு மக்களின் கடமை.

ஆனால் தேசிய ரீதியில் ஏற்பட்டு வரும் போதைப்பொருள் விற்பனை, பாவனை சம்பந்தமான விழிப்புணர்வும், எச்சரிக்கையும் மலையகத்தில் ஏற்பட்டுள்ளதா என்பதே கேள்வி.

பன். பாலா ...

மலையக அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் இதுபற்றி அவதானம் செலுத்துவது கிடையாது. சிவில் அமைப்புகள் மட்டுமே அவ்வப்போது ஆவேச குரல் எழுப்பி வந்திருக்கின்றன. மது பாவனை, போதைவஸ்து வழக்கம் மலையகத்திலும் நிலைகொண்டுள்ளது.

இன்று மலையக பகுதிகளில் தடுக்கி விழுந்தால் தவறணைகள் மீதுதான் முட்டிக் கொள்ள நேரிடும். ஒரு சிலரின் கைகளுக்குள் முடங்கிப்போய்க் கிடக்கும் மது வியாபாரத்தால் உரிமையாளர்களுக்கு இலட்சம் இலட்சமாக கொட்டுகிறது. அரசாங்கத்துக்கும் ஆதாயம் சேர்க்கிறது. உரிமம் வழங்கும் அரசியல்வாதிகளும் செம லாபம். இதனால் பாதிக்கப்படும் ஒரு தலைமுறைப்பற்றி யாருக்கும் அக்கறையில்லை வெட்கமும் இல்லை. மலையகத்தை போல வேறு எங்கும் இப்படி அடுக்கடுக்காக மதுபான சாலைகளைப் பார்க்கவே முடியாது. இதுவும் கூட ஒரு வகையில் சுரண்டல்தான்.

மது மனிதனுக்குத் தீங்கை விளைவிக்கும் ஒரு பானம். மதுவுக்கு அடிமையாகும் ஒருவன் தனக்குத் தானே துரோகம் செய்பவனாகிறான். ஆரம்பத்தில் அவன் மதுவைக் குடிக்கின்றான். நாளடைவில் மது அவனை குடிக்க ஆரம்பிக்கிறது. மலையக மக்களைப் பொறுத்தவரை உடல் நலம் கெடுவதோடு அவர்களது வாழ்வாதாரத்துக்கும் கேடு செய்கிறது இந்த மது.

வருமானத்தில் பாதிப்பு. குடும்ப உறவுகளில் விரிசல். நாகரீகமற்ற வார்த்தை பிரயோகங்களால் வெட்கித் தலைகுனிகிறது இளைய சமூகம். வீண் தகராறும் விதண்டாவாதமும் அக்கம் பக்கம் எங்கும் அமைதியைக் குலைக்கிறது. சில நேரங்களில் வெட்டு, குத்து, கொலை என நிலை உச்சமடைவதும் உண்டு. இவற்றையெல்லாம் கண்டுகொள்ள வேண்டியவர்கள் கண்டு கொள்வதும் இல்லை. மதுவின் பிடியிலிருந்து இம்மக்கள் மீண்டுவர உதவுவதும் இல்லை.

ஒரு போத்தல் மதுவும் ஒரு பார்சல் சோறும் 500 ரூபா பணமும் தந்தால் மலையக வாக்காளரை வளைத்துப் போட்டு விடலாம் என்று எண்ணும் கீழான அரசியல் கலாசாரம் இங்கு கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. மலையகத்தில் இந்த மது பாவனை ஆங்கிலேயரால் அறிமுகம் செய்யப்பட்டது. அதிகாரிகள் மட்டத்தில் ஆரம்பித்த இப்பழக்கம் படிப்படியாக கீழ்மட்டம் வரை பரவ ஆரம்பித்தது. ஒரு காலத்தில் தோட்டங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையில் தடுப்பு வேலியாக எழுதப்படாத கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்தன. சிங்கள கிராமவாசிகள் தோட்டங்களுக்குள் நுழைய தடையும் இருந்தது.

காலப்போக்கில் இந்நிலை மாற்றமடைந்தது. கிராமம் தோட்டங்களுக்கிடையிலான நெருக்கம் வளரலானது. கிராமப் புறங்களில் ஆரம்பமான மது உற்பத்தி தோட்ட மக்களையே இலக்காக கொண்டது போலிருந்தது. இன்றும் இந்நிலைமையே தொடர்கிறது. ஒரு பக்கம் அரசு அங்கீகரத்துடனான சட்டபூர்வ மது வியாபாரம் மறுபக்கம் சட்டத்துக்கு பூச்சாண்டி காட்டிவிட்டு சட்ட விரோத மது தயாரிப்பு. இந்த இரண்டுமே மலையக மது பிரியர்களுக்கு ஆசீர்வாதமாக அமைகின்றன. தற்போது மது பாவனையுடன் போதைவஸ்து வழக்கமும் அதிகரிக்கக்கூடிய அபாயமிருப்பதாக வரும் தகவல்கள் குறித்தே இங்கு நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பாடசாலைகளை அண்மித்த இடங்களில் இதற்கான முனைப்புகள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

மாணவர்கள் மத்தியில் போதையை தூண்டக்கூடிய இனிப்புப் பொருட்கள், மென்பானங்கள் விநியோகம் செய்ய சிலர் முற்படுகின்றனர். இதற்காக குறித்த பாடசாலையில் கல்வி கற்றவர்கள் அல்லது இடைவிலகியவர்களை பயன்படுத்தவும் செய்கின்றனர் என்ற செய்தி ஏலவே வெளியாகியிருந்தது. பெருந்தோட்டத் துறைக்குள் இளைஞர்கள் மாணவர்களும் கூட குடிப்பழக்கத்துக்கும் போதை வஸ்து பாவனைக்கும் ஆளாகும் சூழ்நிலையே காணப்படுகிறது. பெற்றோரும் வயது வந்தவர்களும் மது அருந்துவதைத் தடுக்குமளவுக்கு விழப்புணர்வு இன்னும் வந்தபாடில்லை.

ஆசிரியர் சிலரும்கூட இதற்கு ஆட்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

(22ம் பக்கம் பார்க்க)

## மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஆளுமைகள்

# பி. மரியதாஸ் அவர்களின் அனுபவப் பகிர்வுகள்



1971 ஜனவரி 14 ஆம் திகதி பொங்கலன்று அட்டன் பொஸ்கோ கல்லூரியில் நடைபெற்ற மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஆண்டு விழாவில் வலமிருந்து இடம் 2 ஆவதாக அமர்ந்து நிகழ்வுகளை அவதானிக்கிறார்.

இடதுசாரி அரசியல் தத்துவத்தில் ஞானம் படைத்தவர். மலையக இலக்கிய இயக்கத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். 1960களின் ஆரம்பத்தில் மலையக மக்களின் சமூக எழுச்சி தொடர்பாக தொடர்ந்து பத்திரிகைகளில் எழுதியவர். ஹட்டன் செனான் தோட்டத்தில் பிறந்து ஹைலன்ஸ் கல்லூரியில் மலையக சமூக, அரசியல் பேராசான் இர. சிவலிங்கத்திடம் கல்வி கற்றவர். பேராதனை பல்கலைக்கழகத்தில் இளமாணி பட்டம் பெற்று நல் ஆசிரியராகவும் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர். மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம், மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், மலையக இளைஞர் முன்னணி என்பவற்றில் ஈடுபாடு கொண்ட பி. மரியதாஸ் தனது எழுத்துப் பணிகள் தொடர்பான அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்.

1960களில் மலையகத்தில் ஏற்பட்ட சமூகம் சார்ந்த சிந்தனா போக்கும், எழுச்சியும், விழிப்புணர்வும் கூட்டு செயற்பாட்டிற்கும், முயற்சிகளுக்கும் வழிவகுத்தன. சமூக விழிப்புணர்வு வழித் தடத்தி ன் விளைப் பொருட்கள் என இவற்றைக் குறிப்பிடலாம். 1960 களில் சமூகத் தளத்தில் முகிழ்ந்த மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் இப்போக்கின் திசைகாட்டியாய் மிளிர்ந்தது. சமூகம் சார்ந்த சிந்தனா முகிழ்வுக்கும் பிரக்ஞைபூர்வ செயற்பாட்டிற்கும் தூண்டுகோல் அமைப்பாக இருந்தது.

இதற்கு முன்னரும் சமூகம் சார்ந்த சிந்தனா போக்கு துளிர் விட்டிருந்தது. இளஞ்செழியனின் அகில இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம் இத்தகைய செல் நெறிக்கு அடித்தளம் இட்டிருந்தது. அதன் வியாபகக் குறுக்கம் காரணமாக வீச்சும், வீரியமும் சார் எல்லைக்குட்பட்டிருந்தது. மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் ஹட்டனை இயங்கு தளமாகக் கொண்டிருந்தாலும் அது மலைநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் துடிப்பான செயற்பாட்டாளர்களைக் கொண்டிருந்தது. இவ்வாறான சமூக எழுச்சிப் பிரவாகத்தின் உப விளைபொருளாக 1963 நவம்பரில் உதித்ததுதான் மலைநாட்டு எழுத்தாளார் மன்றம்.

உயர்ந்தர வகுப்பு மாணவனாக நான் படித்துக் கொண்டிருந்தபோது 1963 ஆம் ஆண்டில் அட்டனில் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் அங்குரார்ப்பண கூட்டம் நடைபெற்றது. எனது ஆசான்களான இரா. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன் ஆகியோரின் முயற்சியின் பெறுபேறான இக்கூட்டத்தில் மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பலர் கலந்து கொண்டனர். பதுளை பாரதி ராமசாமி, மலைத்தம்பி, எட்டியாந்தோட்டையிலிருந்து ஏ.பி.வி. கோமஸ், ஜே. அந்தனி, என்.எஸ்.எம். ராமையா, தமிழோவியன், சக்தி ஏ. பாலையா, எம். வாமதேவன், தெளிவத்தை ஜோசப், தமிழ்ப்பித்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். வீரகேசரி உதவி ஆசிரியராயிருந்த எஸ். எம். கார்மேகம் இக்கால்கோள் நிகழ்ச்சிக்கு அச்சாணியாய் செயற்பட்டார். மன்றத்தின் தலைவராக எனது ஆசிரியர் எஸ். திருச்செந்தூரனும், செயலாளராக கார்மேகமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அங்குரார்ப்பண கூட்டத்தில் கருத்துரை கூற மேடைஏறிய நான் வர்க்க விடுதலைப் போராட்டத்தில் இலக்கியத்தின் வகிபாகம் பற்றி அழுத்திப் பேசினேன். புரட்சிக்காரனுக்கும், வர்க்கபிரக்ஞையற்ற எழுத்தாளனுக்குமிடையிலான வேறுபாட்டை விளக்கி கதை ஒன்றை கூறினேன். எனது பேச்சு ஒரு கழகக் குரலாக சிலரால் கருதப்பட்டது.

எழுத்தாளர் மன்றம் மலையக இலக்கியவாதிகளுக்கு உத்வேக ஊக்கியாக அமைந்தது. பல பகுதிகளில் இலக்கிய அமைப்புகள் தோன்றுவதற்கும், புதிய



பி. மரியதாஸ்

எழுத்தாளர்கள் உருவாகவும் வழியமைத்தது. உத்வேகத்தோடும், உற்சாகத்தோடும் பலர் கவிதைகளையும், சிறுகதைகளையும் எழுதினர். அன்று ஹைலன்ஸ் கல்லூரி மாணவர்களாக இருந்த மு.க. நல்லையா (சாரல் நாடன்) மு. சிவலிங்கம், எம்.வாமதேவன், ஏ.பி. சுப்பிரமணியம், பி. மரியதாஸ் உட்பட இலக்கியப் பிரவேசஞ் செய்ய மலைநாட்டு எழுத்தாளர் மன்றமே பெரிதும் காரணம் என்பது மிகையில்லை.

அமைப்பொன்று உருவாக்கப்பட்டு அதன் வழிநடத்தலில் பல இளைஞர்கள் எழுதத் தொடங்கினர். ஆற்றல்மிகு பல கவிஞர்கள் வெளிப்படலாயினர். மு.கு. ஈழக்குமார்,கவிஞர் மலைத் தம்பி, தமிழோவியன், வெளிமடை குமரன், மாத்தளை பொ. பூபாலன், கவிஞர் சி. அழகுப்பிள்ளை, குறிஞ்சி தென்னவண்,குறிஞ்சிவாணன் உட்பட பல ஆக்ரோஷக் கவிஞர்கள் ஆதர்சனமாகினர். மலையகக் கவிதை இலக்கியம் வளநதியாய் இலங்கை எங்கும் பிரவகித்தது.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றந்தின் உருவாக்கத்தோடு கண்டியிலிருந்து க.ப. சிவம் வெளியிட்ட மலைமுரசு சஞ்சிகை, ரா.மு. நாகலிங்கம் வெளியிட்ட செய்திப்பத்திரிகை போன்றவையும் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தன. இதில் கார்மேகத்தினதும் அவரது தோட்ட மஞ்சரியினதும் பங்கு அளப்பரியது. இக்காலத்தில் எஸ். விஸ்வரட்ணம், டி.எம். முருகையா, பொ. கிருஸ்ணசாமி, சி.எஸ். காந்தி, மு. சிவலிங்கம், மலைத்தம்பி ஆகியோர் ஊடகங்களில் பணியாற்றியது மலையக இலக்கிய வளர்ச்சிக்கு உதவியாய் அமைந்தது. சுதந்திரன், தினகரன் பத்திரிகைகளும் மலையக எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தன.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் நடத்திய சிறுகதைப் போட்டிகளும் புதிய எழுத்தாளர்கள் உருவாகவும், ஏற்கனவே எழுதியோர் உத்வேகம் பெறவும் உதவின. தெளிவத்தை ஜோசப், மு. சிவலிங்கம், சாரல் நாடன், நயிமா ஏ. பசீர், மாத்தளை ச.சோமு, மலரன்பன், மாத்தளை வடிவேலன், நூரலை சண்முகநாதன், ஏ.எஸ் . வடிவேலு, ஏ.பி.வி. கோமஸ், பெரிய குறியானை அ.சொலமன்ராஜ், எம்.வாமதேவன், சி. பன்னீர்செல்வம், குன்றவன், பரிபூரணம், எம். வேலாயுதம், பி.கே. கோவிந்தராஜ், தங்கப்பிரகாஷ், தி. இரா. கோபாலன், மல்லிகை சி. குமார்,

(22ம் பக்கம் பார்க்க)

எச்.எச். விக்கிரமசிங்க ...

## சந்தர்ப்பவாதத்தின் கோர முகம்

# அடையாளம் காண வேண்டியது காலத்தேவை

சந்தரப்பவாதம் என்பது சந்தடியில்லாமல் ஊமையாகத் தூங்கும் உணர்வுகளில் ஒன்று. உள்ளக் கிடங்கில் புதையல்களாகக் கிடக்கும்

இவை, சந்தர்ப்பம் வாய்க்கும் போதுதான் வாய் திறக்கிறது. அதுவரைக்கும் ஒருவரது சுய ரூபங்களைப் புரிந்து கொள்ள எவராலும் இயலாது. அவ்வாறு புரிந்து கொண்டாலும் வாதத்திறமை, அனுபவம், நழுவல் போக்குகளால் தப்பிக்கவும் இவர்களுக்கு இயலுமாகிறது. இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை உலகமே கண்டு கொள்ளும் சந்தர்ப்பம் அண்மையில் கிடைத்தது. பாராளுமன்ற அமர்வுக்காக வந்த தேசிய காங்கிரஸ் தலைவரின் ஆடை தொடர்பில், ஏற்பட்ட சர்ச்சைகள், சிலரின் சுய ரூபங்களைத் தோலுரித்துக் காட்டியிருந்தன. சம்பிரதாயங்களை மீறி, ஆடையணிந்த குறித்த அக்கட்சியின் தலைவர் மீது எதிர்க் கணைகள் தொடுத்த ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள், சபாநாயகரின் அனுமதியுடன் மீண்டும் அதே உடுப்புடன் அத்தலைவர் சபைக்கு வந்து அமர்ந்தார்.இதிலுள்ள பல படிப்பினைகளையும் இந்த எம்பிக்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஆடையைப் பார்த்து அல்கைதா? ஐ.எஸ்.ஐ.எஸ், இஸ்லாமிய அடிப்படைவாதி எனக் கூச்சலிட்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் அரசியல் நோக்கிலே செயற்பட்டுள்ளனர். தேசிய காங்கிரஸ் தலைவர் அணிந்து வந்த ஆடையில் அடிப்படைவாதம், பயங்கரவாதச் சாயல் இருந்திருந்தால் மீண்டும் அந்த ஆடையுடன் சபைக்கு வருவதற்கு சபாநாயகரின் அனுமதி கிடைத்திருக்காது. நடைமுறையில் சில தவறுகள் இருந்ததாலே, அவர் வெளியேற்றப் பட்டு மீண்டும் சபைக்குள் அனுமதிக்கப்பட்டார். இதைக் கூடப் பொறுத்துக் கொள்ளும் மன வளர்ச்சியில் ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் இல்லை. சஜித் பிரேமதாச தலைமை தாங்கும் ஐக்கிய மக்கள் சக்தி இவ்வளவு வறிதாகிப் போனமை கவலையளிக்கிறது. ஒரு தவறைக் கண்டிப்பதற்கு எம்பிக்களுக்கு உரிமை உள்ளதுதான். எனினும் தேசிய காங்கிரஸ் தலைவருக்கு எதிராக எதிர்க்கட்சி எம்பிக்கள், பிரயோகித்த சொற்கணைகள், கூச்சல்கள் என்பன வங்குரோத்து அரசியலுக்கு வயிறு வளர்க்கும் முயற்சிகளாகவே உள்ளன. சிறுபான்மை சமூகங்களை பெருந்தேசியத்தின் எதிரிகளாகக் காட்டி,வெற்றியடையும் வியூகத்தை, தற்போது வங்குரோத்திலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியும் கையிலெடுத்துள்ளது. தென்னிலங்கையில் சறுக்கி விழுந்துள்ள சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி, மீண்டும் காலூன்றுவதற்கு எடுக்கும் எத்தனங்கள்தான் இவை.இன்னும் எத்தனை காலங்களுக்கு இப்படி எத்தனிப்பது. இப்பின்னணியில் தான்,



தேசிய காங்கிரஸ் தலைவர் அணிந்து வந்த ஆடையையும் தூக்கிப் பிடித்துள்ளனர். சமூகங்களின் சகஜமான செயற்பாடுகளுக்கு ஆபத்தாகவும், சிவில், சமூக வாழ்வுக்கு இடையூறாகவும் உள்ள பயங்கரவாதம் ஒழிக்கப்படுவதற்கு தேசிய காங்கிரஸ் தலைமை தொடர்ந்து அரசுக்கு வழங்கிய பங்களிப்புக்கள் தென்னிலங்கையின் மனக் கண்களில் ஆழப் பதிந்துள்ளன. இவ்வாறு வழங்கப்பட்ட தொடர் ஆதரவுகளுக்காக தேசிய காங்கிரஸ் பல தோல்விகளையும் சந்திக்க நேரிட்டது. தோல்விகள் என்பவை தற்காலிகப் பின்னடைவுகள்.இனப்பிரச்சினைக்கான தீர்வு, எங்கேயோ உள்ள ஒஸ்லோவில் பேசப்படுவதல்ல, நமக்குத் தேவையானதை பிறர் தீர்மானிக்க முடியாது. இவ்வாறு திணிப்புக்களால் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு திருத்தங்கள், மாகாண சபை முறைகள் எல்லாம் இன்று மக்களால் நிராகரிக்கப்படும் நிலைக்கே வந்து விட்டன.

இதுபற்றித் தேசிய காங்கிரஸ் உரத்துச் சொன்ன காலங்கள் இப்போது உண்மைப் படுத்தப்படுகின்றன.இவை என்றைக்காவது சாதனையாகும் என்பதையும் தேசிய காங்கிரஸ் தெரிந்தே வைத்திருந்தது. இந்தப்பதிவுகள் இருக்கும் வரைக்கும் சஜித் பிரேமதாசவின் கட்சியிலுள்ள பங்காளித் தலைமைகள், வேறு கண்ணோட்டத்தில்தான் நோக்கப்படும். இதை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகளாகவும் இவர்களின் எதிர்க் கணைகள் பார்க்கப்படுகின்றன. தங்களோடு உள்ள சந்தர்ப்பவாதிகள் பற்றி ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள தனித்துவ தலைமைகள் தெளிவு பெறுவதுதான் எதிர்கால அரசியல் வியூகங்களுக்கு ஆரோக்கியமாக அமையும். இதைவிடுத்து முஸ்லிம் தனித்துவ தலைமைகளும், எம்பிக்களும் இணைந்து சந்தர்ப்பவாத பயங்கரவாதச் சாயலுக்கு பக்கவாத்தியம் ஊதியதுதான் இதிலுள்ள மிகப் பெரிய கவலை. ஒரு காலத்தில் இவர்களையும் ஒதுக்கி விட்டு, ஆட்சி,அதிகாரத்தைக் கைப்பற்ற சஜித் தலைமையிலான அணி முயற்சிக்கலாம். மேலும் சந்தர்ப்பம் பார்த்து இத்தலைமைகளும் சஜித் அணிளால் ஓரங்கட்டு, அடிப்படைவாதச் சாயமும் பூசப்படலாம். இவ்வாறு நடைபெறாது என்பதற்கு எவ்வித உத்தரவாதங்களும் இல்லை. இதைத்தான் எதிர்க் கட்சியினரின் கூக் குரல்களும் குற்றச்சாட்டுக்களும் தெளிவு படுத்துகின்றன. எனவே,ஈஸ்டர் தாக்குதலுக்குப்பின்னர் ஒதுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படும் நிலைமைக்கு வந்துள்ள முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள், இவ்வாறான சந்தர்ப்பவாத அரசியல்வாதிக ளை, அடையாளங் கண்டுதான் அடுத்த காய் நகர்த்தல்களுக்கு ஆயத்தமாக வேண்டும்.

எனவே அரசியல் நோக்கத்தை கைவிட்டு சமூக நோக்கில் செயற்படுவதுதான், முஸ்லிம்

சமூகத்தின் காலத்தின் தேவையாக உள்ளது. அரசியலுக்காக சந்தர்ப்பம் பார்த்துச் செயற்படும் தலைமைகளுடன் பங்காளிகளாகப் பயணிக்கும் கடப்பாடுகள், முஸ்லிம் தனித்துவ தலைமைகளுக்கு எழுதப்படாத விதியில்லை என்பதையும் இவர்கள் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

ஏ.ஜீ.எம்.தௌபீக் ...

# தாவல் அரசியலின் தற்கால தாற்பரியங்கள்

அரசியலில் எதிர்பார்த்த விறுவிறுப்புக்கு நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சிறிய இடைவெளியை ஏற்படுத்தி உள்ளதால், சில எம்.பிக்களின் எதிர்பார்ப்புக்களிலும் பெரிய ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. இருபதை ஆதரிப்பதூடாக அரசாங்கத்தில் இணைவது, அமைச்சுப் பதவிகளைப் பெறுவது அல்லது அரசாங்கத்தின் உச்சளவு சலுகைகளைப் பெற்றுக்கொள்வது. இவைதான் இதில், இந்த எம்.பிக்கள் எதிர்பார்த்தவை.

உண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள சிறுபான்மைத் தலைமைகளுக்கு இந்த இருபது, கழுத்தில் மாட்டப்பட்டுள்ள கயிறுதான்.

கடந்த காலத்தேர்தல் வியூகங்களில் விடப்பட்ட தவறுகளிலிருந்து எதிர்நோக்கி வரும் தொடர்சவால்களில், இந்த இருபது மாத்திரம் தான் இத்தலைமைகளின்



இருப்புக்கான சவாலாகியுள்ளது. சமூகத்தின் தனித்துவ அடையாளம், கௌரவம், கலாசாரங்களின் பாதுகாப்புக்களுக்கு குரல் கொடுப்பதாகக் கூறி, அரசுக்கு எதிராகப் பெற்றுக்கொண்ட தனித்துவ ஆணைகள் இப்போது அதே அரசாங்கத்துடன் இணைவது அல்லது இணைய எத்தனிப்பது, தளம்பல், தாவல் போக்குகளின் அடையாளமாகத்தான் நோக்கப்படும். இதில், தலைமைகளை மீறிச் சிலர் தாவ முனைவதுதான் பாரிய சவாலாக

சங்கமிக்கப் போகின்றது.

இதற்கு முன்னர் வந்திருந்த அனைத்து திருத்தங்கள், மசோதாக்களை இத்தலைமைகள் ஆதரித்ததை நோக்கினால்,

இதையும் ஆதரிக்கலாம் என்ற கணிப்பீடுகளுக்குத்தான் வர முடிகிறது. ஆனால், சந்தர்ப்பங்கள் சாத்தியமாகவுள்ளமை இதுவரைக்கும் தென்படவில்லை. அரசாங்கத்தில் இருந்ததற்காக ஆதரித்ததும், அரசில் இணைவதற்காக ஆதரிப்பதும் வெவ்வேறு பரிமாணங்களில் உள்ளவை. இருந்ததற்காக ஆதரித்தால் சமூக நோக்கு, இணைவதற்காக ஆதரித்தால் தனிப்பட்ட நோக்கு என்றும் கருத முடியாத நிலைமைகளைத்தான் கடந்த காலங்கள் காட்டியுள்ளன.

12 வீத வெட்டுப்புள்ளியைக் குறைப்பதற்கான ஆதரவு இன்று வரை நன்மையளிப்பது போல,18,19 களை ஆதரித்து ஏற்படுத்திய வினைகள் விஸ்வரூபங்களாகியுள்ளதையும் நம்மால் காண முடிகின்றது.

பெரும்பான்மைப் பலத்திலுள்ள இந்த அரசாங்கம், எவரையும் வா என்றழைத்து வாக்குக் கேட்கத் தயாராக இல்லை. எனினும், சன்மானமில்லாத விருந்தாளியாகச் சிலர் வர விரும்புவதை அரசாங்கம் கண்டுகொள்ளவே செய்யும். இருப்பதை எதிர்க்க முனையும் உள்வீட்டு எதிரிகளுக்கு எச்சரிக்கையாக இவர்களின் வருகைகள் பயன்படலாம் என்பதைத் தெரிந்து கொண்டதால்தான், வாசல் கதவுகள் திறக்கப்படவுள்ளன.

அதுமட்டுமல்ல, கடந்த காலத்தில் இக்கட்சிகள் செய்த அவநம்பிக்கைகளுக்கான பழிவாங்கலுக்கு தலைமைகளை உடைத்து, தனிமைப்படுத்துவதை விடவும் வேறேது சிறந்த வழி? தனியாகச் சென்றால் முழு அமைச்சு கிடைத்து விடும் என்ற ஆவல், இந்த எம்.பிக்களைத் துள்ளிக் குதிக்கச் செய்யாதிருக்குமா? 18க்காகத் தாவிய தவிசாளர் ஒருவர், முழு அமைச்சுப் பெற்றதையெல்லாம் இவர்கள் மனதிற்கொண்டுதான் குதூகலிக்கின்றனர்.

ஆனால், தாவவுள்ள சில எம்.பிக்களுக்குள்ள பிரச்சினை இதுதான். சன்மானமில்லாமல் செல்வதா? கட்சியை விட்டுத் தனியாகச் சென்றால் சமூகத்தில் தனிமைப்படுவோமா? ஜனாஸா எரிப்பு விடயத்தில் காட்டிய எதிர்ப்புக்கள் எல்லாம் வெறும் அரசியலுக்கான ஏமாற்றுக்களென சமூகம் ஏளனம் செய்யாதா? என்றெல்லாம் இவர்கள் நினைக்கின்றனர்.

இதுவல்ல விடயம். முஸ்லிம் தலைமைகளின் இவ்வாறான தடுமாற்றங்கள், அடிக்கடி ஏற்படுத்திய கட்சித் தாவல்கள் பிறிதொரு கோணத்தையும் காட்டியுள்ளன. முஸ்லிம் அரசியல் அடையாளங்கள் எதுவென்பதில் பிற சமூகங்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியதும் இவர்களது தாவல்கள்தான்.

பிற சமூகங்களுக்கு, முஸ்லிம் அரசியல் அடிப்படை அடையாளத்தில் ஏற்பட்டுள்ள இத் தெளிவின்மைகள், ஜனாஸா எரிப்பு மட்டுமல்ல இதையும் விடப் பயங்கரமான சமூக சவால்களையும் எதிர்காலத்தில் வென்றெடுக்க முடியாத நிலைமைகளையே ஏற்படுத்தப் போகின்றன.

'எரித்தாலும் பராவாயில்லை. சாம்பரையாவது அடக்குவதற்குத் தாருங்கள், என முஸ்லிம் மத அமைப்புக் கோரியதால், அத்தனை நிலைப்பாடுகளும் தடுமாற்றங்களாக நோக்கப்பட்டதிலிருந்துதான், எதையும் வெல்ல முடியாத நிலைக்கு முஸ்லிம் சமூகம் செல்ல நேரிட்டுள்ளது.

எனவே, தடுமாற்றமில்லாத தீட்சண்ய அரசியல், சமயப் போக்குகளைக் கையிலெடுப்பதுதான், இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளாகும்.

மேலும், ஆளுமையை வளர்த்துக்கொள்வதில் அஷ்ரப்புக்குப் பின்னர், தற்போதைய தலைமைகள் பெரும் பலவீனமாகவுள்ளமையும், முஸ்லிம் அரசியலுக்கு ஏற்பட்டுள்ள பலவீனங்களில் ஒன்று. கட்சியிலிருந்து எத்தனையோ எம்.பிக்களை நீக்கிய அஷ்ரப், தனது மரணம் வரைக்கும் தனித்துவ தலைமையாக தன்னையே அடையாளப்படுத்தியதில் பலவற்றைச் சாதித்ததையும், நமது கவனங்கள் நழுவவிடக் கூடாது.

உண்மையில் ஒற்றைத் தலைமைத்துவத்தில் முஸ்லிம் சமூகம் அடைந்த அரசியல் ஆதாயங்கள், ஒப்பீட்டளவில் அதிகமாகத்தானுள்ளது.

இந்தளவு இல்லாவிட்டாலும் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் காங்கிரஸ் தலைமைகள் இணைந்து பணியாற்றுவது பல நன்மைகளை ஏற்படுத்தியதை, கடந்த கால நல்லாட்சியில் காணக் கிடைத்தாலும், மிக முக்கியமான விடயங்களில் குறிப்பாக, தென்னிலங்கையை நாடிபிடிப்பதில் மற்றும் 52 நாள் அரசில் தீர்மானமெடுப்பதில் மிகப்பெரிய தவறிழைத்திருக்கின்றன.

மற்றொரு முஸ்லிம் அரசியல் தலைமையான தேசிய காங்கிரஸின் வியூகங்களைக் கூட, இத்தலைமைகள் கண்டுகொள்ளவில்லையே! ஒருவேளை எதிரியின் பலத்தை தகர்ப்பதற்காகத்தான், தேசியக் களம் தெரியாமல் தடுமாறியதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் அணியிலுள்ள தனித்துவ தலைமைகள் பிறரால் விமர்சிக்கப்பட்டதுண்டு.

இருபதாவது திருத்தம் பற்றித் தானே இப்போது பேச்சு. இதற்குள், ஏன் கட்சிகளின் கடந்த காலத் தவறுகள் விமர்சிக்கப்படுகின்றன? என எண்ணிவிடாதீர்கள்.


தவறுகளால் வந்தத் தோல்விகள் தொடர் கதையாகாமலிருக்க உள்ள வழிகள் பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவைப்பாடுகளில் சிறுபான்மைச் சமூகங்கள் வந்துள்ளன. அதிலும், முஸ்லிம் சமூக அரசியல் இனியும் அடையாளம் காணப்படாமல் விடப்படுவது, இன்னும் பல விடயங்களைத் தவறவிடச் செய்வதற்கான வழிகளையே திறக்கும்.

**மேலும், ஆளுமையை வளர்த்துக்கொள்வதில் அஷ்ரப்புக்குப் பின்னர், தற்போதைய தலைமைகள் பெரும் பலவீனமாகவுள்ளமையும், முஸ்லிம் அரசியலுக்கு ஏற்பட்டுள்ள பலவீனங்களில் ஒன்று. கட்சியிலிருந்து எத்தனையோ எம்.பிக்களை நீக்கிய அஷ்ரப், தனது மரணம் வரைக்கும் தனித்துவ தலைமையாக தன்னையே அடையாளப்படுத்தியதில் பலவற்றைச் சாதித்ததையும் நமது கவனங்கள் நழுவவிடக் கூடாது.**

சுஐப் எம். காசிம் ...

# தமிழர் பிரச்சினைகளை தேசிய பிரச்சினைகளாக கருதி தீர்வு காணப்பட வேண்டும்

‘இந்நாட்டு மக்களை இனவாதம் மதவாதத்திலிருந்து மீட்டெடுக்கும் சவால் எமக்கிருக்கிறது. அதனால் இன்றல்ல நாளை மறுநாளாவது மக்கள் உண்மையை உணர்வார்கள். அப்போது எமது கொள்கைகளையும் நேர்மையையும் மக்கள் ஏற்று எம்மோடு வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது' 'தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பளப் பிரச்சினை, இளைஞர் யுவதிகளுக்கான தொழில் பிரச்சினை, MCC உடன்படிக்கையை கிழித்து குப்பைத்தொட்டியில் போடும் உறுதிமொழி, ஒரே நாடு ஒரே சட்டம், ஊழல் மோசடிகளுக்கு தண்டனை வழங்குதல் உள்ளிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும்–படி அழுத்தம் கொடுப்பதே எமது பிரதான பணியாகும் ’



**ஜே.வி.பி மத்திய குழு உறுப்பினரும் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான**
**இராமலிங்கம் சந்திரசேகரன்**
**வாரமஞ்சரிக்கு வழங்கிய பேட்டி.**

பேட்டி கண்டவர் :
பி. வீரசிங்கம்

***ஜே.வி.பி.யின் கொள்கைகள், அதன் விமர்சனப் பார்வை, நேர்மை என்பன பாராட்டத்தக்கவையாக உள்ளன. அணுகுமுறைகள் வித்தியாசமாக இருக்கின்றன. 1971, 1987 காலப்பகுதி தலைமைத்துவத்துக்கும் இன்றைய தலைமைத்துவத்துக்கும் இடையே தலைகீழ் வித்தியாசங்கள் உள்ளன. எனினும் சிங்கள மக்களை ஏன் இன்றைக்கும் உங்களால் வசப்படுத்த முடியவில்லை?***

இது சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல, முழு நாட்டு மக்களுக்கும் பொருந்தும். இருந்தபோதிலும் ஜே.வி.பி.யின் செயற்பாடுகள் சிங்கள மக்கள் மத்தியில் இருப்பதால் உங்களுக்கு இந்தக் கேள்வி தோன்றியிருக்கலாம்.

உண்மைதான்! மக்கள் விடுதலை முன்னணி நேர்மையான கொள்கை பிடிப்புள்ள கட்சியென்பதை நீங்களும் ஏற்றுக்கொள்கிறீர்கள். அதைக் கேட்டதும் எனக்கு பெருமிதமாக இருக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் எமது கட்சி பாரிய பின்னடைவை சந்தித்திருப்பது உண்மையே. ஆனால் சகல பின்னடைவுகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது. அதாவது கடந்த 72 ஆண்டுகளாக எமது நாட்டைப் பொறுத்தவரை இரண்டு கட்சிகளே நாட்டை ஆட்சி செய்திருக்கின்றன. ஆனால் அவர்களால் நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள சமூகப் பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில் தோல்வி கண்டுள்ளன. அதை ஒருபோதும் அவர்களால் தீர்க்கவும் முடியாது. ஆட்சிபீடத்திற்கு வருவதற்காக இனவாதம், மதவாதத்திடமே அவை தஞ்சமடைந்துள்ளன.

அவ்வாறான இனவாதத்தையே கடந்த இரண்டு தேர்தல்களிலும் ராஜபக்ஷமார் பயன்படுத்தினர். அதற்கு மக்கள் இலகுவாக இரையாகியுள்ளனர். அதனால் இந்நாட்டு மக்களை இனவாதம் மதவாதத்திலிருந்து மீட்டெடுக்கும் சவால் எமக்கிருக்கிறது. அதனால் இன்றல்ல நாளை மறுநாளாவது மக்கள் உண்மையை உணர்வார்கள். அப்போது எமது கொள்கைகளையும் நேர்மையையும் மக்கள் ஏற்று எம்மோடு வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது.

***தமிழ் மக்களுக்கு ஜே.வி.பி தரக்கூடிய வாக்குறுதிகள் யாவை?***

மக்கள் விடுதலை முன்னணி என்பது வாக்குறுதியளிக்கும் கட்சியல்ல. எமக்கு கொள்கையும் வேலைத்திட்டமும் இருக்கிறது. அந்த வேலைத்திட்டம் விஞ்ஞான ரீதியான வேலைத் திட்டம். அதில் அனைத்து மக்களுக்குமான வேலைத்திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்குமான அடிப்படைப் பிரச்சினை ஒன்றாகும். அதற்கு தீர்வு கிடைக்கும் போதே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமென்றே நாங்கள் நம்புகின்றோம். சமத்துவத்தில் அடிப்படையில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எந்தவொரு இன மக்களும் தாம் இந்த நாட்டின் இரண்டாம் பிரஜைகள் என்று உணரக்கூடாது. அனைத்து மக்களும் நாட்டில் சமமானவர்கள் என்று உணர வேண்டும். அவ்வாறானதொரு ஆட்சி நாட்டில் உருவாகும்போதே தமிழர்கள் நிம்மதியாக வாழமுடியும்.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் என்றாலும் சரி கடந்த 72 வருட ஆட்சியாளர்கள் என்றாலும் சரி எல்லோராலும் தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். அந்த ஏமாற்றத்தின் விரக்தியின் விளிம்பிற்கே தள்ளப்பட்டதன் காரணமாக கடந்த 30 வருடங்களுக்கு மேலான யுத்தம் நடைபெற்றது. ஆனால் யுத்தம் முடிந்து இன்று 10 வருடங்களுக்கு மேலாகிறது. இனவாதம், காணி விடுவிப்பு, பௌத்த விஹாரைகளை புதிதாக அமைத்தல், தமிழ் மக்களின் பூர்விகக் காணிகளை அபகரித்தல், காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினை, விதவைகள் உள்ளிட்ட வேலையில்லாப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை இவர்கள் வழங்குவதில் தோல்வி கண்டுள்ளனர். தமிழ் மக்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளைத் தேசியப் பிரச்சினையாகக் கருதி தீர்வினை வழங்க வேண்டும். அதாவது சமத்துவத்தின் அடிப்படையில் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை அணுகுவதே மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கையாகும்.

***மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசு பதவிக்கு வந்துள்ளது. இந்தப் பலத்தைப் பயன்படுத்தி அரசு என்னென்ன பணிகளைச் செய்யலாம் எனக் கருதுகிறீர்கள்?***

இந்த அரசாங்கம் எதையும் செய்ய வேண்டும் என்றோ எந்தவொரு பணியையும் செய்யும்படியோ நாம் ஆலோசனைகளை கூறப்போவதில்லை. ஏனென்றால் இந்த அரசாங்கமானது 72 வருட ஆட்சியின் நீட்சியே தவிர வேறெதுவுமில்லை. 72 வருட அனுபவங்கள் எமக்கிருக்கிறது. நாட்டு மக்களுக்கும் இருக்கிறது. கடந்த காலத்தில் 10 வருடத்திற்கு மேலாக மஹிந்த ராஜபக்ஷ நாட்டை ஆட்சி செய்துள்ளார். அதில் இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றினார். அதன்போது என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால் இவர்களிடம் எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை.

ஆனால் இவர்கள் ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் மக்களுக்கு அளித் வாக்குறுதிகள் பல உள்ளன. அவைகளில் தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பளப் பிரச்சினை, இளைஞர் யுவதிகளுக்கான தொழில் பிரச்சினை, MCC உடன்படிக்கையை கிழித்து குப்பைத்தொட்டியில் போடும் உறுதிமொழி, ஒரே நாடு ஒரே சட்டம், ஊழல் மோசடிகளுக்கு தண்டனை வழங்குதல் உள்ளிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி அழுத்தம் கொடுப்பதே எமது பிரதான பணியாகும். அதை நாங்கள் சரிவரச் செய்வோம்.

ஆனால் அரசாங்கம் போகும் போக்கைப் பார்த்தால் இவைகள் தீர்க்கப்படுமா? என்ற கேள்வியே மேலெழுகிறது.

சகல அதிகாரங்களையும் தம்வசப்படுத்திய எதேச்சதிகார போக்கை நோக்கி நகர்வதையே எம்மால் காணமுடிகிறது. அதன்படி எதிர்காலத்தில் மக்களுக்கு நாட்டின் ஜனநாயகத்திற்கு பாதகமான பதற்றம் பெருகி வருகிறது.

***நீண்டகாலமாகவே யாழ்ப்பாணத்தில் வசிக்கிறீர்கள். இம் மக்களையும் இவர்களின் பிரச்சினைகளையும் எவ்வாறு பார்க்கிறீர்கள்?***

ஆம்! யாழ்ப்பாணத்தில் வாழ்வதால் இங்குள்ள மக்களின் பிரச்சினைகளை கண்டுள்ளோம். புரிந்துகொண்டுள்ளோம். உணர்ந்துள்ளோம். அவ்வாறு உணர்ந்ததன் காரணமாகவே கடந்த பாராளுமன்றத்தில் மாவை சேனாதிராஜாவை விட வடபகுதியில் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைப் பற்றி எங்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க பேசினார். அது இந்த மக்களின் பிரச்சினைகளை உணர்ந்ததன் காரணமாகவே!

இன்று தமிழ் மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள். அவற்றில் பிரதானமாக வறுமை, வேலையில்லாப் பிரச்சினை, இளைஞர் யுவதிகளை வாட்டி வதைக்கும் பிரச்சினைகளாக மாறியுள்ளன. பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் அதிகமாக வடபகுதியிலேயே காணப்படுகின்றன. விதவைகளின் பிரச்சினை அகோரமான பிரச்சினையாக மாறியுள்ளது. இன்னமும் 40 வீதமான மக்கள் கொட்டில்களில் வாழ்கின்றனர். 60 வீதமானவர்கள் ஏதோ முறைசார்ந்த முறைசாரா விதத்தில் கடன்காரர்கள். விவசாயிகளின் பிரச்சினை, மீனவர்களின் பிரச்சினையென சொல்லிக்கொண்டே போகலாம்.

இந்தப் பிரச்சினை மேலும் வெளிக்கொணர வேண்டிய தேவை உள்ளது. தீர்வினை பெற்றுக்கொள்வதற்காக எம்மால் இயலுமான நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம். அதற்காக மக்களை அணிதிரட்டி தெளிவுபடுத்தும் நடவடிக்கையையே இன்று நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம்.

***யாழ். தமிழ்க் கட்சிகள் உங்கள் பார்வையில்...***

தென்னிலங்கை பிரதானக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் எப்படி சிங்கள இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி தமது இருப்பினைத் தக்கவைத்துக் கொள்கின்றனவோ அதே போன்றுதான் இங்குள்ள தமிழ்க்கட்சிகளும் தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் நான் மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளை மறைப்பதற்கு இனவாதத்தை கையில் எடுத்துள்ளன. அங்கு இனவாதம் மேலெழும்போது அதற்கு சமாந்தரமாக இங்கும் இனவாதம் கிளப்பப்படுகிறது. அது கவலைக்கிடமான நிலைமையாகும்.

இங்கே தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் சிதைந்துள்ளன. அதேபோன்று அவர்களின் கட்சிக்குள்ளேயும் பிளவுகள் ஏற்பட்டு அது பெரும் குடுமிச் சண்டையாக மாறியிருப்பதை தற்போது காணமுடிகிறது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் முறுகல் நிலை உச்சமடைந்துள்ளது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை எடுத்துக் கொண்டாலும் உட்கட்சிப் பூசலும், குடுமிச் சண்டையும் அதிகரித்துள்ளது. அங்கு போலவே இங்கும் தேசியப் பட்டியலுக்கான சண்டை, விருப்பு எண்ணிக்கையில் குளறுபடி என்று தமிழ் கட்சிகள் தங்களை தக்கவைத்துக் கொள்ளும் போராட்டத்தில் உள்ளார்களே தவிர தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்காக குரல் கொடுப்பதாகத் தெரியவில்லை.

அரசாங்கமானது சிறுபான்மை மக்களை ஒதுக்கி வைக்கின்ற போக்கையே கடைப்பிடித்து வருகிறது. ஆகவே எதிர்காலத்தில் பாரிய சவால்கள் நிறைந்த காலமாகவே தமிழ் மக்களுக்கு இருக்கப்போகின்றது. அதனால் இனியும் தமிழர்கள் என்று தனித்துவமாக அல்ல, இதை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதி மக்களுக்காக உண்மையாக குரல்கொடுக்கும் தேசியக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும் தேசிய மக்கள் சக்தியுடன் கைகோர்க்கும்படி நாம் தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கிறோம்.

***இம்முறை கூட்டமைப்புக்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவை எப்படிப் பார்க்கிறீர்கள்? அவர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?***



அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவுக்கான காரணத்தை ஆராய்ந்து அதற்கு தீர்வினை கண்டுபிடிப்பது அவர்களுடைய பொறுப்பாகும். எங்களால் அறிவுரை கூறமுடியாது. ஆனால் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தமிழர்கள் மத்தியில் இருக்கின்ற பெரிய கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்புதான்.

அவர்களுக்கும் எங்களுக்கும் இடையில் கொள்கை ரீதியான பாரிய வேறுபாடுகள் காணப்பட்டாலும் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் ஜனநாயக மறுதளிப்புக்கு எதிராக, மனித உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்காக, எதேச்சதிகாரம், சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக அதேபோன்று மக்கள் எதிர்கொள்ளப் போகும் பொருளாதார நெடிக்கடிக்கு எதிராக, குரல் கொடுப்பதில் அவர்கள் எம்முடன் இணைய வேண்டும்.

அவ்வாறான முடிவுகளுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வருமானால் தாங்கள் வீழ்ந்திருக்கின்ற அரசியல், தேர்தல் பின்னடைவிலிருந்து மீள முடியும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமது வாழ்வா சாவா என்பதை தீர்மானிக்க வேண்டிய கட்டத்திலேயே உள்ளது. அதிலிருந்து மீள்வதும், அதில் அமிழ்வதும் அவர்களுடைய பொறுப்பாகும்.

ஆனால் தமிழ்க்கட்சிகளின் பெரிய கட்சி என்ற வகையில் அவ்வாறு இடம்பெறக்கூடாது என நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.

***இலங்கை ஒரு ஜனநாயக நாடு இதன் குறைபாடுகள், சாதனைகள், விசேஷத் தன்மைகள், எதிர்காலம் குறித்து ஒரு மதிப்பீட்டைத் தருவீர்களா?***

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு என்றே அழைக்கப்படுகிறது. இங்கு ஜனநாயகம், சோஷலிசம் போன்ற உன்னதமாக சொற்கள் நடைமுறையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதை ஏற்றுக்கொள்கின்ற பண்புடையவர்களாகவே மக்கள் இருக்கிறார்கள்.

ஆனால் ஜனநாயகம் என்ற சொல்லுக்கு ஏற்ப நமது நாட்டில் ஜனநாயகம் இருக்கிறதா? இயங்குகிறதா? ஜனநாயக விழுமியங்கள் அனைத்தும் மலிந்து, நலிவடைந்த நிலையே காணப்படுகின்றன. ஜனநாயகம் அதாவது பெரும்பான்மையின விருப்பு இன்று ஆட்சியாளர்களின் விருப்பமாக மாறியுள்ளது.

இந்த 20ஆவது திருத்தம் நிறைவேற்றப் படுமானால் 19வது திருத்தத்தில் காணப் பட்ட ஜனநாயகப் பண்புகள் அனைத்தும் குழிதோண்டிப் புதைக்கப்படும். தனி ஒரு நபரினால் நாட்டு மக்களின் தலைவிதியை தீர்மானிக்கின்ற போக்கு இந்த 20ஆவது திருத்தத்தில் அடங்கியுள்ளது.

இலங்கையின் சாதனைகள் என்று குறிப்பிடும்போது தென்னாசிய வலயத்தில் கல்விக்கு குறைந்த நிதியை ஒதுக்கும் நாடு! போதைப்பொருள் அதிகரித்து வருகின்ற நாடு! 41.6வீதமான மக்கள் ஒரு நாளைக்கு இரண்டு டொலருக்கு குறைவான வருமானத்தை பெறும் நாடு.

32 வீதமான குடும்பங்கள் சமுர்த்தியை நம்பி வாழும் மக்களைக் கொண்ட நாடு. 22வீதமான பிறக்கும் குழந்தைகள் 5 இறாத்தலுக்கு குறைவான எடையைக் கொண்ட நாடு. உற்பத்திகள் அனைத்தும் வீழ்ச்சியடைந்த நாடு. சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்த, பாலியல் வல்லுறவு அதிகரித்த, இளைஞர்களின் தற்கொலை வீதம் அதிகரித்த உலகத்தில் இரண்டாவது குடிக்கார நாடாக மாறிய சாதனைகளையே பார்க்கின்றோம். தமிழர்களின் பிரச்சினைகளை தேசிய பிரச்சினைகளாகக் கருதி தீர்வு காணப்பட வேண்டும்.

# இலங்கை முஸ்லிம்களின் தனித்துவத்தை காக்கும் மொழி எது?

முபாறக் அப்துல் மஜீத் ...

இலங்கை முஸ்லிம்களின் தாய் மொழி தமிழ் மொழியாக இருந்த போதும், முற்காலத்தில் இலங்கை தமிழ் பேசும் முஸ்லிம்களிடையே தங்களின் தனித்துவ அடையாளத்தை காண்பிப்பதற்காய் தமிழை அறபு எழுத்துருவில் எழுதி வந்ததை நாம் காண்கிறோம். அதனை அறபுத்தமிழ் என அழைப்பர்

அறபுத் தமிழ் என்றால் தமிழ் மொழியை அறபு அட்சரத்தில் எழுதுகின்ற முறையாகும். அறபு எழுத்து அட்சரங்களை வாசிக்கத் தெரிந்தவர்கள் இதனை ஓரளவு வாசித்து விளங்கக்கூடிய வகையில் இருந்தது. பெரும்பாலான பொதுமக்களால் அறபுத் தமிழை வாசிக்க முடியாவிட்டாலும் உலமாக்கள், லெப்பைகள் போன்றோர் இம் மொழியில் எழுதுவதை வழக்கத்தில் கொண்டிருந்தனர்.

அறபுத்தமிழ் எனும் போது தமிழில் உள்ள சில எழுத்துக்களுக்கு அறபு அச்சரம் இல்லாத காரணத்தால் சில அச்சரங்கள் புதிதாக கண்டு பிடிக்கப்பட்டதையும் காணலாம். அவை அறபு எழுத்தில் இல்லாவிடினும் அதன் வடிவில் இருந்தது.

சாதாரணமாக குர்ஆனை வாசிக்கத் தெரிந்த அனைவராலும் அறபுத் தமிழை பூரணமாக வாசிக்கக் கூடிய ஆற்றலை பெற முடியாது. மாறாக அறபுத் தமிழில் உள்ள புதிய அட்சரங்களை அறிந்திருக்க வேண்டியிருந்தது. இதன் காரணமாகவே அறபுத் தமிழை குறிப்பிட்ட ஒரு சிலரால் மட்டுமே கையாள முடிந்தது.

அறபுத் தமிழ் தோன்றக் காரணம்.

தமிழ்நாடு, மற்றும் இலங்கை முஸ்லிம்கள் தமிழ் மொழியை பேசினாலும் தமது தனித்துவத்தை காண்பிப்பதற்கு என்ன வழி என ஆராய்ந்ததன் எதிரொலியாக அறபு அட்சரம் கொண்டு தமிழை எழுதும் அறபுத் தமிழ் உருவாகியது. அத்துடன் முஸ்லிம் உலகின் பிரபல்யமான புலவர்கள் மற்றும் உலமாக்கள் தமிழ் மொழியை நன்கு அறிந்திருந்தாலும் அவர்கள் தமிழ் மொழியின் இலக்கண மரபுகள் பற்றிய அறியாமை அல்லது அறிய விரும்பாமை காரணமாக தமிழை, தமிழில் எழுத விரும்பாததால் அறபுத் தமிழில் எழுதுவதில் மனத் திருப்தி கண்டார்கள். தமிழை தமிழ் அச்சில் எழுதுவது ஹராம் போன்ற நிலையம் இருந்தது.

அறபுத் தமிழில் காணப்படும் பல நூல்களை ஆராய்ந்தால் பழங்கால தமிழ் நடையும், கொச்சைத் தமிழையும் காணக் கிடைப்பதன் மூலம் அறபுத் தமிழை கையாண்டவர்களில் நிறையப் பேர் தமிழ் இலக்கண அறிவற்றவர்கள் என்பதை புரிந்து கொள்ள முடியும். ஆனாலும் பொது மக்களின் புழக்கத்தில் இம்மொழி பரவலாக்கப்படாததால் அறபுத் தமிழ் பாரிய தோல்வியடையக் காரணமாக இருந்தது. காலப் போக்கில் மக்கள் மத்தியில் பரவலாக வாசிக்கப்படும் தமிழ் அச்சரங்களிலேயே தமிழை எழுதும் நிலைக்கு அறிஞர்கள் தள்ளப்பட்டனர்.

அறபுத் தமிழை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டுமா?

அறபுத் தமிழை மீண்டும் முஸ்லிம்கள் மத்தியில் அறிமுகப்படுத்த வேண்டும் என்று சிலர் கூறுவதை கடந்த சில வருடங்களாக நாம் காண்கிறோம். இதன் மூலம் நமது தனித்துவத்துவ மொழி அடையாளத்தை பெறலாம் என்பது அவர்களின் வாதம். இவ்வாறு வாதம் புரிவோரிடம் அறபுத்தமிழை கொடுத்து சரளமாக வாசியுங்கள் என்றால் இவர்களே முழிப்பார்கள். இந்த நிலையில் அறபுத் தமிழை மீண்டும் அறிமுகப்படுத்துவதால் சமூகத்துக்கு ஏற்படும் நன்மை என்ன? இதன் மூலம் மொழியில் நமக்கான தனித்துவத்தை நிலை நாட்ட முடியுமா? அறபுத்தமிழ் மூலம் சா'வதேச உறவை வளர்க்க முடியுமா? என்பது பற்றி சிந்திப்பது அவசியமாகும்.

அறபுத் தமிழை மீண்டும் முஸ்லிம்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதில் எந்த நன்மையும் கிடைக்கப்ப போவதில்லை என்பதே எனது உறுதியான கருத்தாகும். காரணம் இன்றைய கணனி யுகத்தில் தமிழ் மொழி கூட தங்கிலிஷ் எனப்படும் தமிழை ஆங்கில அட்சரங்களில் எழுதும் நடைமுறை புழக்கத்தில் உள்ளதால் அறபு அச்சரத்தில் தமிழை எழுதும் முயற்சி வெற்றி பெறுவதற்கும் அப்பால் அது எந்த நன்மையையும் தரப் போவதாக இல்லை. தமிழ் மொழியை தங்கிலிஷ்ஷில் எழுதுவதன் மூலம் எத்தகைய தனித்துவத்தையும் பெற முடியாது.

ஒருகாலத்தில் இஸ்லாம் மார்க்கம் புரோகிதர்களின் கைகளில் இருந்ததால் அறபுத் தமிழில் சில மௌலீதுகளையும், ராசி பலன் கிதாபுகளையும் எழுதி அவற்றை பொது மக்கள் விளங்கிக் கொள்ளாத வகையில் அவற்றை விரித்து ஏதோ வேத நூல்கள் போல் காண்பித்ததால் அத்தகைய அறபுத் தமிழ் நூல்களுக்கு மக்களிடமும், மார்க்க அறிஞர்களிடமும் மதிப்பாயிருந்தது. தற்போது சமூகத்தில் சமய விழிப்புணர்வும் இஸ்லாம் பற்றிய தெளிவான அறிவும் அதிகம் உள்ளதால் அறபுத்தமிழில் எழுதி மக்களை மயக்கும் தேவை அற்றுப் போய் விட்டது. அதனால் அறபுத் தமிழை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டிய தேவையோ, அதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தை நிலைநாட்டவோ முடியாது. இதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் வெறும் விழலுக்கிறைத்த நீராகவே முடியும்.

முஸ்லிம்களின் தனித்துவ மொழியை இனங்காண்பது எப்படி?

இலங்கை முஸ்லிம்கள் தனியான இனமாக இருந்த போதும் அவர்கள் தனித்துவமிக்க, தனியான தேசியம் என்பதை சர்வதேசம் ஏற்றுக் கொள்ளாமைக்கு மொழி மட்டுமே ஒரேயொரு தடையாக இருக்கிறது. முஸ்லிம்களும் தமிழ் பேசுபவர்களாக இருப்பதனால் முஸ்லிம் தேசியம் வலுவிழந்து நிற்கிறது. அதேபோல் முஸ்லிம்கள் சிங்களத்தை அல்லது ஆங்கிலத்தை பேசினாலும் கூட அவர்களால் தேசியத்தை நிலைநிறுத்த முடியாது.

அதே போல் இன்று இலங்கையில் இனவாதம் முற்றியுள்ள நிலையில் இலங்கை முஸ்லிம் சமூகம் தமது சர்வதேச முஸ்லிம் சமூகத்துடன் தொடர்பாடலை வேண்டி நிற்கும் தேவை ஏற்பட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## குளங்கள் கிராமங்களின் மறுமலர்ச்சி

காலநிலை மாற்றங்களுக்கு பழகுவதற்கான ஒன்றிணைந்த நீர் முகாமைத்துவ திட்டம் என்று அழைக்கப்படுகின்ற குளங்கள் கிராமங்களின் மறுமலர்ச்சி எமது நாட்டில் செயற்படுவது பூகோள பசுமை காலநிலை நிதியத்தின் நிதியுதவியுடனாகும். ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் தொழில்நுட்ப பங்களிப்பில் நீர்ப்பாசன அமைச்சு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற இந்தத் திட்டம் 2017 தொடக்கம் 2024 வரை எமது நாட்டில் தெரிவு செய்யப்பட்ட மூன்று ஆற்றுப் படுகைகளில், ஐந்து மாவட்டங்களில் செயற்பட்டு வருகிறது. யான் ஓயா, மீ ஓயா, மல்வத்து ஓயா ஆகிய மூன்று ஆற்றுப்படுகைகளுடன் தொடர்புபட்ட அநுராதபுரம், வவுனியா, திருகோணமலை, பொலன்னறுவை, குருநாகல், புத்தளம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் சிறு அளவிலான விவசாயிகள், அந்த காலநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுத்து வாழ்வாதாரத்தை தொடர்ந்து பேணுவது மற்றும் மேம்படுத்துவதற்காக உதவி வழங்குகிறது.

UNDP GREEN CLIMATE FUND

# இம்முறை மழை நீரில் பயிர்நிலத்தை தயார் செய்வோம்



விவசாயியான வணிகசூரிய மழை சற்று நின்றதும் துணியை தலையில் கட்டியபடி வீட்டில் இருந்து வெளியே வந்தார். மழையால் சேறான மண் வணிகசூரியவின் விரல் இடுக்குகளால் பீரிட்டுப் பாய்ந்தது. அப்பேர்ப்பட்ட சேற்று நிலத்தில் கால் வைப்பதற்கு நகர்ப்புறக்காரர்களுக்கு அலுப்பாக இருக்கும். ஆனால் நீரைக் குடித்து வீங்கி இருக்கும் நிலத்தைப் பார்த்து அந்த விவசாயிக்கென்றால் மட்டில்லா ஆனந்தம்.

“ஆம். இம்முறை என்றால் மழை அதிகம்” என்று வணிகசூரிய என்ற அந்த விவசாயி தமக்குள் நினைத்துக்கொண்டார். வானம் மழை தருவதென்பது விவசாயிக்கு கிடைக்கும் ஆசீர்வாதம். விவசாயி ஒருவருக்கு அதிக பிணைப்பு இருப்பது பூமியுடன் என்று யாராவது கூறினால் அது தவறானது. விவசாயி ஒருவருக்கு அதிக பிணைப்பு இருப்பது வானத்துடன் தான். வானம் தான் விவசாயியின் வாழ்வை தீர்மானிக்கிறது. அப்பேர்ப்பட்ட வானம் தான் இந்த ஆண்டு செப்டெம்பரில் பூமி பிளக்க மழையைக் கொட்டுகிறது.

வணிகசூரிய நீரில் நனைந்த துணியை எடுத்து மீண்டும் கட்டிக்கொள்கிறார். “ஆனால் பாருங்கள்! அடுத்த மாதம் தொடர்ந்து வெய்யில் அடிக்கும் என்று தான் எமது கமத்தொழில் அதிகாரிகள் கூறினார்கள்” என்று அன்று கமத்தொழில் கூட்டத்தில் பேசியதை வணிகசூரிய மீண்டும் ஒருமுறை நினைவுகூர்ந்தார்.

“இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து எமக்கு சற்று அதிகமாக மழை கிடைத்தது. ஆனால் தற்போது வழங்கப்பட்டிருக்கும் காலநிலை முன்னறிவிப்புகளுக்கு அமைய அடுத்த இரண்டு மாதங்களும் அதாவது ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் மழைவீழ்ச்சியில் சற்று குறைவு ஏற்படும் என்பதே அனுமானிக்கப்படுகிறது” என்று தான் கமத்தொழில் அதிகாரிகள் கூறினார்கள். பிரதேசத்தின் விவசாயிகளின் ஒருங்கிணைப்பாளர் என்ற வகையில் அருகாமையில் உள்ள கிராமங்களில் இருக்கும் விவசாயிகளுக்கும் சரியான ஆலோசனைகளை வழங்குவது வணிகசூரியவின் பொறுப்பாகும். இப்போது பெய்கின்றதை பார்க்கும்போது எதிர்வரும் மாதங்களிலும் மழை குறையும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் வானத்தின் நிலை அப்படித்தான். மழை பெய்யும் நேரத்தில் செய்ய வேண்டியதை செய்யும்படி கமத்தொழில் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியது வணிகசூரியவுக்கு ஞாபகம் இருக்கிறது.

“எதிர்வரும் மாதங்களில் மழை குறையக் கூடும். அதனால் நாம் இப்போதே கிடைக்கின்ற மழையில் இருந்து பயன்பாட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். அதனால் விவசாயிகள் தமது பயிர் நிலங்களை சென்று பாருங்கள். வேறு காலங்களில் குளத்தில் இருந்து கிடைக்கும் நீருக்கு அமையவே நிலத்தை சரி செய்வோம். ஆனால் இம்முறை நீர் கிடைக்காத நிலங்கள் அதிக ஈரலிப்பு கொண்டதாக உள்ளன. ஒக்டோபர் - நவம்பர் மாதங்களில் மழை குறைய வாய்ப்பு இருப்பதால் இப்போது பெய்கின்ற மழையில் உடன் பயன் பெற வேண்டும். அதனால் விவசாயிகள் தமது பயிர் நிலத்தை தயார்படுத்துவதற்கு ஆரம்பியுங்கள்.”



கமத்தொழில் அதிகாரிகள் அப்படித்தான் கூறினார்கள். அதாவது மழை நீரில் நிலத்தை வெட்டுங்கள். வணிகசூரிய என்ற அந்த விவசாயி அவ்வாது தமக்குள்ளேயே அதனை உறுதி செய்துகொண்டார். அதனால், நாம் பெய்கின்ற இந்த மழையில் நிலத்தை தயாரித்துக்கொண்டால் குளத்தில் நீரை மிச்சம் வைத்து பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்திக்கொள்ள முடியும். பயிர்ச்செய்கை பற்றியும் அதற்கு தேவைப்படுகின்ற நீரின் அளவு பற்றியும் வணிகசூரியவுக்கு புதிதாகக் கூறத் தேவையில்லை. வாழ்நாள் முழுவதும் நிலத்துடனேயே போராடி நிலம் போலவே நன்றாக முதுர்ச்சி பெற்றிருக்கிறார்.

நெற் பயிர்ச்செய்கைக்கு என்றால் ஒரு ஏக்கர் காணியில் நிலத்தை தயார்படுத்தும் இடத்தில் இருந்து அறுவடையை பெறும் வரை ஆறு அடி அளவுக்கு நீர் தேவைப்படுகிறது. ஆறு அடி என்பது ஒரு ஏக்கர் காணியில் ஆறு அடி உயரத்திற்கு நீராகும். அப்படியென்றால் பயிர்செய்கைக்கு எவ்வளவு நீர் தேவை என்பதை சாதாரணமாக நினைத்துப் பாருங்கள். இந்த ஆறு அடியில் இரண்டு அடி நிலத்தை தயாரிப்பதற்கு தேவைப்படுகிறது. ஆனால் கமத்தொழில் அதிகாரி கூறியவாறு நாம் இம்முறை மழை நீரால் நிலத்தை தயார் செய்து கொண்டால் நிலத்தை தயார் செய்வதற்கு செலவாகின்ற நீரின் இரண்டு அடிகளில் ஓர் அடியை சேமிக்க முடியும். இது கூட பெரிய விடயம் தானே. குளத்து நீரால் பயிரிடுகின்ற விவசாயிக்கு நீர் என்பது பொன்னானது. வானத்தில் இருந்து சொட்டு நீர் கிடைப்பது கூட பெரும் புதையல்.

“உடனடியாக இது பற்றி மற்றவர்களுக்கும் கூற வேண்டும்” என்று வணிகசூரிய நினைத்தார். நாளைக்கே நிலத்தை வெட்ட ஆரம்பிப்பேன். மழையில் வேலை செய்யும்போது மனதுக்கும் சுகம், உடலுக்கும் சுகம்.

அப்போது வணிகசூரியவின் கண்கள் தாம் பயிரிடும் நிலத்தின் மீது சென்றது. முன்னர் வெயில் காலம் என்றால் மேட்டு நிலத்தில் நடும் பயிர்கள் பற்றிய எண்ணத்திலேயே வருவோம். இது பற்றி இரண்டு முறை சிந்திக்கத் தேவையில்லை. வெயில் காலத்தில் குறைந்த நீரில் சிறந்த முறையில் விளைகின்ற பயிர்களை அவருக்குத் தெரியும். ஆனால் இம்முறை அரசாங்கத்தினால் சில பயிர்களுக்கு அதிகம் ஊக்குவிப்பு தருகிறார்கள். அது பற்றி தெரிந்துகொள்வதற்கே அவர் அன்று அதிக நேரம் கமத்தொழில் அதிகாரியுடன் உரையாடினார். அந்த அதிகாரி சில பயிர்கள் பற்றி குறிப்பாகக் கூறினார்.

“இப்போது எமது நாட்டின் அரசு எமது நிலத்தில் விளைகின்ற எந்த பயிரையும் வெளிநாட்டில் இருந்து எடுத்துவருவதில்லை என்று தீர்மானித்துள்ளது. சோளம், உளுந்து, அவரை, பாசிப் பயறு, நிலக்கடலை போன்ற தானியங்களுக்கு இதற்கு நல்ல கேள்வி உள்ளது. கடந்த காலத்தில் தமது உளுந்து பயிருக்கு கிடைத்த எதிர்பார்க்க முடியாத விலை பற்றி நினைத்து வணிகசூரிய மனமளர்ச்சி கொண்டார். உளுந்து ஒரு கிலோ அத்தனை விலை போகும் என்று யார் நினைத்தார்கள்.

தற்போது உளுந்து வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதில்லையாம். அதனால் எதிர்காலத்திலும் இது போன்ற நல்ல விலை கிடைக்கும். மேட்டு நிலங்களில் இம்முறையும் உளுந்து பயிரிட வணிகசூரிய திட்டமிட்டார்.

“இன்னும்… நிலக்கடலை பாசிப் பயறுக்கும் இடம் வைக்கும் வகையில் பயிரிடுவேன்.”

அந்தப் பக்க நிலத்தில் பாலித்த சோளம் பயிரிடுவதை தவறவிட மாட்டார். சோளத்திற்கு விலையும் நன்றாக உள்ளது.

“தாழ் நிலங்களில் நெல் இன்றி வேறு பயிரை நடுவதாயின் நீர் ஓட்டம் நன்றாக இருக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். நீரோட்டம் நன்றாக இருக்கும் பயிர் நிலங்களில் மாத்திரம் வேறு பயிர்களை பயிரிடுங்கள்.”

அப்படித்தான் கமத்தொழில் அதிகாரி அவர்கள் ஆலோசனை வழங்கினார். அந்த நீர் ஓட்டம் நீர் நன்றாக வடிந்தோடுவது என்பதாகும். நீர் வடிந்தோடாமல் பயிர்நிலம் நிரம்புவதாயின் இரு முறை மழை பெய்தால் பயிர் நிலத்தில் நீர் தேங்கி பயிர்ச் செடிகள் சாகும் என்பதாகும்.

சிறந்த முறையில் வடிகால்களை வெட்டினால் பயிரிடாத தாழ் நிலத்திலும் கூட வேறு பயிர்களை பயிரிட முடியும். பரம்பரை விவசாயியான வணிகசூரியவுக்கு அது தெரியும். ஆனால் விவசாயத்தில் புதிதாக கற்கும் ஊரின் இளைஞர்களுக்கு அது பற்றி சொல்லிக் கொடுக்க வேண்டும். அதுதான் விவசாயிகளின் பொறுப்பு, கடமை. அது மட்டுமல்ல அன்று கமத்தொழில் ஆலோசனை அதிகாரி கூறிய வேறு ஆலோசனைகளையும் ஊரில் உள்ள இளைஞர்களுக்கு ஒன்று விடாமல் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

“அதிகபட்சம் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் நிலத்தை தயார்படுத்தும் அடிப்படை கட்டத்தை பூர்த்தி செய்யுங்கள்.

இலகுவான அமைப்பைக் கொண்ட மண்ணில் எப்போதும் நெல் பயிர்செய்கையை மேற்கொள்ளுங்கள்.

தற்போது குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் குறைந்தபட்ச நீர் அளவு நூற்றுக்கு 30 – 40க்கு இடையே இருப்பதால் குறைந்தது மூன்று மூன்றரை மாதங்களுக்கு நெல் வகைகளை மாத்திரம் பயிரிடுவதற்கு தேர்வு செய்யுங்கள்.

பிரதான மற்றும் சிறிய நீர்ப்பாசன கட்டமைப்புகளில் நீரை வெளியிடும் கால அட்டவணையை தயாரிப்பதில் ஒவ்வொரு வாரத்திலும் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி மற்றும் பயிரின் வளர்ச்சிக் காலத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.

நெற் பயிர்ச்செய்கை துறையில் பயிரை நிலைநிறுத்துவதற்காக செடி நடுதல் அல்லது செடி விதைப்பது, அதாவது பெரசூட் முறையை பயன்படுத்துங்கள்.

குளங்கள் மற்றும் நீர் மூலங்களில் தற்போதுள்ள நீர் அளவு தாமதித்து பெற்றுத்தருவதாயின் குறித்த நிறுவனத்துடன் பேசி இரண்டரை அல்லது மூன்று மாதங்களில் நெல் வகைகளை பயிரிடுங்கள்.

மழைவீழ்ச்சி கொண்ட நிலம் மற்றும் மேட்டு நிலம் பயிர்ச்செய்கைக்காக நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக விவசாய கிணறு அல்லது மழை நீரை சேமிப்பதன் மூலம் குறித்த பயிர்களின் மண்ணின் ஈரலிப்பு அழுத்தத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்.

மழைக் காலத்தில் பயிரிடும் மேட்டு பயிர்களுக்காக இயற்கை உரத்தை பயன்படுத்துவது அல்லது மூடுவதற்கு விவசாயிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முடியுமாயின் மாறுபடுகின்ற காலநிலையில் மேற்கொள்ளப்படுகின்ற பயிரிடும் ஆபத்தை குறைப்பதற்காக பயிர் காப்புறுதி ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்.”

இந்த ஆலோசனையை ஊரில் ஏனையவர்களுக்கும் கூறி உடன் அவர்களை அறிவூட்ட வேண்டும். வணிகசூரிய மீண்டும் ஊர் பக்கம் திரும்பினார். அப்போது தூரத்தில் காற்சட்டை அணிந்த ஒருவர் வருவதை பார்த்தார். வணிகசூரியவுக்கு நன்றாகத் தெரிந்த அவர் ஐக்கிய நாடுகள் சபை திட்டத்தின் கீழ் பிரதேசத்தில் விவசாயிகள் பயிரிடுவது பற்றி அறிவூட்டுகின்ற, ஆலோசனை வழங்குகின்ற, திட்டம் மற்றும் தொழில்நுட்ப அறிவு, உதவி வழங்குகின்றவர் தான் வருகிறார். வணிகசூரிய முகமலர்ச்சியுடன் அந்த ஆலோசனை அதிகாரியை வரவேற்றார்.

“ஐயா மழையுடன் வந்திருக்கிறீர்கள்?”

“ஆமா, இந்த மழை பெய்யும் நேரத்தில் அவசரமான நிலத்தை தயார் செய்வோம் என்று கூறவே நான் வந்தேன்.

“நானும் ஊரில் இருப்பவர்களுக்கு இதுபற்றி கூற நினைத்தது மாத்திரம் தான்.”

“சரி நான் அதைச் செய்கிறேன், உங்களுக்கு முடியும் என்றால் நீங்கள் வேலையை ஆரம்பியுங்கள்.”

“அது நல்லது. நான் மண்வெட்டியை எடுத்துக் கொண்டு வேலையை ஆரம்பிக்கிறேன். நான் வயலில் இருப்பதைப் பார்த்தால் மற்றவர்களுக்கு தானாக செய்தியைச் சொல்வதாக இருக்கும்.”

“அது சரி கடவுளிடம் பாரத்தை போட்டுவிட்டு போகத்தை ஆரம்பிப்போம்”



## விவசாயத் திணைக்கள பணிப்பாளர், பிரதான வேளாண்மை நிபுணர் (வேளாண்மைக் காலநிலை) கலாநிதி பி.வி.ஆர். புன்னியவர்தன அவர்கள் விவசாயிகளுக்கு விடுக்கும் விசேட அறிவித்தல்

**நாட்டின் பல பகுதிகளிலும் சாதாரண மழை வீழ்ச்சியை விடவும் அதிக மழை வீழ்ச்சி ஒன்று செப்டெம்பர் மாதத்தில் கிடைத்த வண்ணம் உள்ளது. என்றாலும் ஒக்டோபர் தொடக்கம் நவம்பர் வரை சாதாரண அளவை விட குறைந்த மழை வீழ்ச்சி ஒன்று கிடைக்கும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.**

- 2020 செப்டெம்பர் மாதத்தில் கிடைக்கின்ற ஆரம்ப மழையுடன் பயிர்ச்செய்கைகளின் அடிப்படை நிலத்தை தயார் செய்வதை ஆரம்பியுங்கள்.
- அதிகபட்சம் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் தயார்படுத்தலின் ஆரம்பக் கட்டத்தை பூர்த்தி செய்யுங்கள்.
- இலகு அமைப்பைக் கொண்ட நிலத்தில் எப்போதும் நெல் முறையாக பயிரிடுங்கள். கிழக்கு மாகாணம் DL2a மற்றும் DL2b வலயம், வடக்கு மாகாணம் DL3 வலயம் மற்றும் குருநாகல் மாவட்டம் IL3 வலயம்.
- நெல் அல்லாத பயிர்கள் பயிரிடப்பட்டிருக்கும், சிறந்த முறையில் நீர் வடிந்தோடும் நிலங்களில் மற்றும் நீரோட்டம் இல்லாத நிலங்களில் நீரோட்ட முறையை பயன்படுத்தி குறிப்பாக மஹாவலி பிரதேசங்களில் மற்றும் பிரதான நீர்ப்பாசன கட்டமைப்பை அண்டிய பயிர் நிலங்களில் மேலதிக உணவுப் பயிர்களை பயிரிடுங்கள்.
- தற்போது குளம் மற்றும் நீர்த்தேக்கங்களின் குறைந்தபட்ச நீர் அளவு 30% - 40% இடையே இருப்பதால் குறைந்தது மூன்று மாதங்கள் மற்றும் மூன்றரை மாதங்கள் வயதுடைய நெல் வகைகளை மாத்திரம் பயிரிடுவதற்கு தேர்வு செய்யுங்கள்.
- அவ்வாறு இல்லையென்றால் குறைந்த நீர் கொள்ளளவு கொண்ட நீர்ப்பாசன முறைகளுக்கு அண்டிய காணிகளில் ‘பெத்ம’ முறையில் அல்லது இரண்டரை மாத நெல் வகையை பயிரிடுவதற்கு தேர்வு செய்யுங்கள்.
- பிரதான மற்றும் சிறிய நீர்ப்பாசனக் கட்டமைப்புகளில் நீர் வெளியிடும் கால அட்டவணைகளை தயாரிக்கும்போது ஒவ்வொரு வாரத்திலும் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி மற்றும் பயிரின் வளர்ச்சிக் காலம் கருத்தில் கொள்ளல் வேண்டும்.
- நெற்பயிர்ச்செய்கை துறைகளில் பயிர்களை நிலைநிறுத்துவதற்காக செடி நடுதல் அல்லது செடி விதைத்தலை (பெரசூட் முறை) பயன்படுத்துங்கள்.
- குளங்கள் மற்றும் நீர் மூலங்களில் தற்போதுள்ள நீர் அளவை தாமதித்து தரப்படுவதாயின் குறித்த நிறுவனத்துடன் பேசி இரண்டரை அல்லது மூன்று மாதங்களின் நெல் வகைகளை பயிரிடுங்கள்.
- மழைவீழ்ச்சி கொண்ட நிலம் அல்லது மேட்டு நில பயிர்களில் நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக விவசாய கிணறு அல்லது மழை நீரை சேமிப்பதன் மூலம் குறித்த பயிர்களின் மண் ஈரலிப்பு அழுத்தத்தை தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- மழை நீரில் பயிரிடுகின்ற மேட்டு பயிர்களுக்காக இயற்கை உரத்தை பயன்படுத்துவதற்கு மற்றும் மூடுவதற்கு முயலுங்கள்.
- மாறுபடுகின்ற மற்றும் நிலையற்ற காலநிலையில் பயிர்ச்செய்கையில் ஆபத்தை குறைப்பதற்கு பயிர் காப்புறுதியை பெற்றுக்கொள்ளுங்கள்.






**“அரிசியை அடிப்படையாகக் கொண்ட சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவோம்”**

**சிறப்பு விவசாய மேம்பாட்டுத் திட்டம்**

**பெரும்போகம் 2020/21**

### கவ்பி பயிர்ச்செய்கை



- பிரதான போகம் சிறு போகமாகும். பெரும்போகத்தின் பெரும் மழைக்குப் பின் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க வேண்டும்.
  சிறு போகம் - மே 15இற்கு பின்
  இடைப் போகம் - ஓகஸ்ட்/ செப்டெம்பர்
  பெரும்போகம் - ஜனவரி
- குறைந்த நீர்த் தேவை உடைய பயிர் என்பதால் இலங்கையில் உலர்ந்த மற்றும் இடைநிலை வலயங்களில் இருக்கின்ற காலநிலை இந்த பயிர்ச்செய்கைக்கு மிகவும் பொருத்தமானது.
- தற்போது அதிகமாக பயிரிடப்படும் ஐந்து வகைகள் கீழ் தரப்பட்டுள்ளன.

| வகை | விதை நிறம் |
|---|---|
| வருணி | சிவப்பு பழுப்பு நிறம் |
| தவல | வெள்ளை நிறம் |
| MI 35 | பளபளப்பான மஞ்சள் நிறம் |
| MICP 1 | கிரீம் நிறம் |
| ANKCP 1 | இளம் பழுப்பு நிறம் |
| ANKCP 2 | இளம் பழுப்பு நிறம் மற்றும் வெள்ளை |

- உலர் வலயங்களில் அறுவடை பெற முடியுமான வகையில் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்கும் காலத்தை தீர்மானியுங்கள்.
- விதைத் தேவை – ஏக்கர் ஒன்றுக்கு 14-15 கிலோ கிராம்

**விதையை பயிர் நிலத்தில் விதைப்பதற்கு முன் முளைப்பதை சோதித்துப் பாருங்கள். அதில் சிக்கல் இருந்தால் விதையை பெற்றுக்கொண்ட இடத்தை அறிவியுங்கள்**

- பயிரை நிலைநிறுத்துவதற்காக ஆழமாக மண்ணை புரட்டி மண்ணை தூளாக்கி மண் மேடு அல்லது பாத்தி தாயாரிக்கவும்.
  திடீர் மழையின்போது நீர் நன்றாக வடிந்தோடுவதற்காக 10 -12 அடி இடைவெளியில் வடிகால் அமையுங்கள்.
- நோய் மற்றும் பூச்சிகளை தவிர்ப்பதற்காக பொருத்தமான இரசாயனத்தால் விதை சிகிச்சை அளியுங்கள்.

அடிப்பகுதி சேதமடைவதை தவிர்ப்பதற்காக – பொருத்தமான பூஞ்சைக் கொல்லிகள்
போஞ்சி ஈயின் பாதிப்பை தவிர்ப்பதற்காக - பொருத்தமான பூச்சிக்கொல்லி
(விவசாய ஆலோசகரின் அறிவுரைக்கு அமைய)

- விதை நடுவதற்கு முன் இயற்கை உரத்தை மண்ணுடன் சேருங்கள்
- மண் சோதனைக்குப் பின் தேவையான இரசாயன உரத்தை பயன்படுத்துவதற்கு அல்லது விவசாய ஆலோசகரின் ஆலோசனையை பெறுங்கள்.

**“அரிசியை அடிப்படையாகக் கொண்ட சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவோம்”**

**சிறப்பு விவசாய மேம்பாட்டுத் திட்டம்**

**பெரும்போகம் 2020/21**

### சோளப் பயிர்செய்கை



**படைப்புழு ஒழிப்பு**

**நிரந்தரமாக ஒழிப்பதற்காக ஒன்றிணைந்த கட்டுப்பாட்டு முறை**

- விட்டு விட்டு பயிர்ச்செய்யாது சிறு போகத்திற்கு ஒரே தடவையில் பயிரிடுதல்.
- பூச்சிக்கொல்லியை பயன்படுத்த தேவை ஏற்படின் வசதியாக பூச்சிக்கொல்லியை பயன்படுத்துவதற்காக எல்லா சோளப் பயிர்ச்செய்கை வரிசை 4இற்கு பின்னர் 3 அடி இடைவெளியை வைத்துக்கொள்ளல்.
- சோளம் வரிசை 2 இற்கு இடையே 1 ½ அடியிலும் இரண்டு செடிகளுக்கு இடையே 1 அடி இடைவெளியை வைத்துக்கொள்ளல்.
- இரசாயன உரத்தை பயன்படுத்தும்போது பரிந்துரைக்கப்பட்ட அளவை மாத்திரம் பயன்படுத்தல்/ நைதரசன் கொண்ட உரத்தை அதிகம் பயன்படுத்துவதை தவிர்த்துக்கொள்ளல்.
- பாதிப்பை ஆரம்பத்திலேயே அடையாளம் காண்பதற்கு பயிர்ச்செய்கையின் ஆரம்பத்தில் இருந்தே வாரத்திற்கு இரு முறை பயிரை பரீட்சித்துப் பார்த்து பூச்சி முட்டை மற்றும் புழுக்களை சேர்த்து அழித்தல்.
- பயிர்ச்செய்கையின் ஆரம்பத்திலேயே இந்த பூச்சிக்கான பெரமோன் பொறி பயன்படுத்தல்.
- அனைத்து மணல், சாம்பல் போன்ற விடயங்களை சேதமாக்கப்பட்ட சோளச் செடிகளின் மொட்டுக்குள் இடுங்கள்.
- கொஹொம்பா விதை சாரத்தை பயன்படுத்தல். (10 லீற்றர் நீருக்கு 300-500 கிராம்)
- பயிர் மாற்றம்.
- புழு சேதப்படுத்திய செடிகளை இயந்திரம் மூலம் துண்டாக்கி விலங்குணவு தயாரிப்பதற்காக மூடப்பட்ட வகையில் மாத்திரம் எடுத்துச் செல்லல் அல்லது சைலேஜ் ஆக தயாரித்து எடுத்துச் செல்லல்.
- பயிர் எச்சங்களை தீயிட்டு அழிப்பது மற்றும் மண்ணில் இருக்கின்ற எச்சங்களை அழிப்பதற்காக மண்ணை ஆழமாக தோண்டுதல்.

**தொற்று நிலை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லியை பயன்படுத்துங்கள். (துறைசார் அதிகாரிகளின் தேவையான அறிவுரைகளை பெற்றுக்கொள்ளுங்கள்)**

**அறுவடை மற்றும் தயார்படுத்தல்**

சோளத்தின் வெளியில் பரந்துள்ள நார் பழுப்பில் இருந்து கறுப்பு நிறமான பின் (விதை முளைத்து 70-75 நாட்கள்) பச்சை சோளம் அறுவடை செய்ய முடியும். சோளம் காய்ந்த பின் அறுவடை செய்வதற்கு 110 நாட்கள் செல்லும். அறுவடை செய்யப்பட்ட சோளம் இலையுடன் 2-3 நாட்கள் வெயிலில் காயவையுங்கள். அதன் பின்னர் இலையை அகற்றி விதையை உலர்த்தி அகற்றுங்கள். அதனை உலர்ந்த நிலத்தில் பொதியிட்டு வையுங்கள்.

**சோளப் பயிர் தொடர்பில் உங்களுக்கு இருக்கின்ற சிக்கல்களை தீர்ப்பதற்காக விவசாயத் திணைக்களத்தின் 1920 இல் விவசாய ஆலோசனை சேவையை அழையுங்கள்.**

**விவசாய ஆலோசனை/ விவசாய உதவி/ மஹாவலி துறை உதவி**

**“அரிசியை அடிப்படையாகக் கொண்ட சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவோம்”**

**சிறப்பு விவசாய மேம்பாட்டுத் திட்டம்**

**பெரும்போகம் 2020/21**

### உளுந்து பயிர்ச்செய்கை



பெரும் போகத்தில் மழைவீழ்ச்சி கொண்ட மேட்டு நிலங்கள் மற்றும் நீர் வழங்கல் நிலையின் கீழ் பயிரிட முடியுமான பயிராகும்.

- இது இலங்கையில் உலர் மற்றும் இடைநிலை வலயங்களுக்கு பொருத்தமானது.
- பயிரிடும் வகைகளானது,
  - MI 1 – (85-90 நாட்களில் அறுவடை பெற முடியும்)
  - அனுராத – (75-80 நாட்களில் அறுவடை பெற முடியும்)

**பெரும்போகத்திற்காக செப்டெம்பர் 15க்குப் பின் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க வேண்டியது அறுவதை வரண்ட காலத்தில் வரும் வகையிலாகும்.**

- ஒரு ஏக்கர் பயிரிடுவதற்காக 12 கிலோ விதை அவசியம்.

**விதையை பயிர் நிலத்தில் விதைப்பதற்கு முன் முளைப்பதை சோதித்துப் பாருங்கள். அதில் சிக்கல் இருந்தால் விதையை பெற்றுக்கொண்ட இடத்தை அறிவியுங்கள்**

- பயிரை நிலைநிறுத்துவதற்காக ஆழமாக மண்ணை புரட்டி மண்ணை தூளாக்கி மண் மேடு அல்லது பாத்தி தாயாரிக்கவும்.

**வரண்ட காலத்தில் நீர் தேங்கி இருக்கும் நிலங்களில் ஆழமாக கால்வாய் அமைத்துக்கொள்ளுங்கள்.**

- நோய் பூச்சிகளில் இருந்து பயிரை பாதுகாத்துக்கொள்வதற்காக விவசாய ஆலோசகரின் அறிவுறுத்தலுக்கு அமைய பொருத்தமான இரசாயனத்தில் விதைச் சிகிச்சை வழங்குங்கள்.
- விதையை நடுவதற்கு முன்னர் மண்ணிற்கு இயற்கை உரத்தை சேருங்கள்.
- மண் சோதனைக்குப் பின் தேவையான இரசாயன உரத்தை பயன்படுத்துவதற்கு அல்லது விவசாய ஆலோசகரின் ஆலோசனையை பெறுங்கள்.

**வரிசைகளுக்கு இடையிலான இடைவெளி 1 ½ அடி**
**செடிகளுக்கு இடையிலான இடைவெளி 4 அங்குலம்**
**ஒரு இடத்திற்கு இரண்டு விதைகள் என்ற வகையில் (1.5 சென்றிமீற்றர் ஆழத்தில்) வைக்கவும்.**

**“அரிசியை அடிப்படையாகக் கொண்ட சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவோம்”**

**சிறப்பு விவசாய மேம்பாட்டுத் திட்டம்**

**பெரும்போகம் 2020/21**

### நிலக்கடலை பயிர்ச்செய்கை

- சரியான நேரத்தில் நடுங்கள், பெரும் போகத்திற்கு முன் நட்டு முடியுங்கள்.
- 6” அங்குல பென்சில் ஒன்றின் ஆழத்திற்கு நிலத்தை அகழ்ந்து, மண்ணை தூளாக்கி, உரமிட்டு விதையை நடுங்கள்.

**இவை நல்ல விதைகள்**



**வலவ**
**விதையுறை என்றால் ஏக்கருக்கு 50 கிலோ**
**கொட்டை என்றால் ஏக்கருக்கு 40 கிலோ**
**திஸ்ஸ மற்றும் வேறு**
**விதையுறை என்றால் ஏக்கருக்கு 50 கிலோ**
**கொட்டை என்றால் ஏக்கருக்கு 40 கிலோ**

- பூஞ்சை கொல்லி மூலம் விதைகளை ஊறவையுங்கள்
  - 5 கிலோ விதைக்கு திராம் தூள் நெருப்புப் பெட்டி உறை ஒன்று
- நன்றாக நீர் ஓட்டம் கொண்ட களிமண் நிலத்தை பயன்படுத்துங்கள்.
- வயலில் விதைப்பதாயின் பாத்தி பயன்படுத்தி கால்வாய் வெட்டுங்கள்.
- வரிசைக்கு இடையே 18 அங்குலம் மற்றும் செடிக்கு இடையே 6 அங்குலம் வையுங்கள்.

**“அரிசியை அடிப்படையாகக் கொண்ட சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவோம்”**

**சிறப்பு விவசாய மேம்பாட்டுத் திட்டம்**

**பெரும்போகம் 2020/21**

### குரக்கன் பயிர்ச்செய்கை



**கலை ஒழிப்பு**

- 45 நாட்கள் வரை களைச் செடிகளை கட்டுப்படுத்துவது மிக முக்கியம்.
- குறிப்பாக செடி நடப்படும்போது களைச் செடிகள் இருந்தால் புதர் இடுவது குறையும்.
- நடுவது மற்றும் வரிசையாக விதை இடுவது மேற்கொள்ளும்போது வரிசைக்கு இடையே மண்வெட்டியால் வெட்டுவதன் மூலம் களைச் செடிகள் கட்டுப்படுத்தப்படுவதோடு, செடியின் வேருக்கு மண் சேரும்.

**பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு**

- புருக் புழு பாதிப்பு
  - பாதிப்பு 5% - 10% இற்கு அதிகம் எனில் பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லி பயன்படுத்த வேண்டும்.
  - அதற்கு குறைவெனில் பாதிக்கப்பட்ட பகுதிகளை அகற்றிவிடுவது போதுமானது.
- குலை நோய்
  - மருந்து வகை குலை நோய்க்கு சற்றுத் தாக்குப் பிடிக்கும்.
  - சிறு போகத்தில் பாதிப்புக் குறைவு

**அறுவடை**

- தாய் விதையுறை முதலில் பழுப்பாகும், ஏனைய விதையுறைகள் 10 நாட்களில் 85% பழுப்பு நிறமாகும்.
- அந்த சந்தர்ப்பத்தில் அரிவாள் மூலம் அறுவடை செய்யுங்கள்.
- அறுவடை செய்ய விதையுறைகளை 2 – 3 நாட்கள் வெயிலில் காயவையுங்கள்.
- இழுவை வண்டி ஒன்றின் மூலம் அரைத்து விதையை வேறுபடுத்துங்கள்.
- விதையை நன்றாக சுத்தப்படுத்துங்கள்.



**குரக்கன் பயிர் தொடர்பில் உங்களுக்கு இருக்கின்ற சிக்கல்களை தீர்ப்பதற்காக விவசாயத் திணைக்களத்தின் 1920 இல் விவசாய ஆலோசனை சேவையை அழையுங்கள். விவசாய திணைக்களத்தின் வெளியீடு 2020**

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

### வளப் பற்றாக்குறைக்கு மத்தியிலும்

# வினைத்திறனுடன் செயல்படும் பரீட்சைத் திணைக்களம்

**'அரசதுறை ஊழியர்கள் தமது ஏதேச்சாதிகாரத்தை மக்கள் மீது பிரயோகிப்பதற்காக சம்பளம் வழங்கி வேலைக்கு அமர்த்தப்படுவதில்லை. அவ்வாறு நிகழுமாயின் அத்தகைய நிறுவனங்களின் உள்ளகக் கட்டமைப்புகள் முறையாக இயங்கவில்லை அல்லது அதற்கான பொறிமுறை பொருத்தமாக இல்லை'**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வினைத்திறன் மிக்க தாபன ரீதியான கட்டமைப்புகளும் நிறுவனங்களும் இன்றியமையாதவை. அவ்வாறான கட்டமைப்புகள் முறையாகத் தாபிக்கப்பட்டு நிருவகிக்கப்படுமாயின் அந்நாட்டின் ஜனாதிபதி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சென்று சரியாக வேலை செய்யுமாறும் பொதுமக்களை அலைக்கழிக்க வேண்டாமென்றும் எச்சரிக்க வேண்டியிருக்காது.

அரசுதுறை நிறுவனங்களின் சேவை வழங்கும் செயற்பாடுகள் குறித்து பொதுமக்கள் மிகுந்த விசனத்துடன் கருத்துத் தெரிவிப்பதை அடிக்கடி காணமுடிகிறது. பொதுமக்களுக்கு சேவை வழங்கவே அரச நிறுவனங்களில் பொதுமக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் அரசுதுறை ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மாறாக அரசதுறை ஊழியர்கள் தமது ஏதேச்சாதிகாரத்தை மக்கள் மீது பிரயோகிப்பதற்காக சம்பளம் வழங்கி வேலைக்கு அமர்த்தப்படுவதில்லை. அவ்வாறு நிகழுமாயின் அத்தகைய நிறுவனங்களின் உள்ளகக் கட்டமைப்புகள் முறையாக இயங்கவில்லை அல்லது அதற்கான பொறிமுறை பொருத்தமாக இல்லை என்றே பொருள் கொள்ள வேண்டியிருக்கும்.

அரசதுறை நிறுவனங்களுக்கு எதிராக பொதுவாக இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும் வெகு அபூர்வமாக பொறுப்புணர்வுடன் தமக்கு வழங்கப்பட்டுள்ள அரச கடமைகளை குறைவான வளங்களைக் கொண்டிருந்தாலும் சிறப்பாக இயங்கி பொதுமக்களுக்கு அர்ப்பணிப்புடன் சிறப்பாகச் சேவை வழங்கும் அரச நிறுவனங்களும் இல்லாமலில்லை. என்றாலும் விமர்சனங்கள் ஊடகங்களில் வெளிச்சமிட்டுக் காட்டப்படுவதைப் போல சிறப்பாக இயங்கும் நிறுவனங்கள் செய்யும் சேவைகள் வெளிப்படுத்தப்படுவதுமில்லை பாராட்டுப் பெறுவதுமில்லை.

அவ்வாறு குறைவான வளங்களைக் கொண்டிருந்தாலும் தேசிய ரீதியில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பான ஒரு பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுள்ள அதிகாரிகளையும் ஊழியர்களையும் கொண்டியங்கும் ஒரு முக்கிய நிறுவனம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களமாகும்.

இலங்கையில் அரசதுறைப் பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்த ஒவ்வொருவரும் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை தொடக்கம் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளை எதிர்கொண்டிருப்பர். இதில் தோற்றிய ஒவ்வொருவருக்கும் பரீட்சைக்கு விண்ணப்பித்ததும் பரீட்சை எழுதியதும் பெறுபேற்றைப் பெற்றதும் மட்டுமே நினைவிருக்கும். ஆனால் அந்த ஒவ்வொரு பரீட்சையையும் வெற்றிகரமாக நடத்தி முடித்து பெறுபேற்றை வழங்க ஆயிரக்கணக்கானவர்களின் அர்ப்பணிப்பும் உழைப்பும் பின்னணியில் இருந்துள்ளது என்பதைத் தெரிந்திருக்க பெரிதும் வாய்ப்பில்லை.

ஒவ்வொரு பரீட்சையையும் நடத்த பல மாதங்களுக்கு முன்பிருந்தே அதற்குரிய தயார்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவேண்டும். குறிப்பாகப் பாடசாலைப் பரீட்சைகளின் போது இலட்சக்கணக்கான மாணவர்கள் தோற்றுவதால் மிகுந்த கவனத்துடன் ஒவ்வொரு கட்டத்தையும் திட்டமிட்டிருப்பர். பரீட்சை வினாத்தாள் தயாரிப்பில் மிகுந்த அனுபவம் வாய்ந்த வளவாளர்களின் சேவை இரகசியமான முறையில் பெறப்படும். மாணவருக்கு தமது கண்முன்னே பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் இருப்பது மட்டுமே தெரியும்.

ஆனால் கல்வியலில் வெவ்வேறு அம்சங்களை மதிப்பீடு செய்வதை நோக்காகக் கொண்டே ஒவ்வொரு



வினாவும் அதன் பகுதிகளும் உருவாக்கப்படும். ஒவ்வொரு வினாப்பத்திரமும் பல தடவைகள் சரிபார்க்கப்பட்டு மூன்று மொழிகளிலும் ஒத்திசைவு உள்ளமை உறுதிசெய்யப்பட்ட பின்னரே அச்சுக்கு செல்ல அனுமதி வழங்கப்படும். இந்த ஒவ்வொரு செயன்முறையின் போதும் பரீட்சையின் இரகசியத்தன்மையைப் பேண முறையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். காவல் துறையின் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருக்கும்.

இப்பணிகள் இடம்பெறும் கிளையில் பணியாற்றும் அதிகாரிகளும் இரவு பகலாக இக்கிளையில் தங்கியிருந்து கண்ணில் எண்ணெய் விட்டுக் கண்காணித்துக் கொண்டிருப்பர். பரீட்சை ஒன்றுக்கான ஆயத்தங்கள் தொடங்குவதிலிருந்து அது நடத்தி முடிக்கப்படும் வரை இக்கிளையின் அதிகாரிகள் மிகுந்த அக்கறையுடனும் பொறுப்பணர்வுடனும் நேரகாலம் பாராது கடமைகளைச் செய்வதை வியந்து நோக்கத் தோன்றும். ஜப்பானிய அரசாங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பல தசாப்தங்கள் பழைமையான பரீட்சைத் திணைக்களக் கட்டடத்தில் உள்ள சிறைக்கூட அறைகள் போன்ற சிறிய செல்களில் தான் வினாத்தாள்கள் உருவாகின்றன. தங்கியிருந்து வேலை செய்வதற்கான முறையான வசதிகள் ஏதும் இங்கில்லை. ஏன் முறையான கழிவறை வசதிகள் கூட போதுமானளவு இல்லை. உடைந்துபோன தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற வசதியீனங்களுக்கு மத்தியில் ஒரு சமூகக் கடமை என்ற பொறுப்புணர்வுடன் அங்குள்ளவர்கள் தமது பணிகளில் தொய்வின்றி ஈடுபடுகின்றனர். போக்குவரத்து பகுதிக்குப் பொறுப்பானவர்கள் வினாத்தாள் பொதிகளையும் காகிதாதிகளையும் உரிய மத்திய நிலையங்களுக்கு கொண்டு சென்று சேர்ப்பர். பரீட்சையை நடத்தும் பொறுப்பான விடயத்திற்கு ஆசிரிய சமூகத்தின் பங்களிப்பு அதிகளவில் பெறப்பட்டிருக்கும். பரீட்சை முடிந்ததும் பரீட்சைத் திணைக்களத்தின் மதிப்பீட்டுக்கிளை மதிப்பீட்டுக் கடமைகளை ஆரம்பிக்கும். அப்பணிகளில் பல்கலைக்கழகங்களின் வளவாளர்களும் பாடசாலை ஆசிரியர்களும் ஈடுபட்டு மதிப்பீட்டை முடிப்பர். ஒவ்வொரு விடைத்தாளும் குறைந்தபட்சம் இரு மதிப்பீட்டாளர்களால் பரீட்சிக்கப்படும். அதற்கு மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட விடைத்தாள்கள் மேலும் இரு சந்தர்ப்பங்களில் பரீட்சிக்கப்படும். பெறுபேறுகள் வந்த பின்னர் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பித்தால் மேலும் இருவரால் அவ்விடைத்தாளின் புள்ளியிடல் சரிபார்க்கப்படும்.

இவ்வாறு பரீட்சையொன்றின் மதிப்பீட்டுப்பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் அவற்றிலிருந்து திரட்டப்பட்ட தகவல்கள் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளைக்கு அனுப்பப்பட்டு ஆய்வு செய்யப்படும். ஆய்வு முடிவில் பெறப்படும் முடிவுகள் பரீட்சை வினைத்தாள் ஆக்கக் குழுவுக்கு வழங்கப்பட்டு அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கலந்துரையாடப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும்.

ஆகவே ஒவ்வொரு பரீட்சையின் போதும் பரீட்சைத் திணைக்களத்தின் பல்வேறு கிளைகளில் பணியிலுள்ள அதிகாரிகளும் ஊழியர்களும் தமது கடமைகளைச் சரியாகச் செய்தால் மட்டுமே பரீட்சைகளின் இரகசியத் தன்மையைப் பேணி பரீட்சைகளை நடாத்தி உரிய காலத்தின் நம்பகத்தன்மையுடன் பெறுபேறுகளை வழங்க முடியும். இற்றைவரையில் அவ்வப்போது சிற்சில சலசலப்புகள் வந்தபோதிலும் மிகுந்த நம்பகத்தன்மையுடன் வினைத்திறனுடனும் இயங்கும் நிறுவனம் என்ற பெயரைத் தக்க வைத்துக் கொண்டுள்ளமைக்கு பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளையும் ஊழியர்களையும் பாராட்டுவது எல்லாவிதத்திலும் தகும்.

பாடசாலைப் பரீட்சைகள் மட்டுமன்றி அரசதுறையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைகளையும் பரீட்சைத் திணைக்களத்தின் மற்றுமொரு பிரிவு நடத்தி வருகிறது. இவ்வாறு தேசிய ரீதியில் அதிமுக்கியமான பணியை ஆற்றும் பரீட்சைத் திணைக்களம் தற்போது டிஜிட்டல் மயமாகியுள்ளது. பரீட்சைப் பெறுபேறுகளை இணையத்தில் பார்க்க வசதி வழங்குவதுடன் சர்வதேச தரத்திலான சான்றிதழ்களையும் உறுதிப்படுத்தி வழங்குகிறது. நேர விரயத்ததை தடுக்கவும் நெடுந்தொலைவில் உள்ளவர்கள் கொழும்புக்கு வராமலேயே தமக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்ளவும் இதன்மூலம் முடியும். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் நவீன தொழில்நுட்பத்திற்கு மாறி சேவை வழங்கும் பரீட்சைத் திணைக்களத்தை சிறப்பான அத்தியாவசிய சேவை வழங்கும் நிறுவனமாகக் கருதி அத்தியாவசியமான இடவசதியையும் ஏனைய சிறப்பு வசதிகளை வழங்கினால் இந்நிறுவனத்தின் அதிகாரிகளும் ஊழியர்களும் மேலும் வினைத்திறனுடன் தமது கடமைகளைச் செய்வதற்கான பணம் சாராத ஊக்குவிப்பாக அது அமையும்.

பரீட்சைத்திணைக்கள வளாகத்திற்குள் அமைக்கப்பட்டுவரும் புதிய கட்டடத் தொகுதி இடப்பற்றாக்குறைக்கு தீர்வாக அமைந்தாலும் பழைய கட்டடங்கள் உடனடியான பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு சேவை வழங்கவரும் வளவாளர்களுக்கு அத்தியாவசிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் மிகவும் முக்கியம்.

குறிப்பாக பரீட்சை மதிப்பிட்டுக் கடமைகளுக்காக கொழும்புக்கு வரும் ஆசிரியர்கள் போதிய வசதிகளுடன் கூடிய தங்குமிடங்களின்றித் தவிப்பதை காணமுடிகிறது. பலர் பாடசாலை வகுப்பறைகளில் தங்கி நுளம்புக்கடிக்கு ஆளாகி நோய்வாய்ப்பட்ட சம்பவங்களும் கடந்த காலத்தில் நிகழ்ந்தன. மதிப்பீட்டுக் கடமைகள் மன அமைதியுடன் செய்யவேண்டிய கடமை என்பதால் அதில் ஈடுபடுபவர்களுக்கு அதிகூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது சரியான மதிப்பீட்டிற்கும் வினைத்திறன் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.

கதிரைகளைச் சூடாக்கி மக்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் அரசுதுறை நிறுவனங்கள் மத்தியில் மதிப்பிட்டின் இரகசியத் தன்மை நம்பகத்தன்மை, பொறுப்புடைத்தன்மை என்பவற்றைப் பேணி இயங்கும் பரீட்சைத் திணைக்களத்திற்கு உரியவளங்களை வழங்கி ஊக்குவிப்பது அவசியம். பொதுமக்களுக்குத் தெரியாமல் திரைமறைவில் பரீட்சைத்திணக்களம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் முக்கியத்துவம் பற்றி இப்போது ஓரளவு தெரிந்திருக்கும் அல்லவா?

# தனது நிலையை தெளிவுபடுத்திய சீனா

சீனாவின் உலகளாவிய அரசியல் தலையீடு அதிகரித்துக் கொண்டு செல்கிறது. அமெரிக்காவுடனான அனைத்து மோதலுக்கும் நியாயத்தை வெளிப்படுத்தும் சீனா ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையிலும் அமெரிக்காவுக்கு எதிரான வாதங்களை முன்வைத்துள்ளது. இரு நாடுகளும் பரஸ்பரம் மோதிக்கொள்ளும் போக்கினை வெளிப்படுத்திய இரு நாட்டுத் தலைவர்களும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். அதில் அமெரிக்கா வழமையான கொரோனாவை பரவலடையச் செய்தது சீனா தான் என்ற குற்றச்சாட்டை முன்வைத்ததுடன் சீன ஜனாதிபதி ஒரு நாடு உலகத்தை ஆதிக்கம் செய்வதனையும் பிற நாடுகளை கட்டுப்படுத்துவதையும் அனுமதிக்க முடியாது எனவும் ட்ரம்ப் தனது அரசியல் வைரஸை ஐ.நா சபைவரையும் பரப்புவதாகவும் குற்றம் சாட்டினார். உலகில் எந்தவொரு நாட்டுடனும் சீனா போர் செய்யும் எண்ணம் இல்லை. ஆனால் சில நாடுகள் மோதல்களை தூண்ட முற்படுவதாக குற்றம் சாட்டிய ஜின் இவ்வாறான செயல் வரலாற்றுக்கு எதிரானது என ஐ.நா சபையில் தெரிவித்தார் ஜின்பிங். இக்கட்டுரையும் சீனா தைவான் இடையே ஏற்பட்டுவரும் போக்கினை தேடுவதாகவே அமையவுள்ளது.

19.09 2020 அன்று கீத் கிராஜ் எனும் அமெரிக்க வெளியுறவு அலுவலகத்தின் அதிகாரியுடன் பல மேல்மட்ட அதிகாரிகள் தைவானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். கீத் பொருளாதார வளர்ச்சி எரிசக்தி மற்றும் சுற்றுச் சூழலுக்கான அமெரிக்க துணைச் செயலாளர். இவரது வருகையை கண்டிக்கும் வகையில் சீனா போர் விமானங்களை தைவான் எல்லையை நோக்கி அனுப்பியிருந்தது. இது பற்றி கருத்து வெளியிட்ட சீனா பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ரென் குங்கியான் குறிப்பிடும் போது தைவான் அமெரிக்க கூட்டினை அடிக்கடி தூண்டிவிட்டு இடையூறினை ஏற்படுத்துவதாகவும் சீனாவை கட்டுப்படுத்த தைவானைப் பயன்படுத்துவதும் அமெரிக்கா தன்னை வளர்த்துக் கொள்ள வெளிநாட்டவரை நம்புவதும் வீணான எண்ணமாகும். நெருப்புடன் விளையாடுபவர்கள் எரிக்கப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டார்.

கீத் கிராஸ்ன் விஜயத்தினை அடுத்து சீனாவின் 06 குண்டுவீச்சு விமானங்கள் உட்பட 18 போர் விமானங்கள் தைவானை அச்சுறுத்தும் வகையில் அதன் எல்லைக்குள் நுழைந்து வெளியேறி தளத்திற்கு திரும்பின. இது தைவானை பெரியளவில் ஆத்திரமூட்டியுள்ளதாகவும் அதற்கு பதிலடி கொடுக்க தயார் எனவும் தைவான் அறிவித்தது. அதாவது இனி சீன விமானங்கள் தமது எல்லைக்குள் நுழைந்தால் அவை சுட்டு வீழ்த்தப்படும் என தைவான் எச்சரித்துள்ளது. அத்துடன் தைவான் தனது எல்லையில் போர் விமானங்களை தாக்கி அழிக்கும் ஏவுகணைகளை நிறுத்தியுள்ளது.

அதே நேரம் சீன இராணுவம், கிழக்கு சீனக் கடல் பகுதியில் இராணுவ பயிற்சியிலும் ஈடுபட்டது ஏறக்குறைய ஒரு போருக்கான தயாரிப்புகளை சீனா தனது கடற்பரப்பிலும் எல்லைப்பகுதியிலும் தயார் செய்து வருகிறது. ஜனாதிபதி ஜின்பிங் குறிப்பிடுவது போல் சீனா எந்த நாட்டுடனும் போர் செய்யும் எண்ணம் இல்லை என்பதற்கு அமைவாக செயல்பட முனையலாம். ஆனால் சீனா தைவான் தனது நிலப்பரப்பு எனவும் தனது எல்லைக்குட்பட்ட தீவு என வாதிடுவதன் மூலம் ஒரு போரை நிகழ்த்தலாம். ஆனால் சீனாவின் போக்கில் போருக்கான வாய்ப்புக்கள் குறைவாக தென்பட்டாலும் தவிர்க்க முடியாது ஒரு போரை நோக்கி செயல்பட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் உள்ளது என்பதை காணமுடிகிறது.

குறிப்பாக சீனா மூன்று பிரதான போர்க்களங்களை திறந்து வைத்



துள்ளது எனலாம். ஒன்று தென் சீனக் கடல் பகுதியாகும். இதில் போர்ப்பயிற்சி மட்டுமன்றி செயற்கைத் தீவுகளையும் அதனைப் பாதுகாக்கும் ஆயுத தளபாடங்களையும் அப்பகுதியில் குவித்துள்ளதுடன் தனது வலிமைமிக்க போாக் கப்பல்களையும் நிறுத்திவருகிறது. தைவானை சீனா மிரட்டுவது போல் சீனா இப்பகுதியில் அமெரிக்காவை மிரட்டிவருகிறது. இரு அரசுகளும் மாறிமாறி மிரட்டலில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் ஒரு போரை எதிர்கொள்ள இரு தரப்பும் தயாராகவில்லை என்றே கூறுதல் பொருத்தமானதாகும். அதே நேரம் போரைத் தூண்டும் கட்டமைப்பினை இரு தரப்பும் தென் சீனக் கடலில் ஏற்படுத்தி வருகின்றன. அமெரிக்கா சீனாவை போருக்கு அழைப்பது போல் நடந்து கொண்டாலும் போரை நோக்கி நகர விரும்பாத போக்கொன்றினை தனது தந்திரோபாயமாகக் கொண்டுள்ளது. சீனாவை அதிர்ச்சிக்கும் எரிச்சலுக்கும் தூண்டும் உத்தியை பின்பற்றி வருகிறது. அதனால் சீனாவின் வேறு நகர்வுகளை மட்டுப்படுத்தலாம் என அமெரிக்கா கணக்குப் போட்டு செயல்படுகிறது. ஆனால் சீனாவோ மீளவும் புதிது புதிதாக போர்க் களங்களை திறந்துவருகிறது.

இந்திய சீன எல்லையில் இன்னோர் போர் மூளும் அபாயத்தை அடையாளம் கண்டுள்ள சீனா அனைத்து நாடுகளது கவனத்தையும் இந்திய எல்லையில் குவிய வைத்துவிட்டு தைவான் நாட்டை நோக்கி நகர்கிறது. அவ்வாறே ஹெங்கொங் விடயத்தையும் தனது நாட்டு எல்லைக்குள் அமெரிக்காவை கையாளும் இன்னோர் போர் மையமாக சீனா திறந்து வைத்துள்ளது. இதில் அனைத்திலும் அமெரிக்காவே பிரதான பகை நாடாக உள்ளது. அப்படியாயின் சீனா திட்டமிட்டே அத்தகைய களங்களை போருக்குரிய களங்களாக திறந்துள்ளமையும் அதில் அமெரிக்காவின் ஈடுபாட்டை அதிகரிக்க வைத்துவிட்டு தனது பொருளாதாரத்தையும் கடல்படை மற்றும் இராணுவ முனைப்புக்களிலும் கவனம் செலுத்திவருவதனை காணமுடிகிறது. ஒரு வகையில் இரு தரப்பும் பரஸ்பரம் அவ்வாறு தான் செயல்பட்டாலும் வெளிப்படையாக பார்க்கும் போது அமெரிக்கா அதிக ஈடுபாட்டை எடுப்பதன் வாயிலாக தனது கொரோனா நெருக்கடியைக் கூட சரிவரக் கண்காணிக்க முடியாது நெருக்கடியை சந்தித்து வருகிறது.

சீனா திறந்துள்ள அனைத்து போர்க் களத்திலும் சீனா பலமாகவே செயல்படுவதாக சீனா உணர்கிறது. இந்திய எல்லையில் சீனாவின் பலம் முதன்மையடைந்துள்ளது. அது மட்டுமன்றி இந்தியத் தரப்பு கூறுவதுபோல் களநிலவரம் இந்தியாவுக்கு ஆரோக்கியமாக இல்லை என்றே தெரிகிறது. அடிப்படையில் கொரனோ ஒரு பக்கமும் பொருளாதார நெருக்கடி இன்னோர் பக்கமுமாக இந்தியா திணறிக் கொண்டுள்ள சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொண்டு சீனா லடாக் பகுதியில் கணிசமான போர் உத்திகளை வைத்து இலக்கினை அடைந்துள்ளது. அதுமட்டுமன்றி இந்தியாவின் பொருளாதார வாய்ப்புக்களை பலவீனப்படுத்தி வருகிறது. சீனாவிலிருந்து வெளியேறும் பல்தேசியக் கம்பனிகளை இந்தியாவுக்குள் நுழையவிடாது சீனா போர் நெருக்கடியை காட்டி குழப்பியுள்ளது. அனேகமான கம்பனிகள் ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்கா நோகேக்கி நகர்கின்றன. சீனாவும் ஆபிரிக்கா நோக்கி அதிக முதலீடுகளை குவித்துவருகிறது.

எனவே சீனா போருக்கு தயாராகிக் கொண்டு எந்தவொரு நாட்டையும் தாம் தாக்கப் போவதில்லை என்பது தைவானுக்கு பொருந்துமா என்பது பிரதான சந்தேகமாகும். காரணம் தைவான் சீனாவின் பிரதேசமாகவே வரலாற்றுக் காலம் முதல் கருதப்படுகிறது. அது மட்டுமன்றி இலகுவானதும் அண்மையிலுள்ளதுமான போர்க்களம் தைவான் என்பதுடன் தைவான் சீனாவின் நிலம் என்ற எண்ணமும் சீனாவின் பாதுகாப்பும் தைவானில் தங்கியிருப்பதாலும் சீனாவின் நகர்வு தைவானை முதன்மைப்படுத்துவதாகவே அமைய அதிக வாய்ப்புள்ளது. எப்போதும் போர் பலவீனமான எதிரியை நோக்கி மேற்கொள்ளப்படுவதாகவே அமையும் என்பதனால் அத்தகைய சூழல் ஒன்று ஏற்படுமாயின் சீனா தைவான் மோதலே அதிகம் சாத்தியமாகும். சீனா போரை ஒரு உத்தியாகக் கொள்ளாத போதும் ஒரு பனிப்போர் உத்தியை உலகம் தழுவிய விதத்தில் கையாள முனைகிறது.

இது மட்டுமன்றி உலக விவகாரங்களில் ஒரு நாடு ஆதிக்கம் செலுத்துவதையும் பிற நாடுகள் கட்டுப்படுவதையும் அனுமதிக்க முடியாது எனவும் சீன ஜனாதிபதி ஜின் பிங் ஐ.நா. பொதுச்சபையில் காணொளி மூலம் உரையாற்றும் போது தெரிவித்தார். எனவே சீனா ஒரு தெளிவான உபாயத்துடன் செயல்படுகிறதைக் காணமுடிகிறது. அதனையே முதன்மைப்படுத்திக் கொண்டு சீனா அமெரிக்கா மீதும் அதன் நட்பு சக்திகள் மீதும் அதிக நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது. இதில் அமெரிக்க தைவான் நெருக்கத்தின் விளைவுகளை தைவானே அதிகம் சந்திக்கப் போகிறது.



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்...

## உல்லாசப் பயணக் கைத்தொழிலை உடனடியாக அபிவிருத்தி செய்யாவிட்டால்


# மோசமான விளைவுகளை நாடு எதிர்கொள்ள நேரிடும்



ரஷ்ய நாட்டுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க

**கொவிட் 19 தொற்று முழு உலகிற்கும் பெரும் சவாலாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இத்தொற்று காரணமாக உலகப் பொருளாதாரம் பெருவீழ்ச்சி கண்டுள்ளது. குறிப்பாக சுற்றுலா துறை ஸ்தம்பிதமடைந்துள்ளது. இந்நிலையில் இத்தொற்றை கட்டுப்படுத்தவும் தவிர்த்துக் கொள்ளவும் தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்து விடுவதில் முழு உலகமும் கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதன் பயனாக 140 மேற்பட்ட தடுப்பு மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ள போதிலும் 20க்கும் மேற்பட்ட மருந்துகள் பரிசோதனை மட்டத்திலுள்ளன. என்றாலும் இத்தடுப்பு மருந்து புழக்கத்திற்கு வர ஒரிரு வருடங்கள் செல்லலாம் என்றும் கொவிட் 19 உடன் வாழ கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் மருத்துவ விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கின்றனர். இந்த நிலையில் இலங்கை இத்தொற்றை உள்நாட்டில் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ளதோடு நாட்டை கட்டம் கட்டமாக இயல்பு நிலைக்கும் கொண்டு வந்துள்ளது. இன்னும் விமான நிலையம் மாத்திரம் திறக்கப்படாதுள்ளது. என்றாலும் உல்லாசப் பயணம் மேற்கொள்ளப் பாதுகாப்பான நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ள ரஷ்யா அதில் இலங்கையையும் உள்ளடக்கியுள்ளது. இவ்வாறான நிலையில் ரஷ்ய நாட்டுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுடன் உடன் மேற்கொண்ட நேர்காணல்**

நேர் கண்டவர்:
**மர்லின் மரிக்கார்...**




**கே: 2006 முதல் 2015 வரையும் ரஷ்ய நாட்டு தூதுவராக நீங்கள் கடமையாற்றியுள்ளீர்கள். அந்நாடு தொடர்பில் சுருக்கமாகக் குறிப்பிட முயுமா?**

**பதில்:** ஆம். சோவியத் ரஷ்யா 19901992 முன்னர் பிராந்தியங்களின் கூட்டமைப்பாகக் காணப்பட்ட நாடு. 1990 1992 காலப்பகுதியில் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பிராந்தியங்கள் தனித்தனி நாடுகளாகின. ரஷ்யா, கஸ்கிஸ்தான், பெலோரஷ்யா, உக்ரெய்ன் என்ற படி 15 நாடுகள் உருவாகின. அது எமது நாட்டுக்கு நஷ்டம் என்பது தான் எனது கருத்து. இரண்டு நாடுகளுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படும் போது பலவீனமான நாட்டுக்கு ஒத்துழைப்பு நல்கக்கூடிய நாடாக சோவியத் ரஷ்யாவை அடையாளப்படுத்தலாம். என்றாலும் எமது நாடு சோவியத் ரஷ்ய காலத்தைப் போன்று அதிலிருந்து பிரிந்துள்ள எல்லா நாடுகளுடனும் நல்லுறவை பேணிவருகின்றது. குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை அடங்கலாக சர்வதேச ரீதியில் எமக்கு முதலில் உதவிக்கு வரும் நம்பிக்கைக்குரிய நாடாக ரஷ்யா விளங்குகிறது.

**கே: இலங்கைக்கும் சோவியத் ரஷ்யா மற்றும் அதிலிருந்து பிரிந்துள்ள நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர மற்றும் உல்லாச பயணத் தொடர்பாடல் குறித்து குறிப்பிடுவதாயின்...?**

**பதில்:** 1992 இல் சோவியத் ரஷ்யா பிரிந்து நாடுகளாகிய பின்னர் எமது நாட்டுக்கும் அந்நாடுகளுக்குமிடைலான உறவில் மாற்றங்கள் ஏற்பட்டன. நான் தூதுவராக பதவியேற்கும் வரையும் அந்நாடுகளுடன் இலங்கை மிகவும் குறைந்தளவில் தான் இராஜதந்திர உடன்படிக்கைகள் கைச்சாத்திட்டிருந்தன. ஆனால் 1970 இல் ரஷ்யாவுக்கான தூதுவராக இருந்த குணபால மலலசேகர விமான சேவை உடன்படிக்கையை கைச்சாத்திட்டார். அது தற்காலிகமாக நீடிக்கப்பட்டிருந்தது. இருநாடுகளுக்கிடையில் உல்லாச பயணத்துறையை மேம்படுத்துவதாயின் விமான சேவை உடன்படிக்கை அவசியம். அதனால் நான் பதவியேற்ற பின்னர் ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுடன் விமான சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதேநேரம் வருடா வருடம் 20 25 மில்லியன் ரஷ்ய பிரஜைகள் வெளிநாடுகளுக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்கின்றனர். ரஷ்யர்கள் கஞ்சத்தனம் கொண்டவர்கள். அவர்கள் செலவு செய்ய மாட்டார்கள் எனச் சிலர் கருதுகின்றனர். ஒரு சிலர் அவ்வாறு இருந்தாலும் பெரும்பாலானவர்கள் உல்லாசப் பயணம் மேற்கொளவதில் விருப்பம் கொண்டவர்கள். பொதுவாக ஒரு ரஷ்யர் நாளொன்றுக்கு 160 அமெரிக்க டொலர்களை செலவிடுவார் எனத் தரவுகள் உள்ளன. ரஷ்யர்களில் ஒரு பகுதியினர் கோடை காலத்திலும் மற்றொரு பகுதியினர் குளிர் காலத்திலும் சுற்றுலா செல்வர். அவர்களது கோடை காலம் ஏப்ரலில் ஆரம்பமாகி செப்டம்பர், ஒக்டோபரில் முடிவுறும். குளிர் காலம் ஒக்டோபரில் ஆரம்பமாகி ஏப்ரல் இறுதியில் முடிவுறும்.

எம்மைப் போன்ற நாடுகள் பொதுவாக குளிர் காலத்தில் தான் ரஷ்யா நாடுகளிலிருந்து உல்லாசப் பயணிகளை வரவழைக்க விரும்புகின்றது. ஏனெனில் அக்காலப்பகுதியில் ரஷ்யாவின் சில நகர்களில் குளிர் 35 40 மைனஸ் பாகையாகக் காணப்படும். பெருபாலான நகரங்கள் 10 மைனஸ் டிகிரி குளிர் காணப்படும்.

என்றாலும் நான் தூதுவராக செல்லும் வரையும் இலங்கைக்கு ரஷ்ய உல்லாசப் பயணிகளை வரவழைப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதனால் 2005 இல் சுமார் 4500 உல்லாசப் பயணிகள் மாத்திரம் சோவியத் ரஷ்ய நாடுகளிலிருந்து இங்கு வந்திருந்தனர். நான் 2015 இல் தூதுவர் பதவிலிருந்து விலகும் போது இலங்கைக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையை ஒரு இலட்சத்து 20 ஆயிரமாக அதிகரித்தேன். ஆனால் 2015 பின்னரான 5 வருட காலப்பகுதியில் 1000,1500 பேர் தான் அதிகரித்துள்ளனர்.



மேலும் ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் மொழிபெயர்ப்பு தொடர்பில் பிரச்சினை உள்ளது, அந்நாட்டின் உல்லாசப் பயண முகவர்கள் ஆங்கிலம் பேசுவது மிகவும் குறைவு. அவர்கள் மக்களுடனும் ஆங்கிலத்தில் கதைப்பதில்லை. அதனால் எமது நாடு தொடர்பான தகவல்களை நாம் அவர்களது மொழியில் வழங்க வேண்டும். அந்த வகையில் நான் இலங்கை தொடர்பில் ரஷ்ய மொழியில் 08 புத்தகங்களை எழுதியதோடு இலங்கையிலுள்ள முன்னணி உல்லாசப் பயண ஹோட்டல்கள் தொடர்பில் 312 பக்கங்களைக் கொண்ட கெட்லொக் ஒன்றை ஆங்கில, ரஷ்ய மொழிகளில் தயாரித்தேன். அது மாத்திரமல்லாமல் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் வாழக்கூடிய தெரிவு செய்யப்பட்ட 25 நகர்களுக்கு இலங்கையின் நடன குழுவையும் உல்லாசப் பயணக் கைத்தொழில் துறையுடன் சம்பந்தப்பட்டவர்களையும் அழைத்து சென்று இரண்டு மூன்று நாள் தங்கியிருந்து இலங்கையின் உல்லாசப் பயணம் குறித்து அறிமுகப்படுத்தினோம்.

**கே: தற்போதைய கொவிட் 19 தொற்று அச்சுறுத்தல் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலா துறையை மீளக்கட்டியெழுப்புதல் தொடர்பில் குறிப்பிடுவதாயின் ?**

**பதில்:** முன்பு தென்பகுதியிலுள்ள சில ஹோடடல்கள் ஒரு அறையை உல்லாசப் பயணிகளுககு 6000 டொலர்களுககு வழங்கும். இன்று 200 டொலர்களுக்கு கூட வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. உள்நாட்டவர்களுக்கு தான் தற்போது ஹோட்டல்கள் அறைகள் வழங்கப்படுகின்றன.

ஆனால் நாடு என்ற வகையில் அந்நிய செலாவணி நாட்டுக்குள் வர வேணடும். அதற்கான முக்கிய துறையாக சுற்றுலா கைத்தொழில் துறை விளங்குகின்றது. இத்துறை கொரோனாவால் பூச்சிய நிலைக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் இலங்கையில் இருபது இலட்சம் பேர் உல்லாசப் பயணக் கைத்தொழில் துறையுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்டுள்ளனர். இது சனத்தொகையில் 8 10 வீதமாகும். கொறொனா காரணமாக இவர்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலை இரண்டு மூன்று வருடங்களுக்கு தொடர்ந்தால் பொருளாதார நிலைமை என்னவாவது?

எமது சுகாதாரத் துறை கொரோனா தொற்றிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளித்து செயற்படுகின்றது. அது வரவேற்கத்தக்கது. மக்களைப் பாதுகாக்க வேண்டும். அதேநேரம் ஏதோ ஒரு வகையில் அந்நியச் செலாவணி வருமானத்தையும் பாதுகாக்க வேண்டும். ஏற்றுமதியும் பெரிதும் குறைவடைந்துள்ளது. எமது நாடு தைத்த ஆடைகளைத் தான் அதிகளவில் ஏற்றுமதி செய்கின்றது. ஆனால் முழு உலகிலும் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள சூழலில் அவற்றின் ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டிருக்கின்றது.வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிகம் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர். அவர்கள் நாட்டுக்கு திருப்பி அழைத்து வரப்படுகின்றனர்.

**கே: இந்த சூழலில் ரஷ்யாவிலிருந்து உல்லாசப் பயணிகளை வரவழைக்க முன்வைக்கப்பட்டிருக்கும் திட்டம் குறித்துக் கூறுங்கள்?**

**பதில்:** அந்நியசெலாவணி வருமானத்தை கொண்டு வரும் நோக்கில் ரஷ்ய உல்லாசப் பயணிகளை மிகக் குறைந்த 'ரிஸ்க்' குடன் நாட்டுக்கு வரவழைப்பதற்கான யோசனையை அரசாங்கத்திற்கு முன்வைத்துள்ளேன். அதுவும் உல்லாசப் பயணிகளை இங்கு வரவழைக்க ஏற்கனவே முன்வைத்து சுகாதார துறையினரால் நிராகரிக்கப்பட்ட யோசனைகளை கருத்தில் கொண்டு பொருளாதார நலன்களை முன்னிலைப்படுத்தி தயாரிக்கப்பட்டிருக்கும் யோசனை இது.

இவ்வருடம் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் ஆகஸ்ட் 19 திகதி வரையும் துருக்கி நாட்டின் அந்தாலியா நகருக்கு 31 நாடுகளில் இருந்து ஒரு மில்லியன் உல்லாசப் பயணிகள் சென்றுள்ளனர். அவர்களில் சுமார் 3 இலட்சம் பேர் உக்ரெய்ன் நாட்டினர். 2 இலட்சத்து 90 ஆயிரம் பேர் ரஷ்ய பிரஜைகள். 85 ஆயிரம் பேர் ஜேர்மன் நாட்டவர்கள். அது ஒரு கரையோர நகரம். அங்கு பெரிய பெரிய உல்லாச ஹோட்டல்கள் உள்ளன. அவர்கள் அந்த ஹோட்டல்களில் தங்கியிருந்து கடலில் குளித்து பொழுது போக்கைக் கழித்தபடி திரும்பிச் செல்கின்றனர்.

உக்ரெய்ன், பெலோரஷ்யா ஆகிய நாடுகளில் ஒக்டோபர் இறுதியில் குளிர் காலம் ஆரம்பமானதும் அவர்கள் இலங்கை, மாலைதீவு, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு அதிகம் செல்வர். இவ்வாறான நிலையில் மாலைதீவு, டொமினிக்கன் குடியரசு என்பன தமது விமான நிலையங்களை தற்போது திறந்துவிட்டன. ரஷ்ய நாட்டினர் குளிர் காலப்பகுதியில் உல்லாசப் பயணம் மேற்கொள்ளும் பத்து நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அந்தாலியாவில் போன்று நாட்டின் உட்பகுதிக்கு செல்லாது கரையோரப் பகுதியில் உள்ள உல்லாச ஹோட்டல்களில் அவர்கள் தங்கியிருக்க அரசாங்கமும் சுகாதாரத் துறையும் அனுமதி வழங்கினால் வரவழைக்க முடியும்.

**கே: இலங்கை வரும் உல்லாச பயணிகளுக்கும் அவர்கள் தங்கிருக்கும் ஹோட்டல்களுக்கும் கொரோனா தவிர்ப்புக்காக முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவை?**

**பதில்:** இத்திட்டத்தின் கீழ் உல்லாசப் பயணிகளை அழைக்க அனுமதி கிடைக்கப்பெறுமாயின் மத்தளை சர்வதேச விமான நிலையத்திற்கு மாத்திரம் உல்லாச பயணிகளுடனான விமானம் வர வேண்டும். ரஷ்யா, உக்ரெய்ன், பெலோரஷ்யா, கஸகிஸ்தான் நாட்டு உல்லாசப் பயணிகள் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரான 72 மணித்தியாலயங்களுக்குள் பெற்றுக்கொண்ட கொரோனா தொடர்பான PCR பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து ஒரு மாதத்திற்கான வருகை விஸா (on arrival visa) வழங்கப்படும்.

அவ்வாறு மத்தளை வந்து சேரும் உல்லாசப் பயணிகளுக்கு விமான நிலையத்தில் PCR பரிசோதனை இடம்பெறும். அதற்கு ஆகக் குறைந்தது மூன்று மணித்தியாலயங்கள் செல்லலாம். அப்பரிசோனையில் கொரோனா தொற்றாளர்கள் மிகக் குறைந்த மற்றும் பூச்சிய நிலையில் இருப்பதையே பெரிதும் எதிர்பார்க்கின்றோம். அதன் பின்னர் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள கரையோர ஹோட்டல்களுக்கு அழைத்து செல்லப்படுவர். அங்கு அவர்களுக்கு PCR பரிசோனை நடாத்துமாறு கோரப்படும் .

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுடன் உள்நாட்டினர் தொடர்புபடுவது மட்டுப்படுத்தப்படும். குறிப்பாக உல்லாப் பயணிகளை தங்க வைப்பதற்கான ஹோட்டல்கள் கரையோரத்தில் அமைந்திருக்க வேண்டும். உல்லாசப் பயணிகள் கடற்கரையோரத்திற்கு இலகுவாக சென்று வரக்கூடிய வசதியைக் கொண்டிருக்க வேண்டும். அக்கரையோரப் பிரதேசத்திற்கு உள்நாட்டினர் செல்ல முடியாத படி ஒரு பகுதியை மூடிவிடக்கூடிய வசதியைக் கொண்டிருக்க வேண்டும். ஹோட்டலின் வீதியை மூடி வைத்திருக்க வேண்டும். உல்லாசப் பயணிகள் தங்கியிருக்கும் காலப்பகுதியில் உள்நாட்டினர் அந்த ஹோட்டல்களுக்கு செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்த ஹோட்டல்களில் பணிபுரியும் உள்நாட்டு ஊழியர்கள் ஹோட்டலில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும். இவ்வாறான நிபந்தனைகளின் கீழ் ஹோட்டல்கள் செயற்பட வேண்டும். அந்த உல்லாசப் பயணிகள் 14 நாட்கள் அல்லது அதனை விட குறைந்த நாட்கள் ஹோட்டலிலேயே இருக்க வேண்டும். அதன் பின்னர் அவர்களுக்கு நாட்டின் உட்பிரதேசங்களுக்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டால் PCR பரிசோனை அறிக்கையைப் பெற்ற பின்னர் அவர்கள் செல்லலாம்.

தற்போது வெளிநாட்டிலிருந்து அழைத்து வரப்படுபவர்கள் ஹோட்டல்களில் தனிமைப்படுத்தி தங்க வைத்திருப்பது போன்ற ஏற்பாடே இங்கும் கையாளப்படும்.. ஆனால் தனிமைப்படுத்தப்படுபவர்கள் அறையில் தங்க வைக்கப்படுவர். இவர்களுக்கு வசதிகள் அளிக்கப்படும்.

உல்லாசப் பயணக் கைத்தொழிலை மீள ஆரம்பிப்பதற்காக இவ்வாறான ஏற்பாடுகளை ஏனைய நாடுகள் மேறகொண்டிருப்பதாக நாமறியவில்லை. ஆனால் இந்நாட்டு அரசாங்கம் இத்தொற்றிலிருந்து மக்களை பாதுக்காப்பதில் உச்ச பட்ச முன்னுரிமை அளித்து செயற்படுவதை யாவரும் அறிந்ததே.

**கே: தற்போதைய சூழலில் நிறைவாக நீங்கள் கூற விரும்புவதென்ன?**

**பதில்:** நாட்டில் கொரோனா தொற்று இல்லை. இந்நிலையில் உல்லாசப் பயணிகளை வரவழைத்தால் இந்நாட்டினருக்கு பாதிப்புகள் ஏற்படலாம் என்ற கருத்து மக்கள் மத்தியில் ஏற்படலாம்.

(15ஆம் பக்கம் பார்க்க)









## காதல் பிரிவு

எம்.எஸ்.எம். முலௌபர், திஹாரிய

காதலர்களை பிரிக்கும்
சில புல்லுருவிகள் – உலகில்
இருப்பது போல் – இந்த
மணிக்கூட்டை பார்த்தால்
புரிந்துவிடும் – எப்படி
சின்ன முள் பெரிய முள்
ஒன்று சேர்ந்து இருந்த
உடன் சிகப்பு முள் ஓடி
இரண்டையும் பிரிந்து விடும்
இதே தான் காதல்
வாழ்க்கையிலும் நடக்கிறது
மனம் தான் ஒலி!

## எத்தனை அவதாரம்

கம்பளையூர் மஞ்சுளா கிருஷ்ணசாமி.

பொழுது விடிந்ததும்
போலி அழுகையும்
புலம்பலும்
பொய்யும் பித்தலாட்டமுமாய்
வளைந்து நெளிந்து
வால் பிடிப்போர் சிலர்
கண்ணுக்கு முன்னே
இனிக்கப் பேசி
காணாத விடத்து
இல்லாததும்
பொல்லாததுமாய்
இகழ்ந்து பேசி
இடரிரைப் போரும்
உளர்
ஏற்றமதில்
மாற்றம் கண்டால்
ஏறி மிதிக்கும்
துரோக மனங் கொண்ட
விரோதிகள் பலர்
வரும்படி
பெருகுமென்றால்
நல்லதை வேறறுத்து
அல்லாததை
கொடு கட்டிப்
பறக்கச் செய்யும்
சூது சூழ்ச்சி
ஆணவம் அகந்தை
தந்திரம் நிறைந்த
கும்பலோ பற்பலர்
வீணான பேதத்தையும்
விதண்டா வாதத்தையும்
விலை கொடுத்து வாங்கும்
உருவதையும்
பருவத்தையும் கொண்ட
உச்சி முதல்
பாதம் வரை
விஷம் நிறைந்த
சரியான சந்தர்ப்பம்
கிடைக்கும் போது
புரியாத எத்தனையோ
அவதாரங் கொண்டு
நாடகமாடும் நடிகருள்
மனிதன் மட்டும்
ஏனோ இல்லை





## இருகுறவர் பெற்ற தங்க மகள்

மு. தருமன் – வட்டக்கொடை.

பட்டுத் தெறிக்கும் பார்வை
கயல் விழி கன்னங்கள்
முத்துமுத்து பளிச்சிடும் பற்கள்
செக்க சிவந்த பவள வாய்
தத்தித் தொத்தி நடைபயின்ற
சிறுசிட்டு செவ்வந்தி மேனி
பெண் மான் வசியம்
ஆடி, ஆடி, பள்ளி சென்றாள்
படிப் படியாய் பயின்றாள்
நாவுக்கரசி கலைவாணி
துணை நின்றாள் பூபதியாய்
எண்ணும், எழுத்தும் இயல் ஐந்து
பண் நாள்கும் கசடற பயின்றாள்
நாளொரு வண்ணம் பொழுதொரு
மேனியாய் குதுகளித்தாள்
ஐவகை பருவம் சிலையாய்
வளர்ந்தாள் இடைசிறுத்து
தனம் பெருத்து நெய்நோய்
படர்வது அறியாள்
இருந்தும் ஏதோமன உளச்சல்
என்னை நோகா அறிவூட்டல்
தந்தை அளவற்ற பாசம்
குரு தெய்வம் நல்வழி காட்டல்
பல்கலை பயின்று நாடு போற்றும்
நன் மகளாய் ஏற்றம் பெற்றாள்
தமிழ் தாய் பெற்ற தங்க மகள்

## கற்றவனுக்கு இழிவில்லை



கலாபூஷணம்
எம்.வை.எம். மீஆத்.

கல்வி கற்றவன் – மகத்தானவன்
கல்வியற்றவன் இழிவுக்கு
ஆளாகுபவன்
கற்காவிடின் வாழ்வு தோல்வியே
கற்றவன் சென்றவிடமெல்லாம்
புகழ் – இகழ்வு தூரமாம்
கல்வியாய் மனிதன் அறிஞனாகிறான்
கல்வியால் மனிதன்
விஞ்ஞானியகிறான்
கல்வியால் ஆரோக்கிய
வாழ்வு வாழ்கிறான்
கற்றகல்வியின் படி நடந்திடில்
வற்றாத வளம் காண்கிறான்
வறுமைப் பிணி அணுகாது
காத்திருவது வைத்திக் கல்வியே
கற்றவன் உண்மை உரைக்கிறான்
மற்றவர் அறிவு பெறச் செய்கிறான்
வீட்டுக்கும் நாட்டுக்கும் அபிவிருத்தி
திட்டம் வகுக்கின்றான்
நாட்டை வளமூட்ட
பங்களிப்பு செய்கின்றான்

## பெண்ணாய் பிறந்து

கே.எல். ஹில்மி, சம்மாந்துறை.

கருவிலேயே
என்னைக் கலைக்க
திட்ட மிட்டார்களாம்
என் அப்பாவும்
எம்மாவும்
பாட்டியும் தாத்தாவும்
அம்மாவின் தாத்தனாரும்,
பெண் முதலில்
பிறப்பதை யாரும்
விரும்பவே இல்லையாம்
ஸ்கேனில் தெரிந்ததாய்
நான் பெண் என்று
அம்மாவுக்கும்
அப்பாவுக்கும்
வீட்டு வேலைகள்
செய்ய பெண் வேண்டும்.
ஆனால் முதலில்
பூக்கும் கரு மட்டும்
பெண்ணாக இருக்கக்
கூடாதாம் என்ன
அநியாயம் அது,

## பல்லினச் சகவாழ்வு

ஏ.ஸீ.இஸ்மாலெவ்வை சம்மாந்துறை.

பல்லினம், பலமதம், பலகலாசாரம்,
பண்பாடு என்பன கொண்டுள்ள மக்கள்
நல்லியல் போடுயர் இணக்கங்களோடு
நாளெலாம் பிணக்கங்களேது மில்லாமலோர்
எல்லையில் இன்பமாய் வாழ்கிறாரென்றால்
இதுவே பல்லினங்களின் சகவாழ்வு ஆகும்
வல்லமை, தாழ்வுயர்வு, வம்புகள் வந்தால்
வாழ்விலே சகவாழ்வு தூரமாய்ப் போகும்
பிறமத்தினரின் கலாசார உணர்வுகளை
பேணிட முடியாமல் நாமிருந்தாலும்
பெறுமையாய் அவைகளுக் கனுமதியளித்து
போதிய அளவிலே சகித்து நடந்தால்
உறவுகள் பலம் பெறும் நிலையை அடைந்தமு
உராய்வுகள், மோதல்கள் இல்லாமலாகி
அறவழி வாழ்க்கையை அடையலாம் நாங்கள்
அவ்வழி சகவாழ்வின் அடித்தளமாகும்
சமத்துவம், அநீதிக்கு எதிராக உதவுதல்
சுதந்திரம், உரிமைகள், கடமைகள் பேணுதல்
மதச் சுதந்திரம் மக்களுக்கு இருப்பது
மற்றவர் மீது அவதூறு தடுத்தல்,
மதம், மொழி, கலாசாரம், பண்பாடு,
வாழ்ந்திடும் நாடு இவைகளைத் தாண்டி
மனிதனை மனிதனாய் மாத்திரம் பார்த்தால்
மனிதனின் சகவாழ்வு மலர்வது உண்மை



## அறிவூட்டும் ஆசான்!

காத்தான்குடி கலைமதி றபாய்தீன்

ஆசானே! நீ
அறிவு முத்துக்களை
அடக்கி வைத்திருக்கும்
அறிவுப் பெட்டகம்!
பள்ளிப்பாடங்களையும்
வாழ்க்கைப்பாடங்களையும்
பதிந்து வைத்திருக்கும்
பாடப்புத்தகம்!
சிந்தனைகளையும்
சிறப்புகளையும்
வளர்த்துவிடும்
சிந்தனைச் சிப்பி!
சமுதாயசிகரத்தில்
ஏற்றிவிடும்
ஏற்றமான ஏணி!
ஆசான் நீ இல்லையென்றால்
அறிவுக்கண்களே
எங்களுக்கு திறந்திருக்காது!
வளமான எதிர்காலம்
எங்கள் வாழ்வில்
வந்திருக்காது!
மண்மதிக்கும் மனிதர்களாய்
மண்ணில்
மதிப்புப் பெற்றிருக்கவே மாட்டோம்!
விண்வியக்கும்
வித்தகர்களாய் வாழ்வில்
வினோதம்
செய்திருக்கவே மாட்டோம்!
எங்களில் நாங்கள்
ஏற்றம் பெறுவதும்
வாழ்க்கையில் நாங்கள்
மாற்றம் காண்பதும்
ஆசான் உன்னால்தானே!
அன்னையும்
பிதாவும் போல்
உன்னையும் நாங்கள்
நேசிக்கின்றோம்!
உன்
உறிவுக்காற்றை
அன்றாடம்
சுவாசிக்கின்றோம்!
உன்
வாழ்வையும்
வரலாறையும்
வாழ்நாளில் நாம்
வாசிக்கின்றோம்!

## காலமும் கடவுளும்

கவி, கறுவாக்கேணி முத்துமாதவன்.

வரண்டு போய் கிடக்கிறது வானம்
திரண்டு நடக்க...! திராணியற்ற தாய்
மிரண்டு போனது மேகம்
காற்றுக்கூட வேற்றாள் மாதிரி
வெப்பிசாரத்தோடு
விலகிப் போனது...!
முகட்டில் நின்ற... சூரியனை...!
முறைத்துப்பார்த்தால்
முகத்தை சுட்டுக்கொண்டது, பூமி,
சோலைகளற்ற, சுடுகாடாய்
சூம்பிப் போனது வாழ்வு
அதனையும் விழுங்கிட
ஆயத்தப்படுகிறது இயற்கை
மாரீசம் என்னும்
பராய மான் களால்
விதைக்கப்பட்ட
மன்மதப் பூக்கங்களுக்குள்
மானுடம் வீழ்ந்து போயிற்று,
பொய்கள், உண்மைகளைத் தின்கின்றன்
உண்மைகளைத் தின்றன...!
கானல் நீரை கைகளால் அள்ளும்
கடைசி முயற்சியில்
எங்களது புத்திஜீவிகள்
ஏராளம் பேர் இறங்கியிருக்கிறார்கள்
இது நல்ல விடய மென்று
எல்லோரும் புகழ்ந்தார்கள்
இறைவன் மட்டும்,
ஏளனமாய்ச்சிரிக்கிறான்
முதலில் கண்ட இடந்தான்
முடிவிலும் வருமென்பதை
முற்றாக மறந்தமனிதன்,
முக்காடும் போட்டு
முகத்தையும் மூடிக்கொள்கிறான்,
எங்கோ? ஒரு தவறு
எப்படி ஏற்பட்டது என்பது தெரியாமல்



## அன்னையே!

கலாபூஷணம், நிந்தவூர் மக்கீன் ஹாஜி,

பால் தந்து
அன்பசி தீர்த்த
அன்னையே
உன் உதிரத்தை
பாலாக்கி ஊட்டியதும்
உண்மையே,
அதனால்தான்
அகிலமும் போற்றுது
உன்னையே
சந்திரனைவிட
குளிர்மைதான்
உன் தன்மையே,
உன் மனமும்தான்
பாலைவிட
வெண்மையே
உலகையும்
மிஞ்சியது
உன் பொறுமையே
எனக்கு விளங்கவில்லை
நீ....
இருக்கும் போது
உன் அருமையே
இதுவரை உன்னை விளங்காதிருந்த
நாளொரு எருமையே

## உன்னைநான் தேடுகிறேன்!

கலாபூஷணம், ஏறாவூர் தாஹிர்

உன்னைத் தேடித்தேடி
ஊரெங்கும் ஓடியோடி
காலைப் பொழுதுகளில்
மாலை வேளைகளில்
பகல், இரவுத் காலங்களில்
நனவுகளில், கனவுகளில்
உன்னைத் தேடித்தேடி
அலுத்துச் சலித்து விட்டேன்!
எங்குள்ளாய் எனநான்
எங்கும் தேடி விட்டேன்!
அங்குள்ளாய், இங்குள்ளாய்
அங்குமில்லையே;
இங்குமில்லை
சொன்னவர்களை நம்பி
சோர்ந்து கிடக்கின்றேன்!
வழிபாட்டுத் தலங்களிலும் நீ
வாழ்வதாய்ச் சொன்னார்கள்!
ஆலயங்களில் தேடி
கோயில்களுள் புகுந்து
மஸ்ஜித்களில் நுழைந்து
விகாரைகளுள் விரைந்து
விரிவாகத் தேடி விட்டு
விரக்தி அடைந்தும், உன்னை
விடாமல் தேடுகின்றேன்!
முதியோர் புன்
முறுவல்களில்
மழலைகளின்
மலர்ச்சிகளில்
இடைக்கிடை
நீதெரிவதான
இனிய தகவல்களில்
இதயம் குளிர்ந்தவனாய்
அடிக்கடி செல்கையில் நான்
புன்னகையோ, புறுபுறுப்பாய்
மலர்ச்சிகளோ,
மனவெறுப்பாய்
மாறுவதைக் காணுகின்றேன்!
ஐயோ, நீ எங்குள்ளாய்?
நிரந்தர இடம் இது உன்!
நிறமாறும் பச்சோந்தி
கிளைதாவும் வானரங்கள்
போலின்றி சதாவும் நீ



சாந்தமுகத்துடனும்
சாந்தி, சமாதான
சந்தன மணத்துடனும்
எங்குள்ளாய் என்றவிடை
எப்போது தருவாய் நீ?
அப்போது நான்வருவேன்!
ஆரத்தழுவியுனை
ஆராதனை புரிவேன்!
அதுவரையும் நான் உன்னை
என்னுள்ளே தேடுவதாய்
இறுதி முடி வெடுத்துள்ளேன்!
சிலவேளை,... சில வேளை...
'மனிதம்' எனும் புனிதம் நீ
என்னுள்ளே உள்ளாயோ?
நம்பமுடியவில்லை!
இருந்தும் தேடுகிறேன்!
என்னுள் நாள் தேடுகிறேன்!

## உலகமே அறியும் உன் புகழை!

மாத்தளை ஆர். பாலகிருஷ்ணன்.



கட்டபொம்மனாக
வெள்ளித்திரையில் தோன்றி
வீரவசனங்களால்
சிங்கமென கர்ஜித்து
வெள்ளையனையே
வெருண்டோட வைத்து
ஆசிய ஆபிரிக்கக்கண்டத்தையே
அதிரவைத்த வீரபாண்டிய
கட்டபொம்மனே!
இரத்தத்திலகத்தில்
இராணுவவீரனாகத் தோன்றி பாரதமா
தாவுக்கே
வெற்றித்திலகமிட்டு
தங்கத்துப்பாக்கியை
தனதாக்கிக் கொண்ட
வரலாறு காணாத சாதனை நாயகனே!
தாதாசாகேப்பால்கே விருதை
காலங்கடந்து
உன கிரீடத்தில் சூடிக்கொண்டு
அந்த விருதுக்கே பெருமை சேர்த்த
தமிழ்த்திரையுலகின் தங்கமகளே!
அமெரிக்க அரசின் அழைப்பையேற்று
அங்கு சென்றபோது
நயாகரா போல்ஸ்ஸின்
ஒருநாள் மேயராக கௌரவிக்கப்பட்டு
தமிழினத்திற்கே பெருமை சேர்த்த
மங்காப்புகழ் படைத்த நடிப்புலகஜோ
தியே!
தானாகவே வந்து
அன்னை இல்லத்தின்
கதவைத்தட்டி
உன் பாதங்களை முத்தமிட்டு
உன்னைச்சரணடைந்த
செவாலிலே சிவாஜி கணேசனே!
நீ தமிழன் என்ற
ஒரே காரணத்திற்காக
உன்னைப் புறக்கணித்து
தன் முகத்தில் தானே
கரியை அப்பிக்கொண்ட
இந்தி தேசிய விருது
இன்றுவரை குனிந்த தலை
நிமிரவில்லை என்பதை
இந்த உலகமே அறியும்!

## பரிதவிக்கும் முதிர் கன்னி

ஜெ. அப்சால் அஹமட்,
நிந்தவூர்.

இளமை எனும் சோலையிலே
இன்பம் தரும் போதையிலே
செல்வம் என்ற மாயையிலே
செருக்காய் வாழும் குடும்பத்திலே
மகிழ்ச்சி கென்றும் குறைவுமில்லே
மங்கள வாழ்வில் தவறுமில்லே
திருமண வாழ்வு சிறக்கையிலே
விரும்பிய வாழ்வில் மிதக்கையிலே
வாழ்க்கை எனும் ஓடத்திலே
வருமையெனும் பயணத்திலே
கால மெனும் சாலையிலே என்
கோலம் என்றும் தனிமையிலே
ஏழை எங்கள் வாழ்க்கையிலே
ஏறும் வயதை நினைக்கையிலே
நாளும் கண்ணீர் வடிக்கையிலே
நானே முதிர் கன்னியாகையிலே
கண்ணீர் மாலை கழுத்தினிலே
சென்னீர் உறையும் போதினிலே
பன்னீர் சொரிய வருபவர்யார்
கண்ணீர் துடைத்தெறிவாரோ

# படித்ததில் பிடித்தது



மாலை 6:30 மணியளவில் நாங்கள் ஒரு ஹோட்டலில் ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்.

அந்த நேரத்தில், ஒரு மனிதன் தனது ஒன்பது முதல் பத்து வயது மகளுடன் வந்து முன் மேஜையில் அமர்ந்தார்.

அவரது சட்டை சேறும் சகதியுமாக இருந்தது, முதல் இரண்டு பொத்தான்கள் காணவில்லை. சாலையின் வேலை செய்யும் ஒரு தொழிலாளி போல் இருந்தது, சிறுமியின் ஃபிராக் கழுவப்பட்டு சுத்தமாக இருந்தது, அவள் தலைமுடியை எண்ணெயிட்டு சுத்தமாக வைத்திருந்தாள்.

அவள் முகத்தில் ஒரு மகிழ்ச்சி தோன்றியது. ஹோட்டலின் முழு அழகையும் அவள் ரசிப்பதை நாங்கள் கவனித்தோம். மேலே இருந்து குளிர்ந்த காற்றை வழங்கிய விசிறியின் மீது அவள் கண்கள் ஒரு கணம் ஓய்வெடுத்தன.

குஷன் செய்யப்பட்ட இருக்கையில் அமர்ந்து சற்று எழுந்து அவள் அதை ரசிப்பதைக் கண்டோம்.

பணியாளர் இரண்டு பெரிய கண்ணாடி குளிர்ந்த நீரை அவர்களுக்கு முன்னால் வைத்தார்.

அவர் தனது மகளுக்கு ஒரு மசாலா தோசை கூறினார். அவன் அதைக் கேட்டதும், அந்தப் பெண்ணின் முகத்தில் இருந்த மகிழ்ச்சி மீண்டும் தெளிவாகியது.

உங்களுக்கு என்ன வேண்டும்? என்று பணியாளர் கேட்டார்.

எனக்கு எதுவும் தேவையில்லை: அவர் பதிலளித்தார்.

சற்று நேரத்தில், சட்னி மற்றும் சாம்பருடன் ஒரு சூடான, காரமான மசால் தோசை வந்தது,

சிறுமி தோசை சாப்பிடுவதில் மும்முரமாக இருந்தாள், அவர் அவளை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டே குளிர்ந்த நீரைப் பருகினார்.

பின்னர் அவரது அலைபேசி ஒலித்தது. இது பழைய மாடல். மறுபக்கம் அவரது நண்பர் என்று தோன்றியது.

இன்று தனது மகளின் பிறந்த நாள் என்றும் அவர் அவளுடன் ஹோட்டலில் இருப்பதாகவும் கூறினார்.

பள்ளியில் முதல் இடத்தை வென்றால், பிறந்தநாளன்று ஹோட்டலில் இருந்து தனது மசாலா தோசை வாங்கி தருவதாக முன்பு உறுதியளித்ததாகவும், அவர் முதல் இடத்தை வென்றதால் இப்போது அவர் தனது வார்த்தையை கடைப்பிடிக்கிறார் என்றும் அவர் கூறினார்.

(அவர் பேசியது தெளிவாக கேட்டது)□ இல்லை, நாங்கள் இருவரும் எப்படி சாப்பிட முடியும்? எங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது? சில நாட்களாக எனக்கு எந்த குறிப்பிடத்தக்க வேலையும் இல்லை, வீட்டில் என் மனைவி தயாரித்த சாப்பாடு உள்ளன. எனக்கது போதும்.

இதற்கு முன் காட்சியையும் உரையாடலையும் கேட்ட நான், எனது தேனீரை என் உதடுகளுக்கு கொண்டு வந்த சூடான தேநீர் நாக்கு எரிந்தபோது அவர்களிடமிருந்து கண் அகற்றப்பட்டது.

யார் பணக்காரராகவோ அல்லது ஏழையாகவோ... தனது குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக எதையும் செய்வர் என்பதை நான் உணர்ந்தேன்.

நான் எழுந்து கவுண்டருக்குச் சென்று எங்கள் ஐஸ்கிரீம் மற்றும் தேநீருக்கான பணத்தைத் தவிர இரண்டு மசாலா தோசைகளுக்கான பணத்தை ஒப்படைத்தேன்.

அவர் தந்தையையும் மகளையும் சுட்டிக்காட்டி மெதுவாக கடைக்காரரிடம் கூறினார்

'அந்த மனிதனுக்கு இன்னொரு தோசை கொடுங்கள், அவர் பணம் கேட்டால்,' இன்று உங்கள் மகளின் பிறந்த நாள், அவள் பள்ளியில் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறாள், எனவே இது ஹோட்டலில் இருந்து உங்கள் மகளுக்கு கிடைத்த பரிசு. இதை இன்னும் சிறப்பாகப் படிப்பதற்கான ஊக்கமாக இதை நாம் கருத வேண்டும். அவருக்கு இலவசம் என்று ஒருபோதும் சொல்லாதீர்கள், அது அவரது நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும்.

ஹோட்டல் உரிமையாளர் புன்னகைத்து, 'இந்த பெண்ணும் அவளுடைய தந்தையும் இன்று எங்கள் விருந்தினர்கள். அவர்களைப் பற்றி எங்களுக்குத் தெரியப்படுத்தியமைக்கு மிக்க நன்றி. இந்த பணத்தை வேறு சில தொண்டு நிறுவனங்களுக்கும் அல்லது இது போன்ற பிற தேவைக்கும் பயன்படுத்தலாம்.' பணியாளர் மற்றொரு தோசை மேசையில் வைத்தார், நான் வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன்.

சிறுமியின் தந்தை திடீரென்று அதிர்ச்சியில் அவரிடம், 'நான் ஒரு தோசை சொன்னேன், எனக்கு இது தேவையில்லை' என்று கூறினார்.

பின்னர் ஹோட்டல் உரிமையாளர் அருகில் சென்று, "உங்கள் மகள் பள்ளியில் முதலில் வருவதற்கு இது எங்கள் பரிசு,

நீங்கள் ஒவ்வொருவருக்கும், மசாலா தோசை இன்று ஹோட்டலின் வகை.'

தந்தையின் கண்கள் விரிந்தன, அவர் தனது மகளை நோக்கி, 'பார், மகளே, நீ கடினமாகப் படித்தால் வாழ்க்கையில் இது போன்ற பல பரிசுகளைப் பெறலாம் என்று பாருங்கள்.'

அவர் ஒரு பேக் பண்ண முடியுமா என்று பணியாளரிடம் கேட்டார். அவர் அதை வீட்டிற்கு எடுத்துச் சென்று தனது மனைவியுடன் பகிர்ந்து கொள்ள விரும்புவதாகவும், அதை சாப்பிட அவருக்கு வாய்ப்பு கிடைக்காது என்றும் கூறினார்.

'இல்லை, நீங்கள் அதை இங்கே சாப்பிடலாம். வீட்டிற்கு நான் இன்னும் 3 தோசையும் ஒரு இனிப்பு பொதி யும் பேக் செய்கிறேன்.□

இன்று நீங்கள் வீட்டிற்குச் சென்று உங்கள் மகளின் பிறந்தநாளை மிகுந்த மகிழ்ச்சியுடனும் இனிப்புகளுடனும் கொண்டாடுங்கள், அவளுடைய நண்பர்களை அழைக்கவும், அதில் எல்லா மிட்டாய்களும் இருக்கும்.'

இதையெல்லாம் கேட்டபோது, என் கண்களில், மகிழ்ச்சியால் கண்ணீர்.

ஒரு நல்ல செயலைச் செய்ய ஒரு சிறிய படி எடுப்பதில் எங்களுடன் சேர பல மனிதாபிமான மக்கள் முன்வருவார்கள் என்பதை உணர்ந்தேன்.

பூஜா பாரதி...

# பாரதி கலா மன்றம் வழங்கும் பாரதி விழா, கவியரங்கம்

பாரதி கலா மன்றம் வழங்கும் பாரதி விழாவும் கவியரங்கமும் இன்று 27ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொழும்பு 13, இல. 87, புதுச்செட்டித் தெருவிலுள்ள விவேகானந்த தேசிய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் விவேகானந்த தேசிய கல்லூரி மாணவர்களுடன் பிரபல பாடகர்களான வீரபுஸ்பநாதம் கணேசனும் இணைந்து தமிழ் வாழ்த்து பாடுவார்கள்.

பாரதி கலா மன்றத்தின் தலைவர் கலா பூஷணம் த. மணியின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வை கலைஞர் கே. ஈஸ்வரலிங்கம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்.

அஸீஸ் பவுண்டேசனின் தலைவர் அஷ்ரப் அஸீஸ் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில், வடகொழும்பு தமிழ் பொநல மன்றத்தின் சாமசிறி சி. ராஜலிங்கம் வரவேற்ரை ஆற்றுவார்.

பிரபல சட்டத்தரணியும் கணக்காய்வாருமான கலைஞர் எஸ். தியாகராஜா, சமூக ஆர்வலரும் கலைப்பணியாளருமான கவிஞர் மாத்தளை இரா. தில்லைராஜன், முன்பள்ளி அதிபர் திருமதி புவனேஸ்வரி சங்கர் ஆகியோர் இங்கு பாராட்டப்படுவார்கள்.

சைவப்புலவர் ஆர். சிவானந்தராஜா, விவேகானந்த தேசிய கல்லூரி துணை அதிபர் திருமதி ரவிச்சந்திரிகா சந்திர சேகர், முத்தமிழ் மன்றத்தின் தலைவர் கலாபூஷணம் ஆர். வைத்தமாநிதி, கொட்டாஞ்சேனை அருள்மிகு வரதராஜ விநாயகர் ஆலய அறங்காவலர் கணேஷ் ஈஸ்வரன், ஆகியோரின் சொற்பொழிவுகளும் இங்கு இடம்பெறும்.

முன்னாள் இந்து கலாச்சார இராஜாங்க அமைச்சர் பி.பி தேவராஜ் "பாரதியும் தேசிய உணர்வும்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி சுபாஷினி பிரணவனின் தலைமையில் நடைபெறும் கவியரங்கில் வலம்புரி கவிதா வட்டத்தின் கவிமணி நஜ்முல் ஹுசேன், புதிய அலைகலை வட்டத்தின் தலைவர் ராதா மேத்தா, கலாபூஷணம் கவிஞர் எஸ். ஏ. கரீம், கலாபூஷணம் எம். சீ. முகமது அலி, கவிஞர்களான (ரங்கநாதன்) சித்தன், எஸ். தனபாலன் ஆகியோர் கவிதை பாடுவார்கள்.

கலைஞர் பொன் பத்மநாதனின் நன்றியுரையாற்றுவதுடன் பாரதி கலா மன்ற காப்பாளர் திருமதி செல்லையா மரிய நவரோஜ் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் வழங்குவார்.


ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

வெளியக பட்டப்படிப்புக்கள் மற்றும் நீடிக்கப்பட்ட கற்கைநெறிகள் அலகு

**விஞ்ஞானமாணி வியாபார கற்கைநெறிகள் (பொது) வெளியக பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுமதித்தல் - 2020**

2020 நவம்பர் 2 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக வெளியக பட்டப்படிப்பு மற்றும் நீடிப்பு கற்கைநெறிகள் அலகினால் வழங்கப்படும் விஞ்ஞானமாணி வியாபார கற்கைநெறிகள் (பொது) வெளியக பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பட்டப்படிப்பு கற்கைநெறி:**
முகாமைத்துவ கற்கைநெறிகள் மற்றும் வர்த்தக பீடத்தினால் வழங்கப்படும் விஞ்ஞானமாணி வியாபார கற்கைநெறிகள் (பொது) வெளியக பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்.

- மொழிமூலம் : சிங்களம்/ஆங்கிலம்
- காலப்பகுதி : 3 வருடங்கள்
- கற்கைநெறிக்கான மொத்தக் கட்டணம் (மூன்று வருடங்களுக்கானது) : 185,000 ரூபா. மூன்று தவணைகளில் செலுத்தப்படலாம்.

**விண்ணப்ப செயற்பாட்டிற்காக தேவைப்படும் தகைமைகள்:**

01. பின்வரும் பாடங்கள் ஒன்று அடங்கலாக ஒரே அமர்வில் க.பொ.த. உயர்தர பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று 'சி' சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| கணக்கிடல் | பொருளாதாரம் |
| வியாபார கற்கைநெறிகள் | உயர் கணிதம் |
| வியாபார புள்ளிவிபரம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் |
| இணைந்த கணிதம் | கணிதம் |

02. விண்ணப்பங்களை மூடும் திகதியன்று வயதானது 18 இற்கு குறையாமலும் 35 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**அனுமதிக்கான தெரிவு செய்தல்:**
மேலேயுள்ள கற்கைநெறியின் அனுமதிக்காக வரையறுக்கப்பட்ட மாணவர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்படவிருப்பதனால், எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்கு மேலாக விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை இருப்பின், திணைக்களத்தினால் தீர்மானம் செய்யப்படும் பரீட்சையொன்றின் மூலம் அல்லது வேறேதாவது முறைமை மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான நடைமுறை:**

01. 1300 ரூபாவை பின்வரும் கணக்கிலக்கத்திற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையினூடாகவும் வரவு வைப்பதுடன் விண்ணப்பமானது www.external.sip.ac.lk என்ற இணையதளத்தினூடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும் (விண்ணப்பதாரியானவர் தம்முடன் பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை வைத்திருப்பது பொருத்தமாகும்)
02. கணக்கிலக்கம்: 072010007127
03. உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமானது 2020 நவம்பர் 2 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் ஆவணங்களுடன் உதவிப் பணிப்பாளர், வெளியக பட்டப்படிப்பு மற்றும் நீடிக்கப்பட்ட கற்றைநெறி அலகு, த.பெட்டி இல. 10, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொட என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
   I. வங்கி பற்றுச்சீட்டு (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை வைத்துக் கொள்ளவும்)
   II பிறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.
   III கல்விசார் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள்.
   IV தேசிய அடையாள அட்டையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.

**(குறிப்பு: தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''விஞ்ஞானமாணி வியாபார கற்கைநெறிகள் (பொது) வெளியக பட்டப்படிப்பு" என குறிப்பிடப்படல் வேண்டும்.**

**விண்ணப்பதாரிகளுக்கான பணிப்புரைகள்:**

01. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக வெளியக பட்டப்படிப்பு மற்றும் நீடிப்பு கற்கைநெறிகள் அலகின் (EDECU) கடமைகள் மற்றும் பொறுப்புக்களை கையேற்பதற்கு/நிகழ்த்தப்படுவதற்கான இணைக்கப்பட்ட அலகு அல்லது நிறுவகமோ இல்லை. விண்ணப்பதாரியே (ஆண்/பெண்) விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும். மூன்றாம் சாராரினால் அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு EDECU எவ்வித பொறுப்பையும் ஏற்காது.
02. விண்ணப்பக் கட்டணமான 1300 ரூபாவானது மீளளிக்கப்படாததாகும்.
03. தாமதமான மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
04. மேலதிக விபரங்களுக்கு www.external.sjp.ac.lk என்ற இணையதளத்தை பார்வையிடவும்.
05. இந்த பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2019 பெப்ருவரி 10 ஆம் திகதி மற்றும் 2019 ஜுலை 7 ஆம் திகதியன்றும் பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்களுக்கு விண்ணப்பித்தவர்கள் மீளவும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

**பதிவாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.**

**விசாரணைகள்:**
**வெளியக பட்டப்படிப்புக்கள் மற்றும் நீடிக்கப்பட்ட கற்கைநெறிகள் அலகு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில, நுகேகொட.**
**தொலைபேசி: 112801481, 113132496, 112758233.**
**மின்னஞ்சல்: ext.certi@sjp.ac.lk**


# "அக்ஷரா" இசைக் குழுவின் வசந்த கானங்கள் இசை நிகழ்வு

கவிக்கமலின் "அக்ஷரா" இசைக் குழு வழங்கும் வசந்த கானங்கள் இசை நிகழ்வு இன்று 27ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு கொழும்பு 13, ஜிந்துப்பிட்டி, விவேகானந்தா சபை மண்டபத்தில் நடைபெறும். இலங்கையின் முன்னணிப் பாடகிகள் பலர் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வில் பாடும் நிலாவின் தெவிட்டாத பாடல்கள் பல நம் நாட்டு இளம் பாடகா்களால் பாடப்படவுள்ளன.

சமூக சேவையாளர் பிச்சை கிருஷ்ணா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பஸ்லி ரூமி சென்டரின் உரிமையாளரான பஸ்லி ரூமி முன்னிலை அதிதியாகவும் ஐடிஎம் நேஷன் கெம்பஸின் நிர்வாக இயக்குனர் கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகன் பிரதம அதிதியாகவும் தொழிலதிபர் லயன் சதீஸ் நடராஜா கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வார்கள். இதில் வணப்பிதா அருட்தந்தை கலாநிதி எஸ்.சந்திரகுமாரும் கௌரவ அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

எண் கணித வாஸ்துகலை நிபுணர் மருதை பத்மராஜன், ஆசிரியர் ஏ. எம். சந்திரசேகர், ஜோதிடர் குருசாமி எஸ். யுவராஜா சமூக சேவையாளர் பழனிசாமி, சமூக சேவகி கௌசல்யாதேவி கோவிந்தப்பிள்ளை, நிவ் ரத்னமஹால் உரிமையாளர் சுந்தர், கவிஞர் தனபாலன், தொழிலதிபர்களான ஏ. கதிரேசன், ஜெ. ஓவியநாதன், மொஹமட் மூஸீன், ஏ. என். கோகுலன், சட்டத்தரணி ரஷித் எம். இம்தியாஸ், கலைஞர் பொன் பத்மநாதன், கொழும்பு நகர சபை உறுப்பினர் ஜோசப் பெர்ணான்டோ ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்து கொள்வார்கள். இந்நிகழ்வில் கலைஞர்கள் பலர் விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இங்கு எமது நாட்டு கலைஞர்கள் பாடிய பாடல்கள் அடங்கிய இறுவெட்டும் வெளியிட்டு வைக்கப்படும். தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், தினக்குரல் பத்திரிகை பாரதி ராஜநாயகம், வீரகேசரி பத்திரிகை நிறைவேற்று அதிகாரி செந்தில் நாதன், சிரேஷ்ட கலைஞர்களான ராதா மேத்தா, கே. ஈஸ்வரலிங்கம், திருமதி ஜீவா ராம், உவைஸ் செரீப், சுருதி பிரபா, பசால் ஜின்னாஹ், கவிஞர்கள் பிரேம்ராஜ், நஜ்முல் ஹுசைன் ஆகியோர் ஊடக அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

## சன்மார்க்கத்துறையோடு இரத்தினக்கல்... (18ஆம் பக்க தொடர்)

இரத்தினக்கல் வர்த்தகம் மற்றும் காணி, வீடு விற்பனையில் தரகராகவும் விடா முயற்சியோடு ஈடுபட்டு உழைக்கவும் செய்தார்.

அதிலும் நீதி, நேர்மை என்று பேணுதலுடனே செயற்பட்டார். அதனால் அத்துறையிலும் அல்லாஹ்வின் 'பரக்கத்'தும் கிடைத்து சிறந்த வர்த்தகராகவும் விளங்கினார்.

இவரது நற்பண்புகளால் தொழிலதிபர்கள், செல்வந்தர்கள் போன்றோரது சகவாசமும் நல்லுறவும் இவரை வந்தடையவே செய்தன.

இதனால் பூகொட பள்ளிக்கு பளிங்குக் கல் பதித்தல், தக்கியா நிர்மாணப் பணிகள், புனரமைப்பு என்ற தேவைகளுக்கெல்லாம் தனக்கு அறிமுகமான வசதிபடைத்தவர்களின் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் முன் நின்று பங்களிப்புச் செய்துள்ளார்.

இதே போன்று தமது சகோதர மக்களுக்கு வீடமைப்பு உள்ளிட்ட தேவைகளையும் பரோபகாரிகளது அனுசரணையோடு செய்து கொடுப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ள போது நலன் விரும்பியாக தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.

காதிரிய்யா தரீக்காவில் ஆர்வமிக்க முரீதீன்களில் ஒருவராக இருந்து, அஹ்லுஸ் ஸுன்னத் ஜமாஅத் கொள்கையில் இறுதி வரையும் உறுதியாக இருந்துள்ளார். இதனால் தரீக்காக்களது ஷெய்குமார்களது நல்லபிமானத்திற்குள்ளானவர்களாகவும் விளங்கினார்.

ஷெய்குமார்களோடு நெருங்கிய தொடர்பு வைத்து அவர்களது துஆ பரக்கத்தையும் பெற்றவராகவும் உள்ளார்.

தரீக்காவின் சகல நடவடிக்கைகளிலும் அயராது ஒத்துழைப்பும் ஈடுபாடும் காட்டி இஹ்வான்களின் நன்மதிப்புக்குரியவராகவும் திகழ்ந்துள்ளார். எனக்கும் (கட்டுரையாளர்) மர்ஹூம் கலீலுர் ரஹ்மான் மௌலவிக்கும் இடையே சுமார் 35 – 40 வருடங்கள் நெருங்கிய தொடர்புள்ளதாலேயே அவரது குணவியல்புகளை நன்குணர்ந்தவன் என்ற வகையில் அவர் வபாத்தாகி எதிர்வரும் சனிக்கிழமை அவரது 40 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நினைவு கூருகிறேன்.

57 ஆவது அகவையுடன் இவ்வுலகை விட்டும் பிரிந்த அவரது இழப்பு சமயத்திற்கும் சமூகத்திற்கும் – ஏன் நாட்டுக்கும் பேரிழப்பாகும்.

இவர் கலீபத்துல் ரிபாயி ஏ. ஸீ. அஹ்மத் பளீல் காஸிமியின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாருக்கு சுவனபதியில் உயரிடம் கிடைக்க அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

## வெறும் அதிகாரத்திற்காக... (7ஆம் பக்க தொடர்)

வைத்தியசாலைகளை இனரீதியாக தரப்படுத்த முடியாது எல்லா நோயாளிகளும் சிறந்த பரிகாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற உயர் நோக்கில் சுகாதார பணியாளர் நியமனங்களை பாரபட்சமின்றி வழங்கியுள்ளேன். பௌதீக வள குறைபாடுகள் சமாந்தரமாக தீர்க்கப்பட்டுள்ளன. என்னை தமிழ் மக்கள் ஆதரித்தார்கள். என்னுடைய கனிவான பேச்சிலும்,என் நிர்வாக திறமைகளையும் மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து தொழிற்சந்தையை உருவாக்குவதற்காக கைத்தொழில் பேட்டைகள் என்னால் உருவாக்கப்பட்டுள்ளன. ஏறாவூரில் தமிழ் ,முஸ்லிம் இளைஞர் யுவதிகள் அவ்வாறு இணைந்து தொழில் புரிகின்றனர். திருகோணமலை சீதனவெளி பகுதியிலும், சம்மாந்துரையிலும் என்னால் அமைக்கப்பட்ட தொழிற்பேட்டையை மீள ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுத்து அனைத்தின மக்களும் தொழில்புரியக்கூடிய இடமாக மாற்றிட நடவடிக்கைகள் எடுப்பேன்.

**கேள்வி தற்போது கிழக்கில் அரசினால் அமைக்கப்பட்டுள்ள தொல்பொருள் செயலணி குறித்த உங்கள் பார்வை என்ன?**

**பதில்** செயலணியோ அல்லது ஆணைக்குழுக்களோ அமைக்கப்படுவது மக்களின் பிரச்சினைகளை கண்டறிந்து நியாயமான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்காகத்தான். ஆனால் கிழக்கில் பெரும்பான்மையினராக தமிழர்களும்,மஸ்லிம்களும் வாழும் போது சிங்கள் சகோதர பெரும்பான்மை இன அதிகாரிகளை இங்கே நியமிப்பதில் எந்த சௌஜன்யம் தோற்றுவிக்கப்படவுள்ளது. தற்போதைய நிலையில் அதனை கைவிட்டுச் செல்லும் நிலையையே அரசு கடைப்பிடிக்க வேண்டும். உலக ஆட்சி அதிகாரங்கள் சகலமக்கள் நலன்பேணுதலாக இருத்தல் வேண்டும்.

# இலங்கை சமூக பாதுகாப்புச் சபை

நிதியமைச்சு

சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு, அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

# வெற்றிடங்கள்

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் நிரந்தர பதவிகளுக்காக அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பொது முகாமையாளர் பதவி - 01

**தகைமைகள் (கீழுள்ள தகைமைகள் 1 அல்லது 2)**

1. முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகம்/ வணிகம்/ பொருளியல்/ சட்டம் ஆகிய பாடத்துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றிருத்தல்.

   **அத்துடன்**

   குறித்த துறையில் பட்டப்பின் படிப்புப் பட்டம் (Masters) பெற்றிருத்தல்/ பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறைக்குப் பொருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தில் கிட்டிய அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்தில் பதவியொன்றில் குறைந்த பட்சம் குறித்த துறையில் (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். (இதில் குறைந்த பட்சம் 03 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாக இருத்தல் வேண்டும்.)

2. பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறைக்கு பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   அரசாங்கத்தில் அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்திலான பதவியொன்றில் குறைந்த பட்சம் குறித்த துறையில் (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். (இதில் குறைந்த பட்சம் 03 வருட சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாக இருத்தல் வேண்டும்.)

**மேலதிக தகைமைகள்:**

1. ஆங்கில மொழியில் கடமையாற்றும் ஆற்றல்.
2. கணனி பாவனை பற்றிய அறிவு மற்றும் அது பற்றிய தொழில்சார் கல்வித் தகைமைகள் இருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**

**தகைமைகள் (கீழ்க்காணும் 1 அல்லது 2ஐ பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.)**

1. மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தரத்தில் (HM) 03 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயதெல்லை:**

35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு:** 2016.04.25ஆம் திகதிய 02/2016 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைவாக 2020 முதல் பதவிக்குரிய சம்பள விகிதம்
HM1-3 - 2016 ரூ. 86,865 - 15x2,270 - 120,915 ஆகும்.
சேர்த்துக்கொள்ளும் சம்பள அளவு ரூ. 86,865.00 மற்றும் அரசினால் அனுமதிக்கப்பட்ட வேறு கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**தகைமைகள் மற்றும் வேறு கொடுப்பனவுகள்:**

**போக்குவரத்து வசதிகள்:** சாரதியுடன் ஒதுக்கப்பட்ட வாகனம் மற்றும் மாதாந்த எரிபொருள் 150 லீட்டருக்குச் சமமான கொடுப்பனவு அல்லது வாகன கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவு உரித்தாகும்.

**தொலைபேசி வசதிகள்:** மாதாந்த அலுவலக தொலைபேசி, கையடக்க தொலைபேசி மற்றும் வீட்டிற்கு ரூ. 10,000.00 தொகையும் உரித்தாகும்.

அரசினால் அனுமதிக்கப்பட்ட வேறு கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

## உதவி பொது முகாமையாளர் (நிதி) - 01

**தகைமைகள்: வெளி விண்ணப்பதாரர்கள் (கீழ்க்காணும் 1 அல்லது 2)**

01. கணக்கியல்/ முகாமைத்துவம்/ வணிகமாணி/ வியாபார முகாமைத்துவம்/ அரச முகாமைத்துவம் ஆகிய பாடத்துறைகளில் பெற்றுக்கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதைப் பெற்றிருத்தல்.

    **மற்றும்**

    பட்டம் பெற்ற பின்னர் பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறையில் குறைந்த பட்சம் ஒரு வருட (01) அனுபவம் பெற்றிருத்தல்.

02. இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தில் (ICASL) தகுதிச் சான்றிதழ் அல்லது மத்திய பரீட்சையில் சித்தியடைந்த சான்றிதழ்/ (CIMA/ACCA)இல் தொழில்சார் I மட்டத்தில் சித்தியடைந்த சான்றிதழ் அல்லது இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா சான்றிதழுடன் குறித்த தகைமையைப் பெற்றபின் கணக்கியல்/ கணக்காய்வுத் துறையில் குறைந்த பட்சம் 01 வருட அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**

**தகைமைகள் (கீழ்க்காணும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

   **அல்லது**

2. கனிஷ்ட முகாமையாளர் (JM) சேவை தரத்தில் குறித்த துறையில் குறைந்த பட்சம் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயதெல்லை:**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு:** 2016.04.25ஆம் திகதிய 02/2016 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைவாக 2020 முதல் பதவிக்குரிய சம்பள விகிதம்
MM1-1 - 2016 ரூ. 53,175 - 10x1,375 - 15x1,910 - ரூ. 95,575.00 ஆகும்.
சேர்த்துக் கொள்ளும் போது சம்பள அளவு ரூ. 53,175.00 ஆகும்.

**வசதிகள் மற்றும் வேறு கொடுப்பனவுகள்:**

**தொலைபேசி வசதிகள்:** மாதாந்த அலுவலக தொலைபேசி, கையடக்க தொலைபேசி மற்றும் வீட்டிற்காக ரூ. 5,000.00 தொகையும் உரித்தாகும்.

**வேறு கொடுப்பனவுகள்:** அரசினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

## இணைப்பதிகாரி பதவிகள் - 08

**தகைமைகள்:**

சந்தைப்படுத்தல்/ முகாமைத்துவம்/ வணிகம்/ பொருளியல்/ புள்ளிவிபரவியல்/ சமூக விஞ்ஞானம்/ சமூக வேலை/ சனசமூக விஞ்ஞானம் உள்ளடக்கிய பாடத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**வயதெல்லை:**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்.
உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு:** 2016.04.25ஆம் திகதிய 02/2016 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைவாக 2020 முதல் உங்கள் பதவிக்குரிய சம்பள விகிதம்
MA-3 - (2016) ரூ. 32,200 - 10x445 - 11x660 - 10x730 - 5x750 - 54,960 ஆகும்.
சேர்த்துக் கொள்ளும் போது சம்பள அளவு ரூ. 32,200.00 ஆகும்.

(**கவனிக்கவும்:** கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, அநுராதபுரம், பொலன்னறுவை, வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.)

## பொது நிபந்தனைகள் (சகல பதவிகளுக்கும்)

**சகல விண்ணப்பதாரிகளும்**

- ❖ இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
- ❖ பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுவதற்கு தேவையான உடல், உள தகைமையைப் பெற்றிருத்தல்.
- ❖ சிறந்த, நல்லொழுக்கம் உடையவராக இருத்தல்.
- ❖ சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் அல்லது சிங்களம்/ தமிழுடன் ஆங்கில மொழிகளில் கடமையாற்றும் ஆற்றல் மற்றும் கணனி பாவனை பற்றிய அறிவுடனான விண்ணப்பதாரிகள் விடயத்தில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- ❖ தகைமைகளுடன் சம்பந்தப்பட்ட சகல சான்றிதழ்களின் பிரதிகளை சமாதான நீதவான் ஒருவரால் உண்மைப் பிரதியென உறுதி செய்து விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்.
- ❖ கூடிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்காக முன்னுரிமை வழங்கி நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.
- ❖ சிங்கள அல்லது தமிழுடன் ஆங்கில மொழியில் முன்னிலைப்படுத்தல் (Power Poin Presentations) கலை வெற்றிடமாக மற்றும் கவர்ச்சிகரமாக முன்வைக்கக்கூடிய விண்ணப்பதாரிகள் விடயத்தில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- ❖ 2020ஆம் ஆண்டில் அரச பயிலுநர் பட்டதாரிப் பயிற்சி பெற்ற விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. 2020ஆம் ஆண்டில் பயிற்சி பெறவில்லை என்பதை சத்தியக் கடதாசி மூலம் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

இப்பதவி நிரந்தரமானது. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். மூன்று வருட தகுதிகாண் காலத்தின் பின் சேவை நிரந்தரமாக்கப்படும்.

தம்மைப் பற்றி விசாரிக்கக்கூடிய உறவினரல்லாத இருவருடைய பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் உங்களால் தயாரிக்கப்படும் விண்ணப்பத்தை தகைமைகளுடன் சம்பந்தப்பட்ட குறித்த சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் 2020.10.12 இற்கு முன்னர் “தலைவர், இலங்கை சமூக பாதுகாப்புச் சபை, இல. 18, ராஜகிரிய வீதி, ராஜகிரிய” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது தலைமையகத்தின் நிர்வாகப் பிரிவிற்கு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். தற்போது அரச துறையில் அல்லது நியதிகள் நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற விண்ணப்பதாரிகள் நிறுவனத் தலைமையின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

மேலதிக தகவல்களை **www.ssb.gov.lk** இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சிரேஷ்ட விரிவுரையாளர் சமன் ஹந்தராகம**
**B.A. (Special) Sociology (Hons) (CMB), MA in Sociology (CMB), CTHE (CMB)**
**தலைவர்,**
**இலங்கை சமூக பாதுகாப்புச் சபை,**
**“சமாஜ ஆரக்ஷன பியஸ”**
**இல. 18, ராஜகிரிய வீதி, ராஜகிரிய.**
**2020.09.27**



# வாரமஞ்சரி சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 129 டயர்கள், டியூப்புகள்

JCB மோட்டார் கிறேடர் புதிய மற்றும் ரிபில்ட் டயர், டயர் டியூப், /போர்க்லிப்ட் டயர், கல்டயர், காற்று டயர் (ஹ்லங் டயர்) 500x8, 600x9, 700x12, 28x9x15 இறக்குமதி செய்ப வர்கள். 155, கிறவுன் டயர், கொழும்பு 14. 0773134060, 0112344524. 057123

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

பண்டாரகம நகரில், பாணந்துறை இரத்தினபுரி (A8) பிரதான பாதைக்கு முகப்பாக 46 பேர்ச் வியாபார காணி மற்றும் குளிரூட்டப்பட்ட இரு மாடி கட்டிடத்துடன் இரு தனியார் கம்பனிகளில் சகல வியாபார நடவடிக்கைகளுடன் விற்பனைக்கு. மூன்று சுற்று மின்சாரம் ( 60A) அதிவேக வீதிக்கு 250m உரிமையாளர் வெளிநாடு செல்வதால் உடன் விற்பனைக்கு. 077 3412367. 058618

### 211 விதைகளும் செடிகளும் தேவை

செங்காந்தல் மலர் (கார்த்திகைத் தாய்) நன்கு உலர்நத விதைகள் கொள்வனவு செய்யப்படும். ரொக்கப்பணக் கொடுப்பனவு தொடர்பு 0779795349 053160

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

கொழும்பில் அமைந்துள்ள பிரதான புத்தக கம்பனிக்கு ஆண்/பெண் விற்பனையாளர்க ள் தேவை. சம்பளம் ஆண் 35000/- , பெண் 20,000/- வயதெல்லை 18-35 இடைப்பட்ட, அழையுங்கள் 07 73 3 057 9 1/ 2 - 3 20139 ருஹுனு ஸ்டேஷனரி, LG 180/14, பீபள்ஸ் பார்க் கட்டிடம், கொழும்பு 11. 058426

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

புறக்கோட்டை கடிகார விற்பனை நிலையமொன்றில் கைக்கடிகாரம் திருத்துவதற்கு தொழில்நுட்ப வல்லுநர் ஒருவர் தேவை. அழைக்கவும். 0776576977. 058345

### 313 வெற்றிடங்கள் அச்சடித்தல்

கொழும்பு ஆமர் வீதியில் அமைந்துள்ள அச்சகம் ஒன்றிற்கு KORD மெஷின் மைண்டர் ( Operator) ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். தொடர்பு கொள்ள 0777361291 057531

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கொழும்பு வீட்டில் தங்கி வேலை செய்ய, இரண்டு பெண்கள் தேவை. சமையல் மற்றும் சுத்திகரிப்பு வேலைகள். வயது 23-42 சம்பளம் 35,000/-. 075-6270453. 058076

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

சைனீஸ், கொத்து, கோக்கிமார் வெயிட்டர், ஹெல்பர் உடன் தேவை. கம்பஹா 071-2188684, 072-5739381. 057826

பாணந்துறை பண்டாரகம ஹோட்டலுக்கு உணவு பரிமாற, பார்சல் ஹெல்பர்க ள், வெயிட்டர் 35, 000 / கூடுதல் சம்பளம், வசதிகள் தங்குமிடம் 0756644386. 058159

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

ஆனமடுவ கால்நடைவளர்ப்பு மற்றும் மரக்கறிப் பண்ணையொன்றில் தங்கிப் பணியாற்றுவதற்கு 50 வயதிற்கு குறைந்த ஆண்கள் ரூபா 1500.00, பெண்கள் ரூபா 900.00 அல்லது தம்பதிகள் தேவை. தங்குமிட வசதி உண்டு. உணவு வழங்கப்படமாட்டாது. தொ.பே இல 0771539313. 058394

### 325 தொழில்துறை பொது

இலங்கையின் முன்னிலை உற்பத்தி ஏற்றுமதி கம்பனியான ஜேலங்கா தனியார் நிறுவனத்தின் குருநாகல் தொழிற்சாலையில் உற்பத்தி உதவியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். மேலதிக தகவல்களுக்கு 037 2238148. 058148

சேவை, வசதிகளை வழங்கும் இலங்கையின் முன்னணி சர்வதேச கம்பனியான NCW Holdings நிறுவனத்திற்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்காக உடனடியாக ஆண்/ பெண் ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். சுத்திகரிப்பு உதவியாளர் (ஆண்/ பெண்) (ரூ.30, 000.00 முதல் அதற்கு மேல் சம்பளம்) ஆண்/ பெண் பரிசோதகர்கள் (ரூ.40,000.00 முதல் கூடுதல் சம்பளம்), பாதுகாப்பு அ திகாரிகள் (ஆண்/பெண்) (ரூ. 35,000.00 முதல் கூடுதல் சம்ப ளம்) தொடர்புகள் இல.177/1, நாவல வீதி, நுகே கொ டை . தலைமையகம் -0114693377, மேஜர் துஷான் 0761377873, குமாரசிங்ஹ 0763605555. 057863

த மி ழில் இருந்து சிங்களத்துக்கும் சிங்களத்திலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்க்கக்கூடிய இரண்டு மொழிகளிலும் டைப் பண்ணக்கூடிய மொழி தேர்ச்சியுடைய ஆண் ஒருவருக்கு தலைநகரில் சிறந்ததோர் வாய்ப்பு. ஆங்கில அறிவு மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும். அலுவலக நேரம் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை. பகல் ஒரு மணியிலிருந்து 5 மணி வரை பகுதிநேரமாகவும் கடமையாற்றலாம். 0713686609 எனும் வட்ஸ்அப் இலக்கத்துக்கு முழுமையான தகவல்களை அனுப்பவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 057820

ஸ்டார் ஏஜென்சிஸ் நிறுவனத்தின் கீழ் திருகோணமலை டோக்கியோ சீமென்ட் நிறுவனத்தில் இருந்து இலங்கை தீவு முழுவதும் சீமென்ட் போக்குவரத்துக்கு 10 வ்ஹீல்/ 06 வ்ஹீல் மற்றும் ஸ்கேமேல் லொறி தேவை . 2020 செப்டெம்பர் 28, 29 மற்றும் 30 திகதி க்குள் திருகோணமலை எங்கள் அலுவலகத்தில் புதிய லொறி பதிவு நடக்கும். கவர்ச்சிகரமான கொடுப்பனவுகள் கிடைக்கும். 0773-959397/ 0771-095507/ 0771-095500. ஸ்டார் ஏஜென் சிஸ், எ ண். 055, மிட்சு சந்தி, கோப்பாய், சீனா துறைமுகம், திருகோணமலை. 057822

07660 20598, 071 463500 7 நாடளாவிய ரீதியில் உள்ள எமது கம்பனியின் வலை யமைப்பில் சில கிளைக ளுக்கு தமிழ், சிங்களம் கதைக்கக்கூ டிய 1830 வயதிற்கிடைப்பட்ட இளைஞர், யுவதிகள் சேர்த்துக்கொள்ளப்படுவர் முழுமையான தங்குமிட வசதி இலவசம். அத்துடன் அடிப்படை சம்பளத்துடன் ரூ.35, 00048,000 வரை உரித்தாகும். 057825

## காணி/தோட்டம்

### 615 வீடு சொத்து சேவைகள்

வீடுகள், காணிகள் வாங்க விற்கக்கூடியவர்களுக்கு குறைந்த விலையில் வாங்க, விற்க உதவ முடியும். வீடுகள் வாடகைக்கு தேவையானோரும் தொட ர்பு கொள்ளவும். 0775141889, 0778779686. 058059

0112920111, 03 படுக்கையறைகள், மண்டபம், பென்றி, 01 குளியலறை, வராண்டாவுடன் வீடு ரூ. 35 லட்சம் ஸ்லெப் உ டன் அ ல்லது கூரை முடித்துக் கொடுக்கப்படும். காணி பரிசீலனை மற்றும் வரைபடங்கள் இலவசம். 0773509751, 0711960250. 058161

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

பொரலஸ்கமுவ, 25 வருடங்கள் பழைமை வாய்ந்த வீட்டுடன் கூடிய 9.25 பேர்ச் முக்கோண வடிவிலான காணி விற்பனைக்கு. பொரலஸ்கமுவ சந்திக்கு 5 நிமிட நடை பயணம். தெஹிவளை வீதிக்கு 2 நிமிட நடை பயணம். 11 அடி பிரத்தியேக வீதி, அமைதியான சூழல், 3 படுக்கையறை, 1 கு ளியலறை, அமரு ம் அறை, பகு தியளவில் டயில் பிடிக்கப்பட்டது. சமையலறை, பணி யா ளர் அறை + குளியலறை , தோட்டம் மற்றும் வாகனத்திற்கான பார்கிங். வீ ட்டில் திருத்த வேலைகள் உள்ளன. வீடு இருக்கும் அதே நிலையில் விற்கப்படுகின்றது. ரூ. 18 மில்லியன் (பேர்ச் ஒன்று ரூ. 1.75 மில்லியன் + வீட்டிற்கு ரூ. 1.8 மில்லியன்) சிக்கலற்ற உறுதி மற்றும் Title கண்டிப்பாக தரகர் வேண்டாம். அழையுங்கள் 0777330333/ 0112517110. 056535

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

ஜாஎல நகர மத்தியில் 28 பேர்ச் காணி விற்பனைக்கு. ஒரு பேர்ச் 14 இலட்சம். தரகர்கள் தேவையில்லை. 0713726076, 0778160206. 058627

நீர்கொழும்பு கொச்சிக்கடை மடம்பெல்ல பஸ் பாதைக்கு முகப்பாக 60 பேர்ச் பரப்புள்ள சிறந்த காணி உடன் விற்பனைக்கு. (கூடிய விலைக் கோரிக்கைக்கு) 50 வருடத்திற்கு மேற்பட்ட, சிக்கலற்ற உறுதி, மூன் று சுற்று மின்சாரம் தொடர்புகள் 070 3614151. 058127

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட நீர்கொழும்பு 15.5 பேர்ச் வீட்டுடன் காணியொன்று விற்பனைக்கு. விலைமனுக்களைப் பரிசீலித்தல் , விஷேட ஆதன முகாமைத்துவ பிரிவு, இல.242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. முகவரிக்கு 2020.10.11 அன்று அல்லது அதற்கு முன்னர் விசாரிக்கவும். 10 மில்லியனுக்கு கூடிய கேள்விகள் மாத்திரம் கவனத்திற்கொள்ளப்படும். 0771542693. 058179

### 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

மதுரங்குளியில் நேஷன் ட்ரஸ்ட் வங்கியால் சுவீகரிக்கப்பட்ட 304.20 பர்ச்சு காணி விற்கப்படுவது தொடர்பான விலைமனுக்கோரலை 2020.10.27 திகதிக்கு முன்னர் விசேட சொத்து முகாமைத்துவப்பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஆகக்குறைந்த விலைமனு 5 .7 மில்லியன் 077154 2 693, 0772256468. 057004

### 624 வீடு சொத்து அநுராதபுரம் மாவட்டம் விற்பனைக்கு

ராஜாங்கனை நீர்த்தேக்கத்திற்கு அருகில் செழிப்பான தென்னை ஒரு ஏக்கருடன் 6300 சதுர அடி இருமாடி சுற்றுலா இல்லம் விற்பனைக்கு. 0711503005. 058125

### 634 வீடு சொத்து மட்டக்களப்பு மாவட்டம் விற்பனைக்கு

மட்டக்களப்பு பிரதான திருமலை வீதியில் பிள்ளையாரடி பாடசாலைக்கு முன்பாக 101P காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு 0778852009 057741


### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

இல. 91/16C, Midland Watarappola Road, Mt.Lavinia மாடி வீடு வாடகைக்கு. 4 அறைகள் மற்றும் 3 அறைகள் இணை க்கப்பட்ட குளியலறைகளுடன், 1 குளிரூட்டப்பட்ட படுக்கையறை, பெரும் சமையலறை, 1 வேலை யா ட்கள் அறை உடன் கூடிய குளியலறை, விரிவான வசிப்பறை மற்றும் மொட்டை மாடி உடனான வாகன தரிப்பிடம். தொடர்புகளுக்கு 0777636349/ 0770888662. 057764

கல்கிஸ்ஸ 2 படுக்கையறைகள் கொண்ட மேல் மாடி முழுதும் டயில் பிடிக்கப்பட்ட, சந்திக்கு சமீபமாகவுள்ள அனெக்ஸ் வாடகைக்கு. தொ.பே. 0776160946. 057128

### 654 வீடு சொத்து இரத்தினபுரி மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

இரத்தினபுரி புதிய மரக்கூட்டுத்தாபனத்திற்கு முன்னால் எந்த வியாபாரத்திற்கும் பொருத்தமான கடை அறை, மேல் மாடி வீட்டிற்கும் பொருத்தமானது. மாகாணசபை, கச்சேரி, சீவலி மற்றும் குமார கல்லூரி அருகில் 071-4998300, 0719000569. 058126

BE BETTER INFORMED!
தினமிண Dinamina
Daily News
தினகரன் Thinakaran
News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!

AVAILABLE AT
LAKE HOUSE





# பெண்களுக்காக போராடும் இந்திய ரோஸ் இயக்கம்

பெண்களை இரவு பகலாக பாலியல் துஷ்பிரயோகம் செய்துகொண்டு, அவர்களை அடிமைகளாக நடத்தும் சமூகத்தில் பெண்களே தங்களது கைகளில் தடிகளை எடுத்துக் கொண்டு, பெண்களை துஷ்பிரயோகம் செய்தவர்களை ஓட ஓட விரட்டினால்....?

நிச்சயமாக துஷ்பிரயோகம் குறைந்து விடும்.

ஆம் இதை நாங்கள் சொல்லவில்லை. இந்தியாவின் “குலாபி கேங்” அல்லது “ரோஸ் இயக்கம்”என்று கூறப்படுகிற அமைப்பின் உறுப்பினர்கள்;

“ஆமாம் நாங்கள் துஷ்பிரயோகம் செய்தவர்களை அடிக்கிறோம், நாங்கள் அவர்களை கண்டுபிடித்து, நீலம் பூக்குமளவுக்கு தடியால் அடிப்போம். அதன் பின் வேறு பெண்களிடம் அவர்கள் பிரச்சினை செய்வதற்கு சிந்தித்து கூட பார்க்க மாட்டார்கள்.” இப்படி ரோஸ் இயக்க தலைவி குறிப்பிடுகிறார்.

### குக்கிராமத்துப் புரட்சி

2006 ஆம் ஆண்டு இந்தியாவின் உத்திர பிரதேச மாநிலத்தில் உள்ள புந்தல்கண்ட் என்னும் பிரதேசத்தில் பதவுசா என்கிற கிராமத்தில் குலாபி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு நான்கு தசாப்தங்களாக வாழ்ந்து கொண்டிருந்த, பால்தேவி என்கிற பெண்தான் கிராமவாசிகளையும் சேர்த்துக்கொண்டு ஒரு சிறிய அமைப்பாக இதனை ஆரம்பித்தார்கள். சித்திரவதை, பால்ய விவாகம், பெண்களின் கருக்கலைப்பு, வரதட்சணை கேட்டு சித்திரவதை செய்தல், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற பெண்களுக்கு தினமும் நிகழ்கின்ற சித்திரவதைகளுக்கெதிராக குரல்கொடுப்பதே இந்த அமைப்பின் நோக்கமாக அமைந்தது. வறுமையான, கல்வியறிவற்ற ஏராளமான பெண்கள் வசித்துவந்த அக்கிராமத்தில் இத்தகைய சித்திரவதைகள் பெறுகின.

தங்களது பிரதேசத்தில் பெண்களுக்கு எதிராக எங்கேயாவது அநீதி இழைக்கப்பட்டதாக அறிந்தால், அங்கு சென்று அப்பிரச்சினையில் தலையிட்டு அமைதியாக பேச்சுவார்த்தை நடாத்தி நியாயம் கிடைக்கசெய்ய முயற்சிப்பார்கள். அது சாத்தியப்படாத பட்சத்தில் அச்சம்பவத்துடன் தொடர்புடைய நபருக்கு தடியால் அடித்து தண்டனை வழங்கும் ஒரு வழக்கத்தை உருவாக்கிக்கொண்டார்கள்.

### ரோஸ் புடவையும், தடியும்

அந்த இயக்கத்தின் அங்கத்தவர்கள் ரோஸ் நிறத்திலான புடைவைகளை அணிந்ததால் அவர்கள் “குலாபி” என்றோ அல்லது “ரோஸ் இயக்கம்” என்றோ அழைக்கப்பட்டார்கள். அது தவிர தங்களை பாதுகாத்துக்கொள்வதற்கும் துஷ்பிரயோகம் செய்யும் நபர்களை தாக்குவதற்கும் தாம் எங்கு சென்றாலும் நீண்ட பலமான தடியை உடன் கொண்டு செல்வது ஒரு வழக்கமாக அமைந்தது.

ஆரம்பத்தில் ஒரு சில பெண்களால் தொடங்கப்பட்ட இந்த இயக்கத்தில் இன்று 400,000 க்கும் அதிகமான இயக்க உறுப்பினர்களைக் கொண்டிருப்பதாக கூறுகிறார்கள். இந்த இயக்கம் அந்த மாநிலம் முழுவதும் பரவியிருக்கிறது. இந்திய பணமதிப்பில் 500 ரூபாயை வருடாந்த சந்தாவாக செலுத்தி உறுப்புரிமையை பெற்றுக்கொள்ள முடியும். உறுப்பினருக்கு அடையாள



வழங்கும்போது மூங்கிலால் ஆன ஒரு தடியும் வழங்கப்படுகிறது.

இந்த இயக்கத்தில் உறுப்பினர்களாக இணையும் பெரும்பாலான பெண்கள் மிகுந்த வறுமையினால் துன்பப்பட்ட பின்னணியில் இருந்து வந்தவர்கள் என்பது மாத்திரமல்ல; அவர்கள் இந்தியாவி அடிமட்ட விளிம்புநிலை சாதியைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

### அநீதிக்கு எதிராக...

2006 ஆம் ஆண்டு உத்திரபிரதேசத்தில் உள்ள துஷ்கர என்கிற கிராமத்தில் வசித்து வந்த இளம்பெண்ணான ஜானகி தேவியும், அவரது காதலன் ஆனந்தகுமாரும் இருவீட்டாரின் எதிர்ப்புக்கு மத்தியில் திருமணம் செய்துகொண்டனர். அவர்கள் இருவரும் காதல் வாழ்க்கையை தொடங்கிய வேளை ஜானகி தேவி 15 வயதையும் ஆனந்தகுமார் இருபது வயதையும் தாண்டியுமிருந்தார். ஆனந்தகுமார் உயர்சாதியை சேர்ந்தவர் என்பதாலும், ஜானகி தேவியை விட வசதிபடைத்தவர் என்பதாலும் இக்காதலுக்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியது.

திருமணம் செய்துகொண்டு ஆனந்தகுமாரின் வீட்டில் வாழத் தொடங்கிய ஜானகிதேவி அங்கிருந்த உறவினர்களால் அதிகளவிலான சித்திரவதைகளையும் கொடுமைகளையும் சகித்தபடி வாழவேண்டியேற்பட்டது. இந்த சூழலில் அவள் கர்ப்பமடைந்ததால் நிலைமை இன்னும் மோசமடைந்தது. இதன் உச்ச கட்டமாக ஆனந்த குமாரின் பெற்றோர்கள் அவள்மீது பெற்றோலை ஊற்றி உயிரோடு தீ வைத்து கொன்றனர். அயலவர்கள் தீயை அணைத்து அவளை வைத்தியசாலைக்கு எடுத்து சென்றாலும் உயிர்தப்ப இயலவில்லை.

மிகுந்த வேதனையுடன் இருந்த ஜனாகிதேவியின் தந்தை காவல் நிலையத்திற்கு சென்று, இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது புகார் அளித்திருந்தாலும், அவரின் புகாரை காவல் துறையினர் பதிவு செய்ய மறுத்துவிட்டனர். ஆனந்தகுமாரின் குடும்பம் வசதிபடைத்த உயர்சாதி பின்னணியைக் கொண்டிருந்ததே அதற்குக் காரணம்.

இறுதியில் ஜானகிதேவியின் தந்தையான தினேஷ் பிரசாத் பாண்டே, அடுத்ததாக குலாபி இயக்கத்திடம் சென்றார். சந்தேகமின்றி பிரச்சினையை உறுதிசெய்துகொண்ட பின்; பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொண்ட குலாபி இயக்கத்தின் தலைவி; தினேஷ் பாண்டேயின் முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாவிட்டால் பெண்கள் பலருடன் வந்து பொலிஸை சுற்றிவளைப்பதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை எச்சரித்தார்.

“நாங்கள் வன்முறைக்கு ஆதரவு தருபவர்கள் அல்லர். ஆனாலும் சொல்லி விளக்க முடியாதவர்களும் இருக்கிறார்கள். என்று குலாபி இயக்கத்தவர்கள் கூறுகிறார்கள்.

### குலாபி இயக்கம் ஏன் அவசியம்?

2013 ஆம் ஆண்டில் இந்தியாவின் தேசிய குற்றபதிவுகள் திணைக்கள பதிவுகளின் படி 2013 ஆம் ஆண்டு மட்டும் 24,923 பாலியல் துஷ்பிரயோக குற்றங்கள் பதிவு செய்யபட்டுள்ளன. பதிவு செய்யப்படாத சம்பவங்களின் எண்ணிக்கை இதை விட அதிகமானதாக இருக்குமென அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இதை விட தினசரி நடக்கின்ற ஆட்கடத்தல், அசீட் வீசுதல், தாக்குதல்கள், படுகொலைகள் என்பனவும் அதிகம்.

இந்தியாவில் மத, கலாச்சார வழக்கத்தில் ஆண்களை விட பெண்கள் கீழான இடத்திற்கு தள்ளப்பட்டிருப்பதாலும் இந்தியாவில் தொலைதூர பின்தங்கிய கிராமங்களில் அறியாமையும் வறுமையும் அதிகமாக இருப்பதனாலும் பெண்கள் மீதான தாக்குதல்களும் துன்புறுத்தல்களும் அத்தனை கவனத்தில் எடுக்கப்படுவதில்லை.

இதன் காரணமாக பெருமளவு பெண்கள் இந்த இயக்கத்திடம் உதவிகோரி வருகின்றனர். இத்தகைய பெண்களின் துயர்துடைக்க உருவான அமைப்புக்களில் ஒன்றுதான் குலாபி இயக்கம்.


குற்றவாளிகளைத் தாக்கி வன்முறை ரீதியில் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதையும் அதற்கென்று நீதித்துறை இருக்கிறது என்றும் குலாபி இயக்கத்துக்கு எதிராக கருத்து தெரிவிக்கின்ற பலர் கூறுவதுண்டு.

ஆனாலும், சட்டத்திற்கும் பணியாமல், பெண்களை சித்திரவதைகளுக்குட்படுத்துவதற்கு எதிராக சட்டத்தை நிலைநாட்ட வேண்டியவர்கள் அச்சட்டத்தை சரியாக நிறைவேற்றாத நிலையில், பெண்களே தமது சுயபாதுகாப்புக்காக தடிகளையும் பொல்லுகளையும் கையில் எடுப்பதை எதிர்க்க எவருக்கும் தார்மீக உரிமை இல்லை.

2012ஆம் ஆண்டு நிஷ்தாஜைன் என்கிற நோர்வேஜியரும், டேனிஸ் நாட்டு படைப்பாளி ஒருவரும் சேர்ந்து “குலாபி கேங்” (Gulabi Gang) என்கிற தலைப்பில் ஒரு ஆவணப்படத்தை உருவாக்கினார்கள். 2014இல் இந்தியா முழுதும் இந்த ஆவணப்படம் காட்சிப்படுத்தப்பட்டதுடன் பல விருதுகளை வென்றது.

தமிழில்: எம்.பவித்திரா

# பெண் உடலைக் கட்டுப்படுத்தும் ஆணாதிக்க விதிகளை ஒழித்தலே பெண்ணுக்கழகு



அழகொன்றே பெண்ணின் அடையாளம் என்ற கருத்து பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைபெற்று விட்டது. அதன் விளைவாக அக்கருத்துப் பள்ளத்திலிருந்து மீளமுடியாதவர்களாகிப் போனார்கள் பெண்கள்.

அழகு என்ற சொல்லுக்கு பால் அடையாளம் இல்லை. எனினும், சமூகத்தில் அது பெண் பாலினச் சொல்லாக மாற்றப்பட்டு விட்டது. ஒரு பெண்ணைப் பற்றி அறிமுகம் செய்ய வேண்டுமெனில் அவள் நல்ல அறிவானவள் என்று சொல்லக் கேட்பது அரிதிலும் அரிது. அவள் அழகானவள், சுமாராக இருப்பாள், குண்டாக இருப்பாள் என்பன போன்ற அங்க வரையறைகளே பெண்ணுக்கு அடையாளம். ஆனால் ஆணைப் பற்றி சொல்ல – தொழில், கல்வி, அறிவு, வம்சாவளி போன்றவை முன்னிறுத்தப்படும்.

இதுவரை ஆணுக்கான நுகர்வுப் பொருளாய் பெண்ணை தாரைவார்த்து வந்த அக்கருத்தியலானது இன்றைக்கு அழகு சாதன நுகர்வுப் பொருள்களுக்கான சந்தை இலக்காய் பெண்ணை மாற்றி வைத்திருக்கிறது. ஊடகங்களில் எங்கெங்கு காணினும் அழகிப் போட்டிகள், அழகு சாதனக் குறிப்புகள், தோல், நிறம், முடி, நகம், உடல் எடை பற்றிய மருத்துவக் குறிப்புகளை அவதானிக்கலாம். பெண்கள் எந்நேரமும் தங்கள் அழகு பற்றிய கவலையிலே மூழ்கியிருக்க வேண்டும். பெண்களின் கைப்பையில் என்ன இருக்கும் மேக்கப் சாதனங்கள் தானே என்று ஆண்கள் ஏளனம் பேசுவதை நாம் கேட்பதுண்டு. ஆனால் அத்தகைய ஆண்கள்தான் ‘அழகற்ற’ எந்தப் பெண்ணையும் ‘சப்பை ஃபிகரு’, ‘கேவலமான ஃபிகரு’ என்று பெருந்தன்மையோடு அவமானப்படுத்துகின்றனர்.

பெண்களுக்கு அதீத அழகுணர்வு இருக்கிறது. இதை யாரும் மறுக்கவில்லை. அதே அளவு ஆண்களுக்கும் இருக்கிறது. ஆனால் ‘அழகற்ற’ பெண்ணுக்கு எதிர்காலமும் வாய்ப்புகளும், பெரும் சவாலுக்குறியது. ஆண்களுக்கு பெரும்பாலும் அப்படியில்லை. பெண்ணை வெறும் போகப் பொருளாக பாவிக்கும் இந்த ஆணாதிக்க சமூகத்தின் எதிர்பார்ப்புகளே பெண்களின் அழகுப் பைத்தியத்திற்குக் காரணம். நிறுவனங்களின் வாயில்களில், அழகான பெண்கள் வேலைக்குத் தேவை எனும் பெயர் பலகையைக் கண்டிருப்போம். அழகான ஆண்கள் தேவை என்று கண்டிருக்கிறோமா?

பெண்ணுக்குத்தான் அழகு பற்றிய எத்தனைக் கவலைகளை இந்த அழகு சாதன நிறுவனங்கள் திணிக்கின்றன.

இதனால் பெண்கள் கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். ஒருபுறம் தங்கள் அழகை மேம்படுத்திக்கொள்ள பெண்கள் தீவிரமாகப் போராட விளம்பரங்கள் நிர்பந்திக்கையில், அழகிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் அல்லது தன் அழகை முன்னிறுத்தும் பெண்கள் பற்றிய தவறான திமிர் பிடித்தவள், ஒழுக்கம் கெட்டவள், நம்பிக்கையற்றவள் என்பன போன்ற கருத்துகளை பரப்பும் வேலையை திரைப்படங்களும், வேறு சில சமூக மட்டங்களும் செய்கின்றன. பெண்கள் இருதலைக் கொள்ளி எறும்புகளாய் சிக்கித் தவிக்கின்றனர்.

அழகு மட்டுமிருந்தால் போதும் பெண்கள் வானையே எட்டிவிடலாம் என்றும் சொல்லப்போனால் ஓட்டப்பந்தயத்தில் வெல்லக்கூட அழகிருந்தால் போதும் என்கிற அளவுக்கு வியாபார நிறுவனங்கள் நம்மை முட்டாள்களாக்குகின்றன. இக்கருத்தை ஆழமாகப் பரப்பப் பயன்படும் உத்திகளில் ஒன்று அழகிப் போட்டியாகும்.

வெளித்தோற்ற ரீதியான அழகு விதியானது உண்மையில் நம்மை அவமானப்படுத்தும் ஒரு விதியாகும். அது நம் தன்னம்பிக்கையைக் குலைக்கிறது. தன்நம்பிக்கையே சுயமரியாதையின் ஊற்று. சுயமரியாதை என்பது சுயத்தின் வெளிப்பாடு.

அழகுணர்ச்சி சுயத்தைக் கொல்கிறது, பெண்களை வெறும் சதைப் பிண்டங்களாகக் கருதச் செய்கிறது. ஆண்களுக்கான பாலியல் பண்டமாக நம்மை நிர்ணயிக்கிறது என்பதை பெண்கள் உணர வேண்டும்.

அழகு என்பது இன்றைக்கு ஒரு வியாபாரச் சரக்கு. ஒன்று நாமெல்லாம் அதற்கான பரிசோதனை எலிகள் அல்லது சந்தை இலக்கு. நம் சருமங்கள் மீதும், நம் உடல் மீதுமல்ல அவர்களுக்கு நம்மிடம் இருக்கும் பணத்தின் மீதே அக்கறை. நாம் எவ்வளவுக்கெவ்வளவு சிந்திக்க மறுக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு இலாபம். சரி அப்படியென்றால் எதுதான் பெண்ணுக்கழகு? அழகென்பது ஒரு கருத்து. அது வெறும் சொல். அதைப் பெண்களுக்கான கட்டளையாக்கியது ஆணாதிக்கச் சமூகமும், அதன் பாதுகாவலரான பொருளாதார அமைப்பும். உண்மையில், பெண் உடலைக் கட்டுப்படுத்தும் ஆணாதிக்க விதிகளை ஒழித்தலே பெண்ணுக்கழகு.

# ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் பெண்ணுரிமையை நிலைநாட்டிய போராளி

ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் ஆண்கள் முன்னிலையில் நீச்சல் உடையில் பெண்கள் பங்கேற்பது தகாத செயல் என சுட்டிக்காட்டி பெண்கள் பங்கேற்பதை தடுத்திருந்த காலப்பதியில் அவ்வுரிமையை பெற்றுக் கொடுத்த பெண் போராளியே சாரா ஃபேனி தூரக்.

இவர் சிட்னியில் 1889 அக்டோபர் 27ஆம் திகதி ஐரிஷ் பெற்றோருக்கு மூன்றாவது மகளாகப் பிறந்தார். குழந்தையாக இருக்கும்போதே சாராவுக்கு நீச்சலில் ஆர்வம் அதிகம். குழந்தைப் பருவத்தில் ஆஸ்திரேலியாவின் கூகி கடற்கரையை ஒட்டியிருந்த ஏரிகளிலும் குளங்களிலும் தன்னுடைய சகோதரிகளுடன் அவள் நீந்துவது வழக்கம்.

இதனால் அவர், 13 வயதிலேயே நீச்சல் போட்டியில் ஆஸ்திரேலியாவின் சாம்பியன் பட்டத்தை வென்றார். அதன் பிறகு தனது வாழ்நாள் முழுவதும் நீச்சல் உலகின் அசைக்க முடியாத ராணியாகத் திகழ்ந்தார்.

1912ல் நடந்த கோடை ஒலிம்பிக்கில் நீச்சல் போட்டியில் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. அந்த வாதத்தைப் புறந்தள்ளிய சாரா, அதற்கு எதிராகப் பெரும் போராட்டத்தை முன்னெடுத்தார். ‘நியூ சவுத் வேல்ஸ் ஸ்விம்மிங் அசோசியேஷனி’ல் மனு கொடுத்தார். பெண்களின் பங்கேற்புக்காக வாதாடினார். அவரது போராட்டத்தின் பலனாக ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் பெண்கள் அனுமதிக்கப்பட்டனர்.

அந்த ஆண்டே இரண்டு உலக சாதனைகளைப் படைத்து உலக நீச்சல் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்று நீச்சல் உலகின் முதல் பெண் சாம்பியன் ஆனார். நீச்சலில் வரலாற்றுச் சாதனை படைத்தார்.



# மட்டக்களப்பு புனித வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலையின் 200வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடைபவனி!








இலங்கையின் புகழ்பூத்த மற்றும் மிகவும் பழமையான பெண்கள் பாடசாலையாக கருதப்படும் மட்டக்களப்பு புனித வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலையில் 200வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடைபவனியொன்று அண்மையில் நடைபெற்றது. மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இருந்து மட்டக்களப்பு புனித வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலையின் இலட்சினை பொறிக்கப்பட்ட வாகனத்துடன் நடைபவனி ஆரம்பமானது. இந்த நடைபவனியில் பாடசாலையின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர். 1820ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு புனித வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலையின் 200வது ஆண்டினை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு கல்லடி பாலத்தருகில் ஆரம்பமான இந்த நடைபவனியானது மட்டக்களப்பு பிரதான வீதியூடாக நகரினை சென்றடைந்து அங்கிருந்து பாடசாலையினை சென்றடைந்தது. பல்வேறு கலாசார பண்பாடுகளை தாங்கியவாறும் பாடசாலையின் நினைவுகளை சுமந்தவாறும் இந்த நடைபவனி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆளுமை மிக்க அதிபர் பங்கையற்செல்வன் அதிபர் சேவை 2 ற்கு பதவி உயர்வு

பங்கையற்செல்வன் 1992 ஆம் ஆண்டு திருவையாறு மகாவித்தியாலயத்தில் தன்னுடைய முதல் ஆசிரியர் சேவையை தொடங்கி கடந்த 28 வருடங்களாக கிளிநொச்சி மண்ணின் கல்வி வளர்ச்சியில் அளப்பரிய சேவையை செய்ததை நாம் அனைவரும் அறிவோம்.

1994 இல் கண்ணகை அம்மன் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று இரண்டு வருட சேவைகளின் பின்னர் 1995 ஆம் ஆண்டு பகுதியில் கனிஷ்ட வித்தியாலயத்தில் தனது சேவையைத் தொடர்ந்தார்.

1996 ம் ஆம் ஆண்டு கிளிநொச்சி மக்கள் அக்கரையானை நோக்கி இடம் பெயர்ந்தார்கள் அக்காலப்பகுதியில் கனிஷ்ட மகா வித்தியாலயம் ஸ்கந்தபுரம் பகுதியில் தற்காலிகமாக இயங்க வைப்பதற்கு பெரும் பணியாற்றினார்.

2000 ஆண்டு பகுதியில் மீண்டும் பாடசாலை கிளிநொச்சியில் இயங்க தொடங்கியது இக்காலப்பகுதியில் பாடசாலை இயக்குவதற்கும் அதிபரோடு மிக காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

2001 ஆம் ஆண்டு இக்காலப்பகுதி அதிபர் யோகநாதனுடன் பிரதி அதிபர் பதவியை ஏற்று தன்னுடைய சேவையை விரித்துக்கொண்டாரர்.

2008 புரட்டாதி மாதம் அப்போது அதிபராக கடமையாற்றிய சிறிதரன் மேற்படிப்புக்காக அதிபர் பதவியை ஒப்படைத்து விட்டு சென்ற போது இடம்பெயர்வு காலங்களில் தருமபுரம் விசுவமடு உடையார்கட்டு பகுதிகளுக்கு பாடசாலை கட்டமைப்பை நகர்த்தி தற்காலிகமாக இயக்கி மாணவர்களுக்கு பெரும் பணியாற்றியது எல்லோராலும் பாராட்டப்பட்ட ஒரு விடயமாகும்.

இடப்பெயர்வு காலங்களில் முள்ளிவாய்க்கால் வரை கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் வைத்திய சாலை மேம்பாட்டு பேரவையின் செயலாளராக இருந்தமையினால் வைத்தியசாலைக்கு மிகவும் உறுதுணையாக உதவிகளை செய்து வந்தார்.

இடம்பெயரின் பின்னர் வவுனியா இணைப்பு அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்று மீண்டும் 2010 ஏப்ரல் மாதம் கிளி. கனிஷ்ட மகா வித்தியாலயத்தின் அதிபராகப்



பொறுப்பேற்றுக் கொண்டார்.

முற்றாக அழிந்திருந்த பாடசாலையில் பல நவீன கட்டடங்களை கட்டி முடித்து பாடசாலையை முன்னைய நிலைக்கு அப்பால் கிளிநொச்சியின் முன்னணி பாடசாலையாக நகர்த்தி செல்வதற்கு இரவு பகலாக உழைத்தார். குறிப்பாக UNICEF நிதியில் பாடசாலையின் பௌதீக வளங்களின் பெரும்பகுதியை பூரணம் ஆக்கினார்.

இக்காலப்பகுதியில் பாடசாலையை தரமத்தை உயர்த்தி கணித விஞ்ஞான பிரிவுகளை உருவாக்கினர். வைத்திய பீட மாணவர்கள் பொறியியல் பீட மாணவர்கள் என நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் இன்றுவரை செல்வதற்கும் மிக முக்கியமான வசதிகளை ஏற்படுத்தியமை கிளிநொச்சி மண்ணுக்கு ஒரு சாதனை.

2015 கனகபுரம் வித்தியாலயத்தில் பிரதி அதிபராகப் பதவியேற்று 2016 ஆம் ஆண்டு வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் வளர்ச்சியும் சாதனை பற்றி நான் இங்கே விவரிக்க வேண்டிய அவசியமில்லை. வட்டக்கச்சி பிரதேசத்தின் வளர்ச்சிக்கு இது ஒரு முக்கியமான மைல் கல். எதிர்கால சிப்பிகளை உருவாக்க ஒரு அருமையான அடித்தளம் வட்டக்கச்சியில் அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு அப்பால் பல சாதனைகளைச் செய்தவர். கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் உபதலைவராக கடந்த 8 வருடங்களாக சேவையாற்றி வருகின்றார். கிளி ரோட்டரி கழகத்தின் 2019க்கான தலைவராக இருந்த இவ்வருடம் கொரோனா தொட்டு காலத்தில் பொதுமக்களுக்கு பெரும் சேவை செய்வதை நாம் அறிவோம். இவ்வருடம் கிளி ரோட்டரி கழகம் தேசிய ரீதியில் பல சாதனைகளைப்



படைத்தமைக்கு பங்கையற்செல்வனின் தலைமைத்துவம் மிக முக்கியமானது.

சிறந்த பேச்சாற்றல். எந்த ஒரு நிகழ்வையும் மிகச் சிறந்த முறையில் திட்டமிட்டு தலைமையேற்று வழிநடத்துதல். நேரிய சிந்தனை. கடின உழைப்பு......இன்னபிற.

இருமுறை தேசிய ரீதியில் நல்லாசிரியர் விருதை பெற்றுக் கொண்டதுடன் மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் கிளிநொச்சி விஜயத்தின்போது இவரது பாடசாலையை பார்வையிட்டு வியந்து பாராட்டி சீன நாட்டிற்கு கல்விச்சுற்றுலா புலமைப் பரிசிலில் அனுப்பிவைத்தார்.

உரிய காலத்தில் கல்வி தகமைகளையும் உயர் கல்வியையும் பெற்றுக் கொண்ட அதிபர் தரம் 2 அதிபர் சேவைக்கு தரம் உயர்த்தப்பட்டமை எல்லோருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது.

டாக்டர்
தங்கமுத்து சத்தியமூர்த்தி

# சன்மார்க்கத்துறையோடு இரத்தினக்கல் வர்த்தகத்திலும் பிரகாசித்த மௌலவி மர்ஹூம் கலீலுர் ரஹ்மான்

பேருவளை பீ. எம். முக்தார்



**மௌலவி கலீலுர் ரஹ்மானின் 40 ஆம் நாள் நினைவு தினம் 26 ஆம் திகதி சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

உலமாக்கள் எனப்படுவோர் நபிமார்களின் வாரிசுகள் எனப் போற்றப்படுகின்றனர். முகம்மது நபி (ஸல்) அவர்கள் இறுதி நபியாகவே அனுப்பப்பட்டுள்ளார்கள். அதனால் இஸ்லாமியத் தூதை மக்களுக்கு எத்தி வைக்கும் பாரிய பொறுப்பில் உலமாக்கள் பெரும் பங்களிப்புச் செய்கிறார்கள். அதனாலேயே நபிமார்களின் வாரிசு எனும் அந்தஸ்தைப் பெறுகிறார்கள்.

அந்த வகையில் கடந்த 16.08.2020 இல் வபாத்தான மௌலவி கலீலுர் ரஹ்மானும் இதில் விதிவிலக்கல்ல.

பூகொட, குமரிமுல்லையைச் சேர்ந்த மௌலவி பி.பி. எம் இப்ராஹிம் (அல் அஸ்ஹரி), உம்மு ஹனீதா தம்பதியின் புதல்வனாக கலீலுர் ரஹ்மான் ஹஸ்ரத் 25.01.1963 ஆம் ஆண்டு பிறந்தார். தனது பிறந்தகமான குமரிமுல்லை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 1968 ஆம் ஆண்டு கல்விப் பயணத்தை ஆரம்பித்தார். ஆனால் 7ஆம் வகுப்பு வரையுமே கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் மார்க்கக் கல்வியில் இவருக்கு இருந்த ஆர்வம், தந்தையின் விருப்பு காரணமாக பாடசாலைப் படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டு பாணந்துறை தீனிய்யா அரபுக்கல்லூரியில் இணைந்து சன்மார்க்கக் கல்வியைக் கற்றார். அங்கு 7 வருட பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து 1986 ஆம் ஆண்டு மௌலவி பட்டம் பெற்று வெளியேறினார்.

'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்பதற்கிணங்க மௌலவியொருவருக்கு இருக்கவேண்டிய சகல பண்பாட்டியல்புடன் வாழ்ந்தார்கள். சகல மக்களுடனும் இன்முகம் காட்டி அன்புடன் பழகுவார். இதனால் எல்லோராலும் போற்றப்பட்டார். மதித்து கௌரவிக்கப்பட்டார். சன்மார்க்கத் துறையில் அதீத ஈடுபாடு காட்டி தம் கடமைகளை மிகவும் திறம்படவே நிறைவேற்றி வந்த பெருந்தகையாக திகழ்ந்தார். அத்துடன் நின்றுவிடாது,

(தொடர் 15ஆம் பக்கம்)

# பெண்கல்விக்கு சிகரம் சூட்டிய பெருந்தகை

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்வியியற்றுறைத் தலைவர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகத்தின் மணிவிழா இன்று 27.09.2020 யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறுவதையொட்டியே இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**



வெள்ளத்தால் போகாது வெந்தணலால் வேகாது வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது கள்ளர்க்ோ மிக அரிது, காவலோ மிக எளிது கொடுத்தாலும் நிறைவொழியக் குறைவுபாடாது என்றவாறான பெருமையைப் பெறுவது கல்வி. இது உள்ளத்தே இருக்கின்ற பொருள். இதனாலேயே வள்ளுவர் கல்வியைக் குறிக்கும் போது கேடில் விழுச்செல்வம் கல்வி எனக் குறிப்பிட்டார்.

கல்வியில் உயர்வுபெற்ற சமூகம் நாகரிகம் மிக்க சமுகமாகக் கொள்ளப்படும். இலங்கையின் கல்வியறிவு வீதம் ஏனைய நாடுகளை விட உயர்வாக இருப்பதற்கு இலங்கையில் உள்ள பெண்கல்வி வாய்ப்புகளும் ஒரு காரணம் எனலாம்.

கல்விக்காக இலங்கையில் ஆறு சதவீத நிதி ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது கொள்கை. தற்போதைய அரசு கல்வி மீது அதிக கவனத்தை எடுத்துக் கல்வி மறுசீரமைப்பிற்கெனவும் ஒரு ராஜாங்க அமைச்சை நிறுவியிருக்கிறது. 2022 இல் கல்வியில் புதிய கலைத்திட்டம் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதில் ஆசிரியர்கள் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்திறனில் தேர்ச்சி பெறுதல் உள்ளிட்ட தமது வாண்மைத்துவத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் தொழில்சார் பட்டம் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகின்றது.

ஆசிரியர்கள் தமது தொழில் வாண்மையை உயர்த்திக் கொள்வதற்குப் பல சந்தர்ப்பங்கள் உள்ளன. பல்கலைக்கழகங்களில் உள்ள கல்விப் பீடங்கள் அல்லது கல்வியியல் துறைகள், தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்வியியல் கல்லூரி, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை என்பன ஆசிரிய வாண்மை விருத்திக்குரிய பயிற்சிகளை வழங்குகின்றன. இவற்றுள்ளும் பல்கலைக்கழகங்களுக்கு உயரிய பங்களிப்பு உண்டு என்பதை யாரும் மறுக்கார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறையின் தலைமகளாகத் திகழ்பவர் கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகம். வடமராட்சி மண்ணின் கல்விக்குரிய மிடுக்குடன் திகழும் இவர் பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு கல்வியைப் புகட்டும் கல்வியியற்றுறையின் தலைவராக விளங்குகின்றார். இத்தகைய பெருமைகளோடு இன்று 27.09.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். நீராவியடி இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் தனது மணிவிழாவைக் காண்கின்றார். இதனையொட்டி அவர் குறித்த பார்வையாக இக்கட்டுரை அமைகின்றது.

வியாபாரிமூலையைச் சேர்ந்த மார்க்கண்டு மகேஸ்வரி ஆகியோரின் இளைய மகளாக 13.07.1959 இல் பிறந்த இவர் கணக்காளர் இராசநாயகத்தைத் தன் வாழ்க்கைத் துணையாகக் கொண்டார். தனது பாடசாலைக் கல்வியை புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி என்பவற்றில் பெற்று தனது ஆளுமையை உருவாக்கிக் கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்தில் சிறப்புத் சித்தி பெற்ற பட்டதாரியாகி சேர் பொன் ராமநாதன் நினைவுப் பரிசிலையும். பெற்றுக்கொண்டார். ஆசிரியர் நியமனம் கிடைக்கப் பெற்று கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் தமிழ்க் கலவன் பாடசாலை,

கிளிநொச்சி இந்துக் கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரி என்பவற்றில் ஆசிரியராக கடமையாற்றினார். 1997ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியற்றுறை விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

இந்தியக் கல்வி மரபில் ஆன்மீக விழுமியங்களும் இலங்கையில் அதன் தாக்கமும் என்ற பொருளில் ஆய்வு செய்து கலாநிதி பட்டம் பெற்று கடந்த மூன்றாண்டுகளாகக் கல்வியியற்றுறையின் தலைவராக விளங்குகின்றார்.

(தொடர் 22ஆம் பக்கம்)

சிவஸ்ரீ கு.வை.க.
வைத்தீஸ்வரக் குருக்கள்
இந்துக் குருமார் அமைப்பு, கொழும்பு



புரவலர் புத்தகப் பூங்காவின் நூல் அறிமுகம், நீண்ட இடைவெளிக்குப் பின் மாத்தளை மண்ணில் இடம்பெறவுள்ளது. கவிஞர் கலைச்சுடர் நல்லையா சந்திரசேகரனின் 'சாயப்பட்ட விரல்கள்' கவிதை நூல் அறிமுக விழா எதிர்வரும் 2020 ஒக்டோபர் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாத்தளை மகாத்மா காந்தி சர்வதேச நிலையத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் புரவலர் புத்தகப் பூங்கா நிறுவுனர் புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

## இலங்கை முஸ்லிம்களின் தனித்துவத்தை காக்கும்... (10ஆம் பக்கத் தொடர்)

இந்த நிலையில் இலங்கை முஸ்லிம்களின் தேசியத்தைக் காட்டக் கூடிய வகையில் எந்த மொழியை தேர்ந்தெடுப்பது, அறிமுகப்படுத்துவது எனும் கேள்வி எழுகிறது. சிலா் அறபுத்தமிழை கற்ற வேண்டும் என்கிறாா்கள். இது தமிழ் பேசும் உலகை தவிர ஏனைய முஸ்லிம்களுடன் தொடர்பை ஏற்படுத்த முடியாது என்பதை ஏற்கனவே விளக்கியுள்ளேன். அறபுத் தமிழ் மூலம் நாம் எத்தகைய தனித்துவத்தையோ, சர்வதேச முஸ்லிம்களுடனான தொடர்பாடலையோ ஏற்படுத்த முடியாது.

அறபு மொழியை முஸ்லிம்கள் மத்தியில் அறிமுகம் செய்ய முடியுமா?

நமது நாட்டின் அரசாங்க பாடசாலைகளில் அறபு மொழி முஸ்லிம்களின் கட்டாய பாடமாக ஒரு காலத்தில் இருந்த போதும் அறபு மொழி பொதுமக்கள் மத்தியில் எடுபடவே இல்லை. இது எந்த அளவுக்கு என்றால் அறபு மத்ரசாக்களில் படித்து வெளியேறுவோர் கூட அறபை இலக்கண சட்டப்படி எழுத தெரிந்திருந்த போதும் அவர்களது பேச்சு வழக்கில் அறபு மொழி செல்வாக்கு செலுத்த முடியவில்லை. இன்றும்கூட மௌலவிமார் தமக்குள் தமிழிலேயே பெரும்பாலும் உரையாடுவதையும் உலமா சபையின் எந்தவொரு கூட்டமும் அறபு மொழியில் நடத்தப்படுவதில்லை என்பதையும் வைத்துப் பார்க்கும் போது அறபு மொழியை இலங்கையின் பாமர முஸ்லிம்களிடையே அறிமுகப்படுத்துவது முடியாத காரியம் என்பது தெளிவாகிறது.

அத்துடன் அறபு நாடுகளில் கூட சுத்தமான அறபு மொழி பாமர மக்களால் பேசப்படுவதில்லை. எழுத்தில் மட்டுமே சுத்தமான இலக்கண அறபு மொழியை காணலாம். பேச்சு மொழி என்பது நாட்டுக்கு நாடு பாரிய வித்தியாசத்தில் உள்ளதைக் காண்கிறோம். அறபிகளால் கூட இவை புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு வேற்று மொழிகளும் கலந்து சிதைந்து போயுள்ளதையும் காண்கிறோம். உதாரணமாக சஊதி அரேபிய பேச்சு மொழியை தெரிந்த ஒருவரால் இலகுவில் குவைத் பேச்சு மொழியை புரிந்த கொள்ள முடியாது. அதிலும் லிபியா, மொரோக்கோ நாட்டு பேச்சு அறபு மொழியை அறவே புரிய முடியாது.

இவற்றை வைத்துப் பார்க்கும் போது அறபு மொழியை நமது நாட்டு பாமர மக்களிடையே பரப்ப ஏற்கனவே எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்து விட்டதாலும் அதனையும் நமது நாட்டு முஸ்லிம்களின் வழக்கத்தில் கொண்டு வருவது என்பது முடியாத காரியம் என்பது தெளிவாகிறது.

எந்த மொழி இலங்கை முஸ்லிம்களுக்கு இலகுவானது?

ஒரு காலத்தில் இந்திய உப கண்டத்தில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கென தனியான மொழியொன்று தேவை என்பதை உணரப்பட்டதன் காரணமாக உர்து என்ற மொழி உருவாக்கப்பட்டது. அம்மொழி அறபு அட்சரங்களைக் கொண்டு எழுதப்பட்டாலும் ஹிந்தி, அறபு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் கலக்கப்பட்டு பேச்சிலும் வித்தியாசத்தைக் காட்டும் தனித்துவ மொழியாக அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த மொழி இந்திய உபகண்டத்தில் முஸ்லிம் அல்லாத ஹிந்தி மொழி பேசுவோர் மத்தியிலும் செல்வாக்குப் பெறும் அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது. ஹிந்தி மொழியின் அச்சரத்தில் உர்து மொழியை எழுதும் அளவுக்கு அம்மொழி ஆதிக்கம் செலுத்துவதை காண்கிறோம். இதன் காரணமாக ஹிந்தி மொழி திரைப்படங்கள் உண்மையில் உர்து மொழி திரைப்படங்களாகவே உள்ளதைக் காணலாம்.

பொதுவாக உர்து மொழிக்கும் ஹிந்தி மொழிக்கும் இடையில் உள்ள மிகப் பெரிய வித்தியாசங்களில் ஒன்றுதான் உர்து மொழியில் அறபு வசனங்கள் அதிகம் ஆக்கிரமிப்பதையும், ஹிந்தி மொழியில் சமஸ்கிருத மொழி ஆக்கிரமிப்பதையும் காணலாம். ஆனாலும் எழுத்தில் தவிர பேச்சில் பெரும் வித்தியாசத்தை காண முடியாது. அத்துடன் உர்து மொழி அதன் இனிமை காரணமாக ஹிந்தி மொழிக்காரர்களிடையேயும் ஆதிக்கம் செலுத்தி அதனையும் விஞ்சிவிட்ட மொழியாகவும் காணப்படுகிறது.

தற்போது இலங்கையிலும் இம்மொழியின் இனிமை உணரப்படுவதையும் நாம் பரவலாக காணலாம். அறபு நாடுகளுக்க வேலைக்காக சென்ற பலா் நன்றாக உா்து பேசுவதை காணலாம். இந்த நிலையில் இலங்கை முஸ்லிம் மக்களின் மொழியாக உர்து மொழியை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுத்தல் மிகப் பெரிய நன்மைகளை அடைய முடியும் என்பது எனது நம்பிக்கை.

நமது நாட்டின் க. பொ. த உயர்தரப்பரீட்சையில் ஒரு பாடமாக உர்து மொழி உள்ளது என்பது மிகப்பெரிய அதிஷ்டமாகும். இந்த இடத்தில் ஒரு அனபவத்தை பகிர்ந்து கொள்வது பொருத்தம் என நினைக்கிறேன். உர்து பாடமும் உயர் தரத்தில் ஒரு பாடமாக இருப்பது ஒரு வரப்பிரசாதமாகும்.

அதனை ஆகக்குறைந்தது அறபு மதுரசாக்களிலாவது கற்பிக்க முன்வர வேண்டும். அதே போல் ஆரம்ப குர்ஆன் மதுரசாக்களிலும் உர்து மொழியை கற்பிக்க முனைவதன் மூலம் சிறுவர்களுக்கும் அம்மொழியை அறிமுகப்படுத்தி எதிர் காலத்தில் சர்வதேச முஸ்லிம்களுடனான தொடர்பாடலுக்கு அவர்களை நாம் தயார் படுத்த முடியும்.

இதனை யார் முன்னெடுப்பது?

இதனை முன்னெடுக்கும் கடமை ஜம்இய்யத்துல் உலமா, ஏனைய தஃவா அமைப்புக்கள், சமூக இயக்கங்களின் கடமையாகும். உலமா சபை தலைவா் கூட உர்து மொழியில் பாண்டித்தியம் பெறறவர். அம்மொழியிலேயே மார்க்கத்தை கற்றவர். ஆகவே அவர்களால் மிக இலகுவாக இதற்கான பிரசாரத்தையும், வழி காட்டல்களையும் முன்னெடுக்க முடியும்.

## மலையக மக்களின் திறமையை வலுப்படுத்தும் 'சிந்தனை Foundation'



மலையகப் பிரதேசத்தில் க.பொ.த சாதாரண தர மற்றும் க.பொ.த உயர்தர கற்கையை நிறைவு செய்து தொழிலுக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கு சரியான தகைமையை பெற்றுக் கொடுக்கும் வகையில் இலவச கல்வியகமாக 'சிந்தனை Foundation' கொட்டகலை பிரதேசத்தில் இயங்கி வருகிறது. முற்றிலும் மலையக மாணவர்களின் திறமையை மேம்படுத்தும் வகையில் இலவசமாக ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் சிறந்த தேர்ச்சியை பெற்று கொடுப்பதோடு இலவசமாக கணினி கற்கையும் கற்பிக்கப்படுகின்றது.

இதன் ஸ்தாபகர் ரமேஷ் ரிஷிகேசன் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி மலையகத்தின் எதிர்கால சந்ததியினரின் முன்னேற்றத்தை மட்டும் தன் தூர நோக்காகக் கொண்டு செயல்படுகிறார். கல்வியை மாத்திரம் அன்றி வாழ்வியல் தத்துவம்,விழுமிய பண்புகள் ஆகியவற்றையும் ஒரு பாடமாகவே கற்பிக்கிறார் என்பது பெருமைக்குரியதாகும். பணத்திற்காக கல்வியை விற்கும் இக்காலத்தில் ஒரு தனி நபர் இலவசமாக கல்வியை அளிப்பது பாராட்டுக்குரியது. மேலும் சிந்தனை Foundation இல் கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு அண்மையில் பட்டமளிப்பு விழாவும் நடத்தப்பட்டது. இதன் போது சுமார் 18 பேர் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டனர். இதில் 14 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.மேலும் இவ் விழாவில் பிரதம அதிதியாக கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாத்தும், விசேட அதிதிகளாக கொட்டகலை, தலவாக்கலை பிரதேசத்துக்கு உட்பட்ட பல பாடசாலை அதிபர்களும், ஊடகவியலாலர்களும், தொழிலதிபர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## தூக்கி நிறுத்த என்ன செய்யலாம்? (28ஆம் பக்கத் தொடர்)

இயற்கை எமக்குத் தந்த வளங்கள் சூறையாடப்படுவதை எவரும் வெறுமனே பார்த்துக் கொண்டு வாழ முடியாது.

இது இவ்வாறு இருக்க இயற்கை எமக்குத் தந்த வளங்கள் சூறையாடப்படுவதை எவரும் வெறுமனே பார்த்துக் கொண்டு வாழ முடியாது. அதற்கு ஏற்றாற்போல் மட்டக்களப்பில் சூழலியல் நீதிக்கான மக்கள் அமைப்பின் செயற்பாடுகள் காலத்திற்குப் பொருத்தமானதாக அமைந்துள்ளன. இயற்கை வளங்களைச் சூறையாடுவோர் எந்தத் தரப்பினராக இருந்தாலும் நாம் சமூகமாக அணிதிரண்டு அத்தகைய செயற்பாடுகளை எதிர்த்துத்தான் ஆகவேண்டும்.

இயற்கை வளங்களைச் சூறையாடுவதற்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் ஆதரவு வழங்கி உதவி ஒத்தாசை புரியும் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். மக்கள் பலத்தைக் கொண்டு இந்த கருமங்களை ஆற்ற முடியும். அதற்கு இயற்கை வளங்கள், மனித உரிமைகள். நாட்டின் சட்டதிட்டங்கள் பற்றி மக்கள் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். அந்த அறிவைக் கொண்டுதான் அநியாயங்களைத் தடுத்து நிறுத்த முடியும். என மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஏ.சி. அப்துல் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய மட்டு வாவியை தூய்மைப்படுத்தும் நடவடிக்கைககள் ஆரம்பம்.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இலங்கையின் இரண்டாவது மிகப் பெரியவாவியான மட்டக்களப்பு வாவியைத் தூய்மைப் படுத்தும் நடவடிக்கைககள் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இத்திட்டதின் கீழ் காத்தான்குடி வாவிக்கரையோரப் பகுதி சிரமதானம் மூலம் தூய்மைப் படுத்த பட்டுள்ளது.


# சுகாதார அமைச்சு

## அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

# 2020 – 2021 வருடத்திற்காக சமைத்த உணவை வழங்கும் வழங்குநர்களைப் பதிவு செய்துகொள்ளல்

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படும் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC) இலங்கைப் பிரஜைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, மருந்து வகைகள் மற்றும் சுகாதாரப் பொருட்களை உற்பத்தி செய்கின்றது.

இக்கூட்டுத்தாபனத்தில் 350 ஊழியர்கள் பணி புரிவதுடன், ஊழியர்களுக்கான நலன்புரி வசதியாக மதிய உணவு, காலை உணவு, இராப்போசணம் தொடர்பாக சமைக்கப்பட்ட உணவு வழங்குவதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்கள், பிரசித்தி பெற்ற வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இக்கூட்டுத்தாபனம் விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது. அடிப்படை பதிவிற்குப் பின்னர் விலைமனுக்கள் வேண்டப்படும்.

**மாதிரிப்படிவம்**

**2020 - 2021 வருடத்திற்காக சமைத்த உணவை வழங்கும் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பம்.**

1. வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி :
2. பதிவிலக்கம் மற்றும் திகதி :
   (வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்)
3. உரிமையாளர்களின் பெயர் மற்றும் முகவரி:
4. தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கம் :
5. முன்னர் சேவைகளை வழங்கிய நிறுவனங்களின் பட்டியல்
6. கூட்டுத்தாபனத்திற்குள்ள கடன் வசதிகள் : காலம் : .......................... தொகை : ..........................

பெயர் : ....................................
கையொப்பம் : ....................................
பதவி : ....................................
திகதி : ....................................

**கீழேயுள்ள தகவுத்திறன்கொண்டு பதிலளித்த வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் எண்ணிக்கையில் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.**

| தகவுத்திறன் | புள்ளிகள் |
|---|---|
| 1. மதிய உணவிற்கு Buffet/ பக்கற்களை வழங்குவதற்கான இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும். | 20% |
| 2. காலை உணவு மற்றும் இராவ்போசண உணவிற்கு பக்கற்களை வழங்குவதற்கான இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும். | 05% |
| 3. தற்போதைய/ கடந்தகால வழங்கல் அமைவிடங்களிலிருந்தான Feedback | 20% |
| 4. சமையலறையில் சுத்தம் பேணல் | 25% |
| 5. சாமான்கள் களஞ்சியப்படுத்தும் பகுதியில் சுத்தம் பேணல் | 25% |
| 6. கூட்டுத்தாபனத்திலிருந்தான தூரம் கி.மீ. | (0-10) - 5%<br>(10-15) - 2%<br>15 மேற்பட்டது - 0% |

அனைத்து விண்ணப்பங்களும், தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், "சமைக்கப்பட்ட உணவு வழங்குநர்களைப் பதிவு செய்தல்" எனக் குறிக்கப்பட்டு, 2020 ஒக்டோபர் 12ஆம் திகதி, பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர், கீழேயுள்ள முகவரிக்கு கிடைக்கப்பெறல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையெனில், 2637574/ 2635353/ 2623298 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக, திட்டமிடல் மற்றும் பெறுகை பிரதி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட்,**
**இரத்மலானை.**



# இலங்கை இராணுவம்

# விலைமனு அறிவித்தல்

01. ஒரு நிலையான விலை விகிதாசாரத்திற்கு (Fixed Price rate) 2021 ஆம் வருடத்தின் 1ஆம் அரைப் பகுதிக்காக 2021.01.01 முதல் 2021.06.30 வரை) உருப்படிகளை வழங்குவதற்கு விலைமனுதாரர்களிடமிருந்து இத்தால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், இலங்கை இராணுவத்தின் திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர் பொறுப்பேற்பார்.

| தொடர் இலக்கம் | விலைமனு இலக்கம் | விபரக்குறிப்பு | விலைனுவின் அண்ணளவான பெறுமதி |
|---|---|---|---|
| 01 | DES/04/2020/100(933) | சீமெந்து | 88 மில்லியன் |
| 02 | DES/04/2020/100(934) | TOR உருக்கு மற்றும் இலகு உருக்கு | 86 மில்லியன் |
| 03 | DES/04/2020/100(935) | மின்சார சீலிங் விசிறிகள் | 35 மில்லியன் |
| 04 | DES/04/2020/100(936) | மின்சார வயர்கள் | 75 மில்லியன் |
| 05 | DES/04/2020/100(937) | கல்நார் (Asbestos) கூரை சீட்டுகள் | 35 மில்லியன் |
| 06 | DES/04/2020/100(938) | துத்தநாக அலுமினிய கூரை சீட்டுகள் | 84 மில்லியன் |
| 07 | DES/04/2020/100(939) | ஜீஜ கொருகேட்டட் சீட்டுகள் | 34 மில்லியன் |
| 08 | DES/04/2020/100(940) | பலகைகள் (இறக்குமதி செய்யப்பட்டவை) | 70 மில்லியன் |
| 09 | DES/04/2020/100(941) | பலகைகள் (உள்ளூர்) | 75 மில்லியன் |
| 10 | DES/04/2020/100(942) | ஒட்டுப்பலகைகள் | 85 மில்லியன் |
| 11 | DES/04/2020/100(943) | ஜீஜ குழாய்கள் | 90 மில்லியன் |
| 12 | DES/04/2020/100(944) | பிவீசீ குழாய்கள் / பிவீசீ பொருத்துக்கள் | 45 மில்லியன் |
| 13 | DES/04/2020/100(945) | நீர்த்தாங்கிகள் | 25 மில்லியன் |
| 14 | DES/04/2020/100(946) | நிறப்பூச்சி உருப்படிகள் | 61 மில்லியன் |
| 15 | DES/04/2020/100(947) | பொறித்தொகுதி உருப்படிகள் (ஆற்றுமணல்) | 90 மில்லியன் |
| 16 | DES/04/2020/100(948) | பொறித்தொகுதி உருப்படிகள் (உலோகம்/ சிதைவுகள்) | 93 மில்லியன் |
| 17 | DES/04/2020/100(949) | மின்சார உருப்படிகள்/ ஆளிகள் | 15 மில்லியன் |
| 18 | DES/04/2020/100(950) | அலுமினிய உருப்படிகள் (பவுடர் முலாமிடப்பட்ட அலுமினிய பார்கள்/இயற்கையான அலுமினியப் பார்கள்) | 67 மில்லியன் |
| 19 | DES/04/2020/100(951) | ஓடுகள் (தரை ஓடு/சுவர் ஓடு) | 90 மில்லியன் |
| 20 | DES/04/2020/100(952) | சுகாதார பொருத்துக்கள் (Cromium Plated Piller Tap, Cromium Plated Bip Tap) | 75 மில்லியன் |
| 21 | DES/04/2020/100(953) | உருக்கு ('C' Purlin, Angle Iron, MS Plate) | 90 மில்லியன் |
| 22 | DES/04/2020/100(954) | ஹாட்வெயார் உருப்படிகள் (Wire Nails, Brass But Hingers, Paint Brush, Sand Paper) | 53 மில்லியன் |
| 23 | DES/04/2020/100(955) | கருவிகள் | 20 மில்லியன் |

02. அனைத்து உரித்தான விலைமனு ஆவணங்களையும் 2020.09.28 முதல் 2020.10.27 வரையான வேலை நாட்களில், 09.00 மணி மற்றும் 16.00 இடையே கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவ தலைமையகம், பொறியியல் சேவை பணிமனையிலிருந்து (பிளொக் 07, இராணுவ தலைமையகத்தின் 3ஆம் மாடியில் அமைந்துள்ள பொறியியல் சேவை பணிமனையின் பெறுகைப்பிரிவிலிருந்து) பெற்றுக்கொள்ள முடிவதுடன், ஒருகொடவத்த, அவிஸ்ஸாவளை வீதி, இல.167/30, சிலிங்கோ கட்டிடம், இராணுவ முகாமில், 2020.10.29 அன்று 10.00 மணிக்கு திறக்கப்படும். உரித்தான உருப்படிகளை வழங்குவதற்காக விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி பதிவு, கடந்தகால அனுபவங்களை உறுதி செய்ய வேண்டியதுடன் நிதியியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக கடந்த ஆறு மாதங்களிற்கான வங்கி அறிக்கைகளையும் சமர்ப்பிக்க வேண்டும். MOD உடன் தம்மைப் பதிவுசெய்து கொண்டுள்ள வழங்குநர்களுக்கு, அவ்வாறான ஆவணங்களை சமர்ப்பிப்பதிலிருந்தும் விலக்களிக்கப்படுவதுடன் MOD இன் பதிவுக் கடிதத்தை மாத்திரம் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.


03. குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்யும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுக்களில் ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள், விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முன்னர், ஒவ்வொரு விலைமனு விண்ணப்பத்திற்குமான ஒரு மீளளிக்கப்படாத கட்டணத்தை (10 மில்லியன் முதல் 50 மில்லியன் வரை ரூ.3500.00 மற்றும் 50 மில்லியன் முதல் 100 மில்லியன் வரை ரூ.12,500.00) நிதியியல் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு (இராணுவ தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு) செலுத்துமாறும் பொறியியல் சேவைகள் பணிமனைக்கு பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்குமாறும் வேண்டப்படுகின்றனர்.

**பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.**

A. பொறியியல் பெறுகைப்பிரிவு பணிமனை தொ.பே - 0112339317
B. குவாட்டர் மாஸ்டர் ஜெனரல் கிளை விலைமனுப்பிரிவு தொ.பே - 0112431301
C. பொறியியல் சேவைகள் பணிமனை தொ.பே - 0112435143

**இராணுவ கட்டளைத் தளபதி**
**இலங்கை இராணுவ தலைமையகம்,**
**ஸ்ரீஜயவர்தனபுர,**
**கொழும்பு.**




இளையராஜாவுடன்...

சித்ராவுடன் ஒரு பாட்டு...

# எஸ்.பி.பீ: காதலிக்க வந்த கலைஞன்



டாக்டர் ஜி. ராமானுஜம் ...

ஆயிரம் நட்சத்திரங்கள் இருந்தாலும் இரவுக்கு அழகு நிலவுதான். ஆயிரம் பாடகர்கள் இருந்தாலும் எஸ்பிபாலசுப்பிரமணியம் இருந்தால்தான் அந்த கச்சேரி மேடை நிறையும். சரீரத்திலும் சாரீரத்திலும் வஞ்சகமில்லாதவர்.

'ஹோட்டல் ரம்பா' என்ற தமிழ்த் திரைப்படத்தில் 'அத்தானோடு இப்படி இருந்து எத்தனை நாளாச்சு?' என்ற பாடல்தான் அவர் முதலில் தமிழுக்காகப் பாடியது. எம் எஸ் வி இசையமைப்பில். படம் வரவே இல்லை. பாடலும் நம்மிடம் இல்லை. 1969 இல் வெளிவந்த இயற்கை என்னும் இளைய கன்னி (சாந்தி நிலையம்), ஆயிரம் நிலவே வா (அடிமைப் பெண்) ஆகிய அவரது முதல் இரண்டு பாடல்கள் அவரை உடனடியாக நட்சத்திர அந்தஸ்திற்கு உயர்த்தின.

1966 இல் ஸ்ரீ ஸ்ரீ மர்யாத ராமண்ணா என்ற தெலுங்குப் படத்தின் மூலம் தனது இசைப்பயணத்தைத் தொடங்கினார் எஸ்பிபி. தமிழில் அவர் வரவு எழுபதுகளின் தொடக்கமாக அமைகிறது. சிவாஜி, எம் ஜி ஆர் ஆகியோருக்கு வழக்கமாகக் கம்பீரக் குரலில் பாடிவரும் டி எம் எஸ் குரலுக்குப் பதிலாக அப்போது பிரபலமாகி வந்த ஹிந்திப்பாடல் அலைகளின் தாக்கத்தில் மென்மையாகவும் , சிருங்காரமாகவும், காதல் உணர்வுடன் ரசித்துப் பாடும் பாணியிலான ஒரு பாடகனின் தேவையை எஸ்பிபி பூர்த்தி செய்தார். பி.பி ஸ்ரீனிவாஸ் இது போன்ற மென்மையான பாடல்களைப் பாடிவந்தார். ஆனால் அவரை விட இளமைக்குறும்பு, உற்சாகம் ஆகிய குணங்கள் அதிகம் அமையப்பெற்று ஒரு புதுப் பாணியை அமைத்துக் கொண்டார் ஸ்ரீபதி பண்டிதராத்யுல பாலசுப்ரமணியம். (பிறப்பு ஜூன் 4 1946.)

நெல்லூரைச் சேர்ந்த அவரது தந்தை சாம்பமூர்த்தி ஹரிகதை வித்வான். தாய் சகுந்தலா அம்மாள் சென்ற வருடம் (2019) காலமானார்.

பாலுவின் தமிழ்ப்படத் திரை வாழ்க்கையை மூன்றாகப் பிரிக்கலாம்.



1.எம் எஸ்வி , கே.வி. மகாதேவன் , விஜயபாஸ்கர், சங்கர் கணேஷ் போன்ற இசையமைப்பாளர்களோடு பணியாற்றிய எழுபதுகள்

2.இசைஞானி இளையராஜா கோலோச்சிய எண்பதுகள்

3.ஏ.ஆர்.ரஹ்மான் , வித்யாசாகர் போன்றோர் தடம்பதித்த தொண்ணூறுகள் தொடங்கி இன்று வரை.

ஆரம்பத்தில் சொன்னது போல் கம்பீரமான டி. எம்.எஸ் பாணியிலிருந்து வித்தியாசமான மென்மையாகவும் , மெல்லிய சோகமான பி பி ஸ்ரீனிவாஸ் பாணியிலிருந்து மாறுபாடாக உற்சாக இளமைத் துள்ளலாகவும் தனது பாணியினையும் இருப்பினையும் உறுதி செய்து கொண்டார்.

அதற்கு ஏற்றாற்போல் நடிகர்களின் திரைவாழ்வுகளிலும் மாற்றங்கள் வந்தன. எம் ஜி ஆர் கொஞ்சம் கொஞ்சமாக அரசியலை நோக்கிச் செல்ல சிவாஜி கணேசன் தனது உச்சத்திலிருந்து மெதுவாகக் கீழே இறங்கிக் கொண்டிருந்தார். விஜயகுமார்,.முத்துராமன், ஜெய்கணேஷ், சிவக்குமார் போன்ற நடிகர்கள் மென்மையான கதாபாத்திரங்களில் நடிக்க ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் "ஆயிரம் நிலவே வா" (அடிமைப்பெண் 1969), "அவள் ஒரு நவரச நாடகம்" (உலகம் சுற்றும் வாலிபன் 1973) '' பாடும் போதுநான்தென்றல்காற்று''(நேற்று இன்று நாளை 1974) என எம்ஜிஆருக்கும், பொட்டு வைத்த முகமோ (சுமதி என் சுந்தரி 1971) இரண்டில் ஒன்று (ராஜா 1972) என சிவாஜிக்கும் அற்புதமான பாடல்களைப் பாடியுள்ளார். அதன்பின் விஜயகுமார், ஜெய் கணேஷ் போன்ற நடிகர்களுக்காக மகத்தான சில பாடல்களைப் பாடியுள்ளார்.

விஜயபாஸ்கர் இசையில் சம்சாரம் என்பது வீணை (மயங்குகிறாள் ஒரு மாது 1975) சங்கர் கணேஷ் இசையில் அவள் ஒரு மேனகை (நட்சத்திரம் 1980) எனப் பல்வேறு இசையமைப்பாளர்களிடம் பாடியிருக்கிறார் .

திரை இசைத் திலகம் கேவி மகாதேவன் இசையில் வந்த சங்கராபரணம் (1979) அவருக்கு முதல் தேசிய விருதைத் தந்தது. அப்பாடல்கள் செவ்வியல் பாணியிலும் தன்னால் பாட முடியும் என அவர் நிரூபித்ததற்கு சாட்சி. என்றாலும்...

எழுபதுகளில் பாலசுப்ரமணியத்தின் முழு திறமையையும் வெளிக் கொண்டு வந்தது எம்எஸ் விஸ்வநாதனின் இசை என்றால் அது மிகையாகாது. விஸ்வநாதன் ராமமூர்த்தி என்ற பாணியில் இருந்து வெளியே வந்து புதுப் பாணியிலே மெட்டுக்களை மட்டும் அடிப்படையாக வைத்துக்கொண்டு பாடகர்களின் குரல் வளத்தை மிகவும் உறுதியாக நம்பி ஏற்ற இறக்கங்கள் எனப்படும் சங்கதிகள் கமகங்கள் ஆகியற்றை மிகவும் இனிமையாக அமைத்தது எம் எஸ் வி பாணி. கண்ணதாசன் போன்ற கவிஞர்களின் தத்துவ வரிகளை சிவாஜி கணேசன் போன்ற நடிகர்களின் பாடுவது அல்லது வாலியின் வரிகளில் எம் ஜிஆரின் ஆளுமையை புகழ்ந்து பாடுவது ஆகிய இரண்டை முக்கியமான பணியாக வைத்திருந்த டிஎம் எஸ் பாணியை விட்டு வெளியே வந்த எம்எஸ் விஸ்வநாதனின் ஒரு புது பாணிக்கு ஆணிவேராக இருந்தவர் எஸ் பி பாலசுப்பிரமணியம்.


குடும்பத்துடன்...

எழுபதுகளில் எம்எஸ் விஸ்வநாதனின் இசை அமைப்பில் உச்சத்தைத் தொட்டார் எஸ். பி .பாலசுப்பிரமணியம். அதற்கு ஏற்றவாறு கமலஹாசன் என்னும் ஒரு மகா கலைஞனும் பாலச்சந்தர் என்னும் ஒரு திறமையான இயக்குனரும் சேர்ந்து கொள்ள அற்புதமான பல படைப்புகள் வெளிவந்தன அவற்றின் இசை அச்சாணியாக இருந்தவர் பாலு.

அவள் ஒரு தொடர்கதை(1974) திரைப்படத்தில் வரும் கடவுள் அமைத்து வைத்த மேடை என்ற பாடல் ஒரு கிளாசிக்.

காதல் தோல்வியின் பின்னணியில் ஒரு கலைஞன் பாடும் பாடலாக அமைந்த இந்தப் பாடலில் பின்புலமாக சதன் என்ற கலைஞன் தனது மிமிக்கிரி திறமையால் விலங்குகள் பறவைகள் ஏரோபிளேன் போன்ற ஒலிகளை அற்புதமாக எழுப்பி இருப்பார்.

அவற்றையெல்லாம் தாண்டி எஸ் பி பாலசுப்ரமணியம் தன்னுடைய பாவம் என்னும் உணர்ச்சிப் பெருக்கால் அந்தப் பாடலை ஒரு வேறு தளத்திற்கு எடுத்துச் சென்றிருப்பார்.

இப்படத்தின் தெலுங்கு வடிவில் இப்பாடலை எஸ் பி பியே மிமிக்ரி குரல்கள் எழுப்பிப் பாடியிருப்பதை யூட்ட்யூப்பில் கேட்கக் கிடைக்கிறது. பார்த்தால் அசந்து விடுவோம்.

அதே எம்எஸ்வி ,கமல் ,பாலசந்தர், எஸ்பிபி கூட்டணி. படம் அவர்கள் (1977). அதிலே அதே காதல் தோல்வி, அதே சுஜாதா, கமல். ஆனால் அதைவிட ஒரு மிகச் சிறப்பான ஒரு பாடல் ' இரு மனம் கொண்ட திருமண வாழ்வில் இடையினில் நீயேன் மயங்குகிறாய்' என்ற ஒரு அற்புதமான பாடலை அனுபவித்து ரசனையுடன் பாடியிருப்பார் பாலு.

எம் எஸ் வி இசையில் எஸ் பி பாலசுப்ரமணியம் பாடிய பாடல்களில் சிறப்புகள் இரண்டு.

ஒன்று அவர் தன்னுடைய பாவத்தினை அதாவது உணர்ச்சி பெருக்கால் பாடியது. இரண்டாவது அந்த மெட்டுக்களில் சங்கதிகள் எனப்படும் ஏற்ற இறக்கங்களை வளைந்து நெளிந்து குழைந்து பாடிய மழலைப் பட்டாளம் (1980) என்ற திரைப்படத்தில் வரும் கௌரி மனோஹரியை கண்டேன் என்ற பாடலை ஒருமுறை கேட்டுப்பாருங்கள். ஒவ்வொரு கௌரிமனோகரியையும் ஒவ்வொரு மாதிரி பாடியிருப்பார் .' மலைமீது அடித்தாலும் காற்று. அது கடல் மீது தவறினாலும் காற்று. வயதோடு வந்தாலும் காதல்! அது வயதாகி வந்தாலும் காதல்!' என்று ஒவ்வொரு இடத்திலும் காற்றும் காதலும் ஒவ்வொரு விதமாக ஏறி இறங்கும். அந்த பாணிதான் எஸ் பி பாலசுப்ரமணியம் மேஜிக்.

நினைத்தாலே இனிக்கும் (1979) திரைப்படத்தில் வரும் பாரதி கண்ணம்மா என்ற பாடல் நிழல் நிஜமாகிறது (1978) படத்தின் கம்பன் ஏமாந்தான் என்ற பாடல் மற்றும் இலக்கணம் மாறுமோ என்ற பாடல் ஆகியவை ஆயிரம் முறை கேட்டாலும் அலுக்காது.

பட்டினப்பிரவேசம் திரைப்படத்தில் வான் நிலா நிலா அல்ல என்ற பாடல் தில்லு முல்லு ( 1981) திரைப்படத்தில் ராகங்கள் பதினாறு என்ற பாடல்

**(22ஆம் பக்கம் பார்க்க)**


மனைவியுடன்...






# இந்தத் தேகம் மறைந்தாலும் இசையாய் மலர்வேன்...



## 1946.06.04 – 2020.09.25



சோழ. நாகராஜன்.
மதுரை, இந்தியா

"பாடும் நிலா" என்பதே அந்தப் பாட்டுக்குயிலின் பெயராக நிலைத்துவிட்டது. அதுவோ இன்று தன் பாடும் குரலுக்கு ஓய்வு கொடுத்து விட்டது.

ஒன்றல்ல... இரண்டல்ல... ஓராயிரமா? அல்ல... அல்ல. ஒரு நாற்பதினாயிரம் பாடல்களுக்கும் அதிகம். இத்தனை பாடல்களையும் தனது எளிய ரசிக மகாஜனங்களுக்காக ஒலிப்பதிவுக் கூடத்தில் ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக குழைவுகளாலும், கமகங்களாலும் இழைத்து இழைத்து அந்த அன்றில் பறவை அள்ளியள்ளி வழங்கியிருக்கிறது.



எஸ்.பி. பாலசுப்பிரமணியம் என்ற பெயரை உச்சரிக்கும்போதே மனமெங்கும் இசையால் நிரம்பி வழியும் உணர்வைப் பெறாத தமிழர், தெலுங்கர், மலையாளி, கன்னடர், வடநாட்டு ரசிகர் என்று எவர் இருக்க இயலும்?

"இயற்கையென்னும் இளையக் கன்னி"யைத்தான் அவரின் குரல் முதன்முதலில் அழைத்து தமிழில் தனது பயணத்தைத் தொடங்கினார். 'சாந்தி நிலையம்' (மே 23, 1969) என்பதே அந்தப் பாடல் இடம்பெற்ற படத்தின் பெயர். இறுதி வரையில் தனது கோடானுகோடி ரசிகர்களுக்கு சாந்தியை மனஅமைதியை மட்டுமே வழங்கப்போவதை அப்போதே உணர்த்திய விந்தைபோலிருந்தது அந்தத் தொடக்கம்.

அதே ஆண்டு சாந்தி நிலையத்தை முந்திக் கொண்டு வெளிவந்த எம்.ஜி.ஆரின் 'அடிமைப் பெண்' (மே 1, 1969) படத்தில் "ஆயிரம் நிலவே வா" என்று அவர் தனது இளம் குரலில் அழைத்தபோது உடன் பாடிய சுசீலாவுக்கும்கூடச் சிலிர்த்ததாம்.

ஸ்ரீபதி பண்டிதாரத்யுல பாலசுப்பிரமணியம் என்கிற இயற்பெயரைக் கொண்ட அந்த இசைக் குயிலின் அளப்பரிய தடம் இந்தியத் திரைவானில் வேறு எவருமே எட்டமுடியாததாக இருக்கிறது. அதற்காக அவர் எடுத்துக்கொண்ட இசை முயற்சிகள், கடும் உழைப்பு எவரையுமே வியக்க வைப்பது. இத்தனைக்கும் மிகவும் இளகிய, கருணை நிரம்பிய உள்ளம் அவருடையது என்பதும், எல்லா மனிதர்களையும் நேசிக்கிற அவரது பாங்கு இணையற்றது என்பதும் அந்தப் பாடலரசனின் பெருமைகளுக்கு மகுடங்கள்.



தனது தேனொழுகும் தீங்குரலால் திரையிசையுலகின் சிகரம் தொட்ட பாலசுப்பிரமணியத்தின் தந்தை ஹரிகதா கலைஞர் சாம்பமூர்த்திக்கு தனது மகனை ஒரு பொறியாளராக்கி விட வேண்டும் என்கிற பெரு விருப்பம். ஆனால், தந்தையின் பாரம்பரிய இசை மரபில் ஊறி வளர்ந்த பாலுவுக்கோ பாட்டுப்பாடுவதில்தான் தீராத காதல்.

ஒரு பாடகனாக மேடைகளில் ஜொலிக்க வேண்டும் என்கிற அவரது ஆசைக்குத் தோதாகதான் முதலில் பயின்ற அனந்தபூர் ஜே.என்.டி.யு. பொறியியற் கல்லூரியிலிருந்து உடல் நலமில்லாமல் போனதைச் சாக்காகக் கொண்டு சென்னைக்கு வந்துவிட்டார்.

சென்னையில் வேறொரு கல்லூரியில் படித்துக்கொண்டே பாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகளைப் பெறுவதாகத் தொடர்ந்தன அவரது இசை முயற்சிகள். இளையராஜா, அவரது சகோதரர் பாஸ்கர், கங்கை அமரன் ஆகியோரடங்கிய ஒரு இசைக் குழுவைத் தன் பொறுப்பில் அந்த நாளிலேயே தொடங்கிய பாலு தொடர்ந்து திரைப்படங்களில் பாடுகிற வாய்ப்புகளுக்காக முயன்றுகொண்டிருந்தார்.



முதலில் தெலுங்கிலும் பின்னர் தமிழிலும் அவருக்கான வாய்ப்புக் கதவுகள் திறக்கத் தொடங்கின. டி.எம்.சௌந்தர ராஜனும், பி.பி.ஸ்ரீனிவாசும், சீர்காழி கோவிந்தராஜனும் இன்னும் சிலரும் கொடிகட்டிப் பறந்துகொண்டிருந்த தமிழ்ச் சினிமா சூழலில் ஒரு புத்தம்புது பூந்தென்றலெனப் புறப்பட்டு வந்தவர் பாலு. இளம் வயதிற்கேற்பவே இருந்தது அவரது இளமைக் குரல். ஆனாலும் அதில் அழுத்தமான இசை நுட்பங்களை உணர்ந்த இசையமைப்பாளர்கள் அவருக்கு போட்டி போட்டுக்கொண்டு வாய்ப்புகளை வழங்கினார்கள்.

பாலுவும் பாடலின் தன்மைக்கேற்ப தனது தனித்திறனோடான வித்தைகளை மெல்ல மெல்லக் காட்டி, ரசிகர்களிடையே ஒரு புது விதச் சுவையை ஊட்டினார். அவருக்கே உரித்தான அந்தத் தனித்துவ அழகை இங்கே சில பாடல்களின்வழி பார்ப்போம்.

"ஆயிரம் நிலவே வா" பாடலிலேயே சரணமொன்றில் "என்ன துடிப்போ அவள் நிலை நீ உணர மாட்டாயோ..." எனும் வரியை இரண்டாவது முறையாகப் பாடுகிறபோது அவள் நிலை என்பதை சற்றே நீட்டி அதிலொரு குழைவையும் காட்டி, அந்தப் பாடலின் சூழலுணர்வைத் தனது குரலாலேயே ரசிக மனங்களுக்குக் கடத்தி ஜாலம் புரிந்தார்.

அது அப்போதே எஸ்.பி.பி. எனும் புதுப் பாடகரின் தனிச் சிறப்பை எல்லோரும் உணர வைத்தது. பாலு தனது இசை ஆசானாகக் கருதிய மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதனுடன் சேர்ந்து முத்தான முத்தல்லவோ (1976) படத்தில் பாடிய, "எனக்கொரு காதலி இருக்கின்றாள் அவள் ஏழு சுரங்களில் சிரிக்கின்றாள்"

என்ற பாடலில் அந்த இரு இசை மகா கலைஞர்களும் சேர்ந்து வழங்கியது ஒரு இசைப் பெருவிருந்து என்றால் மிகையில்லை. அவர்களிருவரோடும் பியானோவும், வயலினும் சேர்ந்துகொண்டு அந்த விருந்தை மேலும் நல்விருந்தாக்கின.

பாடும்போது நான் தென்றல் காற்று" என்று பாலு பாடும்போதே செவிகளைத் தமிழ்த் தென்றல் வருடும். "அங்கே வருவது யாரோ அது வசந்தத்தின் தேரோ" என்று அவரது குரல் எழுப்பும் கேள்விக்கு அந்தக் குரலின் பாங்கிலேயே பதிலிருக்கும்.

"வான் நிலா நிலா அல்ல... உன் வாலிபம் நிலா" என்று பாலுவின் குரல் ஒலிக்கும்போது அதுவொரு தீர்க்கமான தீர்ப்பாகவே தோன்றும். "கேளடி கண்மணி பாடகன் சங்கதி" என்றால் அதிலொரு வேண்டுகோள் தொனிக்கும். "மூன்று தமிழும் ஓரிடம் நின்று பாடவேண்டும் காவியச் சிந்து" என்று பாடுகிறபோது அதிலொரு அரைகூவல் தெரிக்கும்.

"ராகதீபம் ஏற்றும் நேரம் புயல் மழையோ..." என்று கோபமும் சோகமுமாக அவர் கேட்கும் கேள்வியில் ஒரு கொதிப்பையே கொண்டுவந்துவிடுவார். "சிப்பியிருக்குது முத்துமிருக்குது திறந்து பார்க்க நேரமில்லடி ராஜாத்தி" என்ற வரிகளில் நேரமில்லடி என்பதை சின்ன நீட்டல் செய்து பாடுகிறபோது உண்மையிலேயே நேரமில்லை என நம்மை உணரச்சொய்யும் முயற்சி அதிலிருக்கும்.

"உனக்கென்ன மேலே நின்றாய் ஓ நந்தலாலா" பாடலின் கடைசி வரியில் "நானென்ன கள்ளா பாலா... நீ சொல்லு நந்தலாலா" என்கிறபோது தன்மீதான கழிவிரக்கத்துடன் கெஞ்சும் தொனியை கச்சிதமாகக் கொண்டுவந்திருப்பார்.


இப்படித்தான் அவரது ஒவ்வொரு பாடலிலும் பாடலின் உணர்வை உள்வாங்கிப் பாடியிருப்பார். அதுதான் அவரது தனிச் சிறப்பு. அதுதான் அவரை இந்த ரசிக உலகம் இன்றுவரையில் நெஞ்சினில் வைத்துக் கொண்டாடுவதன் ரகசியம்.

"நிலாவே வா செல்லாதே வா" என்று அவர் பாடிய பாடலை இன்று அவருக்கே பாடவைத்துவிட்டதுதான் சோகம். அவரது கின்னஸ் சாதனையான 40 ஆயிரம் பாடல்ளைப் பாடியது மட்டுமல்லாமல் 40 படங்களுக்கும் அதிகமாக அவர் இசையமைத்திருக்கிறார். பல படங்களில் ஒரு தேர்ந்த நடிகராகவும் திறமை காட்டியிருக்கிறார். நல்லதொரு தயாரிப்பாளராகவும் வலம் வந்திருக்கிறார்.

"இந்தத் தேகம் மறைந்தாலும் இசையாய் மலர்வேன்" என்ற அவரது வாக்கே அவருக்கான வாக்குமூலமாகிவிட்டது இன்று. ஆமாம், அவரது இந்தத் தேகம் இனி இருக்கப்போவதில்லை.

அவரது பாடல்கள் ஒவ்வொன்றிலும் இசையாய் மலர்ந்துகொண்டிருக்கப் போகிறார் ஒவ்வொரு நாளும் எப்போதும்போல இசையின் நறுமணத்தை நம் செவிகளிலும் உள்ளங்களிலும் நிறைத்தவண்ணம். அப்போதெல்லாம் அவரை நினைத்தாலே இனிக்கும். இனித்துக் கொண்டேயிருக்கும்!

## அற்புதக் கலைஞனுக்கு கண்ணீர் அஞ்சலி



சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம் அனைத்து உறுப்பினர்கள் சார்பிலும் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றது. இசை உலக மாமேதை நான்கு தலைமுறை ரசிகர்களின் மனதில் நீங்காத இடம்பிடித்த அற்புதமான கலைஞர் கந்தர்வ குரலோன். பத்மஸ்ரீ பத்மபூஷண் போன்ற பல தேசிய விருதுகளைப் பெற்றவர். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, மராட்டி., சம்ஸ்கிருதம் போன்ற பல மொழிகளில் 42.000. பாடல்களை பாடிய அற்புதமான கலைஞர் மக்கள் திலகம். புரட்சித்தலைவர் எம் ஜி ஆர் , நடிகர் திலகம் சிவாஜி கணேசன், காதல் மன்னன் ஜெமினி கணேசன். சூப்பர் ஸ்ரார். ரஜனிகாந்த், உலக நாயகன் கமல ஹாஸன், ஷியாம் விக்ரம், இளைய தளபதி விஜய் போன்ற மூன்று தலைமுறை நடிகர்களுக்கும் பல பாடல்கள் பாடியவர் இன்று மண்ணுலகிற்கு விடைகொடுத்து விண்ணுலகில் கந்தர்வர்களுக்கு பாடல்கள் பாட விண்ணுலகம் பயணித்துள்ளார்.

1995ல் எஸ் பி.பாலுவைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது அப்போது அந்த அற்புதகலைஞனின் பண்பை மனித நேயத்தை கண்டு வியந்தேன். அன்புடன் வரவேற்று இனிமையாக உரையாடியதை மறக்கமுடியாது.

**சபரிமலை குருமுதல்வரும்
சர்வதேச இந்துமத
குருபீடாதிபதியுமான
கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ
சாம்பசிவ சிவாச்சாரியார்**

## இசைத் துறைக்கு பெரும் இழப்பு

**ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா**

உலகப் புகழ்பெற்ற தென்னிந்தியப் பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியத்தின் மறைவு இசைத் துறைக்கு பெரும் இழப்பாகும் என மீடியாபோரம் வெளியிட்டுள்ள விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எஸ்.பி.பி. (S.P.B.) என்ற முன்னெழுத்துகளால் பரவலாக அறியப்படும் எஸ்.பி. பாலசுப்ரமணியம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, பெங்காலி, ஒரியா, துளு, படகா, மராட்டி என பல மொழிகளில் சுமார் 42,000 க்கு மேற்பட்ட பாடல்களைப் பாடி கின்னஸ் சாதனை படைத்து இந்தியாவுக்கு பெருமை தேடி கொடுத்தவர். திரைப்பட பாடகர் மட்டுமல்லாது இவர் திரைப்பட இசை அமைப்பாளர், திரைப்படத் தயாரிப்பாளர், திரைப்பட நடிகர், திரைப்பட பின்னணிக் குரல் தருபவர் எனப் பன்முக அடையாளம் கொண்டவர்.

அவர் மறைந்தாலும் அவர் பாடிய பாடல்கள் அவரை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும். அவரின் பிரிவால் கவலைப்படும் அவரது மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர் மற்றும் உலக வாழ் ரசிகர்கள் அனைவருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

**என்.எம்.அமீன்**

## பாடும் நிலா பாலு ஒரு சகாப்தம்



பாடும் நிலா என்று செல்லமாக ரசிகர்களால் அழைக்கப்பட்ட பாலசுப்பிரமணியத்தின் மறைவு உலக ரசிகர்களை அழ வைத்திருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. அவருடைய மறைவை யாராலும் ஈடு செய்ய முடியாது.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், பாடும் நிலா பாலசுப்பிரமணியத்தின் மறைவு செய்தியை கேட்டு மிகவும் மனவருத்தம் அடைந்தேன். அவருடைய பாடல்களை இன்று மட்டுமல்ல இன்னும் பல தலைமுறைகள் கேட்க கூடியதாக இருக்கும்.அவர் எம்மை விட்டு பிரிந்தாலும் அவருடைய பாடல்கள் ஒரு போதும் எம் மனதை விட்டு மறையாது.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த பொழுது அவரை நான் நேரில் சந்தித்தேன். மிகவும் எளிமையான ஒரு மனிதர்.அனைவருடனும் மிகவும் அன்பாக பழகக்கூடிய ஒரு மனிதர். அவர் ஒரு நாளும் தான் ஒரு மிகப் பெரிய கலைஞன் என்பதை வெளிப்படுத்தியதில்லை. அவருடைய அந்த குரலை இன்று மட்டு மல்ல என்றுமே நம்மால் மறக்க முடியாது. அவருடைய உடல் எம்மை விட்டு பிரிந்தாலும் அவருடைய பாடல்கள் என்றும் எம் மனதில் நீங்காத இடம்பிடித்திருக்கும்.

**பாராளுமன்ற உறுப்பினர்
வீ.இராதாகிருஸ்ணன்**

## இசை உலகமே ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ளது



காற்றலைகளூடாக எமது நெஞ்சங்களில் கலந்து, இதயங்களை ஒன்றிக்கச் செய்த காவியக் குரலோன் எஸ்.பி.பாலசுப்ரமணியம், காலதேவனின் அழைப்பில் எம்மைப் பிரிந்தமை கடும் கவலையளிப்பதாக மேல்மாகாண முன்னாள் ஆளுநரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அஷாத் சாலி தெரிவித்துள்ளார்.

உலகப் புகழ் பாடகர் எஸ்.பி.பியின் மறைவு குறித்து, அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது, 'இசை உலகில் அசத்தல் சாதனையாற்றிய மிகப்பெரிய கலைஞன் அமரத்துவம் அடைந்ததால், தமிழ் பேசும் உலகம் மட்டுமல்ல இசை உலகமே ஆறாத் துயரில் ஆழ்ந்துள்ளது.

சுமார் ஐம்பதாயிரம் பாடல்களைப் பாடிய அவரது சாதனைகள் காலத்தால் நிலைக்கப் போவது நிச்சயம். அமரர் எஸ்.பி.பியின் தொண்டைக்குள் எத்தனை மொழிகள் தஞ்சம் கிடந்தன. அவ்வாறான ஒருவர் இன்று நிரந்தர ஓய்வுக்காக மரணத்தில் தஞ்சமடைந்து, உலகுக்கு விடைகொடுத்துவிட்டார்.

## என்னில் ஒரு அங்கம் கழன்று விட்டதை உணர்கிறேன்..!



அழ நினைக்கிறேன்..! அழுகையில்லா, கண்ணீரில்லா, வெறுமை உணர்வு தான் எனக்குள் எழுகிறது..!

பறக்கும் விமானத்திலிருந்து, இறக்கை கழன்று விழுந்து விட்டது போல, என்னில் ஒரு அங்கம் கழன்று விட்டதை உணர்கிறேன்..!

எஸ்.பி.பி இல்லாத உலகில், இனி நான் ஒரு அங்கவீனனாகவே வாழப்போகிறேன்..!

எனக்கு காதலிக்க கற்று கொடுத்த காதலன்..!

என் இளமை முழுக்க என்னோடு வாழ்ந்த நண்பன்..!

இன்றும் என் கடந்த கால நினைவுகளை மீட்பவன்..!

நிகழ்கால துயரங்களை கொலை செய்யும், கொலைகாரன்..!

**பாராளுமன்ற உறுப்பினர்
மனோ கணேசன்**

# களனி பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

2020 ஒக்ரோபர் 15 ஆம் திகதி வரையும் களனி பல்கலைக்கழகமானது பொருத்தமான தகைமையுள்ள நபர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும்.

### நிரந்தரமான பதவிகள்

**சமுக விஞ்ஞானங்கள்**

1. **சமுகவியல் திணைக்களம்**
விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/ விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I.
2. **புவியியல் திணைக்களம்**
விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/ விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I

**விஞ்ஞான பீடம்**

1. **புள்ளிவிபரம் மற்றும் கணனி விஞ்ஞானம்**
விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I
2. **கைத்தொழில் முகாமைத்துவ திணைக்களம்**
விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I

**வேலைவாய்ப்பு வழிகாட்டல் பிரிவு**

வேலைவாய்ப்பு வழிகாட்டல் ஆலோசகர் தரம் II.

**விண்ணப்பிக்கும் முறைமை:**

மேலேயுள்ள பதவிகளுக்கான விதிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதி பதிவாளர்/கல்விசார் தாபனங்கள் இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அல்லது **www.news.kln.ac.lk** என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். விண்ணப்பப்படிவங்களை தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 23x10 செ.மீ. என்ற அளவிலான சுயமுகவரியிடப்பட்ட, முத்திரை ஒட்டப்பட்ட உறையொன்றை அனுப்புதல் வேண்டும். 2020 ஒக்ரோபர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளுடனான விண்ணப்பங்கள் பிரதி பதிவாளர்/ கல்விசார் தாபனங்கள், களனி பல்கலைக்கழகம், களனி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் சமர்ப்பித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத, தெளிவில்லாத அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிப் பெயர் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

2019.04.12 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட வேலைவாய்ப்பு வழிகாட்டல் ஆலோசகர் என்ற பதவிக்காக விண்ணப்பித்தவர்கள் புதிய விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் அவர்களது நிறுவன தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் தெரிவுப் பட்டியலை தயாரிப்பதற்கான உரிமையை பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம், களனி.**
**23.09.2020**


## பெண்கல்விக்கு சிகரம்... (18ஆம் பக்கத் தொடர்)

கல்விப் புலத்துக்கென நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதிய இவர், சமுதாயக்கல்வி , கல்வித்தத்துவம் , நவீன முறையில் தமிழ் மொழி கற்பித்தல் உட்பட ஒன்பது நூல்களையும் எழுதியுள்ளார். அவரது 60 ஆவது அகவை பூர்த்தியையொட்டி ராஜ ஜெயம் என்ற பெயரில் 60 கட்டுரைகள் கொண்ட நூலை அவரது மாணவர்கள் இன்று வெளியீடு செய்கின்றனர்.

## எஸ்.பி.பி: காதலிக்க வந்த கலைஞன்... (20ஆம் பக்கத் தொடர்)

'வறுமையின் நிறம் சிகப்பு (1980) படத்தில் வரும் 'சிப்பி இருக்குது முத்தும் இருக்குது' 'தீர்த்தக்கரையினிலே' ' நல்லதோர் வீணை செய்தே' என்ற ஏராளமான பாடல்களை மறக்கமுடியாத பாடல்களாக அமைத்திருக்கின்றன.

47 நாட்கள் (1981) என்ற திரைப்படத்தில் எஸ் பி பாலசுப்ரமணியம் மான் கண்ட சொர்க்கங்கள் என்ற பாடலை பாடியிருப்பார் அந்தப் பாடலை கேட்பவர்களுக்கு தெரியும் கிளாசிக் என்றால் என்னவென்று. மிக நீண்ட பாடல். அதைத் தன் குரல் ஒன்றாலேயே தூண்போல் நிலை நிறுத்துகிறார் பாலு. இதே எம்எஸ்வி கமல் எஸ்பிபி கூட்டணியில் இன்னொரு மகத்தான பாடல் சிம்லா ஸ்பெஷல் (1982) திரைப்படத்தில் வரும்' உனக்கென்ன மேலே நின்றாய் 'என்ற பாடல்.

ஒரு பாடல் எந்த கட்டத்தில் இருக்கிறது அந்தப் பாடலைப் பாடும் நாயகன் எந்த உணர்வுடன் அந்தப் பாடலைப் பாடுகிறான் என்பதை முழுமையாக உள்வாங்கி அந்த உணர்வை நூற்றுக்கு நூறு சதவிதம் வெளிப்படுத்தும் ஆற்றல் எஸ் பி பாலசுப்ரமணியம் அளவுக்கு யாருக்குமே இருந்ததில்லை அவர் முறையாக இசை படித்ததில்லை என்றாலும் இந்த உணர்வு பூர்வமாக பாடும் பணியினால் அவர் மிகப் பெரும் வெற்றி பெற்றவராக அமைந்தார்.

## பி. மரியதாஸ் அவர்களின் அனுபவப் பகிர்வுகள்... (08ஆம் பக்கத் தொடர்)

ஆர்.எஸ்.மணி, மு. நித்தியானந்தன் போன்ற படைப்பாளிகளின் ஆற்றல் வெளிப்பட்டது.

1970 களின் இறுதிப்பகுதியில் மலையக மக்களின் வாழ்க்கையில் சோதனைமிக்க காலகட்டமாக இருந்தது.

பெருந்தோட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்டமை, தொழிலாளர்கள் தோட்டங்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற்பட்டமை, பஞ்சம், 1971 மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கிளர்ச்சி ஒடுக்கப்பட்டமை, வலதுசாரி அரசியலும், தொழிற்சங்கங்களும் வலுப்பெற்றமை, அட்டவணைப்படியிலான 1977, 1983, 1989 இன் வன்செயல்கள் ஆகியவை சமூக எழுச்சியின் குரல்வளையினை நசுக்கின. இதனால் கூட்டிணைப்புச் செயற்பாடுகள் நலிவடைந்தன.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றமும் இதற்கு விதிவிலக்காகவில்லை. சுருதி குறைந்த வீறு குன்றிய, ஆனால் நின்று நிலைக்கும் அமைப்பாக செயற்பட்டுக் கொண்டிருந்தது.

## மலையகத்தில் மது மட்டுமல்ல போதைப்... (08ஆம் பக்கத் தொடர்)

பாடசாலை வளவுக்குள் இடம்பெறுவதாக கூறப்படும் சில விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு மதுப்பழக்கமும் போதைவஸ்து பாவனையும் கூட உந்துதலாக இருக்கலாம். மலையகத்தில் புத்திஜீவிகள் தரத்தில் வைத்துப் பார்க்கப்பட வேண்டிய சிலரும் மது பாவனைக்கு ஆளாகியுள்ளார்கள். சில இடங்களில் பெண்களும் மதுவருந்தும் பழக்கத்துக்கு அடிமையாகி வருகின்றார்கள்.

இவர்கள் சட்டவிரோத மது உற்பத்தியிலும் விற்பனையிலும் ஈடுபட்ட சங்கதிகளும் உண்டு. இதனால் சமூக கலாசார சீர்கேடுகளும் ஏற்பட இடமுண்டு.

இன்று கொழும்பு போன்ற நகரங்களில் ஆயிரக்கணக்கான மலையகத்தவர்கள் தொழில் புரிகிறார்கள். ஒரு சிலர் நல்ல உத்தியோகங்களில் இருக்கின்றார்கள்.

இவர்களின் குடும்பச் சுமையைத் தலையில் தாங்கியே தொழிலுக்கு வந்தவர்கள். மாதாந்தம் 30,000 ரூபா வரை உழைக்க முடிகிறது. எனினும் சிலர் இரவு நேரங்களில் மது பிரியர்களாகவும் இதர உல்லாசங்களில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் மாறி விடுகின்றார்கள். இதனால் வியர்வை சிந்தி தேடிய பணம் வீண் விரயமாகிறது. உடல் கெடுகிறது. இவா்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் குடும்பத்தினரின் அபிலாஷைகளை பூரணமாக்க முடியாமல் போகிறது. திட்டமிடாத ஒரு வாழ்வு சுழற்சியால் இவர்களின் உழைப்பின் பெறுமானம் பயன்படாமலே போகிறது.

இப்படியானவர்கள் தோட்டங்களுக்கு திரும்பும்போது அங்கு குடிப்பழக்கமில்லாதவர்களையும் கூட குடிக்கத் தூண்டுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

மலையகத்தில் காணப்படும் மது விற்பனை நிலையங்களை முற்றாக மூடிவிடுவது என்பது நடக்கக் கூடிய காரியமல்ல. தேசிய ரீதியில் மதுவிலக்கு அமுலுக்கு வந்தால் மட்டுமே இது சாத்தியம். எனினும் அதற்கான பின்புலம் காணப்படவில்லை. ஆனால் பொதுமக்கள் நடமாட்டத்துக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் மது விற்பனை நிலையங்கள் அகற்றப்பட வேண்டும். பெருகிவரும் சட்டவிரோத மது உற்பத்திக்கு எதிரான நடவடிக்கைகள் முடக்கிவிடப்படுவது நல்லது. அகப்படும் மது உற்பத்தியாளர் அசால்டாக அபராதம் செலுத்தி விட்டு வெளிவரும் நிலை மாறவேண்டும். இதற்கான தண்டனை கடுமையாக்கப்படுவதே சாலச்சிறந்தது.

இளைஞர் சமூகத்தை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்பட்டு வரும் போதைவஸ்து விற்பனை முறியடிக்கப்பட வேண்டியது முக்கியம். இவையெல்லாம் அரசாங்கத்தால் மட்டும் நிறைவேற்றி முடிக்கக்கூடிய காரியமல்ல. பொதுமக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்க வேண்டும். இதற்கு மலையக சமூகத்திடம் பூரண விழிப்புணர்வு தேவைப்படுகின்றது.

எனவே மதுபாவனை ஒழிப்பு, போதை வஸ்து பாவனைக்கெதிரான விழிப்பு இன்றைய நிலையில் அவசரத் தேவை என்பதை மறுக்க முடியாது.

எல்லாம் சரிதான்.

பூனைக்கு மணிகட்டப் போவது யார்?

ஊகூம்.... பழக்கப்பட்டு விட்டதைப்போல பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!


## எல்பிட்டிய பிளாண்டேஷன் பிஎல்சி

# கேள்வி அறிவித்தல்

**கீழ்க்காணும் மரங்கள் விற்பனை செய்வதற்காக கேள்விச் சபையினால் பொறியிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.**

| தோட்டத்தின் பெயர் மற்றும் முகவரி | தொலைபேசி இலக்கம் | பிரிவு | துறை இல | மரங்களின் மொத்த எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| தெவிநுவர எஸ்டேட் எக்கந்துர | 091 4943036 | பொல்கஹவில | 8.96 Ha | இறப்பர் | 2,600 |
| | | | 07 (2.63 Ha) | | 721 |
| | | | 4.88 Ha | அல்பீசியா | 25 |
| | | கோனடிபல | 9 (3.00 Ha) | | 28 |
| | | | 8 (1.92 Ha) | | 06 |
| லெல்லவல எஸ்டேட் வந்துரம்ப | 091 4943043 | மேல் | 3.30 Ha | அல்பீசியா | 07 |
| | | | 1.50 Ha | | 02 |
| | | | 1.00 Ha | | 01 |
| | | | 6.00 Ha | | 02 |
| | | | 2.36 Ha | | 01 |
| | | கீழ் | 1.70 Ha | | 15 |
| பெந்தொட்ட எல்பிட்டிய எஸ்டேட் | 091 4943051 | வடுமுல்ல | 2.43 Ha | அல்பீசியா | 05 |
| | | | 3.47 Ha | | 02 |
| | | | 17.00 Ha | | 02 |
| | | அத்துகோரள | 1.17 Ha | | 18 |
| | | நாகொட | 4.77 Ha | | 09 |
| | | | 7.29 Ha | | 02 |
| குளுகஹகந்த எஸ்டேட் வந்துரம்ப | 091 4943040 | சிட்ரஸ் | 1.15 Ha | அல்பீசியா | 07 |
| | | | 0.82 Ha | | 01 |
| | | பிரகத்தி | 9.17 Ha | | 01 |
| | | | Near Factory | | 04 |
| | | | 6.12 Ha | | 03 |
| | | | 1.00 Ha | | 05 |
| | | | 5.91 Ha | | 05 |
| | | | 10.10 Ha | | 02 |
| எல்பிட்டிய எஸ்டேட், எல்பிட்டிய | 091 4943032 | கிராகொட | 15.00 Ha (Rubber) | அல்பீசியா | 28 |
| | | | 15.00 Ha (Oil Palm) | அல்ஸ்டோனியா | 03 |
| | | | 10.94 Ha | அல்பீசியா | 12 |
| | | | 15.16 Ha | அல்ஸ்டோனியா | 04 |
| | | | 8.50 Ha (A) | | 03 |
| | | | 8.50 Ha (B) | | 01 |
| | | எல்பிட்டிகந்த | 5.25 Ha | அல்ஸ்டோனியா | 155 |
| | | | | அல்பீசியா | 02 |
| | | | 5.88 Ha | அல்ஸ்டோனியா | 28 |
| | | | 8.22 Ha | | 09 |
| | | | 11.00 Ha | அல்பீசியா | 04 |
| | | | | அல்ஸ்டோனியா | 02 |
| | | கித்துல்விட்டிகல | 33.90 Ha | அல்பீசியா | 11 |
| | | | | அல்ஸ்டோனியா | 03 |
| | | | 12.00 Ha | அல்பீசியா | 08 |
| | | | | அல்ஸ்டோனியா | 03 |
| | | | 13.00 Ha | அல்பீசியா | 01 |
| | | | 1.93 Ha | | 02 |
| | | | | அல்ஸ்டோனியா | 01 |
| | | | R/F Premises | அல்பீசியா | 05 |
| | | | | அல்ஸ்டோனியா | 04 |

எல்லா கேள்விகளும் பொறியிடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மரங்களின் விற்பனை" என்று குறிப்பிடப்பட்டு, 2020 ஒக்டோபர் 09 பி.ப.4.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு எல்பிட்டிய பிளாண்டேஷன்ஸ் பிஎல்சி, பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு துறைக்கும் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ.1000/- மற்றும் மீளளிக்கப்படும் வைப்பாக 5000/- செலுத்துவதன் பேரில், கொழும்பு 02, வொக்ஷோல் வீதி, 305, எயிட்கென் ஸ்பென்ஸ் டவர் - 01 9ஆம் மாடியில் உள்ள எல்பிட்டிய பிளாண்டேஷன்ஸ் தலைமையகத்தில் அல்லது சம்பந்தப்பட்ட தோட்டங்களில் இருந்து 2020 ஒக்டோபர் 09ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப.8.30 முதல் பி.ப.4.00 இற்கு இடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தோட்டங்களின் முகாமையாளருடன் முன் ஏற்பாட்டின் கீழ் 2020 ஒக்டோபர் 09 மு.ப.8.30 முதல் பி.ப.4.00 வரை வேலை நாட்களில் சகல மரங்களையும் பரிசீலிக்கலாம்.

விலைமனுக்களை பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கலாம். அல்லது தலைமையகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்யலாம். எவ்வாறெனினும் எந்த காரணமும் கூறாமலேயே எந்த அல்லது எல்லா விலைமனுக்களையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் உரிமையை எல்பிட்டிய பிளாண்டேஷன்ஸ் பிஎல்சி கொண்டிருக்கும்.

**பிரதம நிறைவேற்று அலுவலர்**
**எல்பிட்டி பிளாண்டேஷன் பிஎல்சி**
**9ஆம் மாடி, எயிட்கென் ஸ்பென்ஸ் டவர் 01**
**305, வொக்ஷோல் வீதி, கொழும்பு -02.**
தொ.பே - 0114693000


## இடிந்து விழுந்தது கட்டடம்... (03ஆம் பக்கத் தொடர்)

காதலித்து பல கனவுகளுடன் கடந்த வருடம் நவம்பரில் திருமணம் முடிந்த தம்பதியினர் குழந்தொயன்றுடன் வாழக்கையை மகிழ்ச்சியுடன் ஆரம்பித்த வேளையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கணவன் ஹோட்டலை கவனிக்க, மனைவி திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் என வாழ்க்கை மகிழ்ச்சியாகவும் போய்க் கொண்டிருந்தபோதே பக்கத்து கட்டடம் சரிந்து மூவரும் உயிரிழந்துள்ளனர். மரணம் எவ்வளவு சூட்சுமமாக மனிதர்களை நெருங்குகிறது பார்த்தீர்களா? ஒரு வீடு கட்டுவதனால் முதலில் காணியின் தன்மை, அதன் மண் தன்மை, மண்ணின் இறுக்கம், மண்ணின் ஆழம், காணியின் அளவு, காணியின் கீழ் காணப்படக்கூடிய நீரோட்டம், காணியின் மீதான நிரோட்டம், சுவாத்தியம், போன்ற அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். வாஸ்து சாஸ்த்திரத்தினை நம்புவோர் வாஸ்து சாஸ்த்து முறைபடி வீடுகளை அமைப்பார்கள். சில்ர் பஞ்சபூதங்களான நீர், நிலம், நெருப்பு, காற்று ஆகாயம் என்பவற்றின் பார்த்தே கட்டடம் அமைப்பார்கள். அமைவிடம் ஆனால் இடிந்து விழுந்த இந்த கட்டடமோ மரங்கள் வெட்டி போடப்பட்ட குப்பைகள் போடப்பட்ட, கால்வாய் ஒன்றை நிரப்பி சரிவான இடத்தில் கட்டப்பட்டுள்ளது. இங்கு மலை நீர், வழிந்தோட போதிய இடமில்லை. இந்த இடம் வீடுகட்ட பொருத்தமற்ற இடம் என இப்பகுதியில் வசிக்கும் குணவதி (80)யின் கருத்து. அவர் இப் பகுதியில் பிறந்து வளர்ந்தவர்.

வீடுகட்டும் போது 2006ஆம் ஆண்டு இரு மாடி வீட்டுக்கே மாநகரசபை அனுமதி பெறப்பட்டதாகவும் இது பிற்காலத்தில் எவ்வித அனுமதியின்றி மாடி மேல் மாடியாக கட்டப்பட்டதாகவும் முன்னாள் மாநகரசபை உறுப்பினர் குணரத்ன கூறுகிறார். தற்பொழுது ஐந்து மாடிக்கான அனுமதி உள்ளதா என்பதை அறிந்து கொள்வதில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இனி, இடிந்த வீட்டின் உரிமையாளர் அனுர லெவுக்கே தொடங்வெல நாத்த தேவாலய என்பவர் யார் என்று பார்ப்போம். இவர் முன்னாள் பஸநாயக்க நிலமே. கண்டி நாத்த தேவாலய பஸநாயக்க குழவிலும் ஓர் உறுப்பினர். கண்டி எசல பெரகராவில் ஒரு பஸநாயக்க நிலமேயாக இருந்தவர். இவரது உறவினர்கள் பலர் பொலிஸ் உயர் அதிகாரிகள் என கூறப்படுகிறது. எனவே இவரும் செல்வாக்கான நபர்தான்.

இறந்த கணவன் ஒரு ஹோட்டல் உரிமையாளர். இவரும் லெவுக்கேயும் உல்லாச பயணிகளுக்கு வாடகைக்கு அறை வழங்குபவர்கள். உல்லாசப் பயணிகளின் வருகை 2010 இன் பின் அதிகரித்தமையால் லெவுக்கேயின் வீடும் ஐந்து மாடி வரை படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு அனுமதி எடுக்கப்பட்டதா என்பது கேள்விக்குறியாகும். தேசிய கட்டிட ஆய்வு நிலையத்தில் நான்கு மாடி கட்டுவதற்கு அனுமதி எடுக்கப்பட்டதாக ஒரு தகவல் உண்டு. அப்படியானால் ஐந்தாம் மாடி அனுமதியற்ற கட்டடம் என்றே கொள்ள வேண்டும். இக்கட்டிடம் கட்டப்பட பயன்படுத்தப்பட்ட கம்பிகள், கொங்றீட்டுகள், பாவிக்கப்பட்ட கட்டடப் பொருட்கள் என்பனவற்றின் மாதிரிகள் ஆய்வுக்காக தேசிய கட்டட ஆய்வு நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. பரிசீலனையின் பின் இது பற்றி உண்மை துலங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது

விசாரணையின் போதும், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சமயத்தில் ஐந்து மாடி உரிமையாளர் அநுர லெவுக்கே, தமது வீடு தகுந்த அனுமதியுடன்தான் கட்டப்பட்டதாக கூறினாலும் அதற்கான அனுமதிபத்திரங்கள் வீட்டோடு புதைந்த விட்டதாக கதையை முடிந்து விடுகிறார். இதனாலேயே விசாரணை செய்வோருக்கு சந்தேகம் எழுந்துள்ளது. அனுமதி வழங்கும் கண்டி மாநகரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய கட்டட ஆய்வு நிலையம் ஆகியவற்றில் வழங்கப்பட்ட அனுமதியின் முதற் பிரதிகள் உள்ளன என்பதை அறியும் வகையில் விசாரனைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அன்றைய இரவு தொடர்பாக லெவுகே என்ன சொல்கிறார்? இரவு ஒரு மணி வரை மகள் படித்து கொண்டிருந்ததாகவும் மகள் இம்முறை க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ளார். மகளுடன் நானும் ஒரு மணிவரை இரவு தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு விழித்திருந்தேன். பின்னர் அதிகாலை பக்கத்து வீட்டுகாரர் உங்கள் வீட்டு தூண்முறிந்துள்ளது என்றும் முறியும் சத்தம் கேட்பதாகவும் என்னிடம் கூறியதோடு டோச் லைட் வெளிச்சத்தில் அதனை காட்டினார்.

இதேசமயம் மூன்றாம் மாடியில் உறங்கிக்கொண்டிருந்த மகன் அம்மாவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வீட்டில் சத்தம் கேட்கிறது, கட்டடம் சரியும் போல் தெரிகிறது என்று கூறியிருக்கிறான். உடனே நால்வரும் வீட்டை விட்டு வெளியேறினோம் வெளியே வரும் போது நாய் எதிர்படவே அதையும் எடுத்து கொண்டு காரில் ஏறினோம். காரை ஸ்டார்ட் பண்ணும் போது நிலத்தில் பெரிய வெடிப்பு காணப்பட்டது. வெடிப்பின் மீதாக காரை ஓட்டிச்சென்றோம். சுவர்களில் வெடிப்பும், நில தரை ஓடுகள் வெடித்து மேலெழுந்து காணப்பட்டன.

இதைப் பார்த்தே அம்மாவுடன் தொலைபேசியில் இதைச் சொன்னேன். காலை 5.00 மணி' வெளியே சென்று 5.07க்கு பொலிசுக்கு தொலைபேசி ஊடாக தகவல் கொடுத்து வீடு சரியப் பார்க்கிறது ஏதாவது செய்யுங்கள் எனக் கூறினோம். 5.07 க்கு வீடு சரிந்து விழுந்தது லேக் கிளப் வீதியிலிருந்து அதனை நாங்கள் அவதானித்தோம் என்று இவர் கூறியுள்ளார். அப்போது 119 இலக்கம் ஞாபகம் வராததால் கண்டி பொலிஸாருக்கு அழைப்பு விடுத்ததாகவும் தன் பக்கத்து நியாயத்தைச் சொல்லும் இவர் ஆதாரத்துக்கு தெலைபேசியையும் காட்டுகிறார். ஆனால் அப்படியொரு அழைப்பு தமக்கு வரவில்லை என்பது பொலீஸார் வாதம்!.

இவர்கள் வெளியே சென்று தொலைபேசி அழைப்பை எடுத்திருக்கலாம். எம்மைப் பொறுத்தவரை மூன்று மணியளவிலேயே இவர்கள் வீட்டை விட்டு வெளியேறி இருக்க வேண்டும் என்பது அயலவரின் சந்தேகம்.

கட்டடம் இடிந்து பக்கத்து வீட்டில் விழுந்ததால் மூவர் உயிரிழந்து இருவர் தப்பிப் பிழைத்தனர். இவர்கள் என்ன சொல்கிறார்கள்?

கட்டடம் இடியப்போகிறது என்பதை கடைசி தருணத்திலாவது எமக்கு தெரியபடுத்தியிருந்தால் அந்த மூவரும் உயிர் பிழைத்திருப்பார்கள். மூவர் அநியாயமாக இறந்துள்ளனர் என்று கூறும் இவர்கள் மூன்று மணியளவில் பொருட்களுடன் செல்லாமல் கொள்ளாமல் இவர்கள் பாதுகாப்பாக வெளியேறி தப்பி விட்டார்கள் என்பது இவர்களின் குற்றச்சாட்டு.

"விசாரணைகளிலிருந்து உண்மைகள் துலங்கும் அதன் பின் தகுந்த நடவடிக்கை எடுப்போம். அதற்கேற்ப வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுப்போம்" என கண்டி பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி எ. மாரசிங்க தெரிவித்துள்ளார்.

அநுர லெவுக்கே குடும்பத்தினர் வெளியேறிய நேரம் குறித்து பொலிஸாருக்கு சந்தேகம் எழுந்துள்ளது. அவர்கள் கூறுவது போல் வீட்டு சாமான்கள் நாய் மற்றும் ஐந்தாம் மாடியிலுள்ளவகள்', மூன்றாம் மாடியிலிருந்த மகன் ஆகியோர் ஏழு நிமிடங்களில் வெளியேறியிருக்க முடியாது என்பது பொலிஸ் தரப்பின் சந்தேகம். இவை இப்படி இருக்க இறந்தவர்களது சடலங்கள் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு புதன் கிழமை மாலை கண்டி மகியாவை மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டன. இதில் கலந்துகொண்ட உறவினர்கள் ஆத்திரத்துடன் பேசினர். மரண தண்டனைக்குரிய குற்றம் அல்லவா இது எனக் குமுறினர். இம் மரணச்சடங்கில் கலந்துகொள்ள இறந்தவரது மூத்த சகோதரன் வெளிநாட்டிலிருந்து வந்தார். கொவிட் காராணமாக 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள அவர் அம்புலன்ஸ் வண்டியில் மயானத்துக்கு அழைத்து வரப்பட்டு வண்டியிலிருந்தே சகோதரனின் சடலத்தைப் பார்வையிட வசதி செய்து தரப்பட்டிருந்தது. எனது தம்பி மீண்டும் எனது சகோதரனாகவே அடுத்த ஜென்மத்திலும் பிறக்க வேண்டும் எனவும் அவர் கதறி அழுதார்.

கண்டி மக்களின் இப்போதைய எதிர்பார்ப்பெல்லாம், இம் மரணங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் காரணமாக இருந்திருக்கக் கூடியவர்களுக்கு எத்தகைய தண்டனைகளை, எவ்வளவு சீக்கிரத்தில் அரசு அதிகாரிகள், அரசியல் தலையீடுகளின்றி, பெற்றுத்தரப் போகிறார்கள் என்பதாகவே உள்ளது.



# சிறுவர் உலகம்

- சிங்கம் -

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 290

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | 08 | 09 | |
| 10 | 11 | | 12 | | 13 |
| 14 | | 15 | | | 16 |
| | | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | | 25 |

பெயர் ..................................................
வகுப்பு ..................................................
பாடசாலை பெயர் ..................................................
பாடசாலை முகவரி ..................................................
..................................................

.............................. ........................................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் / பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

1. அரசன் குடியிருக்கும் மாளிகை.
7. கற்றோரை தானாகவே தேடி வருவது. ஆசைப்படுவோர் தாங்களாகவே தேடிச் செல்ல வேண்டும். இது கிடைத்து விட்டதும் மமதை கொள்வது தவறு. (தலைகீழான சொல்)
10. பறவையினம். நீரின் மேற்பரப்பில் மிதந்து செல்லவும், பறக்கவும் இதனால் இயலும். (தலைகீழான சொல்)
17. மாணவச் செல்வங்களான உங்களின் கல்விக் கூடம்.
21. தண்டுப் பகுதியில் இனிப்புச் சாறு கொண்ட, ஒரு வித்திலைத் தாவரம்.

### மேலிருந்து கீழ்

1. அர்த்தம் புரியாத சொற்களுக்கு பொருள் தேட வேண்டுமானால் இப்புத்தகம் எமக்குத் தேவை.
3. அண்ணாந்து மேலே பார்த்தால் தெரிவது இதுதான். (தலைகீழான சொல்)
4. சமயம், கடும் சீற்றம் போன்ற அர்த்தங்கள் தருகின்ற சொல்.
5. தென்னை போன்று இதுவும் கிளைகள் விடாமல் உயரமாக வளருகின்ற ஒருவித்திலைத் தாவரம். (தலைகீழான சொல்)
13. பென்சில் தயாரிப்புக்கான மூலப் பொருள். காபனின் பல்பகுதியம். மின்சாரத்தைக் கடத்தவல்லது. (தலைகீழான சொல்)
15. வானத்தில் தென்படுகின்ற வெண்பஞ்சு கூட்டங்கள்.
18. மாடுகளுக்கு இதுதான் உணவு. (தலைகீழான சொல்)

**குறுக்கெழுத்துப் போட்டி**
**இல. 290 சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834. கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 289

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. குருவிச்சை 08. தோணி 11. அணை 14. கிவி 16. வீதி 20. குவலயம்

**மேலிருந்து கீழ்**

01. விளக்கு 03. அடவி 05. தோசை 09. ஆணி 12. வீணை 15. வங்கி 17. தினம்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 288 பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு:**
ச. சஞ்ஜனா,
தரம் 12,
மட்/விஸ்ணு மகா வித்தியாலயம்,
வந்தாறுமூலை.

**இரண்டாம் பரிசு:**
எம்.எச். ரீமா,
தரம் 10D,
கு/பரகஹதெனிய தேசிய பாடசாலை,
வேவுட.

**மூன்றாம் பரிசு:**
ஏ.எஸ்.எம். அஷ்பாக்,
தரம் 09,
கிரி/கெகுணகொல்ல தேசிய பாடசாலை,
கெகுணகொல்ல.

## பாராட்டு பெறுவோர்

**1. எம்.என்.எப். நிப்லா,**
தரம் 13A,
மதீனா தேசிய பாடசாலை,
சியம்பலாகஸ்கொடுவ.

**2. நா. அம்சாயினி,**
தரம் 12B,
தி/ஸ்ரீசண்முகா வித்தியாலயம்,
திருகோணமலை.

**3. சி. பவதாரணி,**
தரம் 08,
ஊவா விஞ்ஞான கல்லூரி,
ஹாலி எல.

**4. கே. ஹஜிஸ்தா,**
தரம் 08,
கமு/கமு அல் மினார் மகா வித்தியாலயம்,
மருதமுனை.

**5. எம்.சீ.எப். ஷீமா,**
தரம் 05, மா/அல்மினா ஆரம்பப் பாடசாலை,
எல்கடுவ,
உக்குவளை.



குறளமுதம் :

**அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாம் தரும்.**

**தெளிவுரை :** அறமாகிய செயல் எது என்றால் ஓர் உயிரையும் கொல்லாமையாகும்; கொல்லுதல் அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் விளைக்கும்.

## ஒழுக்கக் கல்வி



இன்று உலகில் கல்வி என்பது இலாபத்தை ஈட்டக்கூடிய ஒரு தொழிலாகவே மாறி விட்டது. இத்தகைய கல்வி நிலையங்களில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி வாழ்வியல் விழுமியங்களை சொல்லிக் கொடுப்பதற்கு பதிலாக, பொருளாதாரத்தையும், அறிவையும் பெருக்க மட்டுமே பயன்படுகிறது. கல்விக் கூடங்களில் பயிலும் மாணவர்கள், சமுதாயத்துக்கு மதிப்பளிக்கக் கூடியவர்களாகவும், சமுதாய உயர்வுக்கும், நன்மைக்கும் பாடுபடுபவர்களாகவும் பிறருக்கு துன்பம் இழைக்காமல் வாழக் கூடியவர்களாகவும் வளர வேண்டும்.

எதிர்கால சமுதாய முன்னேற்றத்திற்கு இத்தகைய கல்வி முறையே வேண்டும். எழுத்தறிவு, தொழிலறிவு இவற்றோடு இயற்கைத் தத்துவ அறிவு மற்றும் ஒழுக்க பழக்கங்கள் இவை இணைந்த கல்வி உலகில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும், இலவசமாக வழங்கப்பட வேண்டும். இதுவே சிறந்த கல்விமுறையாகும்.

**சோ. வினோஜ்குமார்,**
தொழில்நுட்ப பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்,
கிளிநொச்சி.

## இவ்வார மழலை



**எஸ்.முகம்மட் அயாட்,**
எம்.சாஜித் - எம்.சப்னா,
அல்அக்ஸா வீதி, கிண்ணியா 02.

## குறை சொல்லலாமா?

தேன்மலைக் காடு செழிப்பாக இருந்தது. மான், முயல், நரி, அணில் போன்ற விலங்குகள் அன்போடு பழகி வந்தன. அவற்றில் அண்ணன் தம்பிகளான இரு குரங்குகளும் இருந்தன. அவை இரண்டும் எப்போதும் மற்றவர்களைக் குறை சொல்லிக்கொண்டே இருந்தன.

அண்ணன் குரங்கின் பிறந்தநாள் வந்தது. அதனை அறிந்த அணில், அழகான பூச்செண்டைக் கொடுத்து, வாழ்த்துச் சொன்னது.



"இந்த வாடிப்போன பூக்களை எல்லாம் எங்கே பறித்து வந்தாய்? வேறு நல்ல பூக்கள் கிடைக்கவில்லையா?" என்று கேட்டது அண்ணன். அதைக் கேட்டு அருகில் நின்றிருந்த தம்பி சிரித்தது. அணிலின் முகம் வாடிவிட்டது.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த மான், "அணில் எவ்வளவு அன்போடு உனக்குப் பூச்செண்டு கொடுத்திருக்கிறான். அவனுக்கு நன்றி சொல்வதை விட்டுவிட்டு, இருவரும் அவனைக் கேலி செய்ததில் எந்த நியாயமும் இல்லை" என்றது.

"மானே, இந்தப் பூக்களை வைத்து நாங்கள் என்ன செய்ய முடியும்? இலைகளாக இருந்தாலாவது உனக்குத் தின்னத் தந்திருப்போம்" என்று தம்பி சொன்னது. அதைக் கேட்டு அண்ணன் சிரித்தது. 'இவர்களைத் திருத்த முடியாது' என்று நினைத்த மான், அங்கிருந்து நகர்ந்தது.

மறுநாள் மயில் மகிழ்ச்சியாகத் தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்தது.

"என்ன மயிலக்கா, உனக்குத்தான் ஆடவே தெரியவில்லையே. தோகையை விரித்தபடி நீ நடந்து காட்டுவதை நாங்கள் ஆட்டம் என்று ஒப்புக்கொள்ள வேண்டுமா?" என்று கேலி செய்தது தம்பி. அண்ணன் சிரித்தது. மயில் எதுவும் சொல்லாமல் அங்கிருந்து சென்றது.

அப்போது குயிலின் இனிமையான பாடல் கேட்டது. உடனே குயில் பக்கம் திரும்பியது அண்ணன். "குயிலக்கா, ஜலதோஷம் பிடித்திருக்கிறதா உனக்கு? குரல் கர்ணகடூரமாக இருக்கிறதே! ஏதேனும் மருந்து சாப்பிட்டுவிட்டுப் பிறகு பாடலாமே!" என்று கேலி செய்தது.

முயல் கரட்களை எடுத்துக்கொண்டு வந்தது. அதை வாங்கிச் சாப்பிட்ட குரங்குகள், "இப்படிக் கசக்கிறது. கரட் இனிப்பாகத்தானே இருக்கும். இதுபோன்ற ருசியற்ற கரட்களை நாங்கள் சாப்பிட்டதே இல்லை. பாகற்காய்க்குச் சிவப்பு வண்ணம் பூசிக்கொண்டு வந்துவிட்டாயா?" என்று கிண்டல் செய்தன. வேகமாக ஓடிவிட்டது முயல்.

காட்டிலுள்ள மற்ற விலங்குகளும் பறவைகளும் குரங்குகளிடம் எவ்வளவோ அறிவுரை சொல்லிப் பார்த்துவிட்டன. ஆனால், குரங்குகள் திருந்தவே இல்லை.

ஒருநாள் மாலை கருமேகங்கள் திரண்டு வந்தன. இன்னும் சற்று நேரத்தில் மழை பெய்யலாம் என்று தோன்றியதால் பறவைகளும் விலங்குகளும் மழைக்கு மறைவான இடத்தை நோக்கிச் சென்றன.

குரங்குகள் மட்டும் எங்கும் செல்லவில்லை. அவை இரண்டும் ஒரு கூடாரம் அமைக்க ஆரம்பித்தன. தென்னை மர ஓலைகளைக் கொண்டு தம்பி பாய்போலப் பின்னியது. அண்ணன் கம்புகளை மண்ணில் நட்டு வைத்தது.

தம்பி பாய் பின்னி முடித்ததும் அதைப் பார்த்த அண்ணன், "இது என்ன பாய் பின்னியிருக்கிறாய்? மழை வந்தால் ஒழுகும்" என்று பாயைக் கிழித்துப் போட்டது.

தம்பிக்குக் கோபம் வந்தது. "நீ மட்டும் என்ன நட்டு வைத்திருக்கிறாய்? லேசாகக் காற்று வீசினால்கூட சாய்ந்து விழுந்து விடுமே!" என்று சொன்னபடி, கம்புகளை உடைத்துப் போட்டது.

பிறகு அண்ணன் பாய் பின்னத் தொடங்கியது. தம்பி கம்புகளை நட்டு வைத்தது. ஆனால், மீண்டும் ஒருவர் மீது இன்னொருவர் குற்றம் சொல்லி, கலைத்துப் போட்டன.

இருட்டிவிட்டது. கடும் மழை பெய்தது. இரு குரங்குகளுக்கும் எங்கே போவது என்று புரியவில்லை. அங்கும் இங்கும் ஓடின. குளிர் தாங்காமல் நடுங்கத் தொடங்கின. அருகில் எந்த விலங்குகளையும் காணவில்லை. இரண்டும் ஒரு மரத்தடியில் போய்ப் பதுங்கியிருந்தன. ஆனாலும் மழையிலிருந்து தப்பிக்க இயலவில்லை.

இரவு முழுவதும் பெய்த மழை, அதிகாலையில் சற்று ஓய்ந்தது.

இரண்டு குரங்குகளையும் காணாமல் அவற்றின் நண்பர்களான மான், நரி, முயல் போன்றவை தேடி வந்தன. குளிரில் மயங்கிக் கிடந்த குரங்குகளைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தன.

முயல் காய்ந்த சருகுகளைக் கொண்டு வந்து தீமூட்டியது. அதில் குரங்குகள் இரண்டும் குளிர்காய்ந்தன. மானும் முயலும் உணவு கொடுத்தன. சாப்பிட்ட பிறகு குரங்குகளுக்கு ஓரளவு உடல்நிலை சரியானது.

குரங்குகள் இரண்டும் தலையைக் குனிந்தபடி இருந்தன.

"நண்பர்களே, நீங்கள் இதுவரை யாரையும் பாராட்டியதில்லை. எல்லோரது செயலிலும் குற்றம் கண்டுபிடித்து குறை சொல்லி வந்தீர்கள். உங்களுக்குள்ளேயே குற்றம் சொல்லிக்கொண்டீர்கள். அதனால் துன்பம் அடைந்தது நீங்கள் இருவரும்தானே! இந்த உலகில் குறை இல்லாதவர்கள் யாரும் இல்லை. பிறரைப் பாராட்டுபவர்கள் பிறரது வெற்றியையும் தன் வெற்றியாகக் கொண்டாட முடியும். இனிமேலாவது குற்றம் சொல்லாமல் பாராட்டக் கற்றுக்கொள்ளுங்கள்" என்றது மான். அன்றோடு அந்தப் பழக்கத்தை கைவிட்டன குரங்குகள்.

## தெரிந்துகொள்வோம்...!

| | |
|---|---|
| சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர் | - **டி.எஸ். சேனநாயக்க** |
| இலங்கையின் தேசிய மலர் | - **நீலஅல்லி** |
| இலங்கையின் மிகப் பெரிய தாவரவியல் பூங்கா | - **பேராதனை தாவரவியற் பூங்கா** |
| இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் | - **ஆனந்த சமரகோன்** |
| இலங்கையில் இலவசப் பாடநூல் விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | - **1980** |
| ஞாபகசக்தி அதிகமுள்ள பிராணி | - **யானை** |
| நோர்வே நாட்டின் தலைநகரம் | - **ஒஸ்லோ** |
| சாரணர் இயங்கத்தை உருவாக்கியவர் | - **பேடன் பவல்** |
| மோப்ப சக்தி அதிகமுள்ள பிராணி | - **நாய்** |
| உலகில் குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட நாடு | - **வத்திக்கான் நகரம்** |

**எஸ். கனிஷ்கர்**
தரம் 07, கொ/ பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு 04.

## மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் ..........................................
பிறந்த திகதி ..........................................
வகுப்பு ..........................................
பாடசாலை ..........................................
..........................................

**வர்ணப் புகைப்படம்**

..................................................
வகுப்பாசிரியர் கையொப்பம்

**மாணவர் கழகம்**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834 கொழும்பு.**







க. டேன்
தரம் 10,
கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ, மாத்தளை.



எம்.எம்.எம். பய்ஹான்,
தரம் 04, கே/தெஹி நாபாவல மு.ம.வி.,
நாபாவல.



எம்.ஏ.எப். ஹனா,
தரம் 07 E,
ப/ வெளிமடை முஸ்லிம் மகா வித்தியாலயம்,
வெளிமடை.



ரஞ்சன் அரஞ்சிகா,
தரம் 11,
பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்,
குமரப்புலம் மூளாய், சுழிபுரம்.



ஷஹ்லா றிஸான்,
தரம் 10, கொ/முஸ்லிம் மகளிர் கல்லூரி,
கொழும்பு 4.

# விளையாட்டு





## பங்களாதேஷ் வீரருக்கு கொவிட்–19 தொற்று

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் வேகப் பந்துவீச்சாளர் அபூ ஜெயாட், கொவிட்19 வைரஸ் தொற்றுக்கு முகங்கொடுத்துள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை (23) அறிவித்துள்ளது. எவ்வாறாயினும், ஏனைய வீரர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், எந்த வீரருக்கும் கொவிட்19 வைரஸ் உறுதி செய்யப்படவில்லை என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அபு ஜெயாட் தொடர்பில் கருத்து வெளியிட்ட பங்களாதேஷ் அணியின் உடற்கூறு வைத்தியர் டெபஷில் சௌத்ரி கூறுகையில், "வேகப் பந்துவீச்சாளர் அபூ ஜெயாட்டுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், கொவிட்19 வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவர், கொவிட்19 விதிமுறையை பின்பற்றி தற்போது தனிமைப்படுத்தப்பட்டு, சிகிச்சைகளை பெற்று வருகின்றார்" என்றார்.

இலங்கை தொடருக்காக பங்களாதேஷ் அணியின் திறன் பயிற்சியில் இணைந்திருந்த 27 வீரர்களின் மாதிரிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேநேரம், பயிற்றுவிப்பாளர்களுக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஏற்கனவே திட்டமிட்டப்படி பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நாம் ஏற்னவே திட்டமிட்டதன்படி, இலங்கைக்கு புறப்படுவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்படவிருந்த கொவிட்19 பரிசோதனையை திட்டமிட்ட திகதியில் நடத்த முடியாது. இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட நீண்ட இடைவெளி எடுக்குமானால், நாம் மீண்டும் பணிகளை ஆரம்பித்து ஒரு வாரத்துக்குள் 2 பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கிறோம். குறிப்பாக இறுதி பரிசோதனையை நாம் புறப்படுவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டும்.

முக்கியமாக வீரர்கள் எத்தனை நாட்கள் கொவிட்19 பாதுகாப்பு வளையத்தில் இருக்க வேண்டும் என்ற கால எல்லை கிடைக்காத நிலையில், அவர்கள் கடுமையான அழுத்தத்திற்கு முகங்கொடுத்துள்ளனர்" என டெபஷில் சௌத்ரி மேலும் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக அடுத்த மாதம் 23ம் திகதி நடைபெறவுள்ள இலங்கை – பங்களாதேஷ் சுற்றுப் பயணத்திற்கான உறுதியான இறுதி முடிவுகளை பெறுவதில் இரண்டு கிரிக்கெட் சபைகளும் தற்போதுவரை இணக்கம் தெரிவிக்கவில்லை.

கொவிட்19 வைரஸ் தொற்று காரணமாக வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் 14 நாட்கள் தனிமைப்படுத்தல் முறைமை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் சபை பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்கு இந்த அறிவிப்பினை வெளியிட்டிருந்த நிலையில், பங்களாதேஷ் கிரிக்கெட் சபையால் குறித்த விடயம் நிராகரிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இறுதியாக இலங்கை கிரிக்கெட் சபை, கொவிட்19 அதிரடிப்படையுடன் கலந்துரையாடி, இரண்டு நாடுகளிலும் வீரர்கள் தலா 7 நாட்கள் தனிமைப்படுத்தலை பின்பற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டது. இதற்கும் சரியான முடிவு இதுவரை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பித்து

## 49 வருடங்களில் 4 தடவைகள் பதிவாகிய ஹெட்ரிக் சாதனைகள்



கிரிக்கெட் போட்டிகளை பொருத்தவரை ஹெட்ரிக் விக்கெட்டுகள் கைப்பற்றப்படுவது என்பது மிக மிக குறைவான ஒன்று. அதிலும் குறிப்பாக, மூன்று வெவ்வேறு திறமைக் கொண்ட துடுப்பாட்ட வீரர்களை தொடர்ச்சியாக மூன்று பந்துகளில் ஆட்டமிழக்கச்செய்வது இலகுவான விடயமல்ல. இந்த சம்பவம் எப்போதும் நடந்துவிடாது.

சர்வதேச கிரிக்கெட் ஆரம்பித்து காலங்கள் கடந்துசெல்கிறது. ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பித்து 49 வருடங்கள் கடந்து விட்டன. இதுவரையில், 4,261 ஒருநாள் போட்டிகளை காணும் வாய்ப்பு ரசிகர்களுக்கு கிடைத்திருக்கிறது. ஆனால், இத்தனை போட்டிகளிலும், வருடத்துக்கு ஒன்று என்ற சராசரியில் வெறும் 49 ஹெட்ரிக் விக்கெட்டுகள் மாத்திரமே கைப்பற்றப்பட்டிருக்கின்றன

போட்டிகள் 4,000 கடந்து, வருடங்கள் 49 கடந்து, ஹெட்ரிக் விக்கெட்டுகள் 49 மட்டுமே என்றால், ஹெட்ரிக் – விக்கெட்டுகள் கைப்பற்றுவது என்பது சர்வதேச கிரிக்கெட்டில் எத்தனை கடினமான ஒன்று என்பதை எம்மால் அறியமுடிகின்றது. இவ்வாறு கடினமான சாதனையை தங்களுடைய முதல் ஒருநாள் போட்டியில் கைப்பற்றுகிறார்கள் என்றால், அது மிகவும் சிறப்பு வாய்ந்த அம்சமாகும்.

அப்படியான மிகச்சிறப்பு வாய்ந்த ஹெட்ரிக் விக்கெட்டுகளை உலகின் நான்கு வீரர்கள் மாத்திரமே கைப்பற்றியுள்ளனர். அந்த நான்கு வீரர்களின் எமது நாட்டைச் சேர்ந்த இரண்டு வீரர்கள் இடம்பிடித்திருப்பது இலங்கை கிரிக்கெட்டுக்கு கிடைத்த மாபெரும் பெருமையாகும்.

அந்தவகையில் நாம் சர்வதேச ஒருநாள் போட்டிகளில், தங்களுடைய கன்னி போட்டியிலேயே ஹெட்ரிக் விக்கெட்டுகளை கைப்பற்றிய அந்த நான்கு வீரர்களின் பட்டியலை இங்கு பார்ப்போம்.

தைஜுல் இஸ்லாம் 2014ம் ஆண்டு நடைபெற்ற ஜிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் தொடரின் ஐந்தாவதும் இறுதியுமான போட்டியில், ஒருநாள் போட்டிகளில் அறிமுகமாகினார்.

ஏற்கனவே நடைபெற்ற தொடரின் 4 போட்டிகளில் அனைத்தையும் வெற்றிக்கொண்டு, பங்களாதேஷ் அணி தொடரில் 40 என முன்னிலை வகித்தது. இவ்வாறான நிலையில், வைட்வொஷ் தோல்வியை தவிர்க்க மிகச்சிறந்த ஆரம்பத்தை பெற்ற ஜிம்பாப்வே அணிக்கு பங்களாதேஷ் சுழல் பந்துவீச்சாளர்கள் தடுமாற்றத்தை கொடுத்தனர்.

தன்னுடைய 6வது ஓவரை வீசிய தைஜுல் இஸ்லாம் அந்த ஓவரின் இறுதிப் பந்தில், டினாஷே பன்யங்காரவை போல்ட் முறையில் ஆட்டமிழக்கச்செய்து ஓவரை நிறைவுசெய்தார்.

தன்னுடைய அடுத்த ஓவரை வீச அழைக்கப்பட்ட தைஜுல் இஸ்லாம், முதல் பந்திலேயே ஜோன் நியம்புவை எல்பிடபிள்யு முறையில் வெளியேற்றி, தொடர்ச்சியாக இரண்டாவது விக்கெட்டை வீழ்த்தினார். இறுதியாக தன்னுடைய அடுத்த பந்தில் டெண்டாய் சட்டாரவை போல்ட் முறையில் வீழ்த்தி, கன்னி ஒருநாள் போட்டியில் கன்னி ஹெட்ரிக் விக்கெட்டினை கைப்பற்றினார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில், தன்னுடைய அறிமுக போட்டியில் ஹெட்ரிக் விக்கெட்டுகளை கைப்பற்றிய முதல் வீரர் என்ற பெருமையை தைஜுல் இஸ்லாம் பெற்றுக் கொண்டார்.



சர்வதேச கிரிக்கெட்டுக்கு காகிஸோ ரபாடா அழைக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை அவருடைய பந்துவீச்சு பேசுபொருளாகவே உள்ளது. இளம் வயது வீரராக இருந்தாலும், இப்போதைய நிலையில் தென்னாபிரிக்க அணியின் அனுபவ வீரர்களுக்கு இணையாக அந்த அணியில் அவர் இடம்பிடித்துள்ளார்.

பங்களாதேஷ் அணி கடந்த 2015ம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட நிலையில், தொடரின் முதல் போட்டியில் 20 வயதான காகிஸோ ரபாடாவை தென்னாபிரிக்க அணி அறிமுகப்படுத்தியது.

இளம் வீரராக இருந்தாலும், கன்னி ஒருநாள் போட்டி என்றாலும், தன்னுடைய முழு பந்துவீச்சு பலத்தையும் வெளிக்காட்டிய ரபாடா, தன்னுடைய முதல் ஓவருக்கு 2 ஓட்டங்களை மாத்திரமே வழங்கினார். பின்னர், தன்னுடைய இரண்டாவது ஓவரில் மூன்று பந்துகளை ஓட்டமற்ற பந்துகளாக வீசிய இவர், 4வது பந்தில் பங்களாதேஷ் அணியின் அனுபவ துடுப்பாட்ட வீரரான தமிம் இக்பாலை போல்ட் முறையில் ஆட்டமிழக்கச் செய்தார்.

தொடர்ந்து அடுத்த பந்தில் லிடன் டாஸ், பர்ஹான் பெஹார்தீனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதனையடுத்து ஓவரின் இறுதிப் பந்தில் மஹ்மதுல்லாஹ்வை எல்பிடபிள்யு முறையில் வீழ்த்தி தன்னுடைய முதல் போட்டியில் கன்னி ஹெட்ரிக் விக்கெட்டினை பதிவுசெய்தார்.

காகிஸோ ரபாடா தன்னுடைய கன்னி ஹெட்ரிக் விக்கெட்டினை கைப்பற்றியது மாத்திரமின்றி, இந்தப் போட்டியில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி, தன்னுடைய முதல் போட்டியில் 5 விக்கெட் பிரதியொன்றையும் கடந்திருந்தார். இலங்கை கிரிக்கெட் அணிக்கு நம்பிக்கை தரக்கூடிய சகலதுறை வீரராக வளர ஆரம்பித்திருப்பவர் வனிந்து ஹசரங்க. இலங்கை அணியின் சுழல் பந்துவீச்சை அகில தனஞ்சய தாங்கிப்பிடித்திருந்த நிலையில், அவரின் தடைக்கு பிறகு வனிந்துவின் பெயர் வெளிவரத் தொடங்கியுள்ளது.

கடந்த ஆண்டிலிருந்து வனிந்துவின் ஆட்டங்கள் அனைவர் மத்தியிலும் பேசப்பட்டாலும், அவரின் அறிமுகப் போட்டியின் சாதனையை யாரும் பெரிதாக அறிந்திருக்கவில்லை.

இலங்கை ஒருநாள் அணிக்காக கடந்த 2017ம் ஆண்டு ஸிம்பாப்வே அணிக்கு எதிரான போட்டியில் அறிமுகமாகியிருந்த இவர், கன்னி ஒருநாள் போட்டியில் ஹெட்ரிக் விக்கெட்டுகள் கைப்பற்றிய முதல் இலங்கை வீரர் என்ற பெருமையை பெற்றுக்கொண்டார்.

நீண்ட இடைவேளைக்கு பின்னர் இலங்கை அணி காலி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஒருநாள் போட்டியில், தடுமாற்றத்துக்கு முகங்கொடுத்து துடுப்பெடுத்தாடிய ஸிம்பாப்வே அணியின் இறுதி மூன்று விக்கெட்டுகளையும் கைப்பற்றி இந்த சாதனையை பதிவு செய்தார்.

போட்டியில் தனக்கு வழங்கப்பட்ட மூன்றாவது ஓவரின் இரண்டாவது பந்தில், மெல்கோம் வோலரின் விக்கெட்டினை கைப்பற்றினார். இதனையடுத்து டொனால்ட் ட்ரைபனோ எல்பிடபிள்யு முறையில் ஆட்டமிழக்க, அடுத்தப் பந்தில் டெண்டாய் சட்டாரா போல்ட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இவர்களின் ஆட்டமிழப்புகளை கைப்பற்றிய வனிந்து ஹசரங்க கன்னி ஒருநாள் போட்டியில் ஹெட்ரிக் விக்கெட்டுகளை கைப்பற்றும் இரண்டாவது சுழல் பந்துவீச்சாளர் என்ற பெருமையும் பெற்றுக்கொண்டார்.

இலங்கை அணி புதிய வேகப் பந்துவீச்சாளர்களை அணிக்கு அழைத்துவரும் எண்ணத்தில், அழைக்கப்பட்ட பந்துவீச்சாளர்களில் ஒருவர் ஷெஹான் மதுசங்க. இவர், பங்களாதேஷ், ஸிம்பாப்வே அணிகளுக்கு எதிரான முத்தரப்பு ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியில் மாத்திரமே இலங்கை ஒருநாள் அணிக்காக விளையாடினார்.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் இலங்கை அணி 221 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்த நிலையில், பங்களாதேஷ் அணி 127 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. ஆனால், மஹ்மதுல்லாஹ் பங்களாதேஷ் அணிக்கு நம்பிக்கை கொடுக்கும் வகையில் துடுப்பெடுத்தாடி வந்தார்.

மதுசங்க தனது அபார பந்துவீச்சின் மூலம் போட்டியின் 35வது ஓவரின் ஐந்தவாது பந்தில், பங்களாதேஷ் அணியின் தலைவர் மஷ்ரபீ மொர்டசாவின் விக்கெட்டை கைப்பற்றினார். தொடர்ந்து அடுத்த பந்தில், ரூபல் ஹுசைனை போல்ட் முறையில் வெளியேற்றிய இவர், தனக்கு கிடைத்த அடுத்த பந்து ஓவரின் முதல் பந்தில் மஹ்மதுல்லாஹ்வை வெளியேற்றி கன்னி போட்டியில் கன்னி ஹெட்ரிக்கை பதிவுசெய்தார்.

சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில், ஒருநாள் போட்டிகளில் மேலே குறிப்பிடப்பட்ட நால்வர் மாத்திரமே கன்னி ஒருநாள் போட்டியில் ஹெட்ரிக் சாதனைகளை பதிவுசெய்துள்ளனர். அதுவும், இந்த ஹெட்ரிக் சாதனைகள் அனைத்தும், 49 வருடங்கள் ஒருநாள் போட்டிகள் விளையாடப்பட்டும், கடந்த 6 வருடங்களில் மாத்திரமே பெறப்பட்டுள்ளன.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அறிமுக போட்டியில் ஹெட்ரிக் வீழ்த்தியவர்கள் வரிசையில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி ஷெஹான் மதுசங்க மற்றும் வனிந்து ஹசரங்க ஆகிய இருவர் இடம்பிடித்துள்ளதுடன், ஏனைய இருவரும் பங்களாதேஷ் மற்றும் தென்னாபிரிக்க வீரர்களாக உள்ளனர்.

இந்த தனித்துவமான சாதனையை நிகழ்த்திய வீரர்களில், ஷெஹான் மதுசங்க போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில், கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். எனினும், ஏனைய வீரர்கள் அனைவரும் தங்களுடைய நாட்டுக்காக இன்றும் விளையாடி வருகின்றனர். எனவே, இவர்கள் தங்களுடைய திறமையை வளர்த்து மேலும் சாதனைகளை தங்களது அணிக்காக நிகழ்த்துவார்கள் என எதிர்பார்க்கிறோம்.



## இலங்கை தொடருக்காக புதிய கோரிக்கைகளை விடுக்கும் பங்களாதேஷ்

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் அணி முன்வைத்திருக்கும் புதிய கோரிக்கைகள், இரண்டு அணிகளுக்கும் இடையிலான தொடரை அறிவிக்கப்பட்ட திகதியில் நடத்துவதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. கொவிட்19 வைரஸ் தொற்று காரணமாக இலங்கை அரசாங்கம் 14 நாட்கள் தனிமைப்படுத்தலை கட்டாயமாக்கியுள்ள நிலையில், பங்களாதேஷ் அணி தற்போது 3 நாட்கள் தனிமைப்படுத்தலை கோரியுள்ளதாக செய்தி கிடைத்துள்ளது.

இலங்கை வரும் பங்களாதேஷ் அணி முதல் மூன்று நாட்களுக்கும் ஹோட்டலில் தனிமைப்படுத்தலை கடைப்பிடிப்பதுடன், அதற்கு அடுத்த 4 நாட்களில் உடற்பயிற்சிக்கூடத்தை பயன்படுத்த அனுமதி கோரியுள்ளது. அதேநேரம், 8வது நாள் பயிற்சிகளை ஆரம்பிப்பதற்கான கோரிக்கையையும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை விடுத்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இலங்கை கிரிக்கெட் இதற்கு முன்னர், கொவிட்19 அதிரடிப்படையுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் படி 14 நாட்கள் தனிமைப்படுத்தல் கட்டாயமாக்கப்பட்டிருப்பதாக அறிவித்தது. எனினும், மேலும் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் படி, பங்களாதேஷ் அணியை அவர்களுடைய நாட்டில் 7 நாட்கள் தனிமைப்படுத்தலையும், இலங்கையில் 7 நாட்கள் தனிமைப்படுத்தலையும் கடைப்பிடிக்குமாறு யோசனையொன்றை முன்வைத்திருந்தது.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தற்போது முன்வைத்துள்ள இந்த கோரிக்கைகள், இந்த தொடரை நடத்துவதில் மேலும் சிக்கலை உருவாக்கியுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் வீரர் அபூ ஜெயாட் கொவிட்19 வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியதாக அந்த அணி நிர்வாகம் அறிவித்திருந்தது. எனினும், ஏனைய வீரர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், எவருக்கும் கொவிட்19 வைரஸ் உறுதிசெய்யப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டது.

அபூ ஜெயாட்டுக்கு ஏற்பட்டுள்ள கொவிட்19 வைரஸ் காரணமாக, பங்களாதேஷ் அணி புறப்படுவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த கொவிட்19 பரிசோதனை ஒத்திவைக்கப்படுவதற்கான வாய்ப்புள்ளது என குறிப்பிட்டிருந்தது. இந்த பரிசோதனை அடுத்துவரும் நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டால், பங்களாதேஷ் அணி ஏற்கனவே குறிப்பிட்டவாறு 27ம் திகதி இலங்கையை வந்தடைய முடியாது.

பங்களாதேஷ் அணி குறிப்பிட்ட திகதியில் இலங்கைக்கு வருகை தராத பட்சத்தில், மூன்று போட்டிகள் கொண்ட ஐசிசி சம்பியன்ஷிப்புக்கான டெஸ்ட் தொடர், 2 போட்டிகள் கொண்டதாக நடத்தப்படும் என இலங்கை கிரிக்கெட் சபையால் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.





இம்முறை ஐ.பி.எல். தொடரிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகியுள்ள இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சாளர் லசித் மாலிங்க தொடர்பில் ரோஹித் சர்மா கருத்து தெரிவிக்கையில், "லசித் மாலிங்க மும்பை இந்தியன்ஸ் மற்றும் இலங்கை அணிக்கு வழங்கிய பங்களிப்பு அளப்பரியது. அவருக்கான இடத்தினை மும்பை இந்தியன்ஸ் அணியில் யாராலும் நிரப்ப முடியாது. மாலிங்க ஒரு வெற்றியாளர். மும்பை இந்தியன்ஸ் அணியின் கடினமான காலப்பகுதியில் அணியை அதிலிருந்து மீட்டுத்தந்தவர். அவரது அனுபவத்தை நாம் தவறவிடுவதுடன், அவர் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு வழங்கிய பங்களிப்பு எதிர்பார்க்கமுடியாதவை.

நெதன் குல்டர்நெயில், ஜேம்ஸ் பெட்டின்ஸன் மற்றும் தவல் குல்கரனி ஆகியோர் லசித் மாலிங்கவுக்கு மாற்று வீரராக அணியில் உள்ளனர். ஆனால், மாலிங்க மும்பை அணிக்கு செய்ததை ஏனையவர்களுடன் ஒப்பிட முடியாது என்பதுடன், மாலிங்கவின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது" என்றார்.

கடந்த 19ம் திகதி ஐ.பி.எல் தொடர் ஆரம்பமாவதற்கு இரண்டு நாட்களுக்கு முன், மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ரோஹித் சர்மா மற்றும் தலைமை பயிற்றுவிப்பாளர் மஹேல ஜயவர்தன ஆகியோர் இணைந்து வழங்கிய ஊடக சந்திப்பிலேயே இருவரும் இவ்வாறு கருத்துகளை பரிமாறிக் கொண்டது குறிப்பிடத் தக்கது.

## "மாலிங்கவின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது"

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




# ராஜேஸ்வரி சண்முகத்தின் முதலும் கடைசியுமான படம்

## ‘நெஞ்சுக்குத் தெரியும்’

**1983** ஜூலைக் கலவரம் வருமுன்பு இலங்கையில் பல தமிழகத் திரைப்படங்கள் தயாரித்து முடிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு தயாரித்து முடிக்கப்பட்டிருந்த ஒருபடத்தின் பெயர்தான் ‘நெஞ்சுக்குத் தெரியும்’

இலங்கையில் கொழும்பில் மேடை நாடகத்துறையில் சிறந்து விளங்கி ஒரு தப்புக் கலைஞர் பின்னாளில் சிங்களத் திரை உலகில் நுழைந்து புகழ்பெற்ற சிங்கள சினிமா இயக்குனராக உயர்ந்தார். புகழ் பெற்ற பலநடிகர்களை சினிமா உலகத்துக்கு அறிமுகப்படுத்தினார். அவர் வேறு யாருமல்ல லெனின் மொறாயஸ் என்ற தமிழர்தான்.

இவர் தமிழர் என்பதால் நீண்ட நாட்களாகவே இவரது அடிமனதில் தமிழ் படம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்ற ஆசையும் இருந்து வந்தது.

சிங்கள சினிமா உலகில் ஒப்பனையாளராக புகுந்த லெனின், ஒளிப்பதிவாளராக பயிற்சி பெற்று இயக்குனராக உயர்ந்தார்.

சினிமாவின் மீது கொண்ட காதலால் அவர் ஆரம்பத்தில் இந்தியாவுக்கு சென்றார். சென்னையில் ரேவதி, வாஹினி ஆகிய சினிமா ஸ்டூடியோக்களில் ஒளிப்பதிவாளராக பயிற்சிபெறும் வாய்ப்புக் கிடைத்தது. இரண்டு வருடங்களின் பின் பெரிய கனவுகளுடன் இலங்கை திரும்பினால் கொழும்பு சிலோன் ஸ்டூடியோவில் உதவி ஒளிப்பதிவாளர் பதவி கிடைத்தது.

எம்.எஸ். ஆனந்தன் தயாரித்த 'இத்தகமஹிம' (இதயத்தின் பெறுமதி) என்ற சிங்களப்படத்தில் முதன்முதலாக பிரதான ஒளிப்பதிவாளராக கடமையாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

பின்பு காமினி பெர்னாண்டோவின் படமொன்று ஒளிப்பதிவு செய்யும் வாய்ப்பு வந்தது.

1969ஆம் ஆண்டு இவரது வாழ்வு ஒளிபெறத் தொடங்கியது. அந்த ஆண்டு சூரியன் சேத் சரரயா என்ற படத்தை தனித்து நின்று இயக்கினார். அந்தப்படம் பெருவெற்றி பெற்றது. அதன்பின்பு ஆண்டுக்கு ஒன்றாக 13 சிங்களப்படங்களை இயக்கிவிட்டார்.

1975 - 1980 காலப் பகுதியில் இவரது படங்களில் பல பெருவெற்றிபெற்றன.

இப்பொழுது தமிழ்ப்படப் தயாரிக்க வேண்டும் என்ற ஆசை மேலும் அதிகரித்தது.

இவர் ஏற்கனவே உருவாக்கிப் பெருவெற்றி பெற்ற படமொன்றின் 60 பேர் ‘அபிரவுச’ (பரமரகசியம்) எண்பதாகும். அந்தப்படத்தை தமிழ் மொழிக்கு ‘டப்’ செய்து ‘யார் அவள்’ என்ற பெயரில் வெளியிட்டார்.

ஏ.ஈ. மனோகரனும் மாலினி பொன்சேகாவும் தோன்றும் பாடல் காட்சியொன்றை ஒளிப்பதிவு செய்து இப்படத்துடன் இணைத்துக் கொண்டார். எம்.ஜே. றொக்சாமி இசையமைத்த இப்பாடலை எஸ். ராமச்சந்திரனும் சுஜாதா அத்தநாயக்காவும் பாடினர்.

படம் பெரிதாக ஓடவில்லை. ‘யார் அவள்’ என்ற அந்தப்படம் ‘டப்’ படம் என்பதால் லெனின் மொறாயஸினால் திருப்தி அடையமுடியவில்லை.

இலங்கையில் முழு நீளத்தமிழ்த் திரைப்படமொன்றை தயாரிக்க வேண்டும் என்ற ஆசை இன்றும் நிறைவேறவில்லை.

அவர் அதற்கு பொருத்தமான தயாரிப்பளார்களை தேடிக் கொண்டிருந்தார்.

தயாரிப்பாளர்களும் வந்து சேர்ந்தனர்.

தயாரிப்பாளரும் இயக்குனரும் ஒன்று சேர்ந்தனர்.

நல்லூர் மனோகரன் என்ற இளைஞர் தமிழ்ப்படமொன்றை தயாரிக்கும் ஆசையில் கொழும்புக்கு வந்தார்.



எஸ்.ரி. ஆர் ஸ்தாபன உரிமையாளர் எஸ். தியாகராஜா நல்லூர் மனோகரனுக்கு பண உதவி செய்தார்.

நல்லூர் மனோகரனின் வேண்டுகோளின்படி லெனின் மொறாயஸ் நெஞ்சுக்கு தெரியும் என்ற பெயரில் தமிழ்ப்படமொன்றை தயாரிக்க ஆரம்பித்தார்.

நல்லூர் மனோகரனும் ஹெலன்குமாரியும் பிரதானபாத்திரங்களில் நடித்தனர். இன்னுமொரு ஜோடியாக அசாத்தும் சந்திரகலாவும் நடித்தனர்.

கதாநாயகியின் தாயாக பிரபல ஒலிபரப்பாளர் ராஜேஸ்வரி சண்முகம் நடித்தார். ராஜேஸ்வரி சண்முகத்தின் குரல் பல தமிழ்ப்படங்களில் ஒலித்தாலும் அவர்நடித்த முதற்படமும் கடைப்படமும் இதுவே.

‘சுக்கிரன் பிலிம்ஸ்’ தாபனத்தின் தயாரிப்பில் ‘நெஞ்சுக் குத் தெரியும்’ என்றபெயரில் கொழும்பு ஹெந்தலை விஜயாஸ்டூடியோவில் 06.11.1976 அன்று ஆரம்பவிழா நடைபெற்றது.

அப்போது திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த பியசேன குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார்.

லெனின் மொறாயஸ் இயக்கும் சிங்களப்படங்களில் எஸ்.ஏ.அழகேசனும் அன்ரன் கிரகரியும் உதவி இயக்குனர்களாக கடமையாற்றினர். ‘நெஞ்சுக்குத்தெரியும்’ படத்திலும் இந்த இருவருமே உதவி, இயக்குனர்களாக கடமையாற்றினர்.

‘நெஞ்சுக்கு தெரியும்’ திரைப்படத்துக்கான பாடல்களை யூ.எஸ்.ஹமீதும் மீட்டும் ஈழத்து ரெத்தினமும் எழுதினர். எம்.கே. றொக்சாமி இசையமைத்தார். வீ. முத்தழகுவும் எஸ். கலாவதியும் பாடிய ‘வளையல்களே’ என்று தொடங்கும் பாடல் இனிமையாக அமைந்தது.

‘நெஞ்சுக்குத் தெரியும்’ திரைப்படம் முற்று முழுதாகத் தயாரித்து முடிக்கப்பட்டது. திரைக்குவருவதற்கு தயாராக ஹெந்தளை விஜயா ஸ்டூடியோவில் வைக்குப்பட்டிருந்தது.

ஆனால் தணிக்கைசபைக்கு காண்பிக்கப்படவில்லை.

1983 ஜூலைக் கலவரம் வந்தது. விஜயாஸ்டூடியோ தீக்கிரையாக்கப்பட்டது. அங்கு வைக்கப்பட்டிருந்த ‘நெஞ்சுக்கு தெரியும் திரைப்படச் சுருள்களும் எரிந்து சாம்பலாகின.

எத்தனையோ இன்னல்களுக்கிடையில் தயாரிக்கப்பட்ட இத்திரைப்படம் தீக்கிரையானமைலெனின் மொறாயஸ்ஸிற்கு பெரும் வேதனையைக் கொடுத்தது.

‘நெஞ்சுக்கும் தெரியும் திரைப்படம் 1983 ஜூலைக்கலவரத்தில் தீக்கிரையாக்கப்பட்டது என்றுதான் கேள்விப்பட்டிருந்தோம்.

ஆனால் அத்திரைப்படங்களை தீ அரக்கனிடமிருந்து காப்பாற்றி ஒருவர், அவற்றை தன்னிடம் வைத்திருப்பதாகவும் ஒரு செய்து வெளிவந்தது.

எது எப்படியோ அந்தத் திரைப்படம் வெளியே வரவேயில்லை. பெரும் நம்பிக்கையுடன் தயாரிக்கப்பட்ட ‘நெஞ்சுக்குத் தெரியும்’ திரைப்படம் திரைக்கும் வந்திருந்தால் இயக்குனர் லெனின் மொறாயஸ்ஸின் புகழ்மேலும் ஓங்கியிருக்கும்.

---

## வாழ்வாதாரமா சேதாரமா 148




## பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் பணத் தொடர்புகள் மட்டும்தானா?

**"கல்வி** கரையில கற்பவர் நாட்சில” என முதுமொழி ஒன்றுண்டு. ஒரு வேளை அது ஒரு பாடலின் அடியோ எனக்கு நினைவில் இல்லை. ஆனால் இன்று கற்பவர்களது நாட்கள் மிக அதிகம்.

முற்காலத்தில் “பாலன் பஞ்சம் பத்து வருசம்” என்பார்கள் காரணம் ஒரு ஆண்பிள்ளை பிறந்து பத்து வயதை அடைந்து விட்டால் அந்தப்பிள்ளையும் தந்தையுடன் மாடு மேய்க்க புறப்பட்டு விடுவான் சேனையில் வயலில் வேலை செய்வான். வேலையாள் என்பதே அந்தக்கால வீட்டில் அரிது. அத்துடன் மாடுகளே பெருஞ்செல்வம். ஏனெனில் நவ நாகரீக கருவிகள் வருமுன் பால், தயிர் நெய்யென உணவுக்கும், தொழிலுக்கும் மாடுகளே உதவின.

இக்காலத்தில் பாலன் பஞ்சம் முப்பது வருடமாகக் கூட இருக்கலாம் அவ்வளவு நீளமான காலம் ஒரு பிள்ளை கல்வி கற்கிறது. அதுவரை பெற்றோர் உழைத்தாக வேண்டும் முப்பது வயதின் பின் அந்தப்பிள்ளை படித்து ஒரு வேலை தேடும்போதே கல்யாணமும் செய்தாக வேண்டும் வயது அப்படி. திருமணமாகிவிட்டால் தந்தை அவன் கல்விக்காக பட்ட கடனை எத்தனை பேர் பொறுப்பாக கட்ட முன்வருகிறார்கள். அந்தக்கடன் ஏதாவது சொத்தை விற்று கட்டவேண்டிய நிலை வருகிறது.

ஏன் அப்படி? பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் உள்ள தொடர்புகள் பணத்தின் அளவோடுதான் நிற்கிறது. இரவுபகல் ஓய்வின்றி உழைப்பதே பிள்ளைகளை ஒரு நல்ல நிலைக்கு கொண்டுவரத்தான். ஆனால் அந்த பிள்ளைகளை நல்லபடி வளர்க்கத்தான் என யாராவது சொல்கிறார்களா என்றால் கிடையவே கிடையாது.

ஏனெனில் பிள்ளைகளின் மன உணர்வுகளை அவர்களது சுய தேவைகளை இன்னும் சொல்லப்போனால் அவர்களது பிள்ளைப்பருவத்தை, யார் மதிக்கிறார்கள். எந்தப்பிள்ளைகளும் தனது தாய் தந்தையருடன் தனது விருப்பங்களை தெரிவித்திருப்பார்களா? அல்லது தமது விருப்பமான விளையாட்டை விளையாட முடிந்திருக்கிறதா?. குறிப்பாக பெண்பிள்ளைகள் தாம் முதன்முறையாக பூப்படைந்த போதுகூட தாயிடம் சொல்ல முடியாமல் தந்தையிடம் சொன்னதை இந்தக்காலம் எதிர்கொள்கிறது. தனது மாதவிடாய் கால இடையூறுகளை தந்தையிடம் மனம்விட்டுப் பேசும் பெண் பிள்ளைகளை நான் காண முடிகிறது. அதற்காக அம்மா சரியில்லை என்பதல்ல. இதே சமயம் தமக்கு ஏற்படுத்தப்படும் பாலியல் தொல்லைகளை அவள் யாரிடமும் தெரிவிப்பதில்லை.



எங்கே தவறு நேர்கிறது என்றால், எமது கல்விக் கொள்கை என்று சொல்லலாமா? ஏட்டுச்சுரைக் காய் கறிக்கு உதவாது என்பார்கள். பிள்ளைகளுக்கு வாசிப்பு என்பது அருகிப் போகிறது. பாடப்புத்தகங்கள் வாழ்க்கைக்கு சோறு போடாது வேண்டுமானால் அந்தப் புள்ளிகள் அவர்களை சித்தியடையச் செய்யலாம் ஆனால் அந்தக்கல்வி நேரடியாக வாழ்க்கைக்கு பயன்படுவதில்லை அறநெறிப் பாடசாலைகளும் பிள்ளைகளுக்கு வாழ்க்கை நெறிமுறையை கற்றுக் கொடுப்பதில்லை. அது வெறுமனே சமயக்கல்வியை மட்டும் போதிக்கிறது. நாங்கள் படித்த காலத்தில் சமயக்கல்வி என்று ஒன்று எமது பாடசாலையில் இல்லை. முதலாவது பாடம் நல்லொழுக்கம். அந்தப்பாடத்தில் நாம் எப்படி ஒழுக்கமான வாழ்க்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் பாவ புண்ணியங்கள் பற்றியும் படிப்போம். ஆசிரியர்களையும் முதியோரையும் கனம் பண்ணுவது எவ்வளவு முக்கியம் என படித்தோம். பெற்றோரைக் கனம்பண்ணு என்று படித்தோம். எமது காலத்தில் எல்லா வீடுகளிலும் முதியோர் பேணப்பட்டார்கள். அந்த வீடுகளில் நல்லது கெட்டது நடக்கும்போது பெரியவர்களிடம் ஆலோசனை கேட்டு, ஆசிர்வாதம் வாங்கி பெருமையடைந்த சமூகம் இன்று முதியோர் இல்லங்களை பெருக்கிக் கொண்டிருக்கிறோம்.

ஆண்களோடு பெண்களை அண்டவிடாமல் வளர்த்தது அந்தக்காலம். ஆணையும் பெண்ணையும் பருவவயதிலும் சேர்ந்தே திரிய அனுமதித்திருப்பது இந்தக்காலம். எமது காலத்தில் வாசலில் பெண்நிற்கும் போது வீட்டுக்கு யாராவது வந்தால், அவள் உள்ளே ஓடிக்கொண்டே யாரோ வந்திருக்கினம்” என தாயிடம் சொல்வாள். தாய் வெளியே வருவாள். இன்று தாய் வாசலில் உட்கார்ந்திருப்பாள் படலையடியில் இளைஞர்கள் வந்தால்”

“பிள்ளை, ஆரோ வந்திருக்கினம் பாா’” என்றபடி உள்ளே எழுந்து போய்விடுகிறாள். பெண் வெளியே வந்து பேசுகிறாள். இதுவும் கல்வியால் வந்த மாற்றம்தான் பெண்களிடம் பெற்றோரே கொள்ளும் நம்பிக்கை இது.

அந்தக்காலத்தில் ஆசிரியர்களும் குடிப்பார்களா, பீடி சிகரட் புகைப்பார்களா, வெற்றிலை போடுவார்களா என்பதை மாணவர்கள் அறிந்ததில்லை. அப்படி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தெரியும்படி நடந்ததில்லை. எமது ஆசிரியர் படம் பார்த்துவிட்டு வருவார். ஆனால், அவரை தியேட்டரில் யாரும் பார்த்ததில்லை. தொலைக்காட்சிகள் தொலை பேசிகள் அப்போது இல்லை. தியேட்டரில் முதல் மணியடித்தபின் அதாவது லைட் அணைக்கப்பட்டபிறகு உள்ளே வந்து படம் முடிவதற்கு இரண்டு நிமிடம் முன்னதாக வெளியே போய்விடுவதாக சொல்வார். நாங்கள் தப்பாக இருந்தால், எப்படி மாணவர்களது குற்றங்குறைகளை எடுத்துப் பேசலாம். என்பார்.

போர் நடந்த காலத்தில்கூட இந்த நிலை தொடர்ந்தது. மாணவர்களுக்கு போதிக்கும் ஆசிரியர்கள் தப்பாக நடப்பதை சமூகம் அனுமதிக்கவில்லை. மாணவர்களின் கல்விக்கு தூண்டுகோலாக சிறு சஞ்சிகைகள் வெளிவந்தன. அவற்றை மாணவர்கள் படிக்க வேண்டும் என்பதற்காகவே கேள்விகள் கொடுக்கப்பட்டு சிறந்த பதில்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. குறுக்கெழுத்துப் போட்டிகளும் புத்தகங்களை சார்ந்ததாகவே நடந்தன. புத்தகங்களும் மாணவர்களுக்கான பொது அறிவுத் தளத்தை கொண்டிருந்தன. அதே வாசிப்பு மாணவர்களிடையே மிக வேகமாக வளர்ந்தது. இன்றைய மாணவர்களுக்கு இந்த வாசிப்பு மாதத்தில் மாணவர்களை வாசிக்கத் தூண்டுவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் பெரும் பொருட்செலவை மேற்கொண்டு வருகின்றன.

ஆனால், அவை பயன்படுமா என்பது கேள்விக்குறி. வாசிப்பு தொடர்பாக மட்டுமல்ல, எந்த திட்டத்தை எடுத்தாலும், அது அதற்கான பணத்தில் பெரும் பகுதியை கூட்டம் கூட்டி ஆலோசனை பெறுவதிலும் பயிற்சிகள் கொடுப்பதிலும் ஆய்வுகள் செய்வதிலும் செலவாகிவிடும். அதாவது அதன் பெரும் பகுதியை அதில் வேலை செய்யும் ஊழியர்கள் பங்கிட்டுக்கொள்கிறார்கள். ஆய்வுகள் என்ற பெயரில் ஏற்கெனவே அவர்கள் எடுத்த முடிவுகள் ஆய்வாளர்களிடம் செலுத்தப்பட்டு அவர்களுக்கேற்ற அறிக்கை செப்பனிடப்படுகிறது. இந்த திட்டம் மாணவர்களை அடைவதற்குள் காலாவதியாகிவிடும்.

கல்வியின் துணைநிலைக் கோட்பாடுகளும், அதனால் பெறவேண்டிய சமுதாய முன்னேற்றத்தையும் மாணவர்களின் கைபேசிகளே வடிவமைக்கின்றன. விளைவாக வேகமான வாகன ஓட்டம் போதைமருந்து பாவனை வாள்வெட்டுக்குழுக்கள், திருட்டுகள் பெண் கடத்தல்கள், சிறுவர் துஸ்பிரயோகம் என பல வடிவங்களை எடுக்கிறது.

கல்வியில் ஏற்படும் பின்னடைவுகளும் மாணவர்களை நல்லொழுக்கத்திலிருந்து பின் தள்ளுகிறது. இவை தவிர பெற்றோரால் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் “பக்கெட்மணி” இப்போது பெருந்தொகையாக தெரிகிறது. இடையில் வந்த போர்ச்சூழலும் பிள்ளைகளிடம் இரக்கமற்ற மன நிலையை உருவாக்கி வைத்திருக்கிறது.

தேச வளர்ச்சிக்கான வளமான கல்வியை வடிவமைத்திருப்பது தவறல்ல. அவற்றுடன் வாழ்க்கை நெறிகளையும் கற்பித்திருக்கலாம். இரண்டரை வயதிலிருந்தே குழந்தைகளின் பிள்ளைப்பருவம் பறிக்கப்பட்ட வன்முறையாக தனியார் கல்வி நிலையங்கள், பாலர் பாடசாலை “பிளே குரூப்”. வீட்டிலும் விடாப்பிடியாக படிபடியென வாட்டியெடுக்கும் பெற்றோர் பிள்ளைகளிடம் விரக்தியையும் வேதனையையும் வளர்த்து விடுவதை அறிவதில்லை. பிள்ளைகள் தானே எதிர்கால தேசம். அவர்களது கல்வி அதற்கானதாக அமைய பிரார்த்திப்போம்.

# இடமாறும் HNBஇன் வாடிக்கையாளர் நிலையம்

அதிகரித்து வரும் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு அமைய எளிமையான மற்றும் பிரதேச வர்த்தகர்களுக்கு மிகச் சிறந்த வங்கிச் சேவைகளை வழங்கும் நோக்கில் இலங்கையின் முன்னணி தனியார் வங்கியான HNB, தமது ஹப்புத்தளை வாடிக்கையாளர் நிலையத்தை இலக்கம் 14, பதுளை வீதி, ஹப்புத்தளை என்ற விலாசத்தில் மிகவும் இடவசதியுடன் கூடிய புதிய கட்டடத்திற்கு அண்மையில் இடமாற்றமடைந்துள்ளது.

ஹப்புத்தளை நகரம் மற்றும் அதனை அண்டிய வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவைகள் குறித்து புதிய அத்தியாயத்தின் அறிகுறியாக்கும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்ட இந்த நவீன வாடிக்கையாளர்



நிலையம் வார நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வர்த்தக செயற்பாடுகளுக்காக திறந்திருக்கும். இடவசதியுடன் கூடிய புதிய சூழலில் அனைத்து விதமான வங்கி வசதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

புதிய வாடிக்கையாளர் நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்விற்கு HNBஇன் வலையமைப்பின் முகாமைத்துவம் தொடர்பான பிரதி பொது முகாமையாளர், வினோத் பெர்னாந்து விருந்தினராகவும் கலந்து கொண்டதோடு, ஹப்புத்தளை நகரசபை மேயர், சம்பத் லமாஹேமா ஆகியோர் உள்ளிட்ட பிரதிநிதிகளும் வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

புதிய வாடிக்கையாளர் நிலையத்தை திறந்து வைத்த HNBஇன் வலையமைப்பின் முகாமைத்துவம் தொடர்பான பிரதி பொது முகாமையாளர், வினோத் பெர்னாந்து, பிரதேசத்தின் வர்த்தக மற்றும் வாடிக்கையாளர்களுடன் வங்கி கட்டியெழுப்பியுள்ள விசேட தொடர்புகள் குறித்து தெளிவுபடுத்தினார்.

“ஹப்புத்தளை நகர் மற்றும் அதனை அண்டியுள்ள வாடிக்கையாளர்கள், மைக்ரோ நிதி மற்றும் சிறிய மற்றும் நடுத் தர அளவிலான வாடிக்கையாளர்களின் தேவைகளை வழங்குவதற்காக இந்த அதிநவீன வசதிகள் மிகவும் பயனாக இருக்கும். இந்த வசதிகளின் மூலம் வங்கி மற்றும் நிதி சேவைகளுக்காக இலகுவான நம்பிக்கையான மற்றும் இலகுவான நுழைவை எதிர்பார்க்கும் அனைவருக்கும் உச்ச அளவில் சேவைகளை வழங்குவதற்கு எமக்கு சந்தர்ப்பம் கிட்டும். வர்த்தகங்களுடன் உள்ள எமது தொடர்புகளை பலப்படுத்தும் வகையில் அதனை மென் மேலும் மேம்படுத்துவதற்கு நாம் எதிர்பா பார்த்துள்ளோம்.” என அவர் தெரிவித்தார்.

கொவிட்19 தொற்று நோய் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியைக் காட்டிய HNB Payfast, HNB MOMO, HNB Solo, HNB AppiGo போன்ற டிஜிட்டல் தளங்கள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட டிஜிட்டல் வசதிகளுடன் கூடிய கட்டணம் செலுத்தும் தளத்தின் ஊடாக HNB பிரதேசங்களுக்குள் தமது வங்கிச் சேவைகளை பலப்படுத்தி முன்னேறிவரும் வர்த்தக சமூகத்தினருக்கு வசதிகளை டிஜிட்டலாக மேம்படுத்தியுள்ள வங்கிச் சேவைகளை வழங்குகிறது.

# Litro Gas க்கு (SLSI) SLS 1672 : 2020 சான்றிதழ்

இலங்கையின் சக்தித் துறையில் விவாதத்துக்கு இடமற்ற தலைவராக திகழும் Litro Gas Lanka Ltd மற்றும் Litro Gas Terminal Lanka (Pvt) Ltd என்பன இலங்கை கோவிட் 19 நோய்த் தாக்கத்தால் முடக்கப்பட்டிருந்த வேளையில் தனது வாடிக்கையாளர்களுக்கு விதிவிலக்கான சேவையை வழங்கியிருந்தன. Litro Gas ஆனது கடமை என்ற சொல்லுக்கு அப்பால் இலங்கை வாழ் குடும்பங்களுக்கு தடையற்ற சேவை விநியோகத்தை வழங்குவதற்கான சவாலான பணியை போற்றத்தக்க வகையில் மேற்கொண்டது.

ஊரடங்குச் சட்டம் மற்றும் ஏனைய முடக்க செயற்பாடுகளை பொருட்படுத்தாது LPG உள்நாட்டு சமையல் எரிவாயு விநியோகமானது இக்காலப் பகுதியில் Litro Gas இனால் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்பட்டது.

முடக்கக் காலப்பகுதியில் தனது 4 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கு மாறாத சேவையினை பேணிய அதே வேளை Litro Gas ஆனது தனது சொந்த பாதுகாப்பு நெறிமுறைகள் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் உலகத் தரத்தில் இருப்பதையும் உறுதிப்படுத்தி இருந்தது.

அதன் சிறப்பான பாதுகாப்பு மட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் Litro Gas க்கு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் (SLSI) SLS 1672 : 2020 சான்றிதழானது வழங்கப்பட்டதுடன் இது நிறுவனங்களுக்கு SLSCOVID19 பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகளுக்கான கோரிக்கைகளுக்கிணங்க வழங்கப்படுவதாகும்.

'SLSIஇன் இந்த மதிப்பான தரநிர்ணயத்தை பெற்ற அரசாங்கத்துக்கு சொந்தமான ஒரே ஒரு நிறுவனம் நாம் என்பது உண்மையிலேயே எமக்கான ஒரு மைல் கல்லாகும் ' என்று Litro Gas Lanka Ltd மற்றும் Litro Gas Terminal Lanka (Pvt) Limited, ஆகியவற்றின் தலைவரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான அனில் கொஸ்வத்த தெரிவித்தார். இது எமது பாதுகாப்பு தரங்களை மட்டும் பலப்படுத்தவில்லை. எமது பாதுகாப்பு முறைமைகளில் நாம் உயர் மட்ட தரத்தை பேணுவதையும் வலியுறுத்துகிறது.

# 'Freedom Mortgages' வீட்டுக் கடன் திட்டத்தை அறிமுகம் செய்யும் ஜோன் கீல்ஸ் புரொப்பர்டீஸ்

ஜோன் கீல்ஸ் புரொப்பர்டீஸ், கொமர்ஷல் வங்கியுடன் இணைந்து ‘Freedom Mortgages’ எனும் புதிய வீட்டுக் கடன் தீர்வுத் திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளது.

இதனூடாக, TRIZEN தொகுதியில் மனை ஒன்றை கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு வட்டி விலக்களிப்புகளுடனான கடன் வசதியை பெற்றுக் கொள்ள முடியும். நிர்மாணச் செயற்பாடுகள் இடம்பெறும் காலப்பகுதியில் குறைந்தளவு பண வெளிச்செல்லல்களை உறுதி செய்து கொள்ளவும் முடியும். இந்த புத்தாக்கமான நிதி வழங்கல் தீர்வு, கொழும்பின் மையப்பகுதியில் வீடொன்றைக் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் ஜோன் கீல்ஸ் புரொப்பர்டீஸ் வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் பிரத்தியேகமாக வழங்கப்படுகின்றது.

இந்தப் பங்காண்மையினூடாக, சொத்துக்களில் முதலீடு மேற்கொள்ள எதிர்பார்ப்போர் கொழும்பு 02 இன் மையப்பகுதியில் நிர்மாணிக்கப்படும் ஜோன் கீல்ஸ் புரொப்பர்டீசின் ஸ்மார்ட் இல்லத் திட்டமான TRIZEN திட்டத்தில் முதலீடு செய்ய முடியும். இந்தத்திட்டத்தினுளடாக முதலீடு செய்வோர் பெருமளவு அனுகூலம் பெறுவார்கள். குறைந்த ஆரம்பக் கட்டணத்துடன், இரண்டு வருடங்களுக்கு வட்டியின்றிய மீளச் செலுத்தல்களையும் மேற்கொள்ளலாம். மேலும், வருடாந்தம் 8.75% எனும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களிலிருந்து ஆரம்பிக்கும் கடன் திட்டங்களையும் கொள்வனவாளர்கள் பெற்றுக் கொள்ளலாம். ஐந்து முதல் இருபது வருட காலப்பகுதிக்கு நிலையான வட்டியை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் சொத்துக்கள் பிரிவு தலைமை அதிகாரி நயன மாவில்மட கருத்துத் தெரிவிக்கையில் “இந்தப் புதிய திட்டத்துடன், ஜோன் கீல்ஸ் புரொப்பர்டீஸ் ஊடாக, புத்தாக்கமான வாடிக்கையாளர் நட்புறவுத் தீர்வுகள் வழங்கப்படுகின்றது. சந்தையில் இந்த புதிய தீர்வை அறிமுகம் செய்வதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். வீட்டு உரிமையாளர்களுக்கு இந்தத் திட்டத்தினூடாக, நிர்மாணம் இடம்பெறும் காலப்பகுதியில் 2 வருட காலத்துக்கு பெற்றுக் கொண்ட கடனுக்கான வட்டியை செலுத்த வேண்டாததன் காரணமாக TRIZEN தொடர்மனையை எவ்வித சுமைகளுமின்றி கொள்வனவு செய்யும் வசதியை வழங்குகின்றது” என்றார்.



# முதல் ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இஸ்லாமிக் ஃபினான்ஸ்

கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சி (CLC) நிறுவனத்தின் அங்கமான CLC இஸ்லாமிக் ஃபினான்ஸ் இலங்கையின் முன்னணி இஸ்லாமிய நிதி நிறுவனமாகத் திகழ்வதுடன் தற்போது தெற்காசிய இஸ்லாமிய நிதியீட்டு அரங்கிலும் உயர்வான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. CLC இன் இஸ்லாமிய வணிகப் பிரிவின் (IBD) கீழ் இலங்கை மத்திய வங்கியின் (CBSL) விதிமுறைகளுக்கு உட்பட்டு இஸ்லாமிய நிதி அலகாக 2015 இல் தொடங்கப்பட்ட CLC இஸ்லாமிக் ஃபினான்ஸ் நிறுவனம் அனைத்து தரப்பு வாடிக்கையாளர்களுக்கும் இணையற்ற நிதிச் சேவைகளை வழங்குகிறது.



CLC இஸ்லாமிக் ஃபினான்ஸ் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஷரீஆ மேற்பார்வைக் குழு மற்றும் புகழ்பெற்ற உள்நாட்டு மற்றும் சர்வதேச அறிஞர்களைக் கொண்ட அர்ப்பணிப்பான உள்ளக ஷரீஆ ஆலோசகர்கள் மூலம் இணக்கத்துக்கு அவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் CLC இஸ்லாமிக் ஃபினான்ஸின் அபரிதமான வளர்ச்சியானது பல சாதனைகளால் பிரதிபலிக்கப்படுகின்றது.

குறிப்பாக, தெற்காசியாவில் அதன் நற்பெயரை மேன்மைப்படுத்திய தொடர் உயரிய விருதுகளின் வரிசை, மத்திய வங்கியின் விதிமுறைகளுக்கு அமைய அவசியமான பங்கிலாப விகிதங்களை விட அதிகமான இணையற்ற ஆதாயத்தை வழங்கும் தயாரிப்புகள், வளர்ந்து வரும் சொத்துத் தளம், நாடு முழுவதும் சேவை வலையமைப்பின் ஊடான புதுமையான தானியங்கி சேவை வழங்கல்கள் மற்றும் இஸ்லாமியர்கள், இஸ்லாமியர் அல்லாத அனைத்து குடிமக்களுக்கும் அதன் இலாபகரமான சேவைகளைப் பெற ஒரு திறந்த அழைப்பு.

CLC இஸ்லாமிக் ஃபினான்ஸ் வென்ற தொடர்ச்சியான உயரிய விருதுகள் குறுகிய கால இடைவெளியில் அதன் வளர்ந்து வரும் நற்பெயர், இணக்க வலிமை மற்றும் இணையற்ற வாடிக்கையாளர் மீதான கவனம் ஆகியன இதற்கு சான்றாக அமைகின்றன.

CLC இஸ்லாமிக் ஃபினான்ஸ் Islamic Finance Forum of South Asia வில் (IFFSA தெற்காசியாவில் இஸ்லாமிய வங்கியாளர்களுக்கான ஒரேயொரு வருடாந்த ஒன்றுகூடல்) தொடர்ச்சியாக விருதுகளை வென்றது.

# மதுரங்குளி பஜாஜ் உதிரிப்பாக மத்திய நிலையம் திறப்பு

பஜாஜ் அசல் உதிரிப்பாக விற்பனை நிலையம் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட் நிறுவனத்தின் மதுரங்குளி பிரதேச அலுவலகத்தில் திறக்கப்பட்டுள்ளது. புத்தளம் மற்றும் மதுரங்குளி ஆகிய பகுதிகளில் உள்ள பஜாஜ் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்குத் தேவையான அசல் உதிரிப்பாகங்களை இந்தப் புதிய விற்பனை நிலையத்தின் ஊடாக இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன், இந்த மாதம் 17 முதல் 20 ஆம் திகதி வரை மதுரங்குளி டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட் நிறுவன வளாகத்தில் சிறப்பு விற்பனை ஊக்குவிப்பு பிரசார நிகழ்வும் நடைபெற்றது



இந்த வியாபார ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்கும் வாடிக்கையாளர்கள் சகலருக்கும் அனைத்து பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களுக்கு 10% தள்ளுபடியும், தேர்ந்தெடுக்கப்பட்ட அசல் உதிரிப்பாகங்களுக்கு 50% தள்ளுபடியும் வழங்கப்படும்.

சகல பஜாஜ் வாகனங்களுக்கும் இலவச புகை பரிசோதனை மற்றும் வாகன பரிசோதனை மேற்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. 2500 ரூபாவுக்கும் அதிகமான அசல் உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக வாகனம் கழுவிக்கொடுக்கப்பட்டது.

பஜாஜ் முச்சக்கரவண்டிகளுக்கு கிறீஸ் இடுதலும் இந்தத் திகதிகளில் இலவசமாக மேற்கொள்ளப்பட்டது.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட் நிறுவனத்துடன் இணைந்த ரியசக்வல கிளையின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு தமது வாகனங்களை விற்பனை செய்வதற்கு, பரிமாற்றிக்கொள்வதற்கும், பதிவுசெய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் அல்லது முச்சக்கரவண்டியை கொள்வனவு செய்வதற்கும் வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

இவ்விடத்திலேயே அவ்வாகனங்களை லீசிங் செய்வதற்கான நிதி வசதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், வாடிக்கையாளர்களின் வசதியை மேலும் அதிகரிக்கும் நோக்கில் விற்பனை செய்யப்படும் வாகனங்களுக்கான கொடுப்பனவே உடனடியாகவே வழங்கப்படுவதுடன், கொள்வனவு செய்யப்படும் வாகனங்களுக்கான காப்புறுதி வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள முடியும்.

# கார்டிஃவ் மெட்ரோபொலிடன் பல்கலைக்கழகத்தின் உயர் டிப்ளோமா ICBT கம்பஸில்

இலங்கையில் உயர்கல்விச் சேவைகளை வழங்குவதில் தனியார் துறையில் முன்னிலையில் திகழும் கல்வியமான ICBT கம்பஸ், பிரித்தானியாவின் கார்டிஃவ் மெட்ரொபொலிடன் பல்கலைக்கழகத்தின் உயர் டிப்ளோமாவை நேரடியாக தொடர்வதற்கான வசதியை அறிமுகம் செய்துள்ளது.

இலங்கையின் மாணவர்களின் நலன் கருதி, இந்த கற்கையை நேரடியாக இலங்கையின் ICBT கம்பஸில் தொடர்வதற்கான வசதியை ஏற்படுத்தியுள்ளது. இந்த உயர் டிப்ளோமா கற்கைகள் பிரித்தானிய நிலை 5 ஆக அமைந்திருப்பதுடன், கார்டிஃவ் மெட் பல்கலைக்கழகத்தினால், உள்ளக ஐக்கிய இராஜ்ஜிய தகைமைகளில் ஒன்றாக வழங்க முன்வந்துள்ளது.

2021 கார்டியன் பல்கலைக்கழக லீக் அட்டவணையில் கார்டிஃவ் மெட். 72 ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.


இது ஐக்கிய இராஜ்ஜியத்தினால் வழங்கப்படும் நேரடி பல்கலைக்கழக தகைமையாக அமைந்திருப்பதால், கார்டிஃவ் மெட். பல்கலைக்கழகத்தின் உயர் டிப்ளோமாவை ICBT கம்பஸில் தொடரும் மாணவர்களுக்கு, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் எதிர்காலத்தில் சிறந்த உயர் கல்வியை தொடர முடியும். இலங்கையில் அதிகளவு கேள்விகள் நிலவும் பல கற்கைகளை ICBT கம்பஸ் அறிமுகம் செய்துள்ளதுடன், இந்த ஐக்கிய இராஜ்ஜியத்தின் நேரடி உயர் டிப்ளோமா என்பது, ஐக்கிய இராஜ்ஜிய பல்கலைக்கழக கற்கை ஒன்றுக்கு உள்வாங்குவதற்கு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது.

அனுமதிக் கடிதம் மற்றும் பல்கலைக்கழக அடையாள அட்டை ஆகியன கார்டிஃவ் மெட். இனால் வழங்கப்படுவதுடன், பல்கலைக்கழகத்தின் பல வளங்களை ஒன்லைன் ஊடாக அணுகக் கூடிய வசதிகளும் வழங்கப்படும். ICBTஇல் கார்டிஃவ் மெட். உயர் டிப்ளோமாவை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு, ஐக்கிய இராஜ்ஜியத்தில் இடம்பெறும் பட்டமளிப்பு விழாவில் பங்குபெறக்கூடிய வாய்ப்பும் வழங்கப்படும். இலங்கையில் இந்த வசதியை வேறெந்தவொரு உயர் டிப்ளோமா அல்லது உயர் தேசிய டிப்ளோமாவும் வழங்குவதில்லை.





வியாபார முகாமைத்துவம், மென்பொருள் பொறியியல், வலையமைப்பு, உளவியல் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற பிரிவுகளில் ICBT கம்பஸில் கார்டிஃவ் மெட் உயர் டிப்ளோமாக்கள் வழங்கப்படுகின்றன.




## மேஷம்

**(அஸ்வினி – பரணி, கார்த்திகை 1ம் பாதம்)**

சந்தோஷம் நிரம்பிய சூழ்நிலை இருந்தால் மனசும் உல்லாசமாக இருக்கும். இனிப்புப் பண்டங்களை விரும்பி உண்ணும் குணம் உடையவர்கள்.

துலா ராசியில் புதன் சந்திக்கின்றார். உங்கள் ராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன் அவர் 7ம் இடத்தில் சஞ்சரிக்கும்பொழுது மாமன், மைத்துனர் வழியில் உள்ள பிரச்சினைகள் தீரும். அவர்கள் மூலம் அனுகூலம் கிடைக்கும் இல்லத்தில் மங்கள விழாக்கள் நடைபெறுவதில் இருக்கும் முட்டுகட்டைகள் அகலும் உடன் பிறப்புகளுடன் இருந்து வந்த சொத்து பிரச்சினைகள் சுமூகமாக தீரும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ம், 3ம், 4ம் பாதம், ரோகினி மிருகசீரிடம் 1ம், 2ம் பாதம்)**

சமையலை முன்பே திட்டமிட்டு கொண்டு தான் சமையல் அறையில் நுழைவார்கள் வேகமாக செய்தாலும் இவர்கள் தயாரிக்கும் உணவுப் பொருள்கள் ருசியாகவே இருக்கும்.

துலா ராசியில் சஞ்சரிக்கும் புதன் 6ஆம் இடத்தில் உள்ளார் உங்களுக்கு பண வரவில் இருந்த தடைகளை அகற்றும். எதிரிகளின் தொல்லை அகல எடுத்த முயற்சி பலன் தரும். மாமன், மைத்துனர் வழியில் உள்ள மனக்கசப்பு அகலும் புதிய வண்டி, வாகனங்கள் வந்து சேரலாம். உத்தியோக, ரீதியிலான பதவி உயர்வுகளையும் அடையலாம்.

## மிதுனம்

**(புனர் பூசம் 4ம் பாதம், திருவாதிரை, மிருகசீரிடம் 1ம், 2ம் பாதம்)**

உங்கள் ராசிநாதன் புதன் துலாம் ராசியில் பஞ்சம் (5ஆம்) இடத்தில் சஞ்சாரம் செய்வது மிகுந்த யோகம் தரும். பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுவடைவதால் பகைவர்களின் தொல்லை நீங்கும். சொத்து பிரச்சினைகளும் சுமூகமாக தீரும். மாமன், மைத்துனர் வழி உறவுகள் மேம்படும் தொட்டது எல்லாம் துலங்கும் வாரம் ஆகும்.

## கடகம்

**(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்)**

குறிப்பிட்ட வட்டத்துக்குள் தான் தங்களுடைய பழக்க வழக்கங்களை வைத்து கொள்பவர்கள். துலாம் ராசியில் உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்தில் புதன் சஞ்சாரம் செய்கின்றார். நல்ல சந்தர்ப்பங்கள் உங்களை ஆடி வரலாம்.

உங்களது நண்பர்கள் நல்லவிதத்தில் கைகொடுத்து உதவி செய்வார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். பாகப்பிரிவுகள் சுமூகமாக தீரும். உறவினர்களுடன் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். பெரியவர்களின் ஆதரவும் கிடைக்கும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்)**

எதையும் ஒரு வேகத்தோடு செய்வதால் இவர்களுக்கு ஓய்வு மிகத் தேவை. அதிகாரமுள்ள பதவிகளை வகித்தாலும் சொந்தத் தொழிலே ஏற்றது.

துலா ராசியில் புதன் சஞ்சரிக்கின்றார். உங்கள் ராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன் 3ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் வெற்றிகள் ஸ்தானம் பலம் அடைகிறது. எனவே தடைப்பட்ட சிலகாரியங்கள் இப்பொழுது நிறைவேறும். சொத்துப் பிரச்சினைகள் தீரும். மாமன், மைத்துனர் வழி சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மனம் மகிழ்வீர்கள்.

## கன்னி

**(உத்தரம் 2ம், 3ம், 4ம் பாதம், அத்தம், சித்திரை 1ம், 2ம் பாதம்)**

குடும்பத்தில் லஷ்மி வாசம் செய்வாள். புத்தி சாதுரியமும் உயர்ந்த திறமையும் எந்த சிறுகாரியத்திலும் பிரதிபலிக்கும். ஊரார் எல்லாம் அவர்களை புகழ்வர்.

துலாம் ராசியில் புதன் சஞ்சாரம் செய்கின்றார். உங்களது ராசி நாதனாகவும் 10ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் பொருளாதார பற்றாக்குறை நீங்கும். புதிய தொழில் தொடங்குவதற்கான முயற்சிகள் கைகூடிவரும் உத்தியோகத்தில் உள்ளவர்கள். ஓய்வு பெறவும் காலம் கனியும். கூட்டு விற்பனை தொடங்கலாம். மன உளைச்சல்களில் இருந்து விடுபடுவீர்கள்.

## துலாம்

**(சித்திரை 3ம், 4ம் பாதம், சுவாதி, விசாகம் 1ம், 2ம், 3ம் பாதம்)**

எதையுமே சமநோக்கோடு பார்க்கும் குணம் இயற்கையாகவே இந்த ராசி நேயர்களுக்கு அமைந்திருப்பதால் ஒருவித தனித்தன்மை இவர்களிடம் காணப்படும். உங்கள் ராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். உங்கள் ராசியில் இப்பொழுது சஞ்சாரம் செய்கின்றார் விரயாதிபதி உங்கள் ராசிக்குள் இருப்பதால் செலவு செய்வீர்கள். அத்துடன் 9ஆம் இடத்துக்கு உரியவர் என்பதால் வீட்டிற்கு தேவையான ஆடம்பர பொருட்களை வாங்குவதிலும் ஆர்வம் காட்டுவீர்கள். எல்லா விடயங்களிலும் நிதானமாக நடவுங்கள்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ம், பாதம், அனுசம், கேட்டை)**

மற்ற ராசிக்காரர்களைவிட இதில் பிறந்தவர்களிடையே நல்லதோ கெட்டதோ மிக தீவிரமாக தெரியும். அதாவது மிதமான போக்கையே காண முடியாத குணம் கொண்டவர்கள்.

உங்கள் ராசிக்கு அட்டமாதிபதியாக விளங்குபவர் புதன். உங்கள் 12ம் வீட்டுக்குரிய துலாமில் சஞ்சாரம் செய்வதால் நல்ல வேலைகளுக்காக பயணங்கள் ஏற்படலாம். பாராட்டும், புகழும் வந்துசேரும் விபரீத ராஜ யோகம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மூத்த சகோதரர்களால் உதவி கிடைக்கும். வெளிநாட்டு உதவிகளும் கிடைக்க வாய்ப்பு உண்டு.

## தனுசு

**(மூலம் பூராடம், உத்தராடம் 1ம் பாதம்)**

தவறு செய்தால் பிறருக்கு தீமை இழைத்தால் கடவுள் தண்டனை கொடுத்துவிடுவார் என்று அஞ்சுபவர். அதனால் நேர்மையை கடைப்பிடிப்பவர்களாக விளங்குபவர்கள். உங்கள் ராசிக்கு 7ம், 10ம் இடங்களுக்கு உரிய புதன். இப்பொழுது துலா ராசியில் 11ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்கின்றார். தொழில் ரீதியாகவும், உத்தியோக ரீதியாகவும் நன்மை அடைவீர்கள். தாய்மாமன் வழி உறவினர்களாலும், மைத்துனர்களாலும் நல்ல உதவிகள் கிடைக்கும் பொருளாதார முன்னேற்றம் தரும் வாரம்.

## மகரம்

**(உத்தராடம் 2ம், 3ம், 4ம், பாதம், திருவோணம், அவிட்டம் 1ம், 2ம் பாதம்)**

ஆடு பயப்படாமல் நிதானமாக மலையுச்சிக்கு போய் மேயும் அதேபோல் படபடப்பு இல்லாமல் எதனையும் யோசித்து பார்த்து செயல்படுவதில் கெட்டிக்காரர்கள்.

துலாம் ராசியில் 10ஆம் இடத்தில் புதன் சஞ்சாரம் செய்கின்றார். உங்கள் ராசிக்கு புதன் 6ம், 9ம், இடத்துக்கு உரியவர். உத்தியோக உயர்வு ஏற்படும். நினைத்த காரியம் கைகூடிவரும் பொருளாதார பிரச்சினை சுமூகமாக தீரும். வீடு மாற்றங்கள் ஏற்படலாம். கடன் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்.

## கும்பம்

**(அவிட்டம் 3ம், 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1ம், 2ம், 3ம்பாதம்)**

இரும்பு சம்பந்தமான வியாபாரம் இவர்களுக்கு ஏற்ற தொழில். தொழில் நுணுக்க கல்வி கற்றாலும் வாழ்க்கையில் சிறந்து விளங்குவார்கள்.

உங்கள் ராசிக்கு 9ம், இடத்திற்கு துலாமில் புதன் சஞ்சாரம் செய்கின்றார். பொன், பொருள் சேர்வதற்கு வழி வகுத்து கொடுப்பார். ஐந்தும், ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும் என்பார்கள். எனவே 5க்கு உங்கள் ராசிக்கு அதிபதியான புதன் 9ஆம் இடத்திற்கு வரும் இந்த நேரத்தில் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். சொந்த தொழில் வியாபார நிலையம் அமையலாம். நண்பர்கள் உதவி செய்வார்கள். சொத்து பிரச்சினைகள் சுமூகமாக தீரும்.

## மீனம்

**(புரட்டாதி 4ம் பாதம், உத்தராட்டாதி, ரேவதி)**

பள்ளிபடிப்பை விட இயற்கையை கூர்ந்து கவனிக்கும் திறன் இவர்களிடம் மிகுந்து காணப்படும் திறன் கொண்டவர்கள். உங்கள் ராசி 4ம், 7ம், இடங்களிக்கு அதிபதியான புதன் துலாம் ராசியில் 8ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்கின்றார். மறைந்த புதன் நிறைந்த கல்வி என்பார்கள். 8இல் இருப்பது நன்மைதான் பெற்றோர் வழி ஆதரவு உண்டு. வேலை வாய்ப்புகள் தேடி வரலாம். நண்பர்கள் ஆதரவுக் கரம் நீட்டுவார்கள்.

# இலங்கையில் அடுக்குமனைகளை நிர்மாணிப்பதில் ஐந்து ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் The Flemington

கொழும்பின் அடுக்குமனை நிர்மாணத் துறையில் அண்மையில் தொழிற்பட ஆரம்பித்த The Flemington தொழில் துறையில் 5 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடியுள்ளது.

The Flemington கடந்த 5 ஆண்டுகளில் கொழும்பின் அடுக்குமனை நிர்மாணத் துறையில் சிறப்பாக செயற்பட்டு வருகிறது. 2015 ஆம் ஆண்டில் தனது தொழிற்பாடுகளை ஆரம்பித்ததிலிருந்து, சமூகத்தில் The Flemigton இன் வெற்றியானது அடுக்குமனை நிர்மாணத் துறை, சிறப்பான வாடிக்கையாளர்கள் மற்றும் தனது வாடிக்கையாளர்கள் மீது காண்பிக்கும் நேர்மை மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக அது சம்பாதித்துள்ள நற்பெயர் ஆகியவற்றுடன் தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருகிறது.

விருது பெற்ற கட்டடக் கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட நேர்த்தியான அடுக்கு மனைகளை The Flemington வழங்குகிறது. மேலும் ஒவ்வொரு நிர்மாணச் செயற்திட்டமும் வடிவமைக்கப்படும் போது கொழும்பு மற்றும் இராஜகிரியவில் உள்ள முன்னணி பல்பொருள் அங்காடிகள், மருத்துவமனைகள், பாடசாலைகள் மற்றும் உணவகங்களுக்கு அருகிலேயே அமையும் வகையில், சௌகரியத்தை மனதில் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



முகாமைத்துவப் பணிப்பாளரான ஷாமித கணேகொடவால் ஸ்தாபிக்கப்பட்ட The Flemington அவுஸ்திரேலியாவில் அவர் 18 ஆண்டுகளாக வாழ்ந்து, அங்கு நிர்மாணத்துறையில் பெற்றுக் கொண்ட தனது அனுபவத்தை பிரதிபலிக்கும் வகையில் பேரார்வத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஒரு செயற்திட்டமாகும்.

அவுஸ்திரேலியாவில் சில கட்டுமான நிறுவனங்களில் நிதிக் கட்டுப்பாட்டாளராகப் பணிபுரிந்த ஷாமித, நகர வாழ்வின் சௌகரியத்திற்கு மத்தியில் விசாலமான இடவசதி கொண்ட உட்புற வடிவமைப்புடன், அந்தரங்கத்தைப் பேணும் வகையில் வழங்குவதில் அவுஸ்திரேலியாவில் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் நவீன அடுக்குமனைகளை உருவாக்குவதற்கான ஆர்வத்தை தனக்குள் வளர்த்துக் கொண்டார்.

பின்னர் அவர் தனது சொந்த நிறுவனமான EliSh Development Pty Ltd இனை அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் மாநகரிலும், இலங்கையின் கொழும்பிலும் நிறுவி, ஒரு புத்தாக்கமான அடுக்குமனை நிர்மாணிப்பாளராக அதனை மாற்றியமைத்துள்ளார்.

**வர்த்தக மஞ்சரி**


# கையிலிருக்கும் பணத்துக்கு சிறந்த தேர்வாய் அமையும் Samsung Galaxy M01 Core

Samsung இலங்கையின் முதற்தர ஸ்மார்ட் ஃபோன் வர்த்தக நாமம் ஆகும். இது அண்மையில் Galaxy M01 Core இனை அறிமுகப்படுத்தியது. அதன் மூலம் தமது Galaxy M series இன் வரிசைக்கு மேலும் புதியதை சேர்த்துள்ளது.

Galaxy M01 Core ஆனது ஸ்மார்ட் ஃபோன்களுக்கு மாற விரும்பும் அல்லது ஸ்மார்ட் ஃபோன் பாவனைக்கு ஆரம்ப நிலையிலுள்ள பாவனையாளர்களுக்கு ஏற்றது ஆகும்.

இலங்கை மேலும் டிஜிட்டல் மயப்படுத்தப்படவிருப்பதால் இந்த Galaxy M01 Core ஆனது முதன் முறையாக ஸ்மார்ட் ஃபோனை பாவிக்க தொடங்குவோருக்கு உகந்ததாக அமைவதுடன் அதற்கான அணுகலையும் வழங்கிடும்.

இலங்கையில் மிகப்பெரிய விநியோக வலையமைப்பினைக் கொண்டுள்ள Samsung




அதன் மூலம் Galaxy M01 Core இனை நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் கிடைக்கக்கூடியதாகச் செய்திடும். Galaxy M01 Core ஆனது தொழில்நுட்பத்தை அணுகச் செய்கிறது, மலிவானது மற்றும் நாடு முழுவதும் உள்ள நுகர்வோருக்குக் கிடைக்கச் செய்வதற்கான உறுதிப்பாட்டினை மீண்டும் வலியுறுத்துகிறது. அத்தோடு இது விலைக்கான சிறந்த பெறுமதியை தர வல்லது என்பதுடன் விலையைக் கருத்திற்கொள்ளும் பயனர்களுக்கும், சிறந்த தரத்தினை எதிர்பார்த்திடும், சிறந்த செயற்திறன், அனுபவம், விலை மற்றும் ஸ்டைலினையும் எதிர்பார்த்திடும் பயனர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

Galaxy M01 Core கண்கவர் பார்வையைக் கொண்ட 5.3 HD+ infinity display இனைக் கொண்டுள்ளது. அத்தோடு நீடித்து உழைக்கக்கூடிய, தொடர்ந்தும் 11 மணித்தியாளங்கள் வீடியோக்களை பார்த்திடக்கூடிய 3000 mAh பட்டரியினையும் கொண்டுள்ளது. 8.6 mm மெலிதானது. Galaxy M01 Core, கறுப்பு மற்றும் நீலம் ஆகிய இரண்டு வர்ணங்களில் ஒரு ஸ்டைலான பட்டை வடிவமைப்பைக் கொண்டுள்ளது.

# மைக்ரோ ஃபைனான்ஸ் கடன்களுக்கு இயக்கப்பட்ட QR கட்டண முறையை அறிமுகப்படுத்துகிறது eZ Cash



இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின், முதலாவது மற்றும் மிகப் பெரிய மொபைல் பணம் மற்றும் கட்டண சேவையான eZ Cash, வாடிக்கையாளர்கள் நுண் நிதிக் கடன்களை (microfinance loans) நிலையான QR அட்டை மூலம் மிகவும் வசதியாக மீள் செலுத்துவதற்காக, முன்னணி சமூக பொறுப்புள்ள நுண் நிதி நிறுவனமான VisioFnund லங்கா, World Vision உடனும் சர்வதேச Vision Fund உடனும் கூட்டிணைந்துள்ளது.

இது, VisionFund லங்காவின் வாடிக்கையாளர்களை தக்கவைக்க டிஜிட்டல் முறையினை உள்ளடக்கிய தீர்வாகும். இந்த மூலோபாய கூட்டு முயற்சியானது, QR அட்டை கடனினை மீள் செலுத்தும் வசதியைத் தொடங்குவதன் மூலம் நுண்நிதி கடன் திருப்பிச் செலுத்தும் முறையை புரட்சிகரமாக்கியுள்ளது. இந்த பொறிமுறையானது அனைத்து VisioFund லங்கா வாடிக்கையாளர்களும் தங்களது கடன் விபரங்களை விரைவாகவும் வசதியாகவும் அணுகுவதற்காக அந்தந்த QR அட்டைகளை அருகிலுள்ள eZ Cash விற்பனை நிலையத்தில் QR அட்டையினை ஸ்கேன் செய்வதன் மூலம் கடனினை மீள் செலுத்தவதற்கான அதிகாரம் வழங்குகின்றது. இது கிராமப்புறங்களில் வாழும் தனிநபர்களுக்கு நிதி அணுகலை வழங்குவதோடு மட்டுமல்லாமல் நிதிப் பரிமாற்றங்களை எளிதாகவும், பாதுகாப்பாகவும், முன்னெடுப்பதில் முக்கிய படிக்கல்லாக அமைந்துள்ளது. தற்போது, அருகிலுள்ள Vision Fund லங்கா கிளைகளில் வாடிக்கையாளர்கள் இந்த அட்டையினை பெற்றுக் கொள்ளமுடியும். 2019 ஆம் ஆண்டு நிலவரப்படி, Vision Fund லங்கா நாடளாவிய ரீதியில் உள்ள கிராமப்புறங்களில் 30,000 குடும்பங்களுக்கு சேவையினை வழங்கி வருவதுடன், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களுக்கு அவசியமான நிதி உதவியினையும் மேம்படுத்துகிறது.

VisionFund லங்காவின் டிஜிட்டல் மயமாக்கல் பயணத்தில் ஒரு முற்போக்கான சமயத்தில், VisionFund லங்காவின் தலைமை நிர்வாக அதிகாரி தினேஷ் கனகரட்ணம் கருத்து தெரிவிக்கையில், “இந்த பரிமாற்றத்தின் நேரம் மிக குறைவாகும், ஏனெனில் விரைவான, பாதுகாப்பான மற்றும் எளிதான நிதிப் பரிமாற்றங்களை நடத்துவதற்கான தேவை இன்றியமையாதது என மேலும் தெரிவித்தார்.

# நீரிழிவு நோயாளர்களுக்கென பிரத்தியேகமான Diabcare ஐ அறிமுகம் செய்துள்ள ஆர்பிகோ இன்சூரன்ஸ்

வாடி க்கையாளர்களுக்கு அவசியமான வேளைகளில் ஒப்பற்ற சேவைகளைப் பெற்றுக் கொடுக்க தன்னை அர்ப்பணித்துள்ள ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி, நீரிழிவு நோயாளர்களுக்காக பிரத்தியேகமாக அமைந்த Diabcare காப்புறுதித் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

இலங்கையில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் நீரிழிவினால் பாதிக்கப்பட்டுள்ளதாக, இலங்கை நீரிழிவு சம்மேளனத்தின் தேசிய நீரிழிவு நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில், சுமார் 463 மில்லியன் நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்கள் குறைந்த மற்றும் மத்தியளவு வருமானமீட்டும் நாடுகளில் காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆறு நொடிகளுக்கும் தலா ஒரு நபர் வீதம் நீரிழிவால் உயிரிழப்பதாக தெரிவிக்கப்படுவதுடன், அமைதியான உயிர்கொல்லியாகவும் அறியப்படுகின்றது.


உலகில் காணப்படும் நான்கு பிரதான தொற்றா நோய்களில் ஒன்றாக நீரிழிவு காணப்படுகின்றது.




கடந்த காலத்தில், நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுகாதாரக் காப்புறுதியொன்றைப் பெற்றுக் கொள்வது என்பது மிகவும் கடினமான காரியமாக அமைந்திருப்பினும், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளினூடாக காப்புறுதியைப் பெற்றுக் கொள்வது இலகுவாக்கப்பட்டுள்ளது.

ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சியின் தாய் நிறுவனமான, றிச்சர்ட் பீரிஸ் குழுமத் தவிசாளர் கலாநிதி. சேன யத்தெஹிகேயின் நோக்கமான, அனைத்து இலங்கையர்களுக்கும், அவர்களுக்கு தேவையான போது சேவைகளை வழங்குவது என்பதன் பிரகாரம், ஆர்பிகோ இன்சூரன்ஸ், தற்போது நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த பிரத்தியேகமான காப்புறுதியை வழங்க முன்வந்துள்ளது.

# கிழக்கிலங்கையில் சுற்றுலாத் துறை: தூக்கி நிறுத்த என்ன செய்யலாம்?



சுற்றுலா என்பது என்ன? ஒரு அற்புதமான இடத்தை கண்டுகளிப்பது மட்டுமே சுற்றுலாவின் முக்கிய நோக்கமல்ல....

நாட்டின் அபிவிருத்திக்கு இன்றியமையாததாக அமைந்துள்ளது சுற்றுலாத்துறையாகும். தற்காலப் பொருளாதாரத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் ஒன்றாக விளங்குவதும் சுற்றுலாத்துறைதான். சுற்றுலாத்துறை மூலம் இலங்கைக்கு அதிகளவு வருமானம் கிடைக்கின்றது. ஆனாலும், சுற்றுலாத்துறையை இலங்கையில் இன்னும் விருத்தியடையச் செய்யவேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது. இந்நிலையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த அரசாங்கமும், பல அரச சார்பற்ற அமைப்புக்களும், பல்வேறுபட்ட பிரயத்தனங்களையும் மேற்கொண்டு வருகின்றன.

சுற்றுலா பல நாடுகளின் பொருளாதாரத்தையே தீர்மானிக்கிறது. அது, பாரம்பரியம், கலாசாரம், சுற்றுச்சூழல் போன்றவற்றை மையமாகக் கொண்டு செயற்படுகிறது. நாட்டு மக்களின் கலாசார பழக்க வழக்கங்களை அறியவும், அதுதொடர்பான தமது அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும், செப்.27 ஆம் திகதியை "சர்வதேச சுற்றுலா தினமாக" ஐ.நா சபை அங்கீகரித்து, உலக சுற்றுலா தினம் 1980 இல் இருந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

பொருளாதார சந்தையில் உலக அளவில் 2வது இடத்தை சுற்றுலாத்துறை பெற்றுள்ளது என்பது எடுத்துக்காட்டத்தக்கதாகும். உணவகம், தங்குமிடம், பொழுதுபோக்கு, போக்குவரத்து, ஓய்விடம் என 5 முக்கிய விடயங்களை உள்ளடக்கி சுற்றுலாத்துறை செயற்படுகிறது. உலக அளவில் சுற்றுலாவை மேம்படுத்தி பொருளாதாரத்தை அதிகளவு ஈட்டிய நாடுகளில் ஸ்பெயின் முதலிடம் பெறுவதோடு, பிரான்ஸ், மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் 2 ஆம், 3வது இடங்களைப், பிடித்துள்ளன. இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகள், தற்போதைய நிலையில், சுற்றுலாத்துறையில் படிப்படியாக முன்னேறி வருவதை அவதானிக்க முடிகின்றது.

ஒரு நாட்டின் சுற்றுலாத்துறையை, மேம்படுத்த பல்வேறு விடயங்கள் தேவைப்படுகின்றன. முதலில், "போக்குவரத்து வசதிகள் முறையாக செயற்பட வேண்டும். தங்குமிடம், உணவகம், போன்றனவும், பாதுகாப்பானதாக இருக்க வேண்டும். இயற்கைச் சூழல் இன்றியமையாதுள்ளது" என்றாலும்கூட, செயற்கையான முறையில் உருவாகும் இடங்களில் அடிக்கடி மாற்றத்தை கொண்டுவர வேண்டும். மாற்றமின்றி ஒரேவிதமாக இருந்தாலும், சுற்றுலாப்பயணிகளின் வருகை குறையும் எனலாம்.


சுற்றுலாத்துறை தகவல் நிலையம்

இலங்கையைப் பொறுத்தவரை சுற்றுச்சூழல், பல சவால்களை எதிர்கொண்டாலும், தொன்மையான விடயங்களைப் பார்வையிட வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்த வண்ணம் உள்ளது. ஆசியாவை பொறுத்தவரை பாதுகாப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு செல்லும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை ஆரம்பத்தில் குறைவாக இருந்தாலும் தற்போது அது மெல்ல மெல்ல அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

வேறு நாடுகளுக்குச் செல்லும், சுற்றுலாப் பயணிகளின் உடல்நலன் மட்டுமல்ல, உயிரையும் காக்கும் பொறுப்பும் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு உண்டு. பணத்தை செலவழித்து மகிழ்வை தரும் பயணங்கள் வாழ்வில் எந்தளவுக்கு முக்கியமோ, அதேபோல் செல்லும் நாடுகளின் பாரம்பரியங்களை அறிந்து கொள்வதும் வாழ்க்கைக்கு அவசியம் தான்.

பாடசாலை பருவங்களில், சுற்றுலா என்ற வார்த்தை நம்மை அதிக அளவில் கவர்ந்திருக்கும். அதற்கு முக்கிய காரணம் பயணமும் நேரமும்தான். இன்று பல இடங்களுக்கு சென்றாலும் பாடசாலை ஊடாக சென்ற சுற்றுலாப் பயணம் என்றும் பசுமை மாறாத நினைவுகளாகதான் அனைவருக்கும் உள்ளது.

சுற்றுலா, என்பது வெறுமனே கண்களைக் கட்டிக் கொண்டு யானையைத் தொட்டு, தடவி அனுபவிப்பதைப்போல இருக்ககூடாது. அதன் மகத்துவத்தை அனுபவித்தால் தான் விவரிக்கமுடியும் எனலாம். சுற்றுலாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கிலும், சுற்றுலாவில் ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரம், கலாசாரம், வரலாறு என்பதையெல்லாம் அடுத்த தலைமுறைக்கு கடத்தும் நோக்கிலும் உலகம் முழுவதும் இன்று (செப்டம்பர் 27) உலக சுற்றுலா தினம் கொண்டாடப்படுகிறது.

தற்போது உலகின் மிகப்பெரிய துறையாக விளங்குவது, சுற்றுலாத்துறைதான். அது மட்டுமின்றி உலகின் இரண்டாவது மிகப்பெரிய தொழில் சுற்றுலா என்று சொன்னால் அதனை சிலரால் நம்ப முடியாமலிருக்கும். ஆனால் உண்மையும் அதுதான். போக்குவரத்து, உணவு, இடவசதி, ஓய்வு மற்றும் கேளிக்கை என 5 துறைகளை சார்ந்து விளங்குகிறது இச்சுற்றுலா துறை. வளரும் நாடுகளுக்கு மிகப்பெரிய பலமாக சுற்றுலாதான் இருக்கிறது எனலாம். வெறும் பாலைவனத்தை வைத்துக் கொண்டு டுபாய் சுற்றுலாவில் அதிக வருவாயை ஈட்டி வருகிறது. சிறிய நாடான சிங்கப்பூர், எந்தவிதமான பெரிய வளமும் இல்லாமல் சுற்றுலாவில் உலக நாடுகளுக்கு சவால் விடும் வகையில் வளர்ந்து



நிற்கின்றது என்றால் அது மிகையாகாது.

சில நாடுகளில் சுற்றுலாத் துறையை நம்பித்தான் நாட்டின் பொருளாதாரம் இருக்கின்றது. அதனால் சுற்றுலாத்துறை பல உலக நாடுகளின் முக்கிய தொழில்துறையாக இன்றளவும் இருந்து வருகின்றது.

உலகத்தில் அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் நாடாக பிரான்ஸ் திகழ்கின்றது. இந்த நாட்டுக்கு வருடாந்தம் சுமார் 82.6 மில்லியன் வெளிநாட்டவர்கள், சுற்றுலாப் பயணிகளாக வந்து செல்கின்றனர். இரண்டாவது சுற்றுலா நாடாக அமெரிக்கா திகழ்கின்றது. சுமார் 77.5 மில்லியன் பேர் வருடத்திற்கு இங்கு வந்து செல்கின்றார்கள். மூன்றாவது நாடான ஸ்பெயினில் வருடத்திற்கு 75.6 மில்லியனும், மற்றும் இங்கிலாந்துக்கு 35.8 மில்லியன் பணத்தையும் மக்கள் சுற்றுலாவிற்காக செலவு செய்கிறார்கள்.

இது இவ்வாறு இருக்க இலங்கையில் உள்ளூர் சுற்றுலாவை ஊக்குவிக்கவும், அது தொடர்பில் மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களுக்கிடையிலான வளங்கள், சுற்றுலாத்தலங்கள், போன்ற விபரங்களை பரஸ்பரம் விளம்பரப்படுத்தல், இலைமறைகாயாக அமைந்துள்ள பல இடங்களை அடையாளம் கண்டு அவ்வாறான இடங்களையும், சுற்றுலாத்தலங்களாக அடையாளப்படுத்தல், புதிய, புதிய சுற்றுலா வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்தல், உள்ளூர் சுற்றுலா போக்குவரத்துக்களை ஆரம்பித்தல் போன்ற பல விடயங்களை ஏற்படுத்துவதும் காலத்தின் கட்டாயமாகவுள்ளது.

அதுபோல் சுற்றுலாத்துறைக்கு கிழக்கில் மிகவும் வளம் மிக்க இடங்களாகவுள்ள மட்டக்களப்பு, அம்பாறை, மற்றும் திருகோணமலை உள்ளிட்ட நாலா பாகங்களிலும், சுற்றுலாத்துறையை சர்வதேச ரீதியில் மேலும் விஸ்தரிக்க வேண்டும் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத் துறையினை கவரக்கூடிய இடங்களாக பல இடங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. மாவட்டத்தில் முக்கியமான இடங்களாகவுள்ள உன்னிச்சை, தொப்பிக்கல் மலை, பொண்டுகள்சேனை, பனிச்சங்கேணி, மட்டக்களப்பு வாயில் மிதக்கும்படகு வீடுகளை அமைத்து, அதில் சிற்றுண்டிச் சாலைகளை அமைப்பது, தொப்பிக்கல் மலையில் இயற்கைப் பூங்காக்களை அமைப்பது, காட்டு விலங்குகளை அவதானிக்கக் கூடிய சுற்றுலாத்துறையினரை கவரக்கூடிய திட்டங்களை மேற்கொள்வதற்கும், மாவட்டத்தில் சுற்றுலாத் தலங்களை அடையாளம் கண்டு அபிவிருத்தி செய்வதற்குமான பல முன்மொழிவுகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சுற்றுலா மையமாக மாறப்போகும் மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டை**

இந்நிலையில் மட்டக்களப்பில் உள்ள ஒல்லாந்தர் கோட்டையை சுற்றுலா மையமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுத்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களில் தற்போது மாவட்டச் செயலகமாக இயங்கிவரும் ஒல்லாந்தர் கோட்டையை வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கான புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி கடந்த வார இறுதியில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்து, மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராஜா தலைமையிலான அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது மட்டக்களப்பில் அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டையை சுற்றுலா மையமாக மாற்றியமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன. மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையை சுற்றுலாவின் மூலம், வருமானத்தை ஈட்டித் தரும் இடமாக மாற்றியமைப்பதோடு அதன் சரித்திரப் பழமை மாறாமல் பராமரிப்பதென்றும் முடிவெடுக்கப்பட்டதற்கமைவாக தற்போது பழுதுபார்த்துப் புணரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒல்லாந்தர் கோட்டையில் கலாச்சார விழுமியங்களைப் பிரதிபலிக்கின்ற நிகழ்ச்சிகள், பண்பாட்டு, கலாச்சார உடைகள், உணவுகள், நூதனசாலை உட்பட பிரதேசத்தின் பண்பாட்டு பின்னணிகளை பிரதிபலிக்கின்ற ஒரு மத்திய நிலையமாக மாற்றி அமைப்பதற்கான முதற் கட்ட வேலையாக தகவல் மையம் ஒன்றை அமைத்து அதனூடாக செயற்படுத்த திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.



**சுற்றுலாத் தலமாகவுள்ள திருகோணமலை**

இந்நிலையில் கிழக்கின் சுற்றுலாத்துறை மையமாக விளங்கும் திருகோணமலைக்கும் கடந்த வாரம் இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாரச்சி, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித்தா பி.வன்னியசிங்க, கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியக தலைவர் ஹரி, முகாமையாளர் ஞானசேகரன், மற்றும் மாவட்ட முகாமையாளர் எம்.மதியழகன் அகம் நிறுவன இணைப்பாளர் பொ.சற்சிவானந்தம் உள்ளிட்ட குழுவினர் விஜயம் செய்து சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

வ.சக்திவேல் ✍

திருகோணமலையில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பான தகவல்களை திரட்டுவதற்காகவும், முன்னெடுக்கப்பட்டுவரும் சமூக மட்ட சுற்றுலா அபிவிருத்தி தொடர்பான விடயங்களை அவதானிதத்திருந்தனர்.

இதன் போது சுற்றுலா தகவல் மைய அமைப்பது தொடர்பான இடஆய்வு இடம்பெற்றதுடன், அகம் நிறுவனத்தின் பங்களிப்புடன் இடம்பெறும் சமூக மட்ட சுற்றுலா குழுக்களையும் பார்வையிட்டனர். அத்துடன் குச்சவெளி பிரதேதசத்தில் சுற்றுலா அமைச்சு சொந்தமான காணியில் இடம்பெறும் அபிவிருத்தியையும் அக்குழு பார்வையிட்டிருந்தது.

19ஆம் பக்கம் பார்க்க...

**உலக சுற்றுலா தினம் இன்று (செப்.27)**






இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

## YWT இளைஞர் சிரம சக்தி மக்கள் அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான நிதியினை வழங்குதல்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கடந்த காலங்களில் செயற்படுத்தப்பட்டுள்ள YWT இளைஞர் சிரம சக்தி மக்கள் அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிலைமைகள் மற்றும் கருத்திட்டத்திற்காக இன்னும் செலுத்த வேண்டியுள்ள நிதி தொடர்பிலான மற்றும் குறைநிறைகளை ஆராய்ந்து பார்த்து பரிந்துரை வழங்குவதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் மூவர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தங்கள் பிரதேசத்தில் இந்த கருத்திட்டத்திற்கு உரித்தாக மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கை சம்பந்தமான சிக்கல்கள் இருக்குமாயின் தாமதிக்காது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் அவர்களை சந்தித்து எழுத்து மூலமான தகவல்களை வழங்கவும்.

அவ்வாறு இல்லையாயின் ''தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தபால் பெட்டி இலக்கம் 17, மஹரகம" என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்ப வேண்டியதுடன் கடிதத்தினை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''YWT இளைஞர் சிரம சக்தி மக்கள் அபிவிருத்தி கருத்திட்டம்'' என தெளிவாக குறிப்பிடவும்.

• உரிய தகவல்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் - 2020.10.10

மேலதிக விபரங்களை www.nysc.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து பெற்றுக் கொள்ள முடியும்.

பணிப்பாளர் நாயகம் / தலைவர்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
இல. 65, ஹய்லெவல் வீதி,
மஹரகம

## காட்டு யானை – மனிதன் மோதலைக் குறைப்பதற்கு பிரேரணை தயாரிக்கும் விசேட குழு

காட்டு யானை - மனிதன் மோதலைக் குறைப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள தேசிய குழுவினால் அதற்கான செயல்முறை மற்றும் நிலையான பிரேரணைகள் / கருத்துக்கள், தேசிய, மாகாண, பிரதேச நிலையங்களில் மக்கள் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பிரஜைகளிடம் இருந்து கோரப்படுகின்றன.

இதுவரைக்கும் ''யானை வளத்தைப் பாதுகாப்போம் மனித உயிர்களைப் பாதுகாப்போம்'' என்னும் தலைப்பில் 2018.07.12ஆம் திகதிய லங்காதீப பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பிரேரணைகள் கருத்துக்கள் தரப்பட்டிருப்பின் மீண்டும் அவ்வாறு விண்ணப்பிக்க அவசியமில்லை.

உங்கள் எல்லா பிரேரணைகள் நிலையானதுமான நாட்டினுள் செயற்படுத்த முடியுமான மட்டத்தில் அவை அமைய வேண்டும். நியமிக்கப்பட்டிருக்கும் குழுவினால் செயல்முறை நிலைமைகளை ஆராய்ந்து தேசிய திட்டமொன்று தயாரிப்பதில் அந்த பிரேரணைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

உங்களுடைய சகல பிரேரணைகள்/கருத்துக்கள் கீழ்க்காணும் ஒழுங்குமுறைகளில் ஒன்றைப் பயன்படுத்தி 2020.10.02 வெள்ளிக்கிழமைக்கு முன்பு குழுவுக்கு வழங்க முடியும்.

**முகவரி:** **காட்டு யானை - மனிதன் மோதலைக் குறைப்பதற்கான தேசிய குழு,**
**வன ஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு,**
**இல.1090, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.**

**மின்னஞ்சல் முகவரி:** adsecdev@msdw.gov.lk

**பெக்ஸ் : 0112879063**

**வட்ஸ்அப் இலக்கம் : 0762875900**

2020.09.30ஆம் திகதி புதன்கிழமை அமைச்சரவையில் நடைபெறும் கட்சிகளின் விசேட கலந்துரையாடலுக்கு உங்களுடைய கருத்துக்களை முன்வைப்பதெனில் அதற்காக கீழ்க்காணும் இலக்கங்களுக்கு அழைத்து தகவல்களை வழங்கி பதிவு செய்து கொள்ள முடியும்.

**தொலைபேசி இலக்கங்கள் : 0777335767 / 0771380378**

நிலையான ஒரு அபிவிருத்திக்காக செழிப்பான பார்வைக்கு புத்துயிர் அளித்தல் என்பதனை நோக்கிச் செல்லும் பயணத்தில் உங்கள் பெறுமதி வாய்ந்த பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

**பீ.எல்.வர்னன் பெரேரா**
**செயலாளர்**
**காட்டு யானை - மனிதன் மோதலைக் குறைப்பதற்கான**
**தேசிய செயல்மிகு திட்டமொன்றைத் தயாரிக்கும் ஜனாதிபதி குழு**
**வன ஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 1090, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.**

பெருந்தோட்டத்துறை அமைச்சு

## இலங்கை தேயிலைச் சபை

## 2021 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல்

2021 ஆம் ஆண்டில் 574, காலி வீதி, கொழும்பு 3இல் இலங்கை தேயிலைச் சபைக்காக பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்கலுக்காக தம்மை பதிவுசெய்ய விரும்பும் உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் இங்கு கோரப்படுகின்றன.

**இல. உப பிரிவு இல.**

**அச்சிடும் அச்சு ஒப்பந்தம் மற்றும் பிரசார பொருட்களின் வழங்கல்**

1. a. பொலித்தீன் பைகள் அச்சிடல் மற்றும் வழங்கல்
   b. மக்கிப்போகக்கூடிய பைகள்
   c. தேயிலை சில்லறை பொதியிடலுக்கான நாணல் பொதிகள்
   d. அட்டைப்பெட்டி
   e. மரப்பலகையிலான தேயிலை சிறுபெட்டி
   f. பீங்கான் தேயிலை சிறுபெட்டி
   g. அலுமினியம் தேயிலை சிறுபெட்டி
   h. தேயிலை மாதிரிகளுக்கான- பிளாஸ்டிக் கொள்கலன்
   i. தேயிலை மாதிரிகளுக்கான- Alufoil உறைகள்
   j. ஆண்டு அறிக்கை, புத்தகங்கள், பிரசுரங்கள், நாட்காட்டிகள், நாட்குறிப்புகள் மற்றும் சுவரொட்டி உட்பட பிரசார பொருட்களின் வர்த்தகக் கலைப்பணி அச்சிடல்
   வருகை அட்டைகள், அடையாள அட்டைகள் அச்சிடல்
   k. பதாகைகள் அச்சிடல்
   l. புகைப்படம் மற்றும் வீடியோ

**கணினிகள்**

2. a. டோனர்/ காட்ரிட்ஜ்கள்
   b. கணினி, சேவை வழங்கல், அச்சுப்பொறிகள், UPS மற்றும் உதிரிப்பாகங்கள்
   c. கணினி மென்பொருட்கள்
   d. கணினி வன்பொருள் பராமரிப்பு/ பழுதுபார்த்தல்

**வளிச்சீராக்கி மற்றும் மின் உருப்படிகள்**

3. a. இலத்திரனியல் சாதனம்
   b. மின்னணு சாதனம்
   c. வளிச் சீராக்கிகள்
   d. மின் நிறுவகத்தின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்
   e. வளிச் சீராக்கிகளின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்
   f. மின் வடமிடல் மற்றும் கம்பியிணைப்பு

**மோட்டார் வாகனம், டயர்கள் மற்றும் டியுப்கள்**

4. a. மோட்டார் வாகனங்கள்
   b. மோட்டார் வாகனங்களுக்கான உதிரி மற்றும் உபரிப் பாகங்கள்
   c. மோட்டார் வாகனத்திற்கான டயர் மற்றும் டியூப்கள்
   d. மோட்டார் வாகனங்களுக்காக மின்கலன்கள்
   e. மோட்டார் வாகன பழுதுபார்த்தல்கள்
   f. Auto electrical பழுதுபார்த்தல்கள்
   g. மோட்டார் வாகனங்களின் சேவை வழங்கல் மற்றும் மசகீடு
   h. மோட்டார் வாகனங்களின் ஒட்டுவேலை மற்றும் வண்ணப் பூச்சு
   i. மோட்டார் வாகனங்களுக்கு சைலன்சர் பழுதுபார்த்தல்
   j. மோட்டார் வாகனங்களின் Upholstery, இருக்கை உறை மற்றும் மேற்பகுதி வேலை

**இல. உப பிரிவு இல.**

**சேவை வழங்குநர்கள்**

5. a. பூச்சிக் கட்டுப்பாட்டு சேவை
   b. சரக்கு பகிர்தல்/ விரைதூதர்
   c. சீருடைகள் மற்றும் நார்த்துணி சலவைசெய்தல்
   d. தீ மற்றும் பாதுகாப்பு சேவைகள்

**எழுதுபொருள்**

6. a. எழுதுபொருள் மற்றும் அலுவலக நுகர்வுச்சாமான்கள்
   b. நிழற்பிரதி காகிதங்கள்
   c. பொலிமர் முத்திரை மற்றும் முத்திரைகள்

**ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் சேவைகள்**

7. a. ஆய்வுகூட உபகரணங்கள்
   b. ஆய்வுகூட சோதனை இரசாயனம் மற்றும் நுகர்வுப் பொருட்கள்
   c. ஆய்வுகூட பாதுகாப்பு நுகர்வுப் பொருட்கள்
   d. ஆய்வுகூட தொற்றுநீக்கி மற்றும் சவர்க்காரம்
   e. ஆய்வுகூட பரிசோதனை தேவைகள்
   f. பொது ஆய்வுகூட உபகரண சேவை, பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்
   g. ஆய்வுகூட உபகரண தரங்கணித்தல்
   h. ஆய்வுகூட உருப்படி மறுசுழற்சி

**அலுவலக தளபாடம்**

8. a. அலுவலக உபகரணங்கள்
   b. உருக்கு தளபாடங்கள்
   c. மரப்பலகை தளபாடங்கள்
   d. அலுவலக உபகரணங்களுக்கான பழுதுபார்த்தல் மற்றும் சேவை வழங்கல்

**நிர்மாணம், சார்ந்த வேலைகள் மற்றும் ஆலோசனை சேவைகள்**

9. a. சிவில் பொறியியல் ஒப்பந்ததாரர்கள்
   b. கட்டட பழுதுபார்த்தல் மற்றும் புனர்நிர்மாணம்
   c. உலோகக் கட்டுமானம் மற்றும் சார்ந்த வேலைகள்
   d. அலுமினிய கட்டுமானங்கள்

ஒவ்வொரு உப பிரிவுக்காகவும் 1,500 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி மு.ப. 9.30 தொடக்கம் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில் 2020 நவம்பர் 03 அன்று பி.ப. 2.00 வரை இலங்கை தேயிலைச் சபையின் நிர்வாகப் பிரிவு, 574, காலி வீதி, கொழும்பு 3 என்ற முகவரியில் இருந்து விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணம் ரொக்கப்பணம் அல்லது காசோலை மூலம் செலுத்த முடியும். இலங்கை தேயிலைச் சபையின் பெயருக்கு காசோலை வரையப்படல் வேண்டும்.


விண்ணப்பமானது 2020 நவம்பர் 05 ஆம் திகதி பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் 574, காலி வீதி கொழும்பு 03இல் இலங்கை தேயிலைச் சபை, பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்குமாறு கையில் கொண்டுவந்து சேர்த்தல் அல்லது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2021 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல்" என குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்**

1. இயந்திரம் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் போன்ற பழுதுபார்க்கக்கூடிய/ சேவை வழங்கக்கூடிய உருப்படிகளின் எதிர்கால வழங்குநர்கள் எப்போதும் தேவை ஏற்படும்போது பழுதுபார்ப்பதற்காக தமக்கு சொந்தமான பணிப்பட்டறை வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.
2. கோரப்படும்போது உடன் கூறுவிலை வழங்கத்தவறும் அல்லது விநியோகங்களை மேற்கொள்ள/ நேரத்திற்கு சேவைகளை வழங்கல் மற்றும் விவரக்குறிப்புகள்/ மாதிரிகளுக்கு ஏற்ப அல்லது கொள்முதல் கோரலில் நிர்ணயிக்கப்பட்டவாறு வழங்கத் தவறும் அல்லது தரமற்ற பொருட்களை வழங்கும் எதிர்கால வழங்குநர்கள் பதிவேட்டில் இருந்து நீக்கப்படுவர்.
3. பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களின் பட்டியலில் இருந்தே உருப்படிகளின் வழங்கல்/ சேவை வழங்கலுக்கான கூறுவிலைகள் சாதாரணமாகக் கோரப்படும். எவ்வாறாயினும் தேவையெனில் புதிய வழங்குநர்களை பதிவுசெய்ய அல்லது வேறு எந்த ஒரு மூலத்தில் இருந்தும் கூறுவிலைகள் மற்றும் கொள்முதல்களை கோருவதற்கு இலங்கை தேயிலைச் சபைக்கு உரிமை உள்ளது.
4. ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளின் பிரிவுக்காக பதிவுசெய்வதற்கான தேவை ஏற்படின், விண்ணப்பக் கட்டணமாக விண்ணப்பத்திற்கு 1500 ரூபா (மீளளிக்கப்படாதது) ரொக்கப்பணத்தை செலுத்தி ஒவ்வொரு பிரிவுக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. இலங்கை தேயிலைச் சபை ஊழியர்களின் துணைவர்கள் அல்லது குழந்தைகள் விண்ணப்பதாரர்கள்/ உரிமையாளர்கள்/ கூட்டாண்மையாளர்கள்/ பணிப்பாளர்களாக இருக்கும் நிறுவனங்களின் விண்ணப்பதாரர்கள்/ வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்கள்/ சேவை வழங்குநர்கள் மற்றும் ஆலோசனை சேவை வழங்குநர்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதி இல்லை.
6. எந்த ஒரு காரணமும் கூறாமல் பதிவுக்கான எந்த ஒரு விண்ணப்பத்தையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை இலங்கை தேயிலைச் சபை வசமானது. இலங்கை தேயிலைச் சபை நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பக் கட்டணங்களை கோருவதற்கு விண்ணப்பதாரருக்கு தகுதி இல்லை.
7. மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் மற்றும் வாகன சேவை வழங்கல்களுக்கான பதிவு தேயிலைச் சபை மூலம் நடத்தப்படும் மதிப்பீட்டில் மாத்திரமே மேற்கொள்ளப்படும்.

உருப்படிகளின் ஒவ்வொரு பிரிவுக்காகவும் விண்ணப்பத்திற்கான ரொக்கப்பணமாக 1500 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பின்வரும் அலுவலகத்தில் இருந்து பெறும் நிர்ணயிக்கப்பட்ட படிவங்களின் தொகுதியிலேயே விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். **எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர்கள் இந்த பத்திரிகை விளம்பரத்திற்கு அமைய, பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சேவையை குறிப்பிட்டு முகவரி இடப்பட்ட கடிதத் தாள் ஒன்றில் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பிக்க கோரப்படுகிறது. விண்ணப்பப் படிவங்களை கட்டணம் இன்றி பரீட்சிக்க முடியும்.**

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தேயிலைச் சபை**
**574, காலி வீதி,**
**கொழும்பு 3**



# சந்தோசம் தரும் சைக்கிள்!

செல்லமுத்து கிருஷ்ணகுமாராகிய கிருஷ்ணாவுக்கு இப்போது நாற்பது வயதாகிறது. மனைவி தேவி. மகன் கோபி. பாவம் கிருஷ்ணா! வீதி விபத்தில்...இறைவன் அவனுடைய ஒரு 'கரத்தை' எடுத்தான். அவன் கவலைப்படவில்லை.ஆனாலும் அவனுக்கு வாழ்க்கையில் ஒரு கைதான் எடுத்தான். அவனுக்கு வாழ்க்கையில் ஒரு கை தான் இருக்கிறது. நம்பிக்கை! வாழ்க்கையிலும் ஒரு கைதானே இருக்கிறது! அவனுடைய தள்ளுவண்டிக் கரத்தைக்கு என்ன பெயர் தெரியுமா...? எஸ்.கே. வண்டி!

ஞாயிற்றுக்கிழமைகளில்... காலை ஆறு மணிக்கே புறப்பட்டு விடுவான். பாலத்துறையிலிருந்து பொரளையும் தாண்டிப் போய்... பாராளுமன்றம் நோக்கித் தொடரும் பிரதான வீதி ஆரம்பிக்கும் சந்தி வரை... விற்று விட்டு அவன் வீடு வந்து சேரும் போது இரவு ஏழு மணியாகி விடும். இன்றும் அதே! இதோ.... கிருஷ்ணாவின் 'எஸ்.கே. வண்டி' இப்போது – ஒறுகொடவத்தைச் சந்தியில் நின்று கொண்டிருக்கிறது!

உதடு சுடுபட்டது. சூடுபட்டதும், பீடித்துண்டை வீசியெறிந்து, காறித்துப்பி இருமினான். கரத்தையிலிருந்து அந்த சைக்கிளை அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

இன்று காலையிலும் அவனுடன் சைக்கிள் கேட்டுச் சண்டை போட்டுக் கோபித்தழுதான், கோபி.

சிணுங்கிச் சிவந்த அந்தச் சின்ன முகத்தில் படர்ந்த ஏக்கம்... கிருஷ்ணாவின் இதயத்தைக் கிழித்துக் கொண்டிருந்தது. தன்னிலை திட்டி...அவனுக்கவனே பகையானான். ஆனாலும், ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான். அவன் அன்பு மனங்களில் சிரிக்கின்றான்.

கவலையோடு வந்தவனுடைய முகத்தில் இப்போதுதான் புன்னகை தவழ்கிறது. சைக்கிள் தந்தவரை வாழ்த்தி அவனது உள்ளம் மகிழ்கிறது.

'எவ்ளோ நல்ல மனசு அவரு நல்லா இருக்கணும்...!'

காலையில், சாத்திரி ஐயா சொன்னது சரிதான்.

துலாம் ராசிக் காரருக்கு இன்று அதிர்ஷ்ட நாள்தான்!

சந்தோஷப் பரிசாக இந்த சைக்கிள் கிடைத்திருக்கிறது. பொரளைக் கப்பால் வீடமைப்புத்திட்ட வீடொன்றில்,

'இத எடுத்திட்டு எட்டு நூறு ரூபாத்தா' என்று கேட்ட அந்த ஹாஜியார். இறுதியில், 'தம்பி இந்த சைக்கிள் எடுத்துக்கோ' என்று அதை அன்பாகக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் அவனுக்கு ஐநூறு ரூபாவும் கொடுத்தார். 'முன்ரோதய ரிப்பெயார் பண்ணி ஒன்ட மகனுக்குக் குடு' என்றார்.

மனிதம்!

அவனது ஆழ்மனதின் பிரார்த்தனை ஆனந்தக் கண்ணீரானது. இனியென்ன இனிவரும் நாட்களெல்லாம்.

மின்னும் தாரகைகள்... சின்ன மகன் கோபியின் கண்களிலே ஒரு நூறு கனவு வரும்.

★★★★

கரத்தை இப்பொழுது களனிப் பாலத்தில்...!

மகனை மகிழ்ச்சியிலாழ்த்தப் போகிற மகிழ்ச்சியில் பரபரத்தது மனசு.

ஒற்றைக் கரத்தால் சைக்கிளை ஒரு தரம் தூக்கிப் பார்த்து சந்தோஷித்தான்.

கற்பனைக் கதவோரம் கோபி வந்து நின்றான்.

'கிருஷ்ணா வந்தாச்சு!' நடிகர் விக்ரம் மாதிரிச் செய்தான் மிமிக்ரி!

பதிலுக்கு 'கோபி வந்தாச்சி' என்றும் சொல்லிச் சிரித்தான். லூஸுப் பய...

பிள்ளைகள் 'ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தா' வாங்கித் தருகிற போது வருகிற சுகமே தனி!

இதயத்திற்கு சிறகுகள் முளைக்கிற தருணம் அது! தவணை முறையில் வந்து போகிற சொர்க்க நிமிஷங்கள்...! ஏழையாக இருந்தாலும் அப்பாக்கள் அப்பாக்கள் தான்!

வகுப்பறையில்... டீச்சர் கேட்ட 'வருங்கால யார் நீ' என்ற கேள்விக்கு,

'நான் இன்ஜினியராகத்தான் வருவேன்' என்றவன், இன்று இரும்பு விற்கிறதும்,

'இரும்புக் கடையில் அப்பாவுக்கு உதவியாக நிற்பேன்' என்றவன், இன்று இன்ஜினியராகி நிற்பதுவும்... கவிஞர் நா. முத்துக்குமாருடைய கவிதையில் மாத்திரம் வந்த கற்பனை மட்டுமல்ல; நிகழ்கால நிஜமும்தான்!

கிருஷ்ணாவும் இன்ஜினியராக வந்திருப்பான்... அப்பா செல்லமுத்து அகால மரணம் அடையாமல் இருந்திருந்தால்.

இங்கே தலைகீழாகச் சிலருடைய தலையெழுத்து வாசிக்கப்படுகிற போது, அவர்களுடைய வாழ்க்கை குறுக்கெழுத்தாகிப் போய் விடுகிறது. அப்படியா(க்)கப்பட்டவர்களுடைய வாழ்க்கையில் குழம்பி வரும் சொற்களே அதிகம்.

மேலிருந்து கீழாக, இடமிருந்து வலமாக... எவர் எப்படி எழுதினாலும் விதியை மாற்றி எழுதவா முடியும்? இறைவன் தீர்ப்பே இறுதியானது.

தூர இருந்தே தேடியலைந்த அவனுடைய கண்களுக்குத் தென்பட்டது சைக்கிள்கடை.

இரண்டாயித்து ஐநூறு ரூபாய்க்கு வாங்கிய சைக்கிளாம் அது. இருநூற்றி ஐம்பது ரூபாய்தான் செலவு. திருத்திய பிறகு... முன்ரோதையும் அழகுதான்!

சைக்கிளும் அழகுதான்!

அப்போது அவன் மனக்கண்ணில் வந்த முகம்

அன்பளிப்பாய்ச் சைக்கிள் தந்த அந்த முகம்

பக்கத்தில் பள்ளிவாசல்

வாசலுக்கு வந்தான், கிருஷ்ணா

இரண்டு நூறு ரூபாய்த் தாள்களை எடுத்து பள்ளிவாசல் உண்டியலில் போட்டான்.

'அந்த ஹாஜியாரு நல்லா இருக்கணும்'

இறைவனைக் கேட்டான்.

பின்னேரத் தொழுகை அழைப்பு பள்ளியில் கேட்டது.

'அல்லாஹு அக்பர்!'

★★ ★★ ★★

கேரளா வெள்ளம்... பேரழிவு...

தொலைக்காட்சியில் செய்திகளாகப் பார்த்த மனிதாபிமானங்கள்

அந்த மறக்கமுடியாத காட்சிகள்...அவனது ஞாபக விழியோரம்

தொடர் நிழலாகி நின்றன

தேவாலயத்தைத் திறந்து தருகிறார் பாதிரியார்.

அங்கே ஒரு ஜனாஸா நல்லடக்கம் செய்யப்படுகிறது.

இந்து மதத்தவர் பள்ளி வாசலில்...

இஸ்லாமியர் கோயிலில்...

அகதிகளாய்த் தஞ்சம்.

கீதை, பைபிள், குர்ஆன் எல்லாம் அன்பைத் தானே சொல்கின்றன

தீதை நாடிப் பாதை மாஜி மனிதம் எங்கே செல்கிறது?

'குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்று பாரதிபாடிய பாட்டு வரித் தலைப்பில், பத்தாம் வகுப்பில், கிருஷ்ணா தமிழ் மொழித் தினப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றவன்தான். இளையதம்பி தயானந்தா சேர் எழுதித் தந்த அந்தப் பேச்சை அவன் இன்றும் நினைவில் வைத்திருக்கின்றான்.

இனிமையாக இருப்பதனால்தான் தமிழ் இன்னும் மறக்காமல் இருக்கிறது.

கேரள வெள்ள அனர்த்தங்களும்... சில மனிதாபி மானங்களும் அவன் மனதில்... அழியாத காட்சிகளாய்ப் பதிவான காரணத்தால் மனிதநேய உயர்பண்பைக் கற்றுக் கொண்டான்.

சில்லறைக் கடையோரம் 'எஸ். கே' வண்டி யை நிறுத்தினான்.

அரிசியலிருந்து சமையலுக்குத் தேவையான அனைத்தையும் வாங்கினான்.

உழைப்பில் கிடைத்த உணவு.

தொழில் புருஷ லட்சணம் அல்லவா!

சில அவலட்சணச் சோம்பேறிகளுக்கு...இவன் ஒரு கையால் தள்ளிக் கொண்டோடி வரும் இந்த 'வண்டி' ஒரு பாடம்.

சாபத்தொடர்களாய்ச் சில பாவப்பட்ட ஜீவன்களும் இரத்தக் கண்ணீர் சிந்தவும் கூடும். பிள்ளைகளைப் பின்தொடரும் சில பெற்றோர்களின் பாவக் கணக்குகள் தீர்க்கப்படும்வரை நியதியின் நியாயங்களை ஏற்றுக்கொண்டு துயர் சுமந்த அந்த இயலாமைகள் வேதாந்தம் பேசும்.

எண்பது காலடிகள் ஒரு நிமிஷ நிதான நடை... என்பது கிருஷ்ணா, நடந்து பார்த்துப்போட்ட கணக்கு. அந்த எண்ணிக்கையையும் தாண்டிவிடாமல்..அதிவேக நடையும், அவன் முணுமுணுக்கும் ஏதாவது ஒரு சினிமாப் பாட்டும். வீட்டுக்கருகில் வந்து விட்டான் என்பதற்கான அடையாளம். பேலியகொட, பழைய பாலம். மேடேறி இறங்கினால் அவனது வீட்டுக்குத் திரும்பும் முன் ஒழுங்கைதான்... பாலத்தொடக்கம் கீழிறங்கும் பள்ளத்துப்படியில்... அடி தடி தடி அடி.

'வெறிக்குரலால் தெரு நாறிக் கொண்டிருந்தது.

'பொடி லமயாட்ட கஹண்ட எபா அநே...'

ஒரு தாயின் ஒப்பாரி.

தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான் ஒரு சிறுவன்.

விறகுக் கட்டையால் அவனுக்கு அடித்துக் கொண்டிருந்தான் அப்பா.

'எய் அம்மே?'

சண்டையின் சாராம்சத்தை விசும்பலில் சொல்லி முடித்தாள் அந்த அம்மா.

இங்கும் 'சைக்கிள்' அடம்தான்.

பக்கத்துவீட்டுச் சிறுமியின் சைக்கிளை அவளுடைய சின்னமகன் உடைத்து விட்டானாம்.

இயலாமைகளும்... ஆத்திரங்களும்..

சினம் போய்ச் சேருமிடம் பிள்ளைகளின் முதுகு தானோ? சிறுவன் பாவம்... அந்த அம்மேயும் பவ்!

பெறுவதில் அல்ல; தருவதில்தான் இருக்கிறது சந்தோஷம்.

'மென்ன மல்லி மே சைக்கிள் ஒயாட்டத் தமாய். என்றான். கிருஷ்ணா.

சைக்கிளை எடுத்துக் கொள்ளச் சொன்னான்.

முதலில் மறுத்தாள். பின்னர், எடுத்தாள்.

அவனது காலில் விழுந்தாள். 'அனே ரத்தரங் மஹத்தயோ.'

இது உடைந்த சைக்கிள் அல்ல.

சில உள்ளத்துக் கவலைகளை உடைத்த சைக்கிள்.

கிருஷ்ணாவின் மனத்திரையில் ஒரு குறும்படம் ஓடியது.

அப்பா வாங்கித்தந்த புதுச்சைக்கிளோடு களனிப் பாலத்தில்

விழுந்ததும், 'சேற்றுத் தண்ணி'யுடன் எழுந்ததும், அப்பாவின் அடிகள் முதுகில் விழுந்ததும்...

ஞாபகம் வருதே.... ஞாபகம் வருதே...

விழிநீர் துடைத்து, வீட்டுக்குத் திரும்பும் 'முன் ஒழுங்கை' முடக்கில் நுழைந்தான், கிருஷ்ணா.

'கிருஷ்ணா வந்தாச்சு!' என்றபடி கோபியைத் தேடினான்.

தேவியையும் காணோம்

மீண்டும் குரலுயர்த்தினான்

'கிருஷ்ணா வந்துட்டேன்!'

ஒரு பதிலும் இல்லை

'கமலாக்கா... தேவி எங்கே போச்சு...?'

'இப்ப இருந்துச்சே கிருஷ்ணா... எங்க போனீச்சி... நடா கடைய்ல பாத்தியா..' என்றாள், அடுத்த வீட்டுக் கமலா. வீட்டுக்குப் பின்புறமிருந்து கோபி, சத்தமாகக் கத்தினான். 'கோபி வந்தாச்சு!' தொடர்ந்து, 'தேவி வந்தாச்சு!' என்றாள் தேவி. 'குடும்பமே வந்தாச்சு!' என்றான் கிருஷ்ணா.

"அப்பா அப்பா... சைக்கிள் கெடச்சிரிச்சப்பா... அப்பா...சூச அங்கிள் வாங்கித் தந்துச்சி... புதுசு' என்று துள்ளித் துள்ளிக் கூத்தாடினான், கோபி.

மறைத்து வைத்திருந்த சைக்கிளைத் தூக்கிக் கொண்டு வந்தாள். தேவி. 'அடேய்...கள்ளா... கள்ளிச்சி...' கன்னங்கள் கிள்ளிச் சிரித்தான் கிருஷ்ணா புத்தம் புதிய சைக்கிள்!

'அம்மோவ்... சைக்களத் தாமோவ்' பாய்ந்தோடி வந்து, முகத்தைப் பெருமையாக வைத்த கோபி, ஸ்டைலாகச் சைக்கிளில் ஏறினான். 'சூச மாமா வந்தாரு.... சைக்கிள் வாங்கித் தந்தாரு ஹா... டண்டடக்கா டணனனக்கா'.... ஏறியும், இறங்கியும், ஆட்டியும், தள்ளியும், 'சைக்கிள் டான்ஸ்' ஆடினான், கோபி. ஆனந்தத்தின் எல்லை!

கிருஷ்ணா 'வாங்க நினைத்த' அதே சைக்கிள்.

ஏழாயிரம் ரூபாய் பெறுமதியான சிகப்புச் சைக்கிள்!

'எண்ணங்களை, இதயங்களைப் பார்க்கின்றவன்' தந்த பரிசெண்ணி மெய்சிலிர்த்துப் போனான் கிருஷ்ணா.

கடவுள், இறைவன். அல்லாஹ், ஒருவன்.

பெரியவன்!

தருவோருக்குத் தருகின்றான்!

'மேரியும் சூசையும் வந்துச்சுகள்' என்று சொல்லத் தொடங்கினாள் தேவி.

'இப்ப... எங்க இருக்குதுகளாம்?' கேட்டான் கிருஷ்ணா. 'பதுளையியலாம். சூச பெரிய பெக்டரீல வேலயாம். மேரியும் காமண்ட் போவுதாம். குடும்பத்தாக்க சேர்த்துக்கிட்டாய்ங்களாம். ஒண்ணும் பிரச்ன இல்லியாம். தம்பியக் கொழும்புக்குக் கூட்டிக்கிட்டுப் போயி.... சூச இத வாங்கிக் குடுத்திச்சி...'

அழுத விழி துடைத்து அனைத்தையும் சொல்லி முடித்தாள். அதற்குள்ளே ஆறு வருஷங்கள் ஆயிற்றா?

மேரியைக் கூட்டிக் கொண்டோடி வந்தான் சூசைதாசன்.

காலப்போக்கில்.... 'நடந்தே வந்திருக்கலாமோ....' என்ற உண்மை ஓடிப்போனவர்களுக்கு மாத்திரமே தெரியும்.

நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் என்று சூழ்நிலைக் கைதிகளாகிப் போகிறபோது – தப்பியோட வேண்டித்தான் இருக்கிறது.

உள் வீட்டு உண்மைகள் வெளியுலகத்திற்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

மேரியைக் குத்திக் கிழிக்கக் கத்தியை எடுத்துக் கொண்டோடி வந்தான். அவளுடைய மச்சான்.

ஆணும் பெண்ணும் சமதிச்சா அதுக்கு மேலே என்னடா பயப்படாமக் கல்யாணத்த நடத்திக் காட்டச் சொல்லடா...' என்று யார் சொல்லியும் யாருமே கேட்கவில்லை

மேரியின் மச்சான் 'கத்தி' கொண்டு ஓட.... மேரி கத்திக் கொண்டு ஓட.... ஒரே களேபரம்! கலவர நிலவரம்...

கிருஷ்ணா பாய்ந்தான்.

பாலத்துறைச் சந்தைக்குள் பிடித்த சண்டை பிரதான வீதி வரை நீடித்தது.

ஆக்ரோஷ அடி பிடி... அல்லோல கல்லோலம்...

ஆளுக்காள் எறிந்து அல்லோல கல்லோலம் அபாய நிலைமையில் அபயக் குருவிகளாய் மேரியும் சூசையும்...

'அடைக்கலம்' தருவதற்காக.... கிருஷ்ணாவின் பகீரதப் பிரயத்தனப் போராட்டம்.

மாதம்பிட்டி வழியாக வேகமாக வந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டான், கிருஷ்ணா.

அந்தக் கணம் தான்...

வாழ்க்...?

"கை" போயிற்று...!

கைகொடுத்து வாழ்க்கை கொடுத்தவன் கிருஷ்ணா. இரு வீட்டார் எதிர்ப்புகளுக்கு முகங்கொடுத்துச் சமாளித்து பாலத்துறைச் சந்தை நண்பர்களோடு சேர்ந்து, 'சூசை – மேரி' திருமணத்தை முடித்து வைத்தான்.

ஆறேழு மாதங்கள் கழித்து

மேரியின் அம்மாவின் பிரிவோடு...குடும்பங்கள் ஒற்றுமையாயிற்று. ஹற்றனுக்குப் போய்ச் சேர்ந்தார்கள் மேரியும், சூசையும். நாளடைவில்... ஹலோ.... வென்று காதோரம் வந்தவர்கள்... காணாமல் போனார்கள்.

கிருஷ்ணாவிடம் என்வலப் ஒன்றை நீட்டினாள் தேவி,

'சூச தந்தான் இந்தா....!'

'என்னாதிது.... லவ்லெட்டரா....என்று சிரித்த கிருஷ்ணா... என்வலப்பைப் பிரித்தான்.

ஐயாயிரம் ரூபாய்கள், ஆறு தாள்கள். ஆறுதல்கள்...!

'அநே ரத்தரங் மஹத்தயோ'

இறைவனுக்குக் கேட்டிருக்கிறது.

'தந்து மகிழ்' என்ற தத்துவத்தைக் கற்றுத் தந்த அந்த ஹாஜியாரும், 'மதம் பாராதே.... மனிதம் பார்' என்ற நேயத்தைக் காண்பித்த அந்த கேரள.... பாதிரியாரும் தன்னை ஆசீர்வதிப்பதாக உணர்ந்தான். 'தம்பி சூச நல்லா இருப்பேடா... படுவா... பெரிய ஆள்டா நீ...' கோலெடுத்தழுதான், சூசையும்தான்!

'கிணிங்... கிணிங் சைட்சைட் மங்ஙனவோவ் யண்ட... யண்ட அநே.... அம்மோவ் அங்கிட்டு தள்ளிப்போ...' புதுச்சைக்கிளோன்' கோபியின் மிடுக்கு. சைக்கிள் பந்தயத்திடலாயிற்று முன் ஒழுங்கை முடுக்கு. நிமிஷத்திற்கு கொருதரம் சைக்கிள் மணி ஒலித்துக் கொண்டேயிருந்தது.

"சூச மாமா வந்தாரு

சைக்கிள் வாங்கித் தந்தாரு"

கிருஷ்ணாவுக்கு

'ஆச அப்பா வந்தாரு

காசப் பார்த்து நொந்தாரு' என்றுபாட வேண்டும்.

போல் இருந்தது.

சின்ன மகன் கோபியின் 'சைக்கிள் ரேஸை' ரசித்துக் கொண்டே 'எஸ்.கே. வண்டி' யிலிருந்து இரும்பு சாமான்களையெல்லாம் அந்த 'மூன்று கைகளும்' வெவ்வேறாகப் பிரிக்கத் தொடங்கின.

'சிறிதோய்ந்து...'

தேநீரோடு வந்தாள் இருகைக்காரி.

ஆசையாகக் கேட்டாள்: 'அடேய், பிகில் பார்க்கப் போவோமாடா?" "என்னாமாடா?" சிலேடையாகச் சிரித்தான் கிருஷ்ணா.

தேவியின் உள்ளார்த்தப் புன்னகை புது உற்சாகம் தந்தது.

சோர்வுக்கான பரிசு அது!

இறைவன் மிகவும் நல்லவன்.

பகல் முழுவதும் இரைதேடிப் பறந்து திரிந்து – இரவிலே கூடடையும் பறவைகளைப் போல...

பகல் முழுவதும் 'கூவித் திரியும்' மனிதக் குருவிகள்' வந்தடைகிற பலகைக் கூடுகளாய் இந்தச் சின்னஞ்சிறிய வீடுகள். மாடிகள் காணாத மகிழ்ச்சிகள். கோடீஸ்வரனுக்கும் கிடைக்காத நிம்மதி! இந்த 'அன்றாடக் காய்ச்சி'களின் வாழ்க்கை சுகம்!

'சூசமேரி எத்தன மணிக்கு வந்தாங்க?' என்று கேட்டான் கிருஷ்ணா.

'ஒரு ரெண்டு மணி போல வந்துச்சுகள் கோபியும் சூசயும் சைக்கிளோட வந்தப்பதான் பள்ளீல அல்லா அக்பர் சொல்லிச்சு...' என்றாள் தேவி. சினிமாவுக்குச் செல்லும் அவசரத்தில் அவள்.

'என்னடா இது...?' ஆச்சரியப் பட்டான் கிருஷ்ணா.

'ஏன்டா இது?' அதிசயப்பட்டாள்,தேவி.

'இல்லதேவிமா... பள்ளிவாசல் உண்டியல்ல காசு போட்டன்..


அங்கேயும் வாங்கு சொன்னாங்க...'

அவன் கண்கள் கலங்கின.

**கிண்ணியா அமீர் அலி**

---

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல :11



திரு/திருமதி/செல்வி ..............................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................

..............................

..............................

திகதி ........................ கையொப்பம் ........................

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 11

### இடமிருந்து வலம்

1. மத்தியஸ்தம்
3. தவத்தோர் சபித்துக் கூறுவது
5. ஒருவரின் ஜாதகப்படி உயிருக்கு நேரக்கூடிய ஆபத்து (குழம்பியுள்ளது)
6. வீடு, பேறு / முத்தியடைதல். இது இந்துமத கோட்பாடு
9. கேள்வி
11. கடவுள் நம்பிக்கையுள்ளவன் (வலமிருந்து இடமாக)
12. உருண்டை
14. காணி தொடர்பான ஆவணப்பதிவு
16. ஒன்றுக்கு மேற்பட்டவை (திரும்பியுள்ளது)
18. சொப்பனம்
19. சுவடு (குழம்பியுள்ளது)
20. பயனற்ற தன்மை
21. இப்போது இது பயிரிடுவது குறைந்து வருகிறது

### மேலிருந்து கீழ்

1. சிநேகிதன்
2. மன அமைதி
3. சாந்தம்
4. தொழில்சார் கடமை நிலை
5. கோபம் குழம்பிவிட்டது
7. பட்டினம் (குழம்பியுள்ளது)
8. வெட்டும் கருவி
10. கொரோனா வைரஸ் பிறப்பிடம் (தலைகீழ்)
12. மங்கையர் காலில் அணிவது
14. வெற்றிபெற முடியாத நிலை
15. தங்கம்
17. வெளிக்கதவு
19. தகுதி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 10

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சித்தார் 04. புத்தி 06. கதலி 07. வேங்கை 08. ரவி 09. தகடு
11. கர்வம் 13. மகள் 15. மலர் 16. வசி 18. தும்பு 20. சதா
21. வேட்கை 22. ஆகாரம் 24. நேர்மை

**மேலிருந்து கீழ்**

01. சிகரம் 02. வித்தகர் 03. தாலி 04. திங்கள் 05. புகை 07. வேடு
09. தர்மம் 10. சிரமதானம் 12. வலதுகை 14. கவசம் 17. விவேகி 19. புகார்
23. ஆமை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 09

### பரிசுபெறுவோர்

முதலாம் பரிசு
**கே. கந்தசாமி,**
268/D பன்சல வீதி,
வஹுஹபிட்டிய,
புசல்லாவை.

இரண்டாம் பரிசு
**எஸ். சந்திரிகா,**
மட்/சது/அரசடி பிள்ளையார்
கனிஷ்ட வித்தியாலயம்,
கோவிலடி, மட்டக்களப்பு.

மூன்றாம் பரிசு
**எம்.ஆர். இஷால் ஹனா,**
115, அன்னல் வீதி,
மாஞ்சோலைசேனை,
கிண்ணியா 03.

### பாராட்டு பெறுவோர்

**1. வித்யோஷினி,**
ஹொலிரூட்,
தலவாக்கலை.
**2. வினோ மதிவதனி,**
லுனுகலை.
**3. சுமதினி திருஆலன்,**
நெடுங்கேணி,
வவுனியா.
**4. நி. கமலதர்ஷினி,**
மாபோல, வத்தளை.
**5. ராஹிணி பிரகாஷ்,**
வெளிமடை.

# "ஈழத்துத் தமிழ்ச் சுருக்கெழுத்தின் தந்தை"

## சி. இராமலிங்கத்தின் பணி..!

"இலங்கையில் தமிழ்ச் சுருக்கெழுத்தின் தந்தையெனக் கருதப்படத் தக்கவர் இராமலிங்கம். அவர் நம்மவரின் மதிப்புக்குரியர்."

இவ்வாறு பேராசிரியர் க. கைலாசபதி குறிப்பிட்டுள்ளார்.



இன்றைய கணினி யுகத்தில் சுருக்கெழுத்தின் தேவை அருகிவிட்டது.

இலங்கையில் சுயமொழியில் நிருவாக அலுவல்கள் ஆரம்பித்த காலத்தில் தமிழ்ச் சுருக்கெழுத்தின் தேவை அவசியமாகப்பட்டது.

தமிழ்மொழியில் தமிழகத்து மூன்று பெரியவர்கள் (எம். சீனிவாசராவ் என். சுப்பிரமணியம் பி. ஜீ. சுப்பிரமணியம்) மூவகைச் சுருக்கெழுத்து முறைகளை உருவாக்கித் தமிழுக்கு அணி செய்தனர். இலங்கைக்கு 1950 ம் ஆண்டுக்கு முன்னர் இச்சுருக்கெழுத்து முறைகள் எட்டவில்லை.

1951 ம் ஆண்டில் இலங்கை வானொலி நிலையம் ஒரு தமிழ்ச்சுருக்கெழுத்தாளரையும் இரண்டு தமிழ்த் தட்டெழுத்தாளர்களையும் நியமனம் செய்தது.

இதில் ஒரு தட்டெழுத்தாளராக நியமிக்கப்பட்ட சி. இராமலிங்கமே பிற்காலத்தில் 'ஈழத்துத் தமிழ்ச் சுருக்கெழுத்துத் தந்தை"யெனப் போற்றப்பட்டார்.

தமிழகத்தில் சி. இராமலிங்கம் சுருக்கெழுத்தை நன்கு கற்றுத் தேறியிருந்தார்.

1952 ம் ஆண்டு மே மாதத்தில் அரசாங்க மொழிகள் கமிசனின் மேற்பார்வையில் மருதானை ஆனந்தாக் கல்லூரியின் ஒரு பகுதியில் சிங்கள தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

இங்கு முதன்முதலாகச் சிங்களச் சுருக்கெழுத்துப் போதிப்பதற்கு ஒருவரும் தமிழ்ச் சுருக்கெழுத்துப் போதிப்பதற்கு சி. இராமலிங்கமும் நியமிக்கப்பட்டனர்.

இந்நியமனத்திற்கெனத் தமிழில் நடாத்தப்பட்ட தேர்வில் பலர் போட்டியிட்டும் வேகப் பரீட்சையில் முதன்மையானவராகத் திகழ்ந்ததின் மூலமே இவர் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனந்தாக் கல்லூரியில் தொடங்கப்பட்ட தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பு 1959 ம் ஆண்டிற்குப்பின் நிறுத்தப்பட்டது.

ஆனால் யாழ் பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் (தொழில் நுட்பக் கல்லூரி) சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இராமலிங்கம் இங்கும் போதனாசிரியராக அனுப்பப்பட்டார்.

1974 ம் ஆண்டு சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியிலும் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்லூரிகள் மூலம் ஆயிரக்கணக்கானோர் தமிழ்ச் சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பயிற்சிபெற்றுத் தேறினர்.

இராமலிங்கத்தின் உறுதுணையோடு அவரது மனைவியும் ஈழத்தின் முதல் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயிற்சிபெற்ற மாணவியுமான மகாலட்சுமி இராமலிங்கம் வெளியிட்ட சுருக்கெழுத்துப் பாடநூல் கல்விக் கூடங்களில் சுருக்கெழுத்து மாணவர்க்கான கை நூலாக நிலைபெற்றது.

"ஸிலோவன்" ஆங்கிலமுறை 'பிட்மன்" ஆங்கிலமுறை என்பவற்றைக் கவனத்திலெடுத்து எம் மண்ணின் மொழிவழக்குக்கமையப் புதிய குறியீடுகளோடு சொல்வதெழுதற் பயிற்சிகளையும் உள்ளடக்கியதாக எம்மொழிக்கு ஓர் அணிகலனாக இந்நூல் விளங்கியது.

இராமலிங்கம் போதித்த தமிழ்ச் சுருக்கெழுத்து முறையில் பயிற்சி பெற்றோரே பாராளுமன்றம் நீதிமன்றங்கள் அரச காரியாலயங்கள் தொட்டு சாதாரண கந்தோர்வரை தமிழ்ச் சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர்களாக நிரம்பியிருந்தனர்.





இவர் அறிமுகப்படுத்திய முறையினால் தமிழ்ச் சுருக்கெழுத்தின் வேகம் அதிகரித்துள்ளதை தமிழகத் தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்களே பாராட்டியுள்ளனர்.

1976ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் இராமலிங்கத்தின் பணியினைப் பாராட்டி வெள்ளி விழா நடத்தப்பட்டது. அன்று யாழ் வீரசிங்கம் மண்டபம் ஈழத்துத் தமிழ்ச் சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் பொதுமக்களால் நிரம்பி வழிந்தமை குறிப்பிடத்தக்கது. சிறந்ததோர் வெள்ளி விழா மலரும் அன்று வெளியிடப்பட்டது.

எத்துறையிலும் முன்னோடிகள் வாழும்போதே கௌரவிக்கப்பட வேண்டும் பாராட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டு பத்திரிகைகள் பலவும் கட்டுரைகள் செய்திகள் வெளியிட்டன.

பேராசிரியர் க. கைலாசபதி தமிழகத் தமிழ்ச் சுருக்கெழுத்தாளர் பலர் தி. மு. க. தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் அன்பழகன் புகழ்பெற்ற எழுத்தாளர் அகிலன் உட்படப் பலர் வாழ்த்துச் செய்திகள் வழங்கியிருந்தனர்.

"சுருக்கெழுத்துத் தந்தை" கல்வித்துறையினரோடு மாத்திரமல்ல கலை இலக்கியப் பத்திரிகைத் துறையினர் உட்படப் பல் துறையினரோடும் நெருங்கிப் பழகியவர்.

அக்காலத்தில் தொழில்நுட்ப நிறுவன மாணவர் சங்க விழாக்கள் கலை இலக்கிய விழாக்களாக மிளிர அவர் பக்கபலமாக நின்று உதவினார். கவிஞர்கள் சில்லையூர் செல்வராசன் புதுவை இரத்தினதுரை லோகேந்திரலிங்கம் அன்பு ஜவகர்சா நல்லை அமிழ்தன் இலங்கை வானொலி நாடகத்துறைக் கட்டுப்பாட்டாளர் கே. எம். வாசகர் உட்படப் பலர் எம்மோடு விழாக்களில் கலந்துகொண்டமை ஞாபகம் வருகிறது.

கவியரங்கமானாலும் சரி கருத்தரங்கமானாலும் பட்டிமன்றமானாலும் சரி யான் கலந்துகொள்ளும்போது அங்கு முன்வரிசையில் அமர்ந்து 'ஆகா... சபாஸ்..." போடும் என் ஆசானை எத்தனை வருடமாகிலும் மறக்க முடியாது..!

அந்நியப் படை 'அமைதி" காத்த காலத்தில் நோயுற்ற 'சுருக்கெழுத்துத் தந்தை"யை மரணம் தழுவிக் கொண்டது.

தெல்லிப் பளையைப் பிறப்பிடமாகவும் அராலியை வாழ்விடமாகவும் கொண்ட அவர் என்றும் தமிழையும் தமிழறிஞர்களையும் மண்ணையும் பெரிதும் நேசித்தவர்.

மண்ணை நேசித்த அந்தக் கலைஞன், என் ஆசான் என்றும் மதிப்புக்குரியவரே..!



**வி.ரி. இளங்கோவன்**







### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்
## 17வது இசை நிகழ்ச்சி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 17வது இசை நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபணத்தி ஆனந்தக் சமரக்கோன் கலையரங்கில் நடைபெற்றது. இவ் வைபவத்திற்கு பிரதம அதிதியாக நீதியமைச்சர் அலி சப்றி கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார். தயாரிப்பாளர், ஒலிபரப்பாளர் அபுஉவைதா மஞ்ஜுத் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அமைச்சர் அலி சப்றிக்கு விருது வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் உள்ளூர் கலைஞர் கணேசனின் இசையில் 10க்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்கள் பாடல்களை பாடினர். அத்துடன் அனுசரனையாளர்கள் கௌரவிப்பும் நடைபெற்றது. (படங்கள்: அஷ்ரப். ஏ. சமத்)

# நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

## மனச்சாட்சியின் மற்றொரு முகம்

# 'ஐந்து கண்டங்களின் மண்'

கடற்கரைப்பள்ளி மூலையிலிருந்து இருட்டினால் பொய்ப்பதில்லை.

திட்டமாக மழை பெய்தே ஆகுமென்று உம்மா அன்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்தத் திசையிலிருந்துதான் கூம்புக் குழாய்கள் [loud speakers] சதா ஒரு பாடலை ஒலிபரப்பிக் கொண்டிருக்கும்;

அவ்வாறான பொழுதுகளில் அலையின் கரைகளில் வெப்பமும் குளிரும் கலந்த மாயக் காற்றின் உரசலில் தலை துவட்டுமபோது, குசுகுசுக்கும் பாடல்கள், போதையோடு மிதந்து வரும் இதம் இருக்கிறதே ..

ஒரு மாலைப் பொழுது கருஞ்சாம்பல் வண்ணத்தில் இருந்தது வானம்.

பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வர ..

உதடுகளிலிருந்து மழை வழிந்து கொண்டிருந்தது..

அதே திசை அங்கிருந்து வந்த ''அம்மாடி பொண்ணுக்குத் தங்க மனசு..

பாடல் குத்திட்டது இன்னும் அழியாமலே கேட்கிறது.

சிறு வயதில் இந்தப் பாடலோடு பாடலாக எச்.ஏ. அஸீஸ் இயற்றிய மெல்லிசைப் பாடல்களும் வானொலியில் ஒலிக்க ஒரு சிலதைக் கேட்டிருக்கிறேன்.

என்ன அது அந்த மூலை அப்படி என்ன?

என் வீட்டிலிருந்து பார்த்தால் அந்தத் மூலையில்தான் அவரின் வீடு இருக்கிறது.

அவர் வீட்டின் பாதையின் ஓரத்தில் நிழல் பரப்பி ஒரு புங்கை மரம் நின்றது;

அதன் பூக்களின் நறுமணத்தைக் காற்று எங்கெங்கும் சுமந்து திரிந்ததுபோல்தான் அவர் வாழ்வும் ஓட்டமும் மாறி விட்டிருந்தது.

அண்மையில்தான் அவர் பேச்சை ரசித்தேன்..

அப்போதுதான் புதிதாய்ப் பார்ப்பதுபோல் மனக் கண்களில் அவரை ஓட விட்டுப் பார்த்தேன்.

இடைவெளிதான் அன்பைப் பெருக்குகிறது என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை.

நாடு காண் வெளிநாட்டுச் செயலர் என்கின்ற எந்த அலுப்பையும் வாசகனில் திணிக்காமல், ஒரு வண்டியில் ஏறிக் கொண்டு வீடு போய்ச் சேரும்வரை செய்தித் தாளிலேயே மூழ்கிப் போனவர்போல் ஒரு சாதாரண கவிஞனின் நிலையில் ''ஐந்து கண்டங்களின் மண்'' கவிதைத் தொகுப்பை வெளியிட்டிருக்கிறார்.

''என் மேசையின் பூகோளம்''

பூகோள உருண்டை என் மேசையில் / தடவிப் பார்க்கலாம் / சுற்றிப் பார்க்கலாம் / பழகிப்போன பூகோள உருண்டை

கிழக்கில் இருக்கும் இந்து சமுத்திரம் / அதைத் திருப்பி வைப்பேன் / மேல் திசையாக

மீண்டும் கிழக்கே மாற்றி /வைப்பேன்/ இது உருண்டை

பூகோள உருண்டை

எங்கோ ஒரு தேசத்தில் / குண்டு வெடித்ததாய் / செய்தி வர / தேடித் தடவுவேன் அந்தத் தேசத்தை /கைகளால் துடைப்பேன்/ கசிந்த இரத்தத்தை ..

தான் செய்ததைத் தியாகம் என்று சொல்லிக் கொள்ளவில்லை; உலகில் நடந்தேறுகின்ற யுத்தம் படுகொலை அவரை மிகவும் சோர்வாக நிறுத்துகின்றது; அச் சம்பவங்கள் மிகவும் மன அழற்சியை ஏற்படுத்துவதாகச் சொல்லுகின்றார்.

அழகான கவிதையது; மேலும் கொல்வதற்கும் கொல்லபடுவதற்குமான எளிய ஆறுதல்களைத் தரக்கூடியதுமல்ல; எதிரிக்கு மரணத்தைத் தர அறைகூவல் விடுபதுமல்ல; போர் அளவுக்கே அமைதியும் காதலும் மிக ஈர்ப்பு மிக்கதாக, இன்னொரு முறையில் இயற்கையின் அழிவுகளையும் கவர்ந்திழுக்கும் வாசனை சரிசமமான பிரதிநிதித்துவம் பெறுகின்றன.




இவரின் கவிதைகள் புராதனமானதும் நவீனமானதுமான அம்சங்களையும் இலக்கியப் பேச்சு அங்கதங்களைப் பிணைத்தும் எதிர்ப்படுத்தியும் இதுவரை பேசியிராத பாடியிராத பொருளாக சில ஆகி வந்திருக்கின்றன.

உதாரணத்திற்கு ''சட்டப் பீச்சல்''

"...ஒன்றோடு ஒன்று/சொண்டோடு சொண்டு தட்டி / இரண்டு காகங்கள்

மேலே கதைத்திருகின்றன/ என்ன வழக்ககோ என/ வியந்து கொண்டேன்.."

என்று நீண்டு செல்கிறது.

முழுக்கக் கட்டமைக்கப்பட்ட கதையாடல்களுக்கு எதிரான அவ நம்பிக்கை அல்லது சிதைவாக்கம் என்கின்ற பின்சம்பவங்கள், எந்தப் பின்புலத்திலிருந்து இந்தக் கவிஞன் வருகின்றான் அவனது தளம் – பயணம் இவற்றோடு இவன் கவனிக்கப்பட வேண்டியவன் மட்டுமல்ல பேசப்படவேண்டியவன் என்பதை உரக்கச் சொல்வதும் அடக்கி வைக்கபட்டவர்கள் விளிம்பு நிலைப்படுத்தப்பட்டவர்கள் பக்கமே சார்ந்து இயங்கும் இவன் கருத்துத் தளம் புதிய உரையாடல்களை வேண்டி நிற்கின்றன.

'மீசையை முறுக்கி விடு'' என்ற கவிதையில்,

உயிரை நெருக்கி உள்ளே/நுழைந்து/மயிரும் இழந்து மதிப்பும் இழந்து/இடம் பெயர்ந்தவர் போல் /குடம்பியின் உள்ளே / இருக்கும் நிலைதான் /நமக்கு எதற்கு/

நிமிர்ந்து நில் /வளைந்து கொடாதே...'' என்கிறார்.

1980க்குப் பிறகு வெளிப்பட்ட இக் கவிஞன் தன்னைப் பற்றித் தன்னை உருவாக்குதல் பற்றி முன்னைய காலங்கள் போகப் பின்னான காலங்களில் தனது தீவிரமான தொழில் தந்திரங்களுடன் கூடிய அலைச்சல்கள், பயணங்கள், என்பன ஒரு நமைச்சலை அவருக்கு வழங்கியிருக்க வேண்டும்.

பின்காலனிய நாடுகளின் குறிப்பாக ஆசிய நாடுகளின் ஒரு பிரஜை எப்படி மனசாட்சிக்கு முகம் கொடுக்கிறான் என்பது அஸீஸின் கவிதை புலன்களின் மனிதத் தகவமைப்புகள் அதீத இருத்தல்கள் வெளிக்காட்டுகின்றன.

'கடல் குடிக்கும் போட்டி''

குந்தியிருந்தி எல்லோரும்

குடிக்கிறார்கள் கடலை

இது கடல் குடிக்கும் போட்டி

மீன்களெல்லாம் மேலெழுந்து/மூக்குகளால் பயணம் செய்ய/சுறாவும் திமிங்கிலமும்/சுருண்டு படுத்திருக்க ...

இந்தக் கவிதை உள்ளடக்கிய மனித குலத்தின் முற்போக்கு விடுதலை வாதம் எல்லாவற்றிலும் உட்பொருளாகவே துளிர்க்கிறது

இரண்டாம் உலகப் போருக்குப் பின்பான அதிகாரமிக்க மேற்கின் போக்குகள் மீதான நம்பகத்தன்மையை நாம் இழந்து விட்டோம்.

நிலமும் கடலும் அவர்கள் காலடிக்குச் சென்று விட்டன.

நாம் வெறும் மனிதக் கூட்டமே என விரிவடைந்து செல்கிறது.

மெய்நிலை இதுதானோ என நம்பவைப்பது மட்டுமல்ல; உண்மை நிலவரம், நடப்பு இப்படித்தான் என வாசகனை உணர வைக்கின்ற கவிதைகள் இத் தொகுப்பில் அடங்கியுள்ளன.

மரங்களிடம் மனம்விட்டுப் பேசியபோது

இதனைப் பாருங்கள்; கவிஞரின் குரல் இந்தக் கவிதையிலும் மென்மையாகவே இருக்கிறது; கடினமான வார்த்தைகளைப் பயன்படுத்தாத நாக்கு அது.

மரங்களை அழைக்கும் கனிவும் பறவைகளை அரவணைக்கும் பாசமும் அவர் குரலில் ஒருசேர ஒவ்வொரு வாக்கியத்துக்குப் பிறகும் இடைவெளி விட்டு, ஆமோதிப்புக்காகக் காத்திருப்பவர் போல தலையைத் தூக்கிப் பார்க்கிறார்.

...கல்முனையில்/என் வீட்டு முற்றத்து/ மரங்களும் செடிகளும்தான்/எனது முதல் தோழர்கள்

காலைப் பொழுதுகளில்/கண்களைக் கசக்கியபடி /நான் வந்து நிற்பதெல்லாம்/மரங்களின் முன்னால்தான் ..

கூரையின் கூண்டுப் பகுதியில் இருள் தேங்கினாலும் ஒரு கண்ணாடி ஜன்னல் வழியாக நுழையும் வெளிச்சம் புகை போன்றிருக்கும் இருளில் மிதந்து எதிர்ச் சுவரில் மடிப்புற்றுக் கீழே இறங்குவது போல் சுற்றி மடிந்து தெறித்து இன உறவின் அடையாளத்தை புரட்டிப் படிக்கத் தூண்டுகிறார்.

தமிழர் முஸ்லிம் என்ற பன்முகப் பிணைப்பு அந்தப் பூக்களிடையே பனித்துளிகளாய் மின்னிச் சுழல்கின்றன.

இரு தரப்பினரிலும் இருந்து வந்த நம்பிக்கைகள், அன்னியோன்னியம் மீள இறுக முடிய வேண்டுமென்ற அவா மரங்களாக்கிச் சிலிர்க்கின்றன.

''விஞ்ஞாபனத்தில் கீச்சானும் மாம்பாஞ்சானும்'' என்ற கவிதையில் தனது ஊரிலுள்ள முக்கிய மரபார்ந்த அடையாள இடங்களைப் புறாக்கூட்டுச்சந்தி, பாக்குமரப் பட்டையடி ,குடுக்கையர் தோட்டம், தோணாவடி, கறுவல் சந்தி எனக் குறிக்கிறார்.

முடிவில்,

'...இளைஞனே அப்போது/நானிருப்பேன்/உன் கூட ஒன்றாக/கைகோர்த்து /ஓர் அழகு சொப்பனமாய் அமையட்டுமே/ நம் ஊர்களெல்லாம்...'

தான் பறந்து திரிந்தாலும் புலன் மீட்பாக முன்வைத்தாலும் விழுந்தும் இறந்தும் பிறந்து கொண்டும் சொற்களினூடாகப் பயணிக்கும் கவிதை இது.




# யாவரும் கேளீர்

## பல்சுவை இலக்கியத் திரட்டு 09

**தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்**

***("யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்')***


### 98 வயதிலும் இயங்கிக்கொண்டிருக்கும் ஓர் இலக்கிய ஜாம்பவான்




கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று கொண்டாடப்படும், தமிழின் மூத்த படைப்பாளி கி.ராஜநாராயணன் 16. 09.1922இல் பிறந்தவர். இவரது பெற்றோர் கிருஷ்ண ராமானுஜன், இலட்சுமி அம்மாள். 98ஆவது வயதை நிறைவு செய்த ராஜநாராயணன் தற்போது பாண்டிச்சேரியில் வாழ்கிறார். தள்ளாத வயதிலும் சோர்வின்றி எழுதி வருகிறார்.

ஏழாம் வகுப்புவரை மட்டுமே படித்த இவர், பின்பு விவசாயம் செய்தவர். 40 வயதுக்குமேல் எழுதத் தொடங்கினார். 'மாயமான்' என்ற முதல் சிறுகதை 1958இல் சரஸ்வதி இதழில் வெளியானது. தொடர்ந்து பல சிறுகதைகள் எழுதினார். 70க்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். சிறுகதை, நாவல், குறுநாவல், கிராமியக் கதை, அகராதி, கடிதம் என்று தமிழின் பல்வேறு இலக்கியத் தளங்களிலும் தடம் பதித்திருக்கிறார். பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர் இவர்.


தமிழில் ஒரு சமூக வரலாற்று நாவலைக் கூறமுடியுமானால் அது அவர் எழுதிய 'கோபல்லகிராமம்' தான். இலக்கியப் படைப்பாளிகள் யாவரும் படிக்கவேண்டிய நாவலாக இந்நாவலைச் சிபார்சு செய்யலாம். 1800களில் நடக்கும் கதை இது. ஆந்திரப் பிரதேசத்தில் மொகலாய மன்னரின் அச்சுறுத்தும் ஆட்சியில் இருந்து தப்பித்து தெற்கில் தஞ்சமடையும் ஐம்பது அறுபது பேர் கொண்ட ஒரு குழுவினரின் கதை இது. அவர்கள் நம்பிக்கையையும் உடலுழைப்பையும் கொண்டு காட்டை அகற்றி கிராமம் ஒன்றை உருவாக்குகிறார்கள். தமிழ் நாட்டில் ஒரு தெலுங்கு பேசும் கிராமம் எப்படி உருவானது? எங்கிருந்து வந்தவர்கள் அவர்கள்? எதற்காக எதிலிருந்து தப்பிப்பதற்காக? எப்படிப்பட்ட கஷ்டங்களைத் தாண்டி வந்திருக்கிறார்கள்? அவர்கள் எப்படி இந்த ஊரை அமைத்தார்கள்? என்ற பல கேள்விகளுக்கு விடையாக இந்த நாவல் அமைகிறது. நாயக்கர் ஒருவரின் வீட்டில் தொடங்கி, அவ்வீட்டில் முன்பு வாழ்ந்த மூதாதையர்களின் கதைக்குத் தாவி, அவர்களின் மூலம் ஆந்திராவிலிருந்து குடிபெயர்ந்தவர்களின் வரலாற்றை உரைத்து, நாடோடி வாழ்க்கையின் பலவித கோணங்களை அலசி, ஒரு கிராமம் உருவாகித் தழைப்பதன் சுவாரஸ்யத்தை நாவல் தருகிறது. இந்த இடப்பெயர்வின் சாட்சியாக 130 வயது மிக்க மங்கதாயரம்மாள் நாவலில் வருவது சிறப்பு. விக்டோரியா ராணியின் ஆட்சிக்குக் கீழ் கோபல்ல கிராமம் வந்ததும் ஆங்கிலேயர் வருகையால் ஏற்பட்ட அவலங்களை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழும் நிலையில் கதை நிறைவடைகிறது. வழக்கத்திற்கு மாறான கதைசொல்லும் முறைமையாலும் ருசியான பல கிளைக் கதைகளாலும் நம் ஆர்வத்தைத் தக்கவைத்துக் கொள்கிறது கோபல்ல கிராமம்' நாவல். 176 பக்கங்களில் ஒரு 130 வருட காலத்தை நம் கண் முன்னே நிறுத்துகிறார் கி.ராஜநாராயணன்.




இந்த நாவலின் தொடர்சியாக இவர் எழுதிய கோபல்லபுரத்து மக்கள் நாவலுக்காக இவருக்கு 1991இல் சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. இலக்கியச் சிந்தனை விருது, தமிழக அரசு விருது, கனடா இலக்கியத் தோட்டம் வழங்கிய தமிழ் இலக்கியச் சாதனை 2016 சிறப்பு விருது, 2016/17ஆம் ஆண்டுக்கான மனோன்மணியம் சுந்தரனார் விருது உட்பட பல விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

### மலையக மக்களின் இரண்டு நூற்றாண்டுகால அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றாவணம் 'மலைகளைப் பேசவிடுங்கள்'


மலையக மக்களின் வரலாறு இருநூறு வருடங்களுக்கு மேற்பட்டது. இந்த நீண்ட வரலாற்றில் மலையக மக்கள் தங்கள் உரிமைக்காக நடத்திய போராட்ட வரலாற்றையும் சமகாலப் பிரச்சினைகளையும் மலைகளைப் பேசவிடுங்கள் ' என்ற இந்த நூல் பேசுகிறது.




இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான இந்த நூலின் ஆசிரியர் திலகர், அரசியற் பாதையைத் தனதாக்கிக் கொண்டவர். நுவரெலியா மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். மலைய மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவர்களில் ஒருவராகத் திகழ்பவர். மலையக மக்களின் பிரச்சினைகளை அரசியல் மட்டத்திலும் சர்வதேச மட்டத்துக்கும் எடுத்துச் சென்றவர். இவர் ஓர் எழுத்தாளர், கவிஞர், விமர்சகர் சிறந்த பேச்சாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். ஏற்கனவே மல்லியப்பு சந்தி' என்ற கவிதை நூலை வெளியிட்டவர். தனது பாக்கியா பதிப்பகத்தின் மூலம் பத்துக்கும் மேற்பட்ட மலையக நூல்களை வெளிக்கொணர்ந்தவர். தினக்குரல் பத்திரிகையிலும் அரங்கம் என்ற பத்திரிகையிலும் இவர் எழுதிய பதினைந்து கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல்.

இந்தக் கட்டுரைத் தொகுப்பில், இலங்கையின் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் மலையக மக்களின் அரசியல் நிலைப்பாடு தொடர்பான பதினைந்து கட்டுரைகள் அடங்கியுள்ளன. "மலையக மக்களுக்கு இலங்கையில் இழைக்கப்பட்ட அநீதிகள் ஏராளம். அதில் இரண்டு விடயங்கள் பாரதூரமானவை. ஒன்று இலங்கை சுதந்திரமடைந்ததுடன் இந்த மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. இரண்டாவது, சிறிமாசாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் அவர்கள் நாடுகடத்தப்பட்டது. பறிக்கப்பட்ட குடியுரிமைகூட காலம் கடந்து மீளவும் கிடைக்கப் பெற்றுவிட்டது. ஆனால் நாடு கடத்தலினால் பிரிக்கப்பட்ட எமது உறவுகள், அவர்களின் உணர்வுகள் அந்த விலகளினால் ஏற்பட்ட அரசியல் இடைவெளி என்றென்றும் இட்டுநிரப்ப முடியாதது' என்று குறிப்பிடும் நூலாசியர், இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகளில் இவைபற்றிக் கூறுவதோடு இன்னும் பல சமகால மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். இந்த நூல் இரண்டு நூற்றாண்டுகால மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றாவணம் என்னும் தகைமை கொண்டது. படிப்பதற்கு மட்டுமன்றி பாதுகாத்துப் பேணவும் வேண்டிய நூல் இது. ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.





### 5000 வருடங்களுக்கு முற்பட்ட எமது பண்பாட்டு வேர் ஒன்றைக் கண்டேன்

சிந்துவெளி நாகரிகம் பற்றி வாசகர்கள் பலர் அறிந்திருப்பார்கள். வட இந்தியாவில் உள்ள சிந்து நதிப்பிரதேசத்தில் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பழைமையான நாகரிகம் நிலவியுள்ளது என்பதையும் அங்கு சிவ வணக்கம் நிலவியுள்ளது என்பதையும் சேர். ஜோன் மார்ச்சில், சேர். அலெக்ஸாண்டர் கண்ணிங்காம் முதலான பேரறிஞர்கள் 1920ஆம் ஆண்டில் ஆராய்ச்சி செய்து உலகுக்கு அறிவித்தனர். அங்கு ஹரப்பா, மொகஞ்சதாரா என்னும் நகரங்கள் இருந்தன. அந்நகரங்களில் பாழடைந்து கிடக்கும் பல விதமான கட்டிடங்கள், சிற்பங்கள், கற்சிலைகள், தாயத்துகள், மிருகங்களின் உருவங்கள், மனிதர் யோகியர் உருவங்கள் என்பன காண்பவர்கள் எல்லோரையும் வியக்கவைத்தன. அங்கே கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் முத்திரைகள் முதலியவற்றைக்கொண்டு 5478 ஆண்டுகளுக்கு முன்னரே சிவவழிபாடு இருந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய அருங்காட்சியகத்தில் இந்தச் சிந்து வெளி நாகரிக அகழ்வுகளில் கண்டெடுக்கப்பட்ட இலச்சினைகள் பலவற்றை நான் பார்த்தேன். 5000 வருடங்களுக்கு முற்பட்ட எமது பண்பாட்டு வேர் ஒன்றை அங்கே பார்த்தது எனக்குப் பெரும் மகிழ்வையும் மன நிறைவையும் தந்தது.

இந்த அருங்காட்சியகத்திலுள்ள கோஹினூர் வைரம் பற்றியும் கூறவேண்டியுள்ளது. உலகில் அதிகம் அறியப்பட்டதும் விலை மதிப்பற்றதுமான இந்த வைரம் இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டது. வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் இந்து, முஸ்லிம், முகலாயர், பேர்சியர், ஆப்கன், சீக்கியர் மற்றும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் சண்டையிடப்பட்டு கைமாறிக்கொண்டே இருந்தது. இறுதியாக கிழக்கிந்திய கம்பனி மூலமாகக் கைப்பற்றப்பட்டு மகாராணி விக்டோறியாவிடம் கையளிக்கப்பட்டது. விக்டோரியா மகாராணி 1877இல் இந்தியாவின் பேரரசியாக அறிவிக்கப்பட்டபோது மகாராணியின் கிரீடத்தில் அது பதிக்கப்பட்டது.

இந்த வைரம் இந்தியாவுக்குச் சொந்தமானது அதனைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள் என அவ்வப்போது இந்திய நாட்டின் சார்பில் கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. அதற்குப் பதிலளித்த இங்கிலாந்தின் முன்னைய பிரதமர் டேவிட் கமரூன், அதனைத் திருப்பித் தரமாட்டோம். அப்படித் திருப்பித்தந்தால் பிரித்தானிய அருங்காட்சியகம் சோபை இழந்து விடும் என்று கூறியுள்ளார்.

***(இனி அடுத்த வாரம்)***

---





# படித்ததும் பகர்வதும்



**சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### நல்லொழுக்கம் நிறைந்தவர்களாக வாழ்வோம்

சமுதாயத்தில் ஓர் அங்கமாக வாழும் நாம் நல்லொழுக்கம் மிக்கவர்களாக, நற்பண்புகள் நிறைந்தவர்களாக, நல்லவர்களாக வாழ்வது அவசியம். நல்லொழுக்கமே ஒரு மனிதனின் தராதரத்தை நிர்ணயிக்கிறது; மக்கள் மனதில் அவர் எந்த நிலையில் வாழ்கிறார் என்பதையும் முடிவு செய்கிறது என்றால் மிகையல்ல.

ஒருவர் சொத்து, செல்வம், பணம் நிறைந்தவராக இருக்கலாம். பட்டம், பதவிகள் பெற்றவராக இருக்கலாம். வேறு வகையில், பேரும் புகழும் பெற்றவராக இருக்கலாம். ஆனால் அவர்களிடம் நற்பண்புகள், நல்லொழுக்கம் இல்லாவிட்டால் அவர்களால் மக்கள் மனதில் இடம் பிடிக்க முடியாது.

பணத்துக்காக, பட்டம் பதவிகளுக்காக, பேரும் புகழும் பெற்றிருக்கிறார் என்பதற்காக மக்கள் சிலருக்கு சில பொழுதுகளில் மரியாதை செலுத்தலாம். ஆனால் அத்தகையவர்கள் நல்லொழுக்கம் உள்ளவராக இல்லையென்றால் அத்தகைய மரியாதைகள் தற்காலிகமானவையாக அல்லது போலியானவையாகவே இருக்கும். இத்தகையவர்களை நேரில் காணும்போது மரியாதை செலுத்துவது போல் மக்கள் காட்டிக்கொண்டாலும் அது உண்மையான மரியாதையாக இருக்காது.

வெறும் நடிப்பாக அல்லது உளப்பூர்வமற்றதாகவே இருக்கும். ஏனெனில் நல்லொழுக்கம் இல்லாதவர்கள் பற்றிய நல்ல அபிப்பிராயம் மக்கள் மனதில் இருக்கவே மாட்டது.

நல்லொழுக்கம் உள்ளவர்களே மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பார்கள். அவர்களையே மக்கள் பின்பற்ற விரும்புவார்கள்; பின்பற்றுவார்கள். அவர்களே வீட்டுக்கும், நாட்டுக்கும் ஏற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் இறந்த பின்னரும் அவரது நற்பண்புகளை சிலாகித்துப் பேசுவார்கள்.

எனவே, நாமும் அத்தகைய நல்லொழுக்கமும் நற்பண்புகளும் நிறைந்தவர்களாக வாழ உறுதிகொள்வோம்.

## அபூர்வ கணக்கு

கணக்குகளில் பல்வேறு கோலங்கள் அபூர்வமானவை; சுவையானவை; ஆச்சரியப்பட வைப்பவை. அத்தகையவற்றிலிருந்து சிலவற்றை அவ்வப்போது உங்களுக்காக இங்கே தர விரும்புகின்றோம். உங்கள் மூளைக்கு வேளையாக!

1 x 8 + 1 = 9
12 x 8 + 2 = 98
123 x 8 + 3 = 987
1234 x 8 + 4 = 9876
12345 x 8 + 5 = 98765
123456 x 8 + 6 = 987654
1234567 x 8 + 7 = 9876543
12345678 x 8 + 8 = 98765432
123456789 x 8 + 9 = 987654321

## வீரம் தரும் விளையாட்டு

### கால்பந்து கோல்களில் 'சதம்'



கிரிக்கெட்டில் வீரரொருவர் நூறு ஓட்டங்கள் பெற்று 'சதம்' (century) அடிப்பது அடிக்கடி இடம்பெறும் விடயம்தான். என்றாலும் சதம் பெறும் வீரரின் பெரும் சாதனையாகவே அது கொண்டாடப்படுகிறது. ஆனால் கால்பந்து போட்டிகளில் கோல் (Goal) களில் 'சதம்' (century) பெறுவது அபூர்வ சாதனையாகும். ஒரு போட்டியில் அல்ல. நூற்றுக்கணக்கான போட்டிகளில் விளையாடி திறமையைக் காட்டினால்தான் இதனை நிறைவேற்ற முடியும். சர்வதேச கால்பந்து போட்டிகளில் உலகில் இந்த சாதனையை நிலைநாட்டியுள்ளவர்கள் இருவர் மட்டும்தான்.

அண்மையில் போர்த்துக்கல் அணி தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ இச்சாதனையை நிலைநாட்டியுள்ளார். ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பு சார்பில் நேஷன்ஸ் லீக் சர்வதேச கால்பந்து போட்டித்தொடரில் சுவீடனுக்கு எதிரான போட்டியில் முதலாவது கோலை அடித்த போது இவரது கோல்களின் எண்ணிக்கை 100ஐ தொட்டது. இவர் 165 சர்வதேச கால்பந்து போட்டிகளில் விளையாடி இச்சாதனையை படைத்துள்ளார். இந்த மைல்கல்லை எட்டிய முதல் ஐரோப்பிய வீரர் என்ற மகத்தான சாதனை 35 வயதான கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு உரித்தாகியுள்ளது.

இச்சாதனையை நிலைநாட்டிய குறித்த போட்டி ரசிகர்கள் இல்லாத மைதானத்தில் நடை பெற்றதையிட்டு வருந்துகின்ற ரொனால்டோ, "ரசிகர்கள் இல்லாத மைதானம் கோமாளிகள் இல்லாத சர்க்கஸ் மற்றும் பூக்கள் இல்லாத தோட்டம் போன்றது" என்று தெரிவித்துள்ளார். கால்பந்து உலகில் அதிக கோல்கள் அடித்து உலக சாதனையை தன்வசம் வைத்திருப்பவர் ஈரான் நாட்டின் முன்னாள் வீரர் அலி டாய். இவர் 109 கோல்கள் அடித்துள்ளார். இச்சாதனையை எட்டிப்பிடிக்கக் கூடிய வாய்ப்பு இப்போதைக்கு கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு மட்டுமே இருப்பது போல் தெரிகிறது.

எது எப்படியாயினும் சாதனைகள் போற்றப்படும். பாராட்டப்படும். சாதனையாளர்கள் மக்கள் மனதில் வாழ்வார்கள். கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு எமது வாழ்த்துக்கள்.

## சரித்திரத்தில் ஒரு சம்பவம்

### யார் பேரறிஞர்?

ஏதன்ஸ் நகரத்தில் வாழ்ந்த செயரியோன் என்பவன், பிரீதி என்ற தீர்க்கதரிசியிடம், "இந்த நாட்டில் வாழும் பேரறிஞர் யார்"? என்ற ஒரு வினாவைச் கேட்டான்.

தீர்க்கதரிசினி பிரீதி என்பவள் சோக்ரடீஸ் காலத்தில் ஏதன்ஸ் நகரத்தில் "அப்போலோ" என்ற சூரிய தேவன் கோயிலில் வாழ்ந்தவள். இக் கேள்விக்கு அவள், "இங்குள்ள ஒரேயோரு பேரறிவாளன் சோக்ரடீஸ்தான்" என்று பதிலளித்தாள்.

இதைக் கேள்விப்பட்ட சோக்ரடீஸ் அதிசயித்தார். தனது அறிவு வெகு சொற்பம் என்று சோக்ரடீஸ் நம்பியிருந்தார். இவள் கூற்றை ஏற்றுக்கொள்ளாத அவர், அக்காலத்தில் அறிவாளிகள் என்று கருதப்பட்டோரிடம் சென்று அவர்களின் அறிவை அளவிட விரும்பினார்.

முதலில் அரசியல்வாதிகளிடம் சென்றனர். அவர்கள் ஒன்றுமே தெரியாத பேர்வழிகளாக இருந்தார்கள். ஆனால் வார்த்தை ஜாலம் தெரிந்தவர்களாக, அனைத்தும் தெரிந்தவர்கள் போன்று நடித்து பிறரையும் நம்பும்படி செய்பவர்களாக இருந்தனர்.

கவிஞர்கள், கலைஞர்கள், கைவினைஞர்கள் ஆகியோரிடம் சென்றனர். அவர்கள் ஓரளவு அறிவு பெற்றவர்களாக மட்டும் இருந்த போதும் தாம் அறியாதவற்றையும் தெரிந்திருப்பதாகக் கருதியவர்களாக இருந்தார்கள்.

ஈற்றில் சோக்ரடீஸ் அத்தீர்க்கதரிசியின் கூற்றுக்கு பின்வருமாறு விளக்கம் கொடுத்தார்:

"எனக்கு பெரிதாக ஒன்றும் தெரியாது அதனால் நான் எனக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணவில்லை. அத் தெய்வம் உண்மையிலேயே என்னைப் பற்றிப் பேசவில்லை தன்னறிவு உண்மையில் சொற்பமே என்று சோக்ரடீஸைப் போன்று உணர்ந்தவனே அறிவாளி என்பதே அவளது விளக்கமாகும்" என்று கூறினார்.

'கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு' என்பது இங்கு தெளிவாகிறதல்லவா., இவ்வுணர்வு அனைவருக்கும் அவசியம்.

## கொஞ்சம் சிரிங்க



**ஒருத்தி :** ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்கிறார்களே உண்மையாடி?

**மற்றவள்:** அதெல்லாம் சுத்தப் பொய்யடி! எங்க பாட்டி ஐம்பதில் தானே வளையவே ஆரம்பிச்சிருக்கா....!

## பேசும் கவிதை



காதலைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். இங்கே காதலியைப் போற்றிப் புகழும் கவிஞர் தபு சங்கர். அவரது கவிதையொன்று உங்கள் சுவைக்காக பேசும் கவிதையாக.

முதல் முறை உனது வீட்டிற்கு வந்தபோது நான் பார்த்து ஆச்சரியப்பட்டது உனது அறையிலிருக்கும் ஆளுயரக் கண்ணாடியைத்தான். ஏன்?

இத்தனை நாட்களாய் உன் அழகையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தும் விரிசல் எதுவும் விழாமல் அப்படியே இருக்கிறதே! உனக்காக எதை வேண்டுமானாலும் தருவேன் என் உயிரைத் தவிர. அதை உன்னோடு வாழ்வதற்காக வைத்திருக்கிறேன்! என் விரலைப் பிடித்து 'அ' எழுதக் கற்றுத்தந்தது அம்மா. என்னையே விரலாய்ப் பிடித்து காதல் எழுதக் கற்றுத் தந்தது நீ ! என்னுடையது என்று நினைத்துத்தான் இதுவரையில் வளர்த்து வந்தேன். ஆனால் முதல் முறை உன்னைப் பார்த்ததுமே பழக்கப்பட்டவர் பின்னால் ஓடும்நாய்க்குட்டி மாதிரி உன் பின்னால் ஓடுகிறதே இந்த மனசு! துடிப்பதைவிட உன்னை நினைப்பதற்கே நேரம் சரியாக இருக்கிறது என் இதயத்திற்கு!

55 கிலோ எடைகொண்ட உன்னை வெறும் 250 கிராம் எடைகொண்ட என் இதயம் எப்படித்தான் சுமந்துகொண்டிருக்கிறதோ? எல்லாக் கவிதைகளுமே உன்னைப் பற்றியவைதான் எனினும் ஒரு கவிதைகூட உன்னை மாதிரி இல்லையே!

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.